ஓம்

# காதலனா.....காதகனா?

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

ஆசிரியர்:

நாரண - துரைக்கண்ணன்
"ஜீவா"

609 — A/364
222

திருத்தமான இரண்டாம் பதிப்பு.

"ஆனந்தபோதினி" காரியாலயம்,

சௌகார்பேட்டை, சென்னை.

1944

காப்பிரைட்.] [விலை ரூபா 1—4—0

கலாசாலை மாணவ மாணவிகளுக்கு

இச் சிறுநூல் அர்ப்பணம்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 457
நன்கொடை எண்: 457

சென்னை ஆனந்தபோதினி
அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# நான்முகம்

"ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலைகள்; போலி ஆடம்பரத்தையும், வீண் டாம்பீகத்தையும் மாணவர்களுக்கு உண்டுபண்ணி வைக்கும் ஸ்தாபனங்களாக இருக்கின்றன. எனக்கு மட்டும் அதிகார மிருந்தால், அவ்விரு சர்வ கலாசாலைகளையும் தகர்த்தெறிந்து தரைமட்டமாக்கி விடுவேன்" என்று உலகம் போற்றும் பேராசிரியரான ஜார்ஜ் பெர்னார்டு ஷா மேற்படி சர்வ கலாசாலைகளில் வாசிக்கும் மாணவ மாணவிகளது விபரீத நிலையைக் கண்டு ஒரு சமயம் முழங்கி யிருக்கின்றார். மேனாட்டில் மட்டுமல்ல; நம் இந்தியாவிலும் சர்வ கலாசாலை மாணவ மாணவிகள் பலருடைய நிலைமை வருந்தற் குரியதாகவே இருக்கிறது. அவர்களது விபரீத மனப் போக்கையும் நடை யுடை பாவனைகளையுங் கண்கொண்டு காண்பவர்கள் ஒவ்வொருவரும் ஜார்ஜ் பெர்னார்டு ஷாவைப் போன்றே கூறுவர் என்பது திண்ணம். இந்தியப் பேரறிஞர்களில் ஒருவரான ஆசார்ய ப்ரபுல்ல சந்திர ராய் நம் நாட்டுக் கலாசாலை மாணவர்களின் நவநாகரிகப் போக்கையும், மேனாட்டு மோகத்தையுங் கண்டித்து அடிக்கடி பேருரை செய்து வருகிறார்.

எனக்கு ஏற்பட்ட ஒரு சிறு அநுபவமும் இது உண்மை யென்பதை உறுதிப்படுத்தியது. எனது தோழர்கள் ஒரு சிலரது கலாசாலை வாழ்க்கையையும், விபரீதமான போக்கையும் காணும் போதெல்லாம் என் மனம் நடுங்குவதுண்டு. ஆடவர்களின் போலி நாகரிகப் போக்கு தான் முடிவு காண முடியாத நிலையை யடைந்து வருகிறதென்றால்; பெண்மணிகளின் நவநாகரிக நடையோ போட்டி

போடும் வகையில் அதையும் விஞ்சக்கூடியதாக இருக்கிறது. விட புருடர்களின் வெளி மயக்கிலும் ஆடம்பரத்திலும் அறிவை யிழந்த மாணவிகள் பலரின் பரிதாப முடிவை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படித்து வருகிறோம். இவ்விதச் சம்பவங்கள், பெண்களுக்குக் கல்வியே கொடுக்கக் கூடாது என்று கூறும் வைதீகர்கள் வாதத்துக்கு இடங் கொடுக்கக் கூடியனவா யிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கற்றவர் தொகை மிகக் குறைவு என்று குறை கூறப்பட்டு வந்த காலம் போக, பெற்றோர்கள் தங்கள் மக்களுக்குப் பெரும் பொருள் செலவிட்டு உயர் தரக் கல்வி புகட்டி வரும் நிலையில், அதற்குரிய நற்பயன் ஏற்படாவிடில், அது சகித்தற் கியலாத தொன்றன்றோ? இவ் விஷயம் பற்றி, நான் அடிக்கடி சிந்தித்து வந்ததன் பயனாகவே, இச் சிறு கதை என் உள்ளத்தில் கருக்கொண்டு கடைசியாக, நூல் வடிவில் இதுபோது வெளி வரலாயிற்று.

இந்நூலை எழுதியதனாலேயே, நான் கலாசாலை மாணவர்கள் பலரிடையே காணப்படும் சீர்கேட்டிற்கு ஒரு நல் வழி கண்டு விட்டேன் என்று அன்பர்கள் எண்ணலாகாது. இவ் விஷயத்தைப் பேரறிஞர்கள் கவனத்துக்குக் கொண்டு வரவே, இச் சிறு நூலை எழுதத் துணிந்தேன். ஆகவே, உலகானுபவமும், அரசியல் ஞானமும் வாய்ந்த பெரியோர்கள் மாணவ உலகை ஒருவித ஒழுங்குக்குக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவே, எனது இச் சிறு முயற்சிக்கு உதவி செய்வதாகும்.

இங்ஙனம்:

**நாரண - துரைக்கண்ணன்.**

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

சம்பிரதாய முறையில் பார்த்தால், "காதலனு?...... காதகனு?" என்னும் இந் நவீனம் இரண்டாம் பதிப்பு எனக் கூறலாமே யொழிய, உண்மையாகச் சொல்ல வேண்டு மென்ருல், இந்தப் பத்து ஆண்டுகளுக்குள் பல பதிப்புகள் வந்துவிட்டன வென்றே கூறவேண்டும். எப்படி யெனில், இந் நவீனத்தின் பிரதிகள் பல்லாயிரக்கணக்காகத் தமிழ் நாட்டில் பரவி யிருக்கின்றன.

முதன்முதலில் இக் கதை 1934-ம் ஆண்டில் "ஆனந்த போதினி" வாரப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளி வந்தது. பெண்கள் கல்வி விஷயத்தில் எப்போதும் சிரத்தை யுடைய எனக்கு, ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர் அவர் கள் தமது வாரப் பத்திரிகைக்கு ஏதாவது ஒரு கதை எழுதித் தர வேண்டுமென்று என்னைக் கேட்டதும், மக ளிர் கலாசாலை வாழ்க்கையில் நான் கண்ட குறைபாடு கள் என் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்ததால், அதையே என் கதைக்குரிய கருப் பொருளாகக் கொண்டு இக் கதையை எழுதலானேன். எந்த நோக்கத்தை அடிப் படையாகக் கொண்டு இக் கதையை எழுதினேனே, அந்த லட்சியத்தை, தமிழ்மக்களும் உணரத் தொடங்கி விட்ட னர் என்பது வாசகர்கள் இக் கதை விஷயத்தில் காட்டிய ஆர்வத்தால் தெரிய லாயிற்று. நவ நாகரிகச் சேற்றில் அழுந்திக் கெட்டொழியும் கல்லூரி மாணவிகளுக்கு அறி வுச்சுடர் கொளுத்தும் இந் நவீனம் உடனடியாகப் புத்தக வடிவில் வெளிவர வேண்டுமென்று வாசகர்கள் அடிக்கடி நினைவுபடுத்த லாயினர்.

வாசக நேயர்களின் விருப்பத்தை யநுசரித்து, "ஆனந்தபோதினி" பத்திராதிபர் ஸ்ரீ நா. முனிசாமி முதலி யார், தமிழ்நாட்டில் தன்னிகரற்று விளங்கும் தமிழ் இலக் கிய மாதப் பத்திரிகையான "ஆனந்தபோதினி"க்கு இருபத்

தோராவது ஆண்டு பிறந்தபோது, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் சந்தாதாரராகச் சேருபவர்களுக்கு இந் நவீனத்தைப் பரிசுப் பதிப்பாக வழங்க முன்வந்தார். அவர் அறிக்கை செய்தபடி, சந்தா செலுத்திச் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாசகர்களுக்கு இந் நவீனத்தின் பிரதிகள் "ஆனந்தபோதினி" ஆடி மாத முதல் இதழுடன் அனுப்பி வைக்கப்பட்டன. குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் சேர்ந்த மற்ற சந்தாதாரர்களிலும் கூடப் பெரும்பாலார் இந் நவீனத்தை ஆர்வத்துடன் வாங்கி வாசிக்கலாயினர். இவ்விதம் முதலில், 'ஆனந்தபோதினி' வார, மாதப் பத்திரிகைகளின் வாசகர்கள் வாயிலாக, தமிழ் மக்களிடையே பரவிய இந் நவீனம் நாளடைவில் தமிழ் வழங்கும் இடங்களிலெல்லாம் வழங்க லாயிற்று. இவ் வகையாகப் பார்த்தால்—அதாவது, தமிழ்நூல்கள் பதிப்பிக்கப்படும் கணக்கின்படிப் பார்த்தால், குறைந்த பக்ஷம், இது பத்து பதிப்புகளாயினும் வெளிவந் திருக்கிறதென்று கூறலாம். இன்ன வருஷத்தில் இப் புத்தகம் வெளியிடப்பட்டது, இத்தனை வருஷங்களுக்குள் இத்தனை பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன என்று, வருஷம், மாதம், தேதிகள் குறிப்பிட்டு மேனாட்டுப் புத்தக பிரசுர கர்த்தர்கள், குறிப்பிட்ட ஒரு புத்தகம் மக்களிடையே எவ்வளவுதூரம் பரவி யிருக்கிற தென்பதைக் குறிக்கவேண்டி, பதிப்புகளின் விவரத்தைக் தெரிவிப்பதுபோல், இக் கதையின் பதிப்பு விஷயத்தையும் குறிப்பிடுவதானால், மேற் குறிப்பிட்டவாறு தெரிவிக்கலாம். எத்தனை பிரதிகள் விற்பனையா யிருந்தாலும், புத்தக வடிவில் இது இரண்டாவது பதிப்பாதலால், இரண்டாம் பதிப்பு என்றே குறிப்பிடலாயிற்று.

உலகியலையும் மக்கள் இயற்கையையும் நுணுகி ஆராய்ந்து, சமுதாயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு கதைகளை எழுதி அவைகள் வாயிலாக மக்களின் இதயங்களைப் பண்படுத்த முயலவேண்டும்

என்ற ஒரே நோக்கத்தோடும் நம்பிக்கையோடும் இலக்கிய சேவை செய்துவரும் நான், என் லட்சியக் கொள்கைகள் நிறைவேறுவதற்கு நாடக உலகையும் சினிமா உலகையும் உறுதுணையாகக் கொள்ள எண்ணினேன். ஜனசமூக அமைப்பில் காணப்படும் குறைபாடுகளையும் ஊழல்களையும் எழுத்துச் சித்திரமாகத் தீட்டிக் காட்டும் என் கதைகள் நாடக மேடைகளிலும் வெள்ளித்திரைகளிலும் தத்ரூபமாக நடித்துக் காட்டப்படுமானால், மக்கள் உள்ளங்களில் நல்லவிதமான பெருமாறுதல் ஏற்பட்டு நான் கருதிய பலன் எளிதில் நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இது நான் முதலாவதாக எழுதிய "திண்டாதார் யார்?" என்ற நாடகத்தின் வாயிலாக அறிந்த அனுபவமாகும். எனது எண்ணத்தை உணர்ந்த என் ஆப்த நண்பர்கள் சிலர், இந் நவீனத்தை வெள்ளித்திரையில் கொணர முயற்சி யெடுத்துக் கொள்ளலாயினர். இதற்குள், பட முதலாளிகளிடையே செல்வாக்குடைய எனது எழுத்தாள நண்பரொருவர், இந் நவீனத்தின் கதா நாயகியான செளந்தரவல்லியை, சுந்தரியாக்கி அவள் தனது சிருஷ்டிப்பெண் என்று காட்ட நடையுடை பாவனைகளில் சிற்சில மாறுதல்களைச் செய்து தமக்குச் சிறந்தது எனத் தோன்றிய சில அலங்காரங்களைச் செய்து வெள்ளித்திரையில் உலவ விட்டுவிட்டார். ஆனால், பயன் என்ன?

இதனிடையே, நம் நாட்டுக் கலாசாரங்கள், நடையுடை பாவனைகளை மனத்திற் கொள்ளாது, பொருளைப் பெருக்கும் வழியையே குறிக்கோளாகக் கொண்டு, வட இந்திய, தென்னிந்தியப் பட முதலாளிகள் சிலர், மேனாட்டில் கல்லூரி மாணவர்களின் கோலாகல வாழ்க்கையைப் பிரதிபலிக்கச் செய்து நகைச்சுவையும் இன்பச் சுவையும் பெரிதும் ததும்ப வெளிவந்திருக்கும் ஹாலிவுட் படங்கள் பலவற்றைப் பின்பற்றி, "இந்திரா எம். ஏ.," "கலாசாலைப் பெண்" முதலிய படங்களைத் தயாரித்து வெளியிட லாயினர். இவைக

ளைப்பார்த்த கலாரஸிகர்களான அறிஞர்கள்பலர், "ஐயோ! நம் நாட்டுக் கலைப்பண்புக்கும் நாகரிகத்துக்கும் சிறிதும் ஒவ்வாத இப் படங்களெல்லாம் வந்து, நம் மாணவ இளை ஞர்களிடம் இல்லாத துர்க்குணங்களையும் தூண்டி விடக் கூடியனவாய் இருக்கின்றனவே! நவநாகரிகத்தால் சீர் கெட்ட ஜன சமூகத்தைத் திருத்தி யமைக்க முயலும் எத் தனையோ நல்ல கதைகள் நம் நாட்டுக் கதாசிரியர்களால் எழுதப்பட்டிருப்பது இவர்கள் கண்களுக்குப் புலப்பட வில்லையே" என்று வருந்தலாயினர். அவர்களில் சிலர் என் னிடமே வந்து நாடக உலகிலும் சினிமா உலகிலும் புகுந்து, அக் கலைகளை மட்டுமே யல்லாது ஜனசமூகத்தை யும் பாழ்படுத்தும் நபர்களைக் குறித்துக் கூறிக் குறைப் படுவ துண்டு. "நம் நாட்டுக் கலைக்கும், சமூகத்துக்கும் நல்ல காலம் வரும். அந்நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது என் நம்பிக்கை" என்று என் நம்பிக்கையை வெளிப்படுத்து வேன்.

வருங்கால சந்ததிகளைப் பயக்கும் தாய்மார்க ளாக வரப்போகும் இளமங்கையரை நல்லொழுக்கத்தி லிருந்து வழுவாமல் செய்து விட்டால், தமிழ்ச் சமுதா யத்தை இவ்வுலகில் தன்னிகரற்று விளங்கும்படிச் செய்து விடலாம் என்ற எண்ணத்துடனேயே, இளம் பெண் களைக் கதா பாத்திரங்களாக வைத்தே என் கதைகளை அமைத்திருக்கிறேன். 'கள வின்பம் விரும்பும் ஆண்'க ளின் நயவஞ்சகத்துக்குத் தங்களைப் பலியாக்கிக் கொள்ளா மல், விழிப்புடன் நடந்து, 'ஆதர்சப் பெண்'களாகுமாறு கேட்டுக்கொள்ளவே, இந் நவீனத்தை, தமிழ்நாட்டுச் சகோதரிகளுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

"ஜீவோதயம்"
சௌராஷ்டிர நகர்,
அக்பராபாத் போஸ்டு
சென்னை 12-6-44

ஆசிரியன்.

# காதலனா? காதகனா?

## முதலாவது அதிகாரம்

### வேடன் வலைப்பட்ட மாடப் புரு

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
....................................
மலையிடைப் பிறவா மணியே யென்கோ!
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ!
யாழிடைப் பிறவா இசையே யென்கோ!
தாழிருங் கூந்தல் தையால் நின்னை..."—சிலப்பதிகாரம்.

உலகத்திலுள்ள தலைசிறந்த நகரங்களில் சென்னையும் ஒன்றென்பதை யாவரும் அறிவர். சென்னைமா நகரம் மேனாட்டு நவ நாகரிகத்துக்குப் பேர் போனது. இப் பூமியின் பல பாகங்களிலுள்ள பல வேறுபட்ட மக்களெல்லோரும் இந்நகரில் வாழ்கின்றனர். பலவிதமான மொழிகள் இங்கு பேசப்படுகின்றன. அந்தந்த நாட்டில் உற்பத்தியாகும் பொருள்களெல்லாம் இவ்விடத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன, பொதுவாக, இந்தியாவையும் சிறப்பாக இச் சென்னையையும் மற்ற நாடுகளின் வியாபார

ஸ்தல மென்றும், மற்ற நாட்டு மக்களுக்குத் தாயக மென்றுங் கூடச் சொல்லலாம். இவையன்றி, இவ் வகிலத்திலிருக்கும் மற்ற தேச மக்களுக் கில்லாத ஒரு சிறப்பு இச் சென்னைமா நகருக்குண்டு. அதாவது இச் சென்னை நகரிலுள்ள கடற்கரையைப் போல் உலகத்தில் வேறெங்கு மில்லை. கடற்கரையின் அழகிய அமைப்பும் பரந்த மணற்பரப்பும், வெட்டவெளியும் விசாலமான இடமும் அயல் நாட்டார் மனத்தை அப்படியே கவர்ந்து விடுகிறது. இதற்கு அடுத்தபடியாகவே, லண்டன்மா நகரில் கடற்கரை யமைந்திருக்கிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சென்னைமா நகர் கடற் கரையில் தான் நம் கதை ஆரம்பமாகிறது. இள வேனிற் காலம். எங்கு பார்த்தாலும், செடி கொடிக ளும், மரங்களும் பச்சை பசேலெனத் தளிர்விட்டுத் தழைத்து நகரை அழகு செய்துகொண் டிருந்தன. செடிகொடிகளில் மலர்கள் வெண்மையாகவும், சிவப் பாகவும், நீலமாகவும் கொத்துக் கொத்தாகப் பூத்து மணம் வீசிக்கொண்டிருந்தன. அச் சமயஞ் சூரியன் மேற்றிசையில் விரைந்து சென்று கொண்டிருந்தானுத லால், அப் பக்க மெல்லாம் வானத்தில் பொன்னை உருக்கி வார்த்ததுபோல் தளதளவென்று மஞ்சளாகக் காணப்பட்டது. மேற்கடலில் ஆதித்தன் மூழ்குகையில் பொற்கோளம் போன்று விளங்கினுன். அம் மாலை யழகையும் இயற்கைக் காட்சியையும் கண்டு களிக்கும் பொருட்டு மக்கள் அணி அணியாகக் கடற்கரைக்கு உலாவ வந்து கொண்டிருந்தனர். ஐகோர்ட்டிலிருந்து நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மற்றும் சர்க்கார காரியாலய உத்தியோகஸ்தர்களும் கடலின் தூய

காற்றை நுகர்ந்துகொண்டு கால் நடையாகப் பிளாட்பாரத்தின் மீது தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தனர். மற்றும் பலர் தங்கள் குடும்பங்களோடு திருவல்லிக்கேணி கடற்கரை ரேடியோ சங்கீதத்தைக் கேட்கவும், 'மெரீனு அக்வேரியம்' என வழங்கும் மீன்கள் நிறைந்த காட்சி சாலையைப் பார்க்கவும், திரள் திரளாக வந்துகொண்டிருந்தனர். வாலிபர்களும் இளம் பெண்களும் ஒன்று சேர்ந்து காதலர் பாதை (Lover's Path) வழியாக மகிழ்ச்சியாகப் பேசிய வண்ணம் மெல்ல ஒய்யார நடை நடந்து போய்க் கொண்டிருந்தனர். கடற்கரை மணலில் சில பள்ளி மாணவர்களும், இளைஞர்களும் பந்தாட்டம் முதலியன விளையாடிக் கொண்டிருந்தனர். கரையோரமாக, சிலர் கட்டுமரங்களின் மீது உட்கார்ந்து கொண்டு, கடலில் அலைகள் எழும்பி ஒன்றோடொன்று மோதி ஆர்ப்பரிப்பதையும், செம்படவர்கள் கட்டுமரங்களி லேறி வெகுதூரம் போய் மீன் பிடித்துக்கொண்டு கரை நோக்கித் திரும்பி வருவதையும் பார்த்துக்கொண் டிருந்தனர். செனட் ஹவுஸிலிருந்து இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸ் வரையிலும் சீமான்களும் சீமாட்டிகளும், பெரிய பதவிகளில் இருப்பவர்களும் தங்கள் மோட்டார்களைப் பிளாட்பாரத்தின் ஓரமாக வரிசையாக நிறுத்தி விட்டுச் சிலர் அக்கார்களிலேயே உட்கார்ந்து காற்றைப் பருகிக் கொண்டும், சிலர் பிளாட்பாரத்தில் மெல்ல உலாவிக் கொண்டும் இருந்தனர்.

இந்திராணி மகளிர் கல்லூரிக் கெதிரில் உள்ள கடற்கரை மணலில், அழகிய மகளிர் பலர் ஓரிடத்தில் சுற்றி உட்கார்ந்து ஏதோ உரையாடிச் சிரித்துக்

கொண்டிருந்தனர். அக் கூட்டத்தில் தமிழ்ப் பெண் மணிகளும் ஐரோப்பியப் பெண்களும், கிறிஸ்தவ மக ளிரும், மலையாளிப் பெண்களும், பார்ஸிப் பெண்களும் கலந்திருந்தனர். அவர்க ளனைவரும் கலாசாலை மாணவி களெனத் தெரிந்தது, அன்று அவர்கள் ரமணீயமான தென்றற் காற்றிலே கடற்கரையில் உல்லாசமாகச் சிற் றுண்டி யருந்த ஏற்பாடு செய்திருந்தன ராதலால், நான்கைந்து பணிப் பெண்கள், அவர்களுக்குப் பலவித மான சிற்றுண்டிகளைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். நம் அழகிய பெண்மணிகள் சிற்றுண்டிகளைக் கொஞ் சஞ் சாப்பிடுவதும், இடையிடையே ஏதோ வேடிக்கை யாகப் பேசி நகைப்பதுமாக இருந்தனர். இம் மங்கை யர்கள் செய்யும் அட்டகாசம் அவ் வழியே போவார் வருவார் கவனத்தை ஈர்த்தது. இம் மாணவிகளை நவ நாகரிக வாலிபர்கள் பலர் வட்டமிட்டுக் கொண்டிருந் தனர்.

இம்மங்கையர்கள் உட்கார்ந்து சிற்றுண்டி யருந் திக் கொண்டிருந்த இடத்துக்கு எதிரே கடலில் இரு வாலிபர்கள் நீந்திக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு வனுக்கு 23-வயதிருக்கும், மற்றொருவனுக்கு 19-வய திருக்கலாம். மூத்தவன் உருண்ட முகமும், திரண்ட தோள்களும், அகன்ற மார்பும், உடலுரமும் வாய்ந்தவ னாய் சிவந்த மேனி யுடையவனாய்த் திகழ்ந்ததோடு, நன்றாக நீந்தவும் வல்லவனா யிருந்தான். இளையவனோ சற்று மெலிந்த தேகமுடையவனாய் வெளுத்துக் காணப்பட்டான். அவன் சில நாட்களாகவே நீந்த பழகிக்கொண்டு வருகிறான் என்பது தெரிந்தது. எவ் வாறென்றால், அவன் ரப்பர் வளையம் ஒன்றைக் கட

லில் போட்டு அதைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டு நீந்திக் கொண்டிருந்தான். அத்துடன், பெரிய வனும் அவனுக்கு இவ்விதமாக, கையை வீசி நீந்த வேண்டு மென்று கற்றுக்கொடுத்து வந்தான்.

பெரிய வாலிபன், கடலில் குதிப்பதும், ஐஸ்ஹவுஸ் வரை நீந்திக்கொண்டு போவதும், அங்கிருந்து இம் மங்கையர் கூட்டம் இருக்கும் இடத்திற்கு நேரே ஓடி வந்து கம்பீரமாக நின்று அம் மங்கையர் கூட்டத்தைக் கடைக்கண்ணுல் ஆராய்வதுமா யிருந்தான். இவன் கடலில் அஞ்சாது குதித்து நீந்தி வெளியேறி ஓடி வரும்போ தெல்லாம், இளைஞன் கைகொட்டிக் கூவி ஆரவாரஞ் செய்து கொண்டிருந்தான். ஆகவே, அவ் வாலிபர்கள் நீந்துவதைப் பார்க்க அங்கு ஜனக் கூட் டஞ் சேர்ந்து விட்டது. இக் கலாசாலை மாணவிகளும் அவ் வாலிபர்கள் நீந்துவதை வியப்போடு பார்த்துப் பேசுவதும், பின்னர் தங்கள் வேலையைக் கவனிப்பதுமா யிருந்தனர்.

பெரிய வாலிபன், இம் மங்கையரை ஒவ்வொருவ ராகக் கவனித்துக் கடைசியில், நட்சத்திரக் கூட்டத் தின் நடுவே பிரகாசிக்கும் குளிர்ந்த சந்திரனைப்போல, அவ் வழகியர் கூட்டத்தின் நடுவில் பேரெழிலுடன் விளங்கும் தமிழ் நங்கை யொருத்தியின் மீது கண்க ளைப் பதித்து, அவளழகைப் பருகுபவன்போல் அசை வற்று நின்றான், அவ்விள மங்கையின் கண்களும் இவ னது கட்டிளமையிலும், கம்பீரத் தோற்றத்திலும் ஈடு பட்டு நின்றன.

அவ்வழகிய பெண்மணியின் பார்வை தன் மீது பதிந்திருப்பதை யுணர்ந்த அவ் வாலிபன் மிகவுங் களி

கொண்டான். அச் சுந்தரியை எளிதில் தன் மாய வலை யில் சிக்க வைத்து விடலா மென்றும், இன்னுஞ் சில நாட்களில் அவளோடு கொஞ்சிக் குலாவி மகிழலா மென்றும் எண்ணி மேலும் மனக்கோட்டை கட்ட லாஞன். எனவே, அவன் அவ் வழகியின் கவனத்தை முற்றுங் கவர வேண்டி, அம் மாணவிகள் உட்கார்ந் திருந்த இடத்துக்குப் பக்கத்திலிருக்கும் பெரிய பட கில் தாவிப் பாய்ந்து ஏறுவதும், அதிலிருந்து அலட்சிய மாகக் கீழே குதிப்பதும், சில சமயங்களில் கடலில் நீந்தப் பழகிக் கொண்டிருக்கும் தன் சிநேகிதனை அலை கள் அடித்துக் கொண்டு போவதாகப் பாவித்து இங் கிருந்தபடியே பெருங் கூச்சலிட்டு ஓடி நீரில் குதித்து நீந்தி அவனைப் பற்றிக் கரை சேர்ப்பதுமா யிருந்தான். தன் தோழிகளோடு உரையாடிக் கொண்டும், சிற் றுண்டி யருந்திக் கொண்டும் இருந்தாலும் நம் வனிதை இவ் வாடவனது ஆர்ப்பாட்டங்களை யெல்லாம் கூர்ந்து கவனித்து அவனது வல்லமையை வியந்து கொண் டிருந்தாள். இவள் கவனம் அவ்வாலிபன் மீது சென் றிருப்பதையும், அவனும் இவள் அழகில் ஈடுபட்டுக் கூத்தாடுவதையும் அம் மாணவிகளில் ஒருத்தியான மலையாள மங்கை கவனித்து விட்டாள். எனவே, அவள் மற்ற மங்கையர்களுக்கு இக் காட்சியைச் சுட்டிக் காட்டி நம் பெண்மணியைப் பரிகசிக்கத் தொடங்கி விட்டாள். அதற்கேற்ப, மற்ற பெண்களும் தங்கள் மனதில் தோன்றியவா றெல்லாம் ஏதேதோ கூறி நகை யாடினர். தோழிகளின் பரிகாச வார்த்தைகளும் சிரிப் பும் நம் அழகிக்கு மிகவும் நாணத்தை யுண்டு பண்ணி யது. அவள் வாலிபனது கம்பீரத் தோற்றத்திலும், சாகஸச் செயலிலும் தன் மனதனைதப் பறி கொடுத்து

னின்ருளானாலும், சிறிது நேரத்திற் கெல்லாம், தன சித்த சபலத்தைப் போக்க முயன்றுகொண்டிருந்தாள். இந் நிலையில், தன் தோழிகளின் குறும்பு வார்த்தைகள் அவளுக்குச் சகிக்கக் கூடாததா யிருந்தது. ஆகவே, அவள் தன் அழகிய முகஞ் சிவக்க, "உங்களுக் கென்ன வேலை? ஏதாகிலும் அரட்டை யடித்துப் பொழுது போக்க வேண்டுமல்லவா! இன்று உங்களுக்கு விளை யாட்டுக் கருவியாக நான் அகப்பட்டேன் போலும்!" என்று கூறிக் கொண்டே பணிப் பெண் கொடுக்க வந்த காப்பியைக் கூட அருந்தாது எழுந்தாள். அவள் சீற்றத்தை யறிந்த மாணவிகள் தங்களது குறும்பு வார்த்தைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, அவளைச் சாந்தப படுத்த முயன்ருர்கள், முதலில் பரி கசித்த மலையாளப் பெண், எழுந்து போக முயன்ற நம் அழகியைக் கையைப் பற்றி யிழுத்து மீண்டும் உட்கார் வைத்து இங்கித வார்த்தைகளைக் கூறிக் காப்பி யருந் தச் செய்தாள். வாலிபனே இவற்றை யெல்லாங் கவ னித்து மனம் பூரித்தான்.

இக் கோலாகலத்தை யெல்லாம் இதுவரை தன் ஆயிரங் கண்களால் கண்டு கொண்டிருந்த சூரியன், "இம் மக்கள் மேல் நாட்டுப் போலி நாகரிகங்களைப் பின்பற்றி அறிவிழந்து பாழ் படுகிருர்களே! இவ்வநி யாயத்தை இனியும் பார்த்துக் கொண்டிருப்பது தகாது" என்று கூறி முன்னிலும் அதிகமாக முகஞ் சிவந்து மேற் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொண்டான். உடனே இரவென்னும் அரக்கன் காரிரு ளென்னுங் கருஞ் சட்டையை அணிந்துகொண்டு புறப்பட்டான். அச் சட்டையில் நட்சத்திரங்க ளென்

னும் புள்ளிகள் எங்கணும் காணப்பட்டன, இவ் வரக் கனது கோரைப் பல்லைப் போல் பிறைச் சந்திரன் தோன்றினான். இவனது பயங்கரத் தோற்றத்தைக் கண்டு கடற்கரையில் இருந்த மக்க ளெல்லாம் மூலைக் கொருவராக ஓடலாயினர். மாணவியரும் தங்கள் சிற்றுண்டியை முடித்துக்கொண்டன ராதலால், அவர்களும் தங்கள் கல்லூரி ஹாஸ்டலை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். அவ்வாறு செல்கையில் நம் தமிழ் நங்கை கடைக் கண்ணால் அவ்வாலிபனைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அவள் மனம் தன் வசத்தி லில்லாது வாலிபனிடமும், இவளிடமுமாக ஊசலாடிக் கொண்டிருந்தது.

தனது சாகஸ வலையில் சிக்கிய மாடப் புறு தன் பார்வையி லிருந்து மறைந்து மெல்ல பறந்து போவதைக் கண்ட வாலிபன் பதை பதைத்தான். மட அன்னக் கூட்டங்க ளிடையே தன் அழகிய தோகையை விரித்தாடிச் செல்லும் நீலமயில் போல, வெண்ணுடையே பெரும்பாலும் தரித்துள்ள அவ்வழகிய பெண்களிடையே, நீலப் பட்டாடை யுடுத்துப் பின்னி விடப்பட்ட அளக பாரம் காற்றில் பறக்க, தளர்நடை நடந்து செல்லும் மங்கையை விட்டுப் பிரிய வாலிபன் மனம் இசையவில்லை. "என்னே, இம் மங்கையின் பேரழகு! நீலப் பட்டாடையின் பளபளப்பைக் காட்டிலும், கடைந்தெடுக்கப்பட்ட யானைத் தந்தத்தைப் போன்றிருக்கும் அவள் மேனியின் ஒளி சிறந்து விளங்குகிறதே! உருண்டு திரண்ட முகத்தில் மிளிரும் மூக்குக் கண்ணாடியும் அழகு பெற்று திகழ்கிற தென்றால், அவளது பேரழகை யென்னென்பது! நீண்டு

சுருண்டு கரும்பாம்பு போன்றிருக்கும் கூந்தலைப் பார்த்துக் கொண்டிருந்தாலே பசியாறி விடும்போ லிருக்கிறதே! நான் இதுவரை எத்தனையோ அழகிய பெண்களைப் பார்த்துப் பேசி அவர்களோடு அளவளாவி மகிழ்ந்திருக்கிறேன். ஆனால், இவ் வனிதையை ஒத்த பேரழகியை நான் பார்த்தது கிடையாது. இவளையடைந்து மகிழாவிடில் யான் இருந்து பயனென்ன? ஆகட்டும் பார்க்கலாம்" என்று அவன் தனக்குள் ஏதேதோ பிதற்றலானான். பின்னர் அம்மங்கையர் போவதையும், அவர்களைப் பின் தொடர்ந்து சில வாலிபர்கள் செல்வதையும் பார்த்துக் கொண்டிருந்த வாலிபன் தனக்குள் ஏதோ முடிவு செய்து கொண்டு, அவசரமாகத் திரும்பிக் கடலில் நீந்திக் கொண்டிருந்த தன் தோழனைக் கைதட்டி யழைத்தான். உடனே அவன் ரப்பர் வளையத்தை யெடுத்துக்கொண்டு ஓடிவந்தான். அவன் அருகில் வந்ததும் இவ் வாலிபன், "கோபாலா! சீக்கிரம் உன் உடைகளை யெல்லாம் எடுத்து அணிந்து கொள்! அவசரம்; போகவேண்டும்" என்று துரிதப்படுத்திக்கொண்டே அவன் நனைந்திருந்த ஆடையைக் கழற்றிவிட்டு 'வி' நெக் பனியனையும், போலோ காலர் சில்க் சர்ட்டையும், டுவிட் கோட்டையும், ட்ரௌஸரையும் உடுத்திக்கொண்டு காலில் பூட்ஸைப் போட்டுக்கொண்டான.

இவனது பரபரப்பைக் கண்ட கோபாலன் குறும்புத் தனமாகக் கண் சிமிட்டிச் சிரித்து, "என்னடா சந்தர்! எப்போது பார்த்தாலும் உனக்கு அவசரந் தாண்டா! இதுவரை குதித்து ஆடிக் கொண்டிருந்தாயே? இப்போது மாத்திரம் என்னடா அவசரம் வந்துடுத்து! ஓஹோ! தெரிந்தது. இங்கே உட்கார்ந்து

தினி தின்றுக் கொண்டிருந்த மணி மாடப் புருக்க ளெல்லாம் பறந்து போய் விடப்போகின்றன வென்று பதைக்கிருய்? அவை எங்கும் ஓடிப் போய்விட மாட்டா! நம் பார்வையை விட்டுப் பறந்து செல்வதற் குள் அவைகளை நாம் பிடித்து விடலாம்" என்று கூறினன்.

தோழனது குறும்பு வார்த்தைகள் சந்திர சேகர னுக்கு ஒரு புறத்தில் கோபத்தையும் மற்ருெரு புறத் தில் சிரிப்பையும் வருவித்தன. எனவே, அவன் கோபா லன் முதுகில் சல்லாபமாக ஒரு தட்டு தட்டி, "ஏ! பால்! உனக்கு எப்போது பார்த்தாலும் பரிகாசந் தாண்டா! சந்தர்ப்ப விசேஷம் தெரிவதே யில்லை. வெறுமனே வார்த்தையாடிக் கொண்டிருக்காதே! ஓடி வாடா" என்று சொல்லி அவசர அவசரமாகப் பிளாட்பாரத்தை நோக்கி நடக்கலானன். கோபால னும் அவனைத் தொடர்ந்து ஓடினன்.

கல்லூரிக்கு நேரேயுள்ள பாதையில் மணலில் மெல்ல நடந்து சென்றுகொண்டிருந்த மாணவிகள் 'காதலர் பாதை'க்கு இரு மருங்கிலும் வெட்டி விடப் பட்டிருந்த சவுக்கு செடியண்டை போய் அதை நீக்கிக் கொண்டு 'காதலர் பாதை'யைக் குறுக்கிட்டு, சூரிய காந்தி செடி முதலியவைகளால் அழகு செய்யப் பட் டிருந்த மேட்டின் மீதேறி பிளாட்பாரத்தை யடைந்த னர். அவர்கள் வருவதற்கு இரண்டு நிமிஷங்களுக்கு முன்னரே நம் வாலிபர்கள் பிளாட்பாரத்துக்கு வந்து விட்டனர்.

மாணவிகள் ஒருவரோ டொருவர் பேசிய வண் ணம் தங்களைப் பின் தொடர்ந்து வரும் நவநாகரிக

வாலிபர்களைக் கவனித்துக்கொண்டே நடந்து வந்தனர். ஆனால், நம் தமிழ் நங்கையோ இவர்கள் சம்பாஷணையில் கலந்துகொள்ளாது, தான் கண்ட வாலிபனைப் பற்றிய நினைவே கொண்டு தன்னை மறந்து முன்னே நடந்தாள். எனவே, இம் மங்கையர் பிளாட்பாரத்தை யடைந்ததும், இவள் மட்டும் எதையுங் கவனியாது கல்லூரி 'ஹாஸ்டலை நோக்கி விரைவாக நடந்தாள். பின்னே வந்து இரு பக்கங்களையும் பார்த்து பிளாட்பாரத்திலேயே நின்ற மற்ற மாணவிகள் திடீரென்று ஓவெனக் கூச்சலிட லாயினர். சில பெண்கள், "ஆ! ஆ!! சௌந்தரா! சௌந்தரா!!" என்று கதறினர். சில மகளிர், "ஐயோ! வந்துடுத்தே!" என்று அலறிக் கண்களை மூடினர். இவர்கள் கூக்குரலுக்குக் காரணமென்ன? நம் கதாநாயகியான சௌந்தர வல்லி—ஆம்—அவள்; சுந்தரிதான்;—அழகுக்கொடியே!—நடுப் பாதையைக் குறுக்கிடும்போது இரு பக்கங்களிலும் இரண்டு மோட்டார் கார்கள் அலறி யடித்துக்கொண்டு (ஹார்ன் செய்து கொண்டு) வேகமாக வந்து கொண்டிருந்தன. அவைகளின் விளக்கொளி கண்களைப் பறித்தது. அவை இன்னுஞ் சில விநாடிகளுக் கெல்லாம் சௌந்தர வல்லியை நெருங்கிவிடும். மோட்டார் கார்கள் இரு பக்கங்களிலும் நெருங்கி விட்டதை அப்போதே உணர்ந்து திடுக்கிட்ட சௌந்தரவல்லி, விளக்கொளியைக் கண்டு மயங்கி நிற்கும் விட்டில் பூச்சைப் போல், இன்னது செய்வதென்று தெரியாது அசைவற்று நின்று விட்டாள். மோட்டார் டிரைவர்களோ நடுப்பாதையில் ஒரு பெண் நின்று தவிப்பதை யறிந்தவர்களாகத் தெரியவில்லை. ஏனென்றால் மோட்டார்கள் கண்ணை மூடிக்கொண்டு அத்துணை வேகமாக வந்து

கொண்டிருந்தன. பிளாட்பாரத்தில் நின்ற மாணவிகள் தங்கள் தோழியின் பரிதாபமான நிலையைக் கண்டு துடி துடித்தவர்களாய், "ஐயோ! சௌந்தரா! இன்னும் ஒரு விநாடியில் இம் மோட்டார் வண்டிகளால் மோதுண்டு அறைபட்டுப் போவாயே! ஓடு! ஓடு! நிற்காதே! விரைவாக அப் பக்கம் ஓடு" என்று கூவிக் கதறினர். இவர்கள் கூக்குரலைக் கேட்டும் சௌந்தரவல்லி அசைந்ததாகத் தெரியவில்லை. உன்மத்தங் கொண்டவள் போல் நின்ருள். பிளாட்பாரத்தில் நின்று உலாவிக்கொண்டிருந்த மற்ற சீமான்களும், வாலிபர்களும், பெண்களும் இக் காட்சியைக் கண்டு அப்படி யப்படியே பதுமைகள்போல் நின்று கொண்டிருந்தனர். எவரும் சௌந்தரவல்லியை விபத்தினின்றும் காக்க முன் வரவில்லை. பொறி தட்டுவது போல் இவை யாவும் ஒரு நிமிஷத்திற்குள் நடந்ததால் அவர்கள் மின்சார வேகத்தால் தாக்குண்டவர்கள் போல் நின்றனர். மோட்டார்கள் நெருங்கி விட்டன. பெண்கள் கூக்குரலும் நின்றுவிட்டது. யாவரும் இப்போது ஏற்படப் போகும் கோரக் காட்சியைக் காணச் சகியாது கண்களை மூடினர். இச் சமயத்தில் தெற்குப் பக்கத்திலிருந்து ஒரு வாலிபன் சௌந்தரவல்லி இருக்குமிடத்தை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். "ஐயோ! இதென்ன கொள்ளை! இவன் எவனே பைத்தியக்காரன்! மோட்டார்கள் நெருங்கிவிட்ட சமயத்தில் நடுவில் போய்க் குதித்தானே! அம் மங்கையோடு இவ் வாலிபனும் மோட்டாருக்குப் பலிதான் போலிருக்கிறது" என்று கூறி அங்கிருந்த யாவரும் அங்கலாய்த்து நின்றனர்.

வடக்குப் பக்கத்திலும், தெற்குப் பக்கத்திலு மிருந்து வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் கார் களில் இருந்த கனவான்களும், மோட்டார் டிரைவர்க ளும் செளந்தரவல்லி திகைத்து நின்ற இடத்துக்குச் சிறிது தூரத்தில் வருகையில்தான் பிளாட்பாரத்தில் மக்கள் திரளாக நின்று போடும் கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டனர். அவர்கள் சிறிது தெளிந்து எதிரே பார்த்தபோதுதான் ஒரு இளமங்கை நடுப் பாதையில் நின்று தத்தளிப்பதை யுணர்ந்தனர். இச் சமயத்தி லேயே மேற்கூறிய வாலிபன் தெற்குப் பக்கத்தி லிருந்து அப் பெண்மணி இருந்த இடத்தில் பாய்ந் தான். இதற்குள் மோட்டார்கார்களும் மிகவும் நெருங்கி விட்டன. நம் செளந்தரவல்லி யிருக்கும் இடத்திற் கும், மோட்டார்களுக்கும் இடையே ஒரு அடி தூரம் கூட இராது. மோட்டார் டிரைவர்கள் மோட்டார் களின் வேகத்தைக் குறைக்கத் திடீரென்று பிரேக் போட்டனர். அச்சமயத்தில் தான் செளந்தரவல்லி பொறி தட்டினாற்போல் கலாசாலை வாயிலை நோக்கி ஓடினாள். எனவே, தெற்கே இருந்து வந்த ரோல்ஸ் ராய் மோட்டார் இடது பக்கமாக ஒதுங்கிப் போய் நிற்கப்போகும் சமயத்தில் ஓடிவந்த செளந்தரவல்லி அதில் மோதுண்டு கீழே விழுந்து மூர்ச்சையானாள். வடக்கே இருந்து வந்த செவர்லெட் மோட்டார் தெற்கே இருந்து பாய்ந்த வாலிபன் சமீபத்தில் வந்து நின்றுவிட்டது. நல்ல காலமாக பாய்ந்த வேகத்தில் கால் தவறித் தரையில் விழுந்த வாலிபன்மீது அது ஏற வில்லை. ஆகவே, அவன் யாதொரு விபத்துக்கும் ஆளாகாமல் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந் தான். இதற்குள் பிளாட்பாரத்தில் இருந்த மாணவி

களும் மற்றவர்களும் சௌந்தரவல்லி மோதுண்டு விழுந்த இடத்திற்கு ஓடினர். மோட்டார்களில் வந்தவர்களும் தங்கள் தங்கள் மோட்டார் கார்களை விட்டிறங்கி அம் மங்கையண்டை சென்றனர். சௌந்தரவல்லியை விபத்தினின்றும் காப்பாற்ற முயன்று ஓடி வந்து கால் தவறி விழுந்து எழுந்த வாலிபனுக்கு விழுந்த வேகத்தில் தார் போட்ட தரையில் முழங்கால் முதலியவைக ளெல்லாம் உராய்ந்து சிறிது காயங்களேற்பட்டாலும், அவைகளைப் பொருட்படுத்தாமல், சௌந்தரவல்லி விழுந்த இடத்திற்கு ஓடி அங்கு சூழ்ந்திருந்த ஜனக்கூட்டத்தை நீக்கிக்கொண்டு முன் சென்று பார்த்தான், சிறிது நேரத்திற்கெல்லாம் ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டார்கள். நாம் இச் சம்பவத்தைக் குறித்து எழுதுவதற்கு இவ்வளவு நேரம் பிடித்தாலும், இவை யாவும் சில நிமிடங்களில் நடந்தன. இச் சம்பவத்தைப் புகைப் படத்திலோ, சினிமா படக் காட்சியைப் பிடிக்கும் கருவியிலோ எடுத்துத் தெளிவாகக் காட்டுதல் எளிதேயன்றி, எழுத்தால் வரைந்து காட்டுவது அருமையே யாகும், எனினும், வாசகர்கள் கட்புலனுக்குப் புலனாகும்படி ஒருவாறு எழுதிக்காட்டியிருக்கிறோம். அது நிற்க,

மோட்டாரில் மோதுண்ட சௌந்தரவல்லி அலங்கோலமாக விழுந்து கிடந்தாள். அவளை நெருங்கிய ஜனங்களில் சிலர், "அப் பெண்ணுக்கு மூச் சிருக்கிறதா? பாருங்கள்" என்றனர். மற்றுஞ் சிலர், "ஏதேனுங் காயம் பட்டிருக்கிறதா?" என்று வினவினர். வேறு சிலர், "யாராகிலுந் தயவு செய்து, சமீபத்தில் டாக்டர் இருந்தால் அழைத்து வாருங்கள்" என்று அநுதாபத்

துடன் கூறினர். மாணவிகளில் சிலர், அலங்கோலமாகக் கிடந்த அவளது உடையைச் சீர்திருத்தினர். சிலர் கைநாடியைத் தொட்டுப் பார்த்தனர். இன்னுஞ் சிலர் இருதயத் துடிப்பைக் கவனித்தனர். சில பெண்கள் மூச்சு வருகிறதா என்று பரீக்ஷை செய்தனர். இச்சமயத்தில் கூட்டத்தை நீக்கிக்கொண்டு முன் வந்த வாலிபன் குனிந்து சௌந்தரவல்லியின் முகத்தைப் பார்த்து மூச்சு மெல்ல வந்து கொண் டிருப்பதை யறிந்து சிறிது முகமலர்ச்சி கொண்டு, மோட்டாரில் மோதுண்டதனுல் எங்கேனும் பலமாக அடிபட்டு இரத்தம் ஒழுகுகிறதா என்று சுற்று முற்றும் பார்த்தான். இவ் வாலிபனைக் கண்டதும், ஜனக்கூட்டத்தில் இருந்த சிலர், 'இவனே அப் பெண்ணைக் காக்கத் தன் உயிரையும் திரணமாக நினைத்து முன் வந்து பாய்ந்தவன்' என்று அறிந்து அவனது அஞ்சாமையையும், தியாகச் செயலையும் பாராட்டிப் பேசினர். மற்றுஞ் சிலர் அவனை நோக்கி, "ஏனப்பா! உனக்கு ஏதேனும் அடிபட்டதா?" என்று விநயத்தோடு கேட்டனர். அதற்கு அவன், "ஒன்றுமில்லை" என்று பதி லளித்தான். மாணவிகளில் பெரும்பாலாரும், இவ் வாலிபனைக் கண்டதும், தங்கள் நன்றிப் பெருக்கை முகத்தின் வாயிலாகக் காட்டி, தங்கள் சிநேகிதையை விபத்தினின்றுந் தப்புவிக்க முயன்ற அவனை மனத்துக்குள் வாழ்த்தினர்.

முன்னர் குறித்த மாணவிகளில் ஒரு பெண், சௌந்தரவல்லியை மெல்லத் தூக்கித் தன் மார்பில் சாத்திக்கொண்டு தன் சேலையின் முந்தானையால் அவள் முகத்தில் விசிறி மூர்ச்சை தெளிவிக்க முயன்றுகொண் டிருந்

தாள். ஜனங்கள் காற்று வரும்படி சிறிது விலகி நின்ற னர். சிலர் டாக்டரை யழைத்து வாருங்கள் என்று முத லில் கூறினர்; ஆயினும், மோதுண்ட பெண்ணுக்குச் செய்ய வேண்டிய முதலுதவி என்ன வென்பதை யாராய்ந்து செய்ய முன் வராதவர்களாய் அப்படி யப் படியே பதுமைகள் போல் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். வாலிபனே இன்னது செய்வதென் றறியாது பைத்தியம் கொண்டவன் போல் சௌந்தர வல்லியை இறங்கிப் பார்ப்பதும், நிமிர்வதுமா யிருந் தான். மாணவிகளில் சிலர், சௌந்தரவல்லி விஷயத் தில் மற்ற யாவரையும் விட இவ்வளவு அக்கரை காட் டும் அவ் வாலிபனைக் கூர்ந்து கவனித்து வியப்புக் கொண்டனர். ஏன்? அவ் வாலிபனே கடலில் தன் தோழனோடு நீந்திக்கொண் டிருந்தவனும், அம் மாணவி களை—முக்கியமாக, சௌந்தர வல்லியைக் கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்து பின் தொடர்ந்தவனுமான சந்திரசேகர னுவான். எனவே, இவனை இன்னுனென் றறிந்த மாணவிகள் ஒருவருக்கொருவர் அவனைச் சுட் டிக் காட்டிப் புன் சிரிப்போடு அவனைப்பற்றி ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டனர்.

இதற்குள், தங்கள் கல்லூரி மாணவிகளில் ஒருத்தி மோட்டார் விபத்துக் குள்ளானுள் என்பதை யறிந்த பிரின்ஸிபாலான ஆங்கில மாதும், மற்றும் ஆசிரியை களும், மாணவிகளும் கல்லூரி ஹாஸ்டலி லிருந்து திரண்டு சௌந்தரவல்லி விழுந்து கிடந்த இடத்திற்கு விரைந் தோடி வந்தனர். இதே சமயத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் அவ்விடத்துக்கு வந்து விட்டனர், இவர்களைக் கண்டதும் ஜனங்கள் விலகி

வழி விடுத்தனர். பிரின்ஸிபாலும், போலீஸ் இன்ஸ்பெக்டரும் சௌந்தரவல்லியை நன்கு கவனித்து, இவளுக்குக் காயம் ஒன்றும் ஏற்படாவிட்டாலும், மோதுண்டதால் உள்ளே அதிர்ச்சியேற்பட்டிருக்கிற தாதலால், இவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்வதே நல்லது என்று தீர்மானித்தனர். எனவே, அவர்கள் அங்கிருந்த மோட்டார் ஒன்றில் சௌந்தரவல்லியை ஏற்றி, அவளுடன் கல்லூரி ஆசிரியை ஒருவரையும் இரு மாணவிகளையும் அவளைத் தாங்கிக் கொள்ளச் செய்து ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். சப் இன்ஸ்பெக்டர் விபத்து ஏற்பட்டதற்குரிய காரணத்தை விசாரித்து தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார். நம் சந்திரசேகரன் போலீஸாரும் பிரின்ஸிபாலும் வந்ததும் சிறிது விலகி நின்ருனுதலால், சௌந்தரவல்லியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதும் அவன் ஆழ்ந்த சிந்தனையுடன் தோழன் கோபாலனேடு தன் வழியே சென்ருன்.

இச் சம்பவம் நடந்த மூன்றும் நாள் மாலை 4½ மணியிருக்கும். ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'ஏ' வார்டைச் சேர்ந்த ஒரு அறையில் கட்டிலொன்றில் ஒரு பெண் படுத்துக்கொண்டிருந்தாள். பக்கத்தில் ஒரு நாற்காலியில் வாலிபனொருவன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவ்வறையின் வெளியில் ஒரு நர்ஸ் இவர்களைக் கவனிப்பதும் கவனிக்காததுமாக உலவிய வண்ணமிருந்தாள்.

படுக்கையிலிருந்த பெண்ணின் முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த வாலிபன், அவள் சிறிது கண்களைத் திறந்ததும் நயமாக, "சௌந்தரா! உடம்பு

எப்படி இருக்கிறது? இப்போது தேவலையே?" என்று மெல்லக் கேட்டான்.

இதைச் செவியுற்றதும் அம் மங்கை துணுக்குற்று நன்ருகக் கண்ணைத் திறந்து நிமிர்ந்து பார்த்து ஆச்சரிய மேலீட்டால், "நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். என்னை விபத்தினின்றும் காக்க நீங்கள் உங்கள் உயிரையும் பொருட்படுத்தாது ஓடிவந்த செய்தியை எனது சிநேகிதைகளின் வாயிலாக அறிந்தேன். உங்களை என் வாணுளில் என்றும் மறக்க முடியாது" என்று கூறிக் கண்களில் நீர் ததும்பத் தன் நன்றியறிதலைத் தெரிவித்தாள்,

சந்திரசேகரன் அசட்டுச் சிரிப்பு சிரித்து, "நான் என்ன பிரமாதமான காரியஞ் செய்தேன்? இவ்வித சமயங்களில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதற்காகத் தானே நாம் மனிதர்களாய்ப் பிறந்திருக்கிருேம். அதிருக்கட்டும். உன் அன்புமாத்திரம் என்னிடத்தில் இருந்தால் அதையே நான் பெரும் பேருகக் கருதுவேன்" என்று சாதுரியமாகக் கூறி மெல்ல நாற்காலியை நகர்த்திப் படுக்கையின் அருகே போட்டுக் கொண்டு சௌந்தரவல்லியின் கைகளை வருட ஆரம்பித்தான்.

இச் சமயத்தில் நர்ஸ் அங்கு தோன்றி வேறு சிலர் சௌந்தரவல்லியைப் பார்க்க வந்திருப்பதாகக் குறிப்பிக்கவே, சந்திரசேகரன் தன் கையை அவசரமாக இழுத்துக் கொண்டு தான் மறுநாள் வந்து பார்ப்பதாகக் கூறி விடை பெற்றுக்கொண்டு வேறு வழியாக ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினுன்.

ஒரு மாதங் கடந்தது. சௌந்தரவல்லி ஆஸ்பத்திரியினின்றும் வெளி வந்து விட்டாள். இப்போது சௌந்தரவல்லியும் சந்திரசேகரனும் நெருங்கிய நண்பர்களானார்கள். ஒரு நாளாயினும் ஒருவரை யொருவர் பார்க்கத் தவறுவதில்லை. சௌந்தரவல்லி மாலை நேரத்தைத் தன் சிநேகிதைகளோடு கழிப்பதை அறவே கைவிட்டாள். மாலை நேரங்களில் இவ் விருவரையும் கோமள விலாஸ் ஹோட்டலிலோ, மெரீனா பீச்சிலோ, ராக்ஸி, எல்பின்ஸ்டன் டாக்கி ஹவுஸ்களிலோ தான் பார்க்கலாம். அவ்வளவு தூரம் சந்திரசேகரன் சௌந்தரவல்லியை மயக்கித் தன் வஞ்சக வலையில் சிக்க வைத்திருந்தான். வெள்ளை மனத்தினளான சௌந்தரவல்லி அவனது சூதை யுணராது அவனைத் தன் நன்மையை நாடும் உண்மை நண்பனாகவே கருதி வந்தாள். நாளடைவில் அவள் அவனை உள்ளூறக் காதலிக்கலானாள். தான் விரித்த கண்ணியில் மாடப்புறா சிக்கி இனி வெளியேற வழிகாணாது அதிலேயே ஆடுவதை யறிந்த சந்திரசேகரன், மிகவுங் குதூகலித்துத் தன் எண்ணத்தை முடித்துக் கொள்ளச் சமயம் பார்த்துக்கொண் டிருந்தான்.

---

# இரண்டாவது அதிகாரம்

## வாலிபர்கள் போட்டாபோட்டி

மண்ணுக் குள்ளே சிலமூடர்—நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.—பாரதியார்.

ஒரு நாள் மாலை 4-30 மணி யிருக்கும். நம் கதா நாயகியான செளந்தரவல்லி இந்திராணி மகளிர் கல்லூரியின் தாழ்வாரத்தில் இங்கும் அங்குமாக உலா விக்கொண் டிருந்தாள். அவள் மனம் நிலை கொள் ளாது இருந்தது. அனல்மீது நிற்பவள்போல் துடி துடித்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் அரும் பும் வியர்வையைக் கைக்குட்டையால் துடைப்பதும், அடிக்கடி தன் கைக் கடியாரத்தைப் பார்ப்பதுமா யிருந்தாள். அவளோடு படிக்கும் மாணவிகளில் சிலர் அவளை நெருங்கி ஏதோ பேச முயன்றும் அவள் அவர்க ளது வார்த்தைகளைச் செவியி லேற்காது அப்புறம் பேசிக் கொள்ளலாமென்று சொல்லி மெல்ல அவர்களை யனுப்பி விட்டாள். அவள் கண்கள் கல்லூரியின் வெளி வாயிலையே பார்த்துக்கொண் டிருந்தன, அவ ளது இச் செயல்களால், அவள் யாரோ ஒருவருடைய வரவை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறுள் என்று தெரிந்தது. மணி 4-45 ஆயிற்று. பேபி ஆஸ்டின் மோட்டார்கா ரொன்று கல்லூரியி னுள் வெகு வேகமாக வந்துகொண்டிருந்தது. அது தூரத்தில் வரக் கண்டதுமே செளந்தரவல்லி ஒரு துள்ளு துள்ளிக் குதித்தாள். மகிழ்ச்சியால் கையைக்

கொட்டிக் கொண்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் மோட்டார் அவள் நிற்கு மிடத்தை யடைந்தது. அதி லிருந்து ஒரு வாலிபன் இறங்கினன். அவன் ஐரோப்பி யரைப் போலவே உடை யுடுத்திக்கொண் டிருந்தான். அவன் தான் அணிந்திருந்த தொப்பியை (Hat)க் கழற்றி மோட்டாரிலேயே வைத்துவிட்டு நம் சௌந்தரவல்லி பக்கந் திரும்பிப் புன்முறுவல் செய்து, "ஹல்லோ! குட்மார்னிங் சுந்தரி! நான் 'லேட்'டாய் வந்ததுபற்றி மன்னிக்கவும்..............." என்று உபசார வார்த்தை சொல்ல ஆரம்பித்தான்.

சௌந்தரவல்லி அவ் வாலிபன் மோட்டாரைவிட் டிறங்கியதுமே, அவனருகில் ஆவலோடு ஓடிப்போய் அவன் கைகளைப் பற்றிக் குலுக்கிய வண்ணம், "வந்த னம் சந்தர்! நீ எங்கு இன்று வராமல் போய் விடுகி ருயோ என்று பார்த்தேன். நேரமானுலும் வந்துவிட் டாயே! அது போதும்" என்ருள்.

மோட்டார் வந்ததையும், அதிலிருந்து ஒரு வாலி பன் இறங்கியதையும், அவனை ஆவலோடு சௌந்தர வல்லி வரவேற்றுக் கைகுலுக்கி மகிழ்ச்சியாகப் பேசு வதையும் முதலி லிருந்தே சில மாணவிகள் பார்த்துக் கொண்டிருந்ததால், அவர்கள் உள்ளே சென்று மற்ற மாணவிகளையும் அழைத்து வந்து மேல் மாடியிலும் மூன்ருவது மாடியிலும் கீழும் இருந்து கொண்டு இவர் களைச் சுட்டிக் காட்டி ஏதோ பேசிப் பரிகசித்துக் கொண் டிருந்தனர். சௌந்தரவல்லி இவர்கள் செயலை யெல்லாம் கவனிக்கவே இல்லை. ஆனல், கபடமே ஒருருவான சந்திரசேகரன் மாணவிகளின் விஷமச் செயலைத் தன் கடைக்கண்ணுல் கவனித்துவிட்டா னுந்

லால், உடனே மோட்டார் கதவைத் திறந்து செளந்தர வல்லியை ஏறும்படிக் குறிப்பித்தான். அவளும் ஏறி யுட்கார்ந்துகொண்டாள், அக்கணமே சந்திரசேகரனும் அதில் ஏறிக்கொண்டு வேகமாக ஓட்டிச் சென்றான். இம் மோட்டார் வடக்கே நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. சிறிதுநேரத்திற்கெல்லாம் தென் கிழக்கில் பிளாட்பாரத்தின் ஓரமாக நின்றிருந்த மோட்டார் காரொன்று இம் மோட்டாரைப் பின் தொடர்ந்தது. அதில் நான்கைந்து வாலிபர்கள் இருந்தார்கள். அவர் கள் ஏதோ ஒரு நோக்கத்தோடு இம் மோட்டாரைப் பின் தொடர்வதாகத் தெரிந்தது. சந்திரசேகரன் இதைக் கவனியாது செளந்தரவல்லியோடு உல்லாச மாகப் பேசிக்கொண்டே மோட்டாரை மெளண்ட் ரோட் தியாகராஜ மெமோரியல் பில்டிங்கி லிருந்த 'நியோ கோமள விலாஸ்' ஓட்டலண்டை நிறுத்தினன். உடனே ஓட்டல் வாயிலில் நின்றிருந்த பியூன் வந்து மோட்டாரைத் திறந்து அவ்விள நண்பர்களை வரவேற் ருன். சந்திரசேகரன் செளந்தரவல்லியை அழைத்துக் கொண்டு, ஆண்களும் பெண்களும் கலந்து சிற்றுண்டி யருந்துவதற்குத் தனியாக அமைக்கப்பட் டிருக்கும் அறையில் நுழைந்தான். அக்கணமே சிற்றுண்டி பரி மாறுபவன் ஒருவன் (Waiter) அங்கு தோன்றி அவர் களுக்கு என்ன வேண்டுமென்று பணிவாகக் கேட் டான். சந்திரசேகரன், செளந்தர வல்லியைப் புன் சிரிப்பாகப் பார்த்துக் கொண்டே, பாதாம் அலவா, பாஸந்தி, புரூட் ஸாலட், காப்பேஜ் பாத், பொட் டேடோ வடை முதலிய சிற்றுண்டி வகைகளை வரிசை யாகக் கொண்டு வரும்படி ஆடம்பரமாக உத்தர விட் டான். அவை ஒவ்வொன்ருகப் பரிமாறப் பட்டதும்,

அவைகளை இருவரும் களிப்போடு உரையாடிக் கொண்டே அருந்தினர்.

இதனிடையே சௌந்தரவல்லி ஏதோ திடீரென்று நினைத்துக்கொண்டு சந்திரசேகரனை ஆச்சரியத்தோடு பார்த்து, "ஆமாம். சந்தர்! உன்னைப்பற்றிய தகவல்களை எனக்கு இன்னுஞ் சரியாகச் சொல்ல வில்லையே! இப்போதாகிலும் கூறக்கூடாதா! நீ என்ன செய்து கொண் டிருக்கிறாய்? உன்னுடைய சொந்த ஊரெது? பெற்றோர் இங்கே இருக்கிறார்களா? இல்லையானால், நீ இங்கு எவ்வாறு காலங் கழிக்கிறாய்?" என்று மடமட வென்று கேள்விகளை யடுக்கிக்கொண்டே போனாள்.

இவளது கேள்விகளைக் கேட்டதும், சந்திரசேகரன் உள்ளூறத் திடுக்கிட்டானாயினும், வெளிக்கு அசட்டையாக நகைத்துக்கொண்டே, "என்ன சுந்தரி! உனக்குத் திடீரென்று இதில் கவனஞ் சென்றது? நான் இதுவரை என்னைப்பற்றிய தகவலைச் சொல்லவேண்டுமென்றோ, உன்னைப்பற்றி முழு விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றோ நினைக்கவில்லை. அதை முக்கியமாகவும் கருதவில்லை. நம் இருவர் மனமும் ஒத்துப்போய் நட்பு ஏற்பட்டுவிட்ட பிறபாடு, இது அத்துணை அவசியமென்று எண்ணவில்லை. இதைத் தெரிந்துகொண்டு தான் நாம் ஒருவர்மீ தொருவர் அன்பு வைக்கப் போகிறோமா? அதொன்று மில்லையே!- இப்போது நீயே என்னைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பும் போது, நான் சொல்லத் தடையில்லை. ஆனால், நீ உனது வரலாற்றை முதலில் கூறு. பின்னர் நான் சொல்லுகிறேன்" என்று நயமாகக் கேட்டான்.

சௌந்தரவல்லி ஆர்வத்துடன், "ஓ! இதோ கூறு கிறேன். நாம் மனங் கலந்த தோழர்களாய் விட்டா லும், அவரவர்களுடைய உண்மைத் தகுதிகளைத் தெரிந்து கொள்வது நல்ல தன்றோ?—எனது சொந்த ஊர் திருநெல்வேலி. அங்கு சைவ வேளாள மரபிற் பிறந்த எனது தந்தையார் பெருஞ் செல்வந்தர். அது வன்றி அவருக்கு ஏராளமான நில புலங்கள் இருக்கின் றன. அவருக்கு யான் ஒரே பெண்ணாதலால், நான் செல்வமாக வளர்க்கப்பட்டு உயர்தரக் கல்வி புகட்டப் பட்டு வருகிறேன். நான் இப்போது பீ. ஏ ஜூனியர் வகுப்பில் வாசித்து வருகிறேன். நான் சென்னைக்கு வந்து இந்திராணி மகளிர் கல்லூரியில் வாசித்து வரு வது இரண்டு வருடத்துக்கு மேலானாலும்; இதுவரை உன்னைப் போன்ற ஆடவருடைய சிநேகத்தைப்பெற்ற தில்லை. நான் நாகரிகத் துறையில் இவ்விஷயத்தில் இவ் வளவு முன்னேற்ற மடையவொட்டாது இயற்கை யாகவுள்ள நாணமே இதுவரை தடுத்து வந்தது. இத னால் எனது சிநேகிதர்கள் சிலரால் பரிகசிக்கப்பட்டும் வந்தேன். ஏதோ இப்போது உன்பால் எவ்வித மாகவோ ஒருவித நட்பு ஏற்பட்டுவிட்டது. எவ்வித காரணத்தாலும் நம் சிநேகிதத்துக்குப் பங்க மேற்படா திருக்க வேண்டுமென்று கடவுளை இறைஞ்சுகிறேன்" என்று தனக்கு அவன் மீது ஏற்பட்டிருககும் பற்றைச் சிறிது வெளியிட்டு மொழிந்தாள்.

தன் தூண்டிலில் அகப்பட்ட மீன் பொன் மீனே என்று அறிந்து மகிழ்ந்த சந்திரசேகரன் ஆழ்ந்த சிந் தனையோடு, "என் அன்பே! என்னிடத்தில் அளவற்ற அன்பு வைத்திருக்கும் நீ என்னைப் பற்றித் தெரிந்து

கொள்ள வேண்டியது நியாயமேயாகும். நானும் வேளாள வகுப்பைச் சேர்ந்தவனே. எனது தந்தையார் மருங்காபுரிக்கு ஜமீந்தாராகும். அந்த ஜமீனுக்கு ஏராளமான சொத்திருக்கிறது. அதற்கு நான் ஒருவனே உரிமை வாய்ந்தவன். எனக்குச் சகோதரியொருத்தி யிருந்தாலும் அவள் ஒரு பெரிய மிட்டாதாருக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறுள். ஆகவே, என்னைத் தவிர வேறு ஆண் சந்ததிகள் இல்லாமையால், எனது பெற்ருேர்கள் என்னை அவர்களது உயிராகப் பாவித்து வருகிருர்கள். நான் இங்கு கல்வி பயிலும் பொருட்டு, ராஜதானி கலாசாலையில் வாசித்து வருகிறேன். இவ்வருட முடிவில் நான் எம். ஏ. பரீக்ஷையில் தேரி விடுவேன். அப்புறம் நான் என் ஜமீனுக்குத் தலைவனுக்கப்படுவேன். வயது சென்ற எனது பெற்ருேர்கள் என் பிரிவைத் தாங்கமாட்டாது அல்லும் பகலும் வருந்தி வருவதோடு, அடிக்கடி கடிதமெழுதி என்னைச் சீக்கிரம் வந்துவிடும்படி வற்புறுத்தியும் எழுதி வருகின்றனர். அதுவுமன்றி அவர்கள் எனக்கு வருகிற தைமாதம் விவாகஞ் செய்யவும் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிகிறது. எனக்கு இவ் விஷயந்தான் மிகவுங் கவலையை உண்டு பண்ணுகிறது. என் விருப்பப்படி நான் எனக்குக் காதலியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அநுமதி கொடுப்பதை விட்டு, அவர்களே எனக்காகப் பெண் பார்ப்பது எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அது எப்படியாகிலும் போகட்டும். பரீக்ஷை முடிந்ததும் ஊருக்குக் கட்டாயம் போகவேண்டும். பெற்ருேர்கள் உத்தரவு அவ்வளவு கடுமையாக இருக்கிறது. அப்போது உன்னை எப்படி பிரிந்திருப்பது என்று தான் மிகவும் மனம் வருந்துகிறேன். அப்பிரிவை நினைத்தாலே

நெஞ்சம் நடுங்குகிறது. ஆவி சோர்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை" என்று உருக்கமாகக் கூறிச் சௌந்தரவல்லியின் முகத்தை கடைக்கண்ணால் கூர்ந்து பார்த்து அவள் மனநிலையை ஆராய்ந்தான். அச் சமயத்தில் இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்தறையில், யாரோ, "சந்திரசேகரா! உன் சாகஸம் பலிக்காது. உன் குட்டை வெளிப் படுத்த நாங்கள் இருக்கிறோம். பார்க்கிறோம் ஒரு கை" என்று கூறிப் பற்களை நறநறவென்று கடிக்கும் சப்தம் கேட்டது. இவ்விரு அறைகளுக்கும் இடையே ஒரு பலகையே தடுத்து விடப்பட்டிருந்ததால் இரு அறைகளில் பேசுவதும் அங்கிருப்போருக்கு நன்றாகக் கேட்கும். எனவே, பக்கத்தறையில் இருந்து வந்த வார்த்தைகள் அவ்வளவையும் சந்திரசேகரன் நன்றாகக் கேட்டுத் திடுக்கிட்டு விட்டான். ஆனால், சந்திரசேகரனின் வஞ்சக மொழிகளைக் கேட்டு மனக் கலக்கமுற்று, தன்னை மறந்திருக்கும் சௌந்தரவல்லியின் காதில் இவ் வஞ்சின மொழிகள் விழவில்லை.

நெடுநேரம் உன்மத்தன்போல் அசைவற்றிருந்த சந்திரசேகரன் சிறிது தெளிந்து அடுத்த அறையிலிருந்து வந்த வஞ்சின மொழிகளைச் சௌந்தரவல்லி கேட்டுவிட்டாளோ என்று அஞ்சியவனாய், அவளைக் கீழ் பார்வையாகப் பார்த்தான். சௌந்தரவல்லியோ அப்போதும் ஏதோ சிந்தனையி லாழ்ந்தவளாய் தலை குனிந்த வண்ணம் இருந்தாள். இதை யறிந்த சந்திரசேகரன், அவள் தான் கூறிய உருக்க மொழிகளில் இலயித்துப்போய் அதன் உட்பொருளை யாராய்ந்தவாறிருக்கிறாள் என்று ஒருவாறு ஊகித்துக்கொண்டு,

அவள் காதில் இச்சொற்கள் விழுந்திருக்காது என்று தைரியமடைந்தான். ஆனாலும், "அடுத்த அறையி லிருந்து வஞ்சினங் கூறியவர்கள் யாவர்? அவர்கள் என்னை இங்கு எவ்வாறு தெரிந்துகொண் டிருக்கக் கூடும்? அவர்கள் குரல் யாரோ எனக்கு அறிமுகமான ஒருவருடைய குரலைப்போ லிருக்கிறதே! அவர்கள் என்னிடம் பகைமை கொள்ளக் காரணமென்ன?" என்றெல்லாம் அவன் சிந்தித்து மனக்கலக்கங் கொண் டான். பயத்தால் அவன் முகம் வெளுத்து வியர்த்தது. அவர்கள் யார் என்று அறிய எண்ணி, மெதுவாகத் தன்னிருக்கையை விட்டெழுந்து, அங்கு சுவற்றில் மாட்டப்பட்டிருந்த ஒரு அழகிய படத்தை அருகு சென்று பார்க்க விரும்புபவன்போல் அடுத்த அறை யிருக்கும் பக்கமாகச் சென்றான். அதேசமயத்தில் அவ் வறையி லிருந்தவர்கள் வெகு விரைவாக வெளியேறுங் காலடி யோசை கேட்டது. இதையறிந்த சந்திரசேக ரன் அவர்களை இன்னாரென்று அறியவேண்டுமென்ற ஆவல்கொண்டு, தான் இருந்த இடத்துக்குப் படபடப் போடு திரும்பினான். அவ்வமயம், சிற்றுண்டி பரிமாறி யவன் 'பில்'லை ஒரு தட்டில் வைத்து ஏந்தி இவன் முன்னர் நீட்டினான். அவன் அதில் குறிக்கப்பட் டிருந்த தொகையைச் செலுத்திவிட்டுப் பின்னர் சௌந்தரவல்லி இருக்கும் பக்கந் திரும்பி, "சுந்தரி, போகலாமா!" என்று கேட்ட வண்ணம், மூடப்பட் டிருந்த சிறு கதவைத் திறந்துகொண்டு வாயிலையடைந் தான். அச்சமயமே ஓட்டலுக்கு எதிரில் நின்றிருந்த மோட்டா ரொன்றில் யாரோ சில வாலிபர்கள் ஏறி வேகமாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் யா ரெனப் பார்ப்பதற்குள், அம்மோட்டார் "ரென்பென்

னட்" கம்பெனி பக்கமாகத் திரும்பிச் சந்திரசேகரன் கண்களுக்கு மறைந்துவிட்டது. உடனே தன் மோட்டாரில் ஏறி அதைப் பின் தொடர்ந்து சென்று அவர்கள் யாரெனப் பார்க்கலாமா என்று முதலில் எண்ணினான். அப்போது செளந்தரவல்லி இல்லாதிருந்தால் அவன் அவ்வாறே செய்திருப்பான். அவள் உடன் இருப்பதால் அது ஆகாத காரியமென்று அயர்ச்சியோடு வாயிலிலேயே நின்றுவிட்டான். இதற்குள் செளந்தரவல்லியும் அங்கு வந்துவிட்டாள். எனவே, சந்திரசேகரன் வேறு வழியின்றி, செளந்தரவல்லியை அழைத்து காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டான். போகும் வழியில் சந்திரசேகரன் செளந்தரவல்லியை நோக்கி, " சுந்தரி! எனக்குத் திடீரென்று மயக்கமாய் இருக்கிறது. இன்று வேறெங்கும் போகாது ஹாஸ்டலுக்குப் போய் ஓய்வெடுத்துக் கொள்வதே நல்லதென்று தோன்றுகிறது. ஆதலால், உன்னை ஹாஸ்டலில் விட்டுவிட்டு நான் எனது ஹாஸ்டலுக்குப் போகிறேன். நாளை மாலை உன்னை வந்து பார்க்கிறேன்" என்றான். கபடமற்ற மனத்தினளான செளந்தரவல்லி அவனது வார்த்தையை உண்மை யென்றே நம்பி, அவனுக்குத் திடீரென்று உடம்பு அசௌகரிய மேற்பட்டதற்காக அனுதாபங் காட்டினாள்.

ஒரு நாள் சனிக்கிழமை காலை 9-மணிக்கு இந்திராணி மகளிர் கலாசாலை மேன்மாடியின் முன் தாழ்வாரத்தில் மாணவிகள் பலர் ஸ்பிரிங் கட்டில்களில் படுத்துக்கொண்டும், பிரம்பு நாற்காலிகளிலும் சாய்வு நாற்காலிகளிலும் உட்கார்ந்துகொண்டும் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிச் சிரித்துக்கொண் டிருந்தனர்.

அச்சமயம் தன் அறையிலிருந்த சௌந்தரவல்லி அங்கு வந்து இம்மாணவிகளையும் அவர்கள் உரையாடலையுங் கவனியாது கைப்பிடிச் சுவற்றின் மீதேறி யுட்கார்ந்து கடலைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் முகம் வெளுத்துக் கவலையால் வாடியிருந்தது.

இவள் அங்கு வரும்போதே சுலோசனு என்னும் பெயருடைய மலையாளப் பெண்ணொருத்தி மற்ற மாணவிகளுக்கு அவளைக் காட்டிக் கண் சிமிட்டிக் குறும்பாகச் சிரித்தாள். மற்ற மாணவிகளும் இவளைக் கண்டு புன்னகை கொண்டனர். அவர்களில் பத்மாவதி என்னும் பிராமணப் பெண் நம் கதா நாயகியை நோக்கி, "என்ன சுந்தரி! எங்களை யெல்லாங் கவனிக்கக் கூடமாட்டேனென்கிருயே! அயலாரைப் பார்ப்பதுபோலல்லவா எங்களைப் பார்க்கிருய்! வார்த்தைக்குக் கூடவா பஞ்சம்?" என்று கேட்டாள்,

கிரேஸ் என்னும் கிறிஸ்தவ மங்கை சௌந்தரவல்லியைக் கேலியாகப் பார்த்து, "சுந்தரி இப்போது நம்மோடெல்லாம் பேசுவாளா? அவள் காதலனோடு பேசவே பொழுதில்லை என்று கவலைப்படுகிருளே? அப்படியிருக்க, நீ 'வார்த்தைக்குக் கூடவா பஞ்சம்' என்று கேட்பது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. பத்மா! உனக்கு உலகானுபவமே ஒன்றுந் தெரியாது. பேசாமலிரு" என்ருள்.

மீண்டும் சுலோசனு, சௌந்தரவல்லியைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "போங்கடி! உங்களோடு பேசாதது தான் முழுகிப்போய்விட்டது? பாவம்! நம் சுந்தரி, இரண்டு நாட்களாய் அவளது காதலன் வரவைப் பார்த்து பார்த்து கண் பூத்துப்போய் 'அவன் வரவில்

லேயே! அவனுக் கென்னவோ ஏதோ' என்று மனங் கலங்கி ஏங்கிக் கிடக்கிருள். அவள் இதே கவலையாய் இராத்திரி யெல்லாம் தூங்கக்கூடவில்லை போலிருக் கிறது. அவளைப் பார்த்தாலே ஐயோ வென்று இருக் கிறது. அதைக் கண்டு இரங்காமல் உங்களிடத்தில் அவள் பேசவில்லை யென்று ஏதோ வம்பளக்கிறீர்களே! இது உங்களுக்கு நியாயமா?" என்று அவள் மீது அனு தாபப்படுபவள்போல் மொழிந்தாள்.

ரமாமணி என்னும் ஆந்திரப் பெண்மணி மற்ற மாணவிகளை யெல்லாம் பார்த்து, "பார்த்தீர்களா? 'இனம் இனத்தோடு சேரு' மென்பார்களே! அப் பழமொழி சுலோசனு விஷயத்தில் மெய்யாகிவிட்டது. ஏனென்ருல், இவளும் ஒரு விட புருஷனைக் காதல ஞகப் பெற்றிருக்கிருளல்லவா? அக்காதலின் சுகத்தை அவள் அறிந்தவள் ஆயிற்றே! தன் காதலன் வராவிட் டால் தான் என்ன நிலையை அடைவோம் என்பதை அவள் அனுபவித் தறிந்திருக்கிருளாதலால், இப்போது நம் சௌந்தரா தன் காதலன் பிரிவுக்காக வாடி வருந் துவதை நன்கு உணர்ந்து அவள்மீது அநுதாபப்படுகி ருள். அது நியாயந்தானே!" என்று தன் ஹாஸ்யப் பிரசங்கத்தை ஆரம்பித்தாள்.

சௌந்தரவல்லி தன் சிநேகிதைகள் தன்னைப் பற்றிக் கேலியாகப் பேசுவதை முதலில் கவனிக்கா விட்டாலும், அவர்கள் உரக்கப் பேசுவது அவள் காதில் வந்து தாக்கியதால், சிறிது நேரத்திற் கெல் லாம் உணர்ச்சி பெற்ருள். தன் சிநேகிதைகளின் பரிகாச வார்த்தைகள் கூரிய அம்புகள்போல் பாய்ந்து அவள் நெஞ்சைப் பிளந்தன. ஏற்கனவே, கவலையால்

வெதும்பி யிருக்கும் அவளுக்கு மாணவிகளின் விளை யாட்டு சகிக்கக்கூடாததா யிருந்தது. அவள் வாயி லிருந்து வார்த்தைகள் எழவில்லை. துக்கம் நெஞ்சை யடைத்தது. அவள் கண்களிலிருந்து நீர் தாரை தாரை யாய் வழிந்தது. அவள் உட்கார்ந்திருந்த இடத்தை விட் டிறங்கிப்போக முயன்ருள். ரமாமணி பேசி முடிக் குஞ் சமயத்தில், கலாசாலை பிரின்ஸிபால் அவ்விடத்தை நோக்கி வந்துகொண் டிருந்தாளாதலால், மாணவிகள் தங்கள் குறும்புப் பேச்சுக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைத்தனர். சௌந்தரவல்லியும் அவசர அவ்சரமாகக் கண்ணீரை முந்தாணையால் துடைத்துக்கொண்டு தன் அறைக்கு மெதுவாகச் சென்று விட்டாள்,

* * * *

**பு**ரசபாக்கத்திலுள்ள "ராக்ஸி" பிரைமியர் டாக்கி ஹவுஸில் ஏராளமான ஜனக்கூட்டம். மாலை 6 - 15 மணிக்கு ஆட்டம் ஆரம்பமென்ருல், 5-30 மணிக்கே தியேட்டரில் மக்கள் நிறைந்துவிட்டார்கள். டிக்கெட்டு வாங்குமிடங்களில் குஸ்திப் பந்தயம் நடந்துகொண் டிருந்தது. ஜனங்கள் ஒருவர்மே லொருவர் விழுந் தடித்துக்கொண்டு மிகவும் சிரமப்பட்டு டிக்கட்டு வாங் கிச் சென்றனர். பலர் டிக்கெட்டு கிடைக்கப் பெருது திரும்பி வீட்டுக்கும் போகாது, தியேட்டரை விட்டுச் செல்லவும் மனம் வராது ஏங்கி நின்று கொண்டிருந்த னர். தியேட்டருக்கு வெளியில் ஏராளமான கூட்டம் திரள் திரளாகத் தேங்கி நின்றிருந்ததால் டிராம் முதலிய வண்டிகளின் போக்கு வரத்துக்கும் இடைஞ் சலா யிருந்தது, "இவ்வளவு கூட்டத்துக்குக் காரண மென்ன? என்ன அப்போர்ப்பட்ட படம் அங்கு காட் டப்படுகிறது" என்று வாசகர்கள் அறிய ஆவலாய்

இருப்பார்கள். சினிமா உலகத்திலேயே சிறந்த ஐந்து நட்சத்திரங்கள்—"கிராண்டு ஓட்டல்" என்னும் படக் காட்சியில் பிரகாசித்து நடிக்கிருர்கள், கிரேட்டா கார்போ, ஜான் பாரிமுர், லயனல் பாரிமூர், வாலெஸ் பெரி, ஜோன் கிராபோர்டு ஆகிய ஐந்து இரத்தினங்கள் முக்கிய நடிகர்களாக இருந்து நடிக்கிருர்களென்ருல், கூட்டத்துக்குச் சொல்லவும் வேண்டுமோ ?

மாலை ஆறு மணி யிருக்கும். ஒரு மோட்டார் கார் கிழக்கு பக்கமாக இருந்து வேகமாக வந்து தியேட்டருக்கு எதிரில் நின்றது. அதிலிருந்து கம்பீர தோற்றமுள்ள ஒரு வாலிபனும், ஒரு அழகிய பெண்மணியும் இறங்கினர். அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கிக் கொண் டிருந்தது. இவ்வுலகத்திலேயே இவர்களைப் போன்று உல்லாசத்தோழர்கள் இல்லையென்று சொல்லக்கூடிய நிலையி லிருந்தார்கள். அவர்கள் யாரென்று நினைக்கிறீர்கள் ? நம் சந்திரசேகரனும் சௌந்தரவல்லியுமென்று சொல்லவும் வேண்டுமோ ?

சந்திரசேகரன் இரண்டு சோபா டிக்கெட்டு வாங்கிக்கொண்டு சௌந்தர வல்லியை உள்ளே அழைத்துச் சென்ருன்.

சந்திரசேகரன் சௌந்தரவல்லியைத் தியேட்டருக்குள் அழைத்துச் சென்று படிகளின் வழியாக மேலேறினுன். இரண்டாவது வகுப்பிலும் மூன்ருவது வகுப்பிலும் இருந்த இவனது சிநேகிதர்கள் இவனைக் கண்டதும் வழக்கம்போல், "சந்தர்! சந்தர்! இங்கே வா! இதோ இடமிருக்கிறது" என்று எழுந்து நின்று கூவினர். அவர்களில் சிலர், அவன் சௌந்தரவல்லியோடு செல்லுவதைக் கண்டு, "அடே! இவன் எங்கோ

ஒரு நல்ல குட்டியைப் பிடித்திருக்கிறுண்டா! இவள் நல்ல கறவைப் பசுதான் போலிருக்கிறது. அவள் தலையை மொட்டையடிக்கிற வரைக்கும் நம்மையெல்லாம் அவன் கவனிக்கமாட்டாண்டா!" என்றனர். வேறு சிலர், "ஐயோ பாவம்! அவளைப் பார்த்தால் கள்ளங் கபடற்றவள் மாதிரி தெரிகிறது. இவளைப் பிரமாதமாய் நம்பும்படியாக இவன் செய்திருக்கிருன். கடைசியாக, இவன் தன் காரியத்தையெல்லாம் முடித்துக்கொண்டு அவளை நடுத்தெருவில் விட்டு விடுவானே!" என்று கூறிப் பரிதபித்தனர்.

அக் கூட்டத்தி னிடையே கலாசாலை மாணவிகளும் வந்திருந்தன ராகையால், அவர்கள் நம் சௌந்தரவல்லியைக் கண்டதும், அவள் சந்திரசேகரனேடு வந்திருப்பதைக் குறித்துத் தங்களுக்குள் பரிகாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர். சந்திரசேகரன் கீழே இருப்பவர்களை யெல்லாம் அலட்சியமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன்னை யழைத்த சிநேகிதர்களைப் பார்த்து புன்னகை செய்தான். பின்னர் வருவதாகத் தன் கைகளால் சைகை காட்டிக்கொண்டே சௌந்தரவல்லியோடு மேலே போய்க் காலியாக இருந்த ஒரு சோபாவை யடைந்து திரைச்சீலையை நீக்கிவிட்டு சௌந்தரவல்லியை உட்காரவைத்த பின்னர், தானும் அவள் பக்கத்தில் அமர்ந்தான். அங்கு மற்ற சோபாக்களில் தங்கள் காதலிகளோடு உட்கார்ந்திருந்த ஐரோப்பியர்களும், சோல்ஜர்களும் இவர்களைக் கண்டு ஏதோ புரளியாகப் பேசிக்கொண் டிருந்தனர்.

படக்காட்சி ஆரம்பிக்க இன்னும் ஐந்து நிமிஷந் தானிருக்கிறது. முதல் மணியும் அடித்தாய்விட்டது.

இச் சமயத்தில், நான்கைந்து நவநாகரிக வாலிபர்கள், "கோல்ட் பிளேக்" சிகரெட்டைப் பிடித்துக்கொண்டே இரண்டாவது வகுப்பில் வந்து புகுந்தனர். அவர்கள் நாற்காலியில் உட்காருவதற்கு முன் நாலா பக்கமும் சுற்று முற்றும் பார்த்தனர். அவர்கள் யாரையோ தேடுவதுபோல் காணப்பட்டது. கடைசியாக, அவர் கள் மேன் மாடியில் சோபாவில் உட்கார்ந்திருப்பவர் களைக் கவனித்துக்கொண்டே வந்தனர். நடுவே உள்ள சோபாவொன்றில், சந்திரசேகரனும், சௌந்தரவல்லி யும் இருப்பதை அவர்களில் ஒருவன் மற்றவர்களுக்குச் சுட்டிக் காட்டினுன். அவர்களைக் கண்டதும் அவ் வாலிபர்கள் ஏதோ குசு குசுவென்று மெதுவாகப் பேசிக்கொண்டே உட்கார்ந்தனர். அவர்கள் அடிக்கடி திரும்பி நம் இளஞ் சிநேகிதர்களைப் பார்த்துக் கொண்டே இருந்தனர், ஆனுல், இவ்வாலிபர்கள் தங்க ளைக் கவனிப்பதைச் சந்திரசேகரனே சௌந்தரவல் லியோ கவனிக்கவில்லை. சந்திரசேகரன் சௌந்தரவல் லியை எச்சமயத்தில் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்யலாம் என்று சிந்தித்துக்கொண் டிருந்தான். சௌந்தரவல்லியோ, சந்திரசேகரன் இவளைச் சந்தித் ததிலிருந்து செய்து வரும் சாகஸச் செயலில் ஈடுபட்டு, அவன் தன்னை உண்மையாக நேசிக்கிருன் என்று நம்பி, அவன்மீது காதல்கொண்டு வருகிறு ளாதலால், 'அவன்மீது தான் காதல் கொள்வது தகுதியாகுமா? அடிக்கடி அவனிடத்துத் தன் மனத்தைச் செல்ல விடு வது முறையாகுமா ?' என்றெல்லாம் யோசித்துத் தன் மனத்தோடு போராடிக்கொண்டிருந்தாள். இதனுல், இருவரும் ஒருவரோடொருவர் நெடுநேரம் உரையா டாமல் தங்களை மறந்திருந்தனர். எனவே, அவர்கள்

விழித்த கண் விழித்தபடி இருந்தும், இவ்வாலிபர்கள் தங்களை அடிக்கடி பார்ப்பதையும் ஏதோ பேசுவதையும் கவனிக்கவில்லை.

இந்நிலைமையில், மூன்றாவது மணி அடித்தது. கதவுகளெல்லாம் சாத்தப்பட்டன. மின்சார விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டன. ஜனங்களில் சிலர் சிழ்க்கை யடித்தனர். மற்றுஞ் சிலர் பெருங் கூச்சலிட்டனர். பாரமௌண்ட் செய்திப் படங்களைக் காட்ட ஆரம்பித்தவுடன் ஜனங்களிடையே ஏற்பட்ட ஆரவாரம் ஒருவாறு அடங்கியது. விளக்குகள் அணைக்கப்பட்டு படக்காட்சி ஆரம்பித்தவுடனேயே சிறிது தூரமாக உட்கார்ந்திருந்த சந்திரசேகரன் சௌந்தரவல்லியை மிகவும் நெருங்கித் தோளோடு தோள் உராயும்படியாக அமர்ந்து, படக் காட்சி சம்பந்தமாக உரையாடத் தொடங்கினான்.

சௌந்தரவல்லி சந்திரசேகரனைச் சிநேகிதனாகக் கொண்டு அவனோடு பழகி உள்ளூற அவனைக் காதலித்து வந்தாளாயினும், இதுவரை அவனோடு தூர இருந்தே பேசுவதும், மோட்டாரில் செல்லும்போது அவனோடு உட்காராமல் தனியாக அமர்வதுமாகவே இருந்து வந்தாள். அதனாலேயே மகா வஞ்சகனாகிய சந்திரசேகரன் அவளது நாணத்தையும் பயிர்ப்பையுங் கண்டு அவளைத் தீண்டா நெருப்பெனவே எண்ணி, அவளிடம் நெருங்கித் தன் விஷமச் செயலைக் காட்டத் துணியாது அஞ்சி, அவள் மனப் போக்கின்படியே உத்தம நண்பனாக நடந்து வந்தான். சௌந்தரவல்லி சினிமாவுக்கு அவனுடன் வந்தது இதுவே முதல் தடவை யாதலால், இச் சமயத்தை நழுவ விடாது தன்

உள்ளக் கருத்துக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சந்திரசேகரன் தனக்குள் எண்ணி, அதற்கேற்றவாறு இப்போது தன் விஷமச் செயலைச் சிறிது சிறிதாகக் காட்டத் தொடங்கிவிட்டான். இவ்விடத்தில் அவள் தன் சொல்லையும், செயலையும் மறுக்கத் துணியமாட்டாள்; அவ்வாறு மறுத்தாலும் தான் எவ்வாறேனும் அவளை அடக்கித் தன் விருப்பத்துக் கிணங்கச் செய்துவிடலாமென்றுந் தீர்மானித்தான்.

சந்திரசேகரன் சௌந்தரவல்லியோடு நெருங்கி உட்கார்ந்து பேச ஆரம்பித்ததும், அவள் நாணங் கொண்டு தன் உடம்பை நெளித்துக்கொண்டு சிறிது நகர்ந்து உட்கார ஆரம்பித்தாள். எனினும், அவன் தோள் இவள் தோளோடு மோதுண்டதனல் ஏற்பட்ட ஸ்பரிச உணர்ச்சி அவள் மனத்தை மயக்கியது. அவள் இப்பூத உடலோடு சுவர்க்கஞ் செல்வது போன்ற ஒரு வித உணர்ச்சியை அடைந்து தன்னை மறந்தாள். ஆகவே, அவள் மனநிலையை ஆராய்ந் தறிந்த வஞ்சகனாகிய சந்திரசேகரன், மீண்டும் நெருங்கி அவளைத் தழுவினாற்போல் உட்கார்ந்தபோது, அவள் பேசாது பதுமைபோல் அமர்ந்திருந்து, அவன் பேசிய காதல் மொழிகளைத் தேன் குடித்த நரிபோல் செவிமடுத்த வாறு, மகிழ்ச்சியே வடிவாகக் காணப்பட்டாள்.

* * * *

"கிராண்ட் ஓட்டல்" படக்காட்சி ஆரம்பமாயிற்று. கிரேட்டா கார்போ நடனமாதாக நடித்து பல தேசங்களுக்குச் சென்று கடைசியாக இந்த ஓட்டலில் வந்து தங்குகிருள். பெருஞ் சூதாட்டக்காரனக நடிக்கும் ஜான் பாரிமூரும் அங்கு வருகிருன். பெரிய பணக்

காரனாயும் ஆனால் பெருங் குடியனாயும் நடிக்கும் லயனல் பாரிமூரும் ஓட்டல் சொந்தக்காரனால் வரவேற்கப்படுகிறார். வாலெஸ் பெரி டாக்டராகவும், ஜோன் கிராபோர்டு அந்த டாக்டருக்கு டைப் அடிக்கும் குமாஸ்தாப் பெண்ணாகவும் வேடம் பூண்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் ஒவ்வொரு அறையில் தங்குகின்றனர். கிரேட்டா கார்போ அந்நாட்டிலும் பல விடங்களில் நாட்டியஞ் செய்து நடனராணி எனப் புகழப்படுகிறாள், இவளது பெரும் புகழைக் கண்டு அந்த ஓட்டலில் உள்ளவர்களெல்லாம் வியந்து பாராட்டுகின்றனர். ஜான் பாரிமூர் அந்த ஓட்டலிலுள்ள பலரோடு சூதாடித் தன் வசமுள்ள பொருளையெல்லாம் இழக்கிறான். லயனல் பாரிமூர் பெருஞ் செல்வந்தனாகவும், ஓயாக் குடியனாகவும் இருப்பதைக் கண்டு, அவனை ஏமாற்றிப் பணத்தைக் கொள்ளையடிக்கக் கருதி அவனோடு சூதாடுகிறான். ஆனால், லயனல் பாரிமூர் இவனிடமிருந்த சிறிது பொருளையுஞ் சூதாட்டத்தால் கவர்ந்து விடுகிறார். இதனிடையே ஜோன் கிராபோர்டு ஜான் பாரிமூரைக் கண்டு காதலிக்கிறாள். ஆனால், அவனோடு பேசிக் களித்துக்கொண்டிருக்கும்போது, அவளது எஜமானனாகிய டாக்டர் அங்கு வந்து அவளைக்கடிந்து கொள்கிறான். பணத்தைக் கருதி இரவும் பகலும் ஓயாது அவள் வேலை செய்து கஷ்டப்படுகிறாள். லயனல் பாரிமூர் இவளைக் கண்டு மதிமயங்கிப் பின் தொடர்கிறார். இவர் செல்வந்தராயிருந்தாலும் கிழவராய் இருப்பதைக் கருதி இவரை அவள் புறக்கணிக்கிறாள். இச்சமயத்தில் ஜான் பாரிமூர் சூதாடத் தன் கையில் பணமில்லாமையால், கிரேட்டா கார்போ இல்லாத சமயம் அவள் அறையில்

நுழைந்து விலையுயர்ந்த முத்து மாலையைக் களவாடு கிருன். இச்சமயத்தில் அவள் தன் தோழிகளோடு வந்து கதவைத் திறக்கிருள், அதைக் கண்டு ஜான் பாரிமூர் திடுக்கிட்டு, கட்டிலின் கீழ் ஒளிந்துகொள்ளு கிருன். தோழிகளெல்லாம் போனபின்னர் கிரேட்டா கார்போ தனக்கு அன்று நடனத்தில் கிடைத்த புகழை எண்ணித் தன் மேலாடைகளைக் கழற்றிக்கொண்டே தன்னை மறந்து ஆடுகிருள். இச்சமயத்தில் கட்டிலின் கீழே ஒளிந்திருந்த ஜான் பாரிமூர் வெளியே வந்து முத்துமாலையோடு அவள் எதிரே நிற்கிருன். முதலில் அவனைக் கண்டதும் பயந்தாளாஞலும், பின்னர் அவனது கம்பீரத் தோற்றத்திலும், அழகிலும் ஈடுபட்டு ஒன்றுந் தோன்ருது நிற்கிருள். கடைசியில் இருவரும் மனமொன்றுபட்டு ஒருவரையொருவர் தழுவிக்கொள் கின்றனர். இருவர் உடலும் உணர்வும் ஒன்ருய்க் கலக்கின்றன."

* * * *

இக் காட்சியைக் காணும்போது, சௌந்தரவல்லியின் மனத்தில் காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது, அவள் தோள்களும் கொங்கைகளும் பூரித்தன. கபடனுகிய சந்திர சேகரனுக்கோ இக் காட்சி அவனுள் மறைந்திருந்த மிருக உணர்ச்சியை எழுப்பியது. அவன் தன் மனத்தில் பற்றி யெரியும் காம வெப்பத்தைத் தாங்கமாட்டாதவனுய், "கண்ணே சுந்தரி! இவர்கள் போல் நாம் எப்போது காமக்கடலில் களியாட்டயர்வது? அந்நாள் எப்போது வரும்! நான் உன்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறே னென்பது உனக்குத் தெரியுமன்ருே! இப்போது எனக்கு நீ உன் வாயால்

ஒரு முத்தங் கொடுக்கலாகாதா?" என்று கேட்டுக் கொண்டே அவளை ஆவலோடு சேர்த்து அணைத்தான்.

* * * *

"இதே சமயத்தில் படக் காட்சியில் கிரேட்டா கார்போவைப் பிரிந்து சென்ற ஜான் பாரிமூர், டாக்டர் அறையில் சென்று பணம் கொள்ளை யடிக்கும் போது அவரால் கண்டுபிடிக்கப்பட்டு கைத் துப்பாக்கி யாற் சுடப்பட்டுக் கீழே வீழ்ந்து இறக்கிறான்."

* * * *

சந்திரசேகரன் தழுவலில் ஈடுபட்டு இருந்த சௌந்தரவல்லி சிறிது நேரத்திற் கெல்லாம் தனக்குள் ஏதோ நினைந்து திடீரென்று சந்திரசேகரனை ஒரு உந்து உந்தித் தள்ளி, அவன் பிணைப்பி னின்றும் விடுபட்டு ஒரு பக்கமாய்ச் சாய்ந்தாள்.

இச் சமயத்திலேயே ஜான் பாரிமூரை டாக்டர் சுட்டு வீழ்த்துஞ் சப்தம் படக் காட்சியில் கலந்து கேட்கிறது. இதற்குத் துணையாக அதே நிமிஷத்தில் இரண்டாவது வகுப்பி லிருந்த மேற் குறிப்பிட்ட வாலிபர்களில் ஒருவன், உருண்டையாக இருந்த ஏதோ ஒன்றைச் சந்திரசேகரன் இருந்த சோபாவை நோக்கி வீசி எறிந்தான். அதே கணத்தில் அது டமாரென்று பெருத்த ஓசையோடு மேலே போய் வெடித்தது. இச் சத்தத்தைக் கேட்டதும் தியேட்டரி லிருந்த ஜனங்கள் திடுக்கிட்டுப் பயந்து அலறி யடித்துக்கொண்டு மூலைக் கொருவராய் ஓட ஆரம்பித்தனர். மங்கையரெல்லாம் இடியோசை கேட்ட நாகம் போல் மயங்கி விழுந்தனர்.

மிகவும் ஸ்வாரஸ்யமாகப் படக் காட்சியில் காட்டப்படும் கதையைப் பார்த்துக் குதூகலித்து, அதில்

ஈடுபட்டிருந்த மக்கள், சூதாட்டத்தில் மனதைப் பறி கொடுத்து பிறர் பொருளைக் களவாட முயன்றதன் பயனுக, கதாநாயகன் டாக்டரால் சுட்டு வீழ்த்தப் பட்டதைப் பார்த்ததும் துடிதுடித்து, மேல் என்ன நிகழப் போகிற தென்பதை யறிய ஆவல் கொண்டு இருக்கும் நிலையில், உண்மையாகவே, திடீரென்று வெடித்ததைக் கேட்டு நடுநடுங்கிப் போயினர். யாரோ புரட்சிக்காரர்கள் இவ்விடத்திலும் வந்து தங்கள் விஷமச் செயலைக் காண்பிக்க வேண்டி வெடிகுண்டை எறிந்திருக்கிருர்கள் என்று பெரும்பாலார் எண்ணினர். அவ் வெடிகுண்டு எங்கு தங்கள் மீது வீழ்ந்து உயிருக்கு ஆபத்தை விளைவிக்குமோ என்று ஓடினர் பலர். மற்றும் பலர் கதவுகள் மூடப்பட்டிருப்பதையும் கவனியாது ஓடிய வேகத்தில் அக் கதவுகளில் மோதுண்டு தள்ளாடினர். எள் விழவும் இடமில்லாது பெருந் திரளாகக் குழுமியிருந்த ஜனங்கள், ஏக காலத்தில் நாலா பக்கங்களிலும் விழுந்தடித்துக்கொண்டு ஓட முயன்றதன் பயனுக, ஒருவர்மீ தொருவர் மோதிக் கொண்டனர். வயதான மக்கள் பலர் இத்தாக்குதலைத் தாங்காது கீழே விழுந்து மிதிபட்டனர். பெண்கள் நிலையோ விவரிக்கக் கூடாததா யிருந்தது. பலர் வெடியோசையைக் கேட்டு மெய் விதிர்த்து இருந்த இடத்திலேயே மயங்கி விழுந்தனர். மற்றும் பலர் கூட்டத்தோடு கூட்டமாக வெருண்டோடி நசுக்குண்டு அயர்ந்தனர். வேறு பலர் தங்கள் குழந்தைகளை ஓடிய வேகத்தில் தவற விட்டுவிட்டு அலமந்தனர். இன்னும் பலர், "ஐயோ! என் நகைகளை யாரோ கழற்றுகின்ருர்களே!" "என் காது போயிற்றே!" என்று கத்தி யழுதனர். "என் குழந்தையைக் காணுேமே" என்று ஓலமிட்



...............அவளழகைப் பருகுபவன்போல் அசைவற்று நின்ருன்.

—பக்கம் 5.

டனர் பலர். குழந்தைகளோ தங்கள் பெற்றோர்களைப் பிரிந்து கூட்டத்தில் மிதியுண்டு, "அம்மா! அப்பா!" என்று கூக்குரலிட்டு அழுதன. இக் குழப்ப நிலையைத் தக்க வாய்ப்பாகக் கொண்டு தியேட்டருக்கு வந்திருந்த திருடர்கள் சிலர் தங்கள் கைக்கு அகப்பட்டதைக் களவாடிக் கொண்டு கூட்டத்தில் மறைந்தனர். காமுகர்களான சில வாலிபர்கள், பெண்கள் கூட்டத்தில் புகுந்து அவர்களுக்கு உதவி செய்வதுபோல் பாவனை காட்டி அவர்களை இறுகக் கட்டிச் சேர்த்துப் பிடித்தும், அவர்கள் முகத்தோடு தங்கள் முகத்தைப் பொருத்தியும், அவர்கள் கொங்கைகளைப் பற்றியும் வாயால் சொல்ல முடியாத விஷமச் செயல்களைச் செய்தனர். மேன்மாடியில், சோபாக்களில் அமர்ந்திருந்த சீமான்களும் சீமாட்டிகளும், ஐரோப்பியர்களும் வெடி சப்தத்தை கேட்டு விதிர் விதிர்த்து வெருண்டோடி ஒருவர் மீதொருவர் வீழ்ந்து படிகளின் வழியாக உருண்டனர்.

இத்தனை அமர்க்களத்துக்கும் படக்காட்சி மட்டும் நடந்துகொண்டே யிருந்தது. படத்தைக் காண்பிக்கும் சினிமா ஆபரேட்டருக்கோ, தியேட்டர் மானேஜர், சிப்பந்திகளுக்கோ, ஏதோ வெடித்ததும், அதனால் ஜனங்கள் அல்லோலகல்லோலப் படுவதும் ஒன்றுமே தெரியாது. ஜனங்கள் கூக்குரல், பேசும் இயந்திர (Talkie Machine) சப்தத்தோடு கலந்துவிட்டதால், அவர்கள் முதலில் கவனித்தற்கு ஏதுவில்லாது போய் விட்டது. ஆனால், நாழிகை ஆக ஆக, மக்கள் கூக்குரலும் கதவுகள் தடதடவென்று தட்டப்படும் சப்தமும் மிகுதிப்பட்டு, அவர்கள் காதில் விழவே, சிப்பந்திகள்

கதவைத் திறந்து நிலைமையை அறிந்து திடுக்கிட்டனர். அவர்களில் சிலர் விளக்குகளைப் பொருத்தினர். சிலர் மானேஜரிடஞ் சென்று தகவல் தெரிவித்தனர். ஆபரேட்டர் விஷய மறிந்து படக்காட்சி காட்டுவதை நிறுத்தினுர். ஒருவர் வேப்பேரி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு டெலிபோன் செய்தார்.

மின்சார விளக்குகள் ஏற்றப்பட்டு கதவுகளெல்லாம் திறக்கப்படவே, ஜனங்கள் ஆரவாரம் அடங்கிற்று. புது உலகத்தைக் கண்டவர்கள் போல, அவர்கள் மகிழ்ந்தனர். நகைகளைப் பறி கொடுத்தோரும், விடர்களின் அதிக்கிரமத்துக்கு ஆளான பெண்களும், மிதியுண்டோரும், குழந்தைகளும் மட்டும் தங்கள் நிலைக்காக வருந்திக்கொண் டிருந்தனர், எல்லோரும் மேண்மாடியை ஆவலோடு பார்த்தனர். யாரோ வெடிகுண்டு எறிந்தார்கள் என்ற தகவலைக் கேட்டுத் திடுக்கிட்ட மானேஜரும், மற்றவர்களும் மேண்மாடிக்கு விரைந்து சென்றனர். அங்கு சென்ற அவர்கள் ஆச்சரியத்தோடு வாயைப் பிளந்துகொண்டு அப்படியே நின்று விட்டனர். இதேசமயத்தில், போலீஸ் இன்ஸ்பெக்டரும், சில கான்ஸ்டேபில்களும் வந்து சேர்ந்து, அவர்களும் திகைத்து ஏமாற்ற மடைந்த முகத்தோடு நின்றனர். அவ்விடத்தில் அவர்கள் கண்டதென்ன? தியேட்டரில் இருந்த திரளான மக்களை ஒரு விநாடியில் நடுங்க வைத்து அலறச் செய்தது ஒரு சாதாரண வெங்காய வெடியே என்பதை யறிந்த எவர்தான் வியப்படையாம லிருக்க முடியும்? எறியும்போது வெடிகுண்டைப்போல் பெரும் சப்தம் செய்து வெடித்த தானுலும், அது மிகவுஞ் சிறிதாகவே இருந்தது. அதை

எறிந்த வாலிபன், எந்த நோக்கத்தோடு எறிந்தானே, அதைப்போல் அது சந்திரசேகரன் மீது விழாது, பக்கத் திருந்த ஒரு சோல்ஜரின் மேல் பட்டு நெற்றியில் காயத்தை யுண்டுபண்ணியது. அவனேடு இருந்த ஒரு சட்டைக்கார மாது பயத்தால் மூர்ச்சையுற் றிருந் தாள். சப்தத்தைக் கேட்டு பயந்தோடியவர்கள் போக, மற்றவர்கள் மேற்படி சோல்ஜருக்கும், சட்டைக்கார மாதுக்கும் சிகிச்சை செய்துகொண் டிருந்தனர். சந்திர சேகரனும், சௌந்தரவல்லியும் பயத்தால் காலெழாது ஒரு பக்கமாக நின்றுகொண் டிருந்தனர். அவர்களின் முகங்கள் அச்சத்தால் வெளுத்துப் போயிருந்தன. தன் மீது எறிந்ததுதான் சோல்ஜர்மேல் பட்டது என்பதைச் சந்திரசேகரன் அறிந்து கொண்டான். தனக்குத் துன்பம் விளைக்க வேண்டுமென்று யாரோ சிலர் கங்கணங் கட்டிக்கொண்டு, தன்னை விடாது தொடர்ந்து வந்து விஷமஞ் செய்கிறார்க ளென்பதை யுணர்ந்ததும், அவனது தேகம் அவனை யறியாமலே நடுங்கியது. அத்துடன் அன்று தான் எப்படியாகிலும் சௌந்தர வல்லியைத் தன் வசப்படுத்தி விடலாம் என்று எண்ணிய எண்ணத்தில் மண் விழுந்ததால், அவன் ஒருபுறம் பெரிதும் ஏமாற்ற மடைந்திருந்தான். சௌந்தரவல்லியோ சந்திரசேகரனது மீறிய 'செயலை எண்ணி மனச் சங்கடமுற் றிருந்ததோடு, வெங்காய வெடி சம்பவத் தாலும் அதிர்ச்சி யடைந்திருந்தாள்.

பின்னர் ஒருவாறு நிலைமை இன்னவிதமாக ஏற்பட்டது என்று உறுதி கொண்ட தியேட்டர் மானேஜரும், போலீஸாரும், இவ் வெங்காய வெடியை எறிந்தது யார் என்று விசாரணை செய்யலாயினர். ஆனல்

வெங்காய வெடி எறிந்த வாலிபர்களோ, தங்கள் வேலை முடிந்த வுடனேயே தியேட்டரை விட்டு மெதுவாக நழுவி வெளியேறி விட்டனர். ஆதலால், போலீசாருக்குப் புலன் சரியாகக் கிடைக்கவில்லை. எனினும், அவர்கள் தாங்கள் வந்ததற் கடையாளமாகக் கூட்டத்திலிருந்த சிலரைச் சந்தேகத்தின்மீது கைது செய்து சென்றனர். நகைகளையும் பொருள்களையும் பறிகொடுத்து ஏங்கி யிருப்பவர்களை யாருங் கவனிப்பாரில்லை. போலீசார் சென்றதும் ஜனக்கூட்டமும் சிறிது சிறிதாகக் கலையலாயிற்று. சந்திரசேகரன் தன் நிலையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு சௌந்தரவல்லியைத் தியேட்டரினின்றும் வெளியே அழைத்துச் சென்றான். படக் காட்சியும் அதற்குமேல் காண்பிக்கப்படவில்லை

## மூன்றுவது அதிகாரம்

---

### பொருமைப் பேய்களும் புனிதவதியும்

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு:—திருக்குறள்.

பௌர்ணமி காலம். சந்திரன் கருங் கடலிலிருந்து அப்போதே வெளி வந்துகொண் டிருந்தான். எனவே, அவன் மாற்றில்லா பசும் பொன்னுல் செய்யப்பட்ட உருண்டையான கால் பந்தைப்போல் சிவந்த தோற்றத்துடன் விளங்கினுன். அவன் சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்து வான வீதியில் மின்மினிப் பூச்சிகளைப்போல் விட்டுவிட்டுப் பிரகாசிக்கும் நக்ஷத்திரங்களாகிய தன் காதலிமாரை விரைந்து அடைய விரும்புபவன் போல், வந்துகொண்டிருந்தான். வேகமாக அவன் வெள்ளிய சந்திரிகைகளைக் கக்கிக்கொண்டு மேலெழுந்தபோது ஆகாயவெளி மேகம் முதலிய எதுவுமின்றிக் களங்கமற்றிருந்தது, ஆகவே, எங்கும் வெண்மை மயமாய்க் காணப்பட்டது. கடலெல்லாம் உருக்கி வார்த்த வெள்ளிபோல தளதளவென்று பிரகாசித்தது. மோதி எறியும் அலைகள் கரையில் வெண்ணுரைகளைக் கொண்டு வந்து தள்ளிய வண்ணமிருந்த காட்சி மனத்தைக் கவரக் கூடியதா யிருந்தது.

ஸெனட் ஹவுஸுக்கு எதிரேயுள்ள கடற்கரை, கவர்னர் முதலியவர்களும், ஐரோப்பியர்களும் உலவுதற்குரிய இடமாகக் கருதப்பட்டமையால், மெரீனு கடற்கரை முதலிய இடங்களைக் காட்டிலும், நன்ருக

அமைக்கப்பட்டிருந்தது. பிளாட்பாரம் மிகவும் விசாலமாக இருந்ததோடு, மூன்றடி விட்டுவிட்டு, இரும்பு நாற்காலிகளும், சிமண்டினுல் செய்யப்பட்ட நாற்காலிகளும் பூமியில் புதைக்கப்பட்டிருந்தன. பிளாட்பாரத்தின் நடுவே, வட்ட வடிவமாக மேடை யொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு நேரே கடற்கரைக்குப் போகும் வழியில் இருபது கஜ தூரத்துக்கு மேல் சிமண்டினுல் பாதை யமைக்கப்பட்டு முடிவில், மக்கள் சுற்றி யுட்கார்ந்து கடற் காற்றை யனுபவிக்க ஒரு வட்டமான சோபா போன்ற திண்ணை அமைக்கப்பட்டிருந்தது. மேடையிலிருந்து இரு மருங்கும் சவுக்கு செடிகள் வைத்திருந்த காதலர் பாதை வரை மூங்கில்களால் வளைவுகள் வளைக்கப்பட்டு அதன்மீது மல்லிகை முதலான பசுங்கொடிகள் படரவிட்டிருந்தது பார்ப்பதற்கு அழகா யிருந்தது. சுற்றிலும் செடிகளும், மரங்களும் நிறைந்திருந்தன. பௌர்ணமி காலங்களில், ஐரோப்பியர்களும், சோல்ஜர்களும் தங்களுக் கினிய மாதர்களோடு இவ்விடத்தில் நடனஞ் (Dance) செய்வது வழக்கம். அச்சமயத்தில் அம்மேடையி லிருந்து வாத்தியக்காரர்கள் நடனத்திற் கேற்றவாறு இங்கிலீஷ் பாண்டு வாசிப்பார்கள்.

இத்தகைய ரமணீயமான பிரதேச முழுவதும், சந்திரனது தண்ணிய கிரணங்களில் தோய்ந்து அழகுத் திரளாய் விளங்கியது. கூவம் ஆறும் பக்கிங்காம் கால்வாயும் கலந்து கடலில் சேருமிடத்துக்குப் பக்கத்துள்ள கரையோரத்தில் ஏழெட்டு மனிதர்கள், ஒன்றோடொன்று மோதி யடித்துக்கொண்டு வரும் அலைகளின் ஆர்ப்பரிப்பைப் பார்த்த வண்ணம் உரையாடிக்

கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் பெண்களாகக் காணப் பட்டனர்.

ஆடவர்களில் ஒருவன் வாயில் வைத்திருந்த சிகரெட்டைக் கையில் எடுத்து புகையை விட்டவண்ணம், "என்ன சுலோசனு! இன்னும் அவர்களைக் காணுமே! இப்போது மணி ஏழரைக்கு மேலாகிறதே! இதற்கு மேலா அவர்கள் இங்கு வரப்போகிருர்கள்? சௌந்தரவல்லி சந்திரசேகரனோடு வருவதாகச் சொன்னுளா? உங்களிடம் பொய் சொல்லிப் போக்கு காட்டிவிட்டு வேறெங்காகிலும் அவனோடு சென்றுவிட்டாளோ என்னமோ! எதற்கும் இன்னுஞ் சிறிது நேரம் காத்திருந்து பார்ப்போம்" என்று மொழிந்தாள்.

சுலோசனு என்னும் பெண் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "பால்! அவ்வாறு சொல்லாதே! சௌந்தரவல்லிக்குப் பொய் என்பதே இன்னதென்று தெரியாது. அவள் அவ்வளவு கள்ளங் கபடற்றவள். அதனுல் தான் எங்கள் பிரின்ஸிபாலும், ஆசிரியைகளும், அவள் மீது மிகவும் அன்பாக இருக்கிருர்கள்.—முதலில் மட்டும் அவள் சந்திரசேகரனிடம் சிநேகங் கொண்டு பல இடங்களுக்குச் செல்வதைச் சொல்லாது எங்களிடம் பேசவும் நாணங்கொண் டிருந்தாள். ஆனுல், நீ சொல்லிக் கொடுத்த தந்திரத்தை உபயோகித்து, பக்குவமாக அவளோடு வலியச் சென்று பேசி வரவும், நாளடைவில் அவள் தான் அவனோடு தினந் தோறும் செல்லு மிடங்களைப் பற்றித் தகவல் சொல்லி வருகிருள். இன்று சந்திரசேகரன் தன்னிடம் வழக்கம்போல் கோமளவிலாஸ் ஓட்டலுக்குப் போய்விட்டுப்

பின்னர், பௌர்ணமி யாதலால், ஜன நடமாட்டம் அதிக மில்லாத ஸெனட் ஹவுஸ் பீச்சுக்குப் போய் சிறிது நேரம் உலவிவிட்டு வரலாம் என்று சொன்ன தாக அவள் கூறினுள்" என்ருள்.

பரமானந்தன் என்னும் வாலிபன், "ஆமாம்! தினந்தோறும் நீங்கள் அவளை விசாரிக்கிறீர்களே! அவள் உங்கள் மீது சந்தேகங் கொள்ளமாட்டாளா?" என்று கேட்டான்.

ரமாமணி கலகலவென்று நகைத்து, "அவளுக்கு அவ்வளவு விதரணை யேது! அவ்வாறிருந்தால் நாங்கள் தான் கேட்கத் துணிவோமா? வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் வெள்ளறிவின ளன்ருே அவள்!" என்று பதில் கூறினுள்.

பத்மாவதி, "கோபால்! நீயும் சந்தரும் கடலில் நீந்திக்கொண் டிருந்தீர்களே! அன்று அவன் கம்பீரத் தோற்றத்தில், மனத்தைப் பறி கொடுத்ததி லிருந்து அவள் பிச்சியாய் விட்டாள்!" என்று இரக்கத்தோடு மொழிந்தாள்.

ரோஸரி என்னுங் கிறிஸ்தவப் பெண்மணி, "சுந்தரி படிப்பில் எவ்வளவு கவனஞ் செலுத்தி வாசித்து நல்ல பெயர் வாங்கி வந்தாளோ அவ்வளவுக் கவ்வளவு இப்போது கல்வியில் ஊக்கங் காட்டாது மந்தமாய் இருந்து வருகிருள், இத் திடீர் மாறுதலைக் கண்டு ஆசிரியைகளும் ஆச்சரியப் படுகின்றனர்" என்று சொன்னுள்.

மீண்டும் சுலோசனு என்னும் மலையாளப் பெண் பேசத் தொடங்கி, "அது மாத்திரமில்லை. முன்னெல்

லாம் மாதந்தோறும் அவள் தந்தை ஊரிலிருந்து அனுப்பும் பணத்தைக் கலாசாலை சம்பளம், ஹாஸ்டலுக்குக் கொடுக்கவேண்டிய பணம் இவைகளையெல்லாம் கொடுத்து மீதியை மிகவுஞ் சிக்கனமாகச் செலவு செய்து, நாங்கள் எப்போதாகிலுங் கேட்கும்போது சமயத்துக்குக் கொடுத்து உதவுவாள். இப்போதோ, பணம் வந்த பத்துநாளைக் கெல்லாம் செலவுக்குப் பொருளில்லாது கஷ்டப்படுகிருள். எங்களைக் கேட்கவும் அவளுக்கு வெட்கம். பாவம்! அவள் என்ன செய்வாள் ?" என்ருள்.

இதைக் கேட்டதும் சுந்தரராஜன் என்னும் வாலிபன், "சந்திரசேகரன் சாமானிய பேர்வழியா ? கரைத்து விடமாட்டானு ? தேன் இருக்குமிடத்தை ஈக்கள் மொய்ப்பது போல், பணமிருக்குமிடத்தைப் பார்த்தவுடன், அதை உறிஞ்சிவிட்டுத் தான் மறுவேலை பார்ப்பான். அயோக்கியன், அவன் கொட்டத்தையடக்கிவிட்டுத் தான் வேறுவேலை பார்க்க வேண்டும்" என்று உறுமினுன்.

பத்மாவதி, "பாவம்! அப்பேர்ப்பட்டவன் இடத்திலா நம் சுந்தரி அகப்பட்டுக் கொண்டாள் ? அவள் சென்ற ஒரு வாரமாக ஏதோ கவலையாக இருக்கிருள். அவளது முகத்தில் உற்சாகமே காணப்படவில்லை; என்ன சமாசாரமோ தெரியவில்லை?" என்று கூறினுள்.

கோபாலன் பெருமூச்செறிந்து, "அது போகட்டும். இப்போது அவர்கள் எங்கிருக்கிருர்கள் என்பதை முதலில் கண்டு பிடிக்க வேண்டும். சுலோசனு ! நீங்களெல்லாம் இங்கேயே நின்று பேசிக்கொண்டிருங்கள். நாங்கள் போய் அவர்கள் இருக்குமிடத்தை

யறிந்துகொண்டு வந்து விடுகிறோம்.—ஆனந்த்! ராஜா! வாருங்கள்; அப்படிப் போய்ப் பார்க்கலாம்" என்று தன் தோழர்களை யழைத்துக்கொண்டு மேற்கு திக்கை நோக்கி நடந்தான்.

அவர்கள் செல்வதைப் பார்த்துக் கொண்டே யிருந்த சுலோசனா மற்றப் பெண்மணிகளைப் பார்த்து, "பத்மா! நாம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு இவர்கள் கருவிகளாகக் கிடைத்தார்கள். அவன் சௌந்தர்யத்தில் ஈடுபட்டு நாமாக வலியச் சென்று சிநேகஞ் செய்து கொள்ள முயன்றாலும், நம்மை மதிக்காத—நம்மை ஏறெடுத்தும் பார்க்காத—சந்திரசேகரனுடைய வும், முன்போல் நம்மிடம் அளவளாவிப் பேசாது அவன் வாலையே பற்றிச் செல்லும் சௌந்தரவல்லி யுடையவும் கொட்டத்தை அடக்குவதற்கு இவர்கள் தான் தகுந்தவர்கள். இவர்கள் மூலமாகவே நாம் காரியத்தை நிறைவேற்றிக் கொள்வோம்" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

ரமாமணி வயிற்றெரிச்சலாக, "இதுவரை இவர்கள் வைத்த குறிகளுக்கெல்லாம் அவன் தப்பித்துக் கொண்டு வருகிறானே! என்ன செய்கிறது? இப் பயல்களும் அவனை நேரில் தாக்கப் பயப்படுகிறார்கள். கோழைகள்" என்றாள்,

ரோஸரி, "இவர்கள் அவனை என்ன வேண்டு மானாலுஞ் செய்துகொள்ளட்டும்; ஆனால் நம் சுந்தரிக்கு மாத்திரம் ஒன்றும் நேராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவளை அவன் சிநேகிதத்தி னின்றும் பிரித்துவிட்டால் போதுமானது" என்று இளகிய மனத்துடன் சொன்னாள்.

இச் சமயத்தில யாரோ சமீபத்தில் வரும் ஓசை கேட்டு இந்த நான்கு மகளிரும் திரும்பிப் பார்த்தார்கள். இவர்களை நோக்கி இரண்டு சோல்ஜர்கள் வந்து கொண் டிருந்தார்கள். அவர்கள் வாயில் வந்தவாறு ஏதோ பாடிக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்ததிலிருந்து நன்ருகக் குடித்திருக்கிருர்கள் என்று தெரிந்தது. அவர்கள் தங்களை நெருங்குவதை யறிந்ததும் இப் பெண்கள் மிகவும் பயந்து ஓட முயன்ருர்கள். இதற்குள் அச் சோல்ஜர்கள் இவர்களைத் தாவிப் பற்றலானுர்கள். எதிர்பாராதவாறு தாங்கள் சோல்ஜர்களிடத்தில் அகப்பட்டுக் கொண்டதை நினைத்ததும், அவர்கள் ஓவென்று கூச்சல் போட லாயினர். சமீபத்தில் யாரும் ஜனங்கள் இல்லாமையால் இவர்கள் குரலைக் கேட்டுக் காக்க வரவில்லை. இதை யறிந்த சோல்ஜர்கள் மேலுந் துணிந்து நான்கு பெண்களையுந் தங்கள் கைகளால் சேர்த்துக் கட்டிப் பிடிக்கலானுர்கள். பெண்களோ கதறினர்; பதறினர்; அவர்கள் பிடியினின்றும் திமிறலாயினர். இவர்கள் கூக்குரல் ஆகாய வெளியில் காற்ருேடு காற்ருகப் போய் கலந்தது.

சோல்ஜர்கள் பிடியில் அகப்பட்ட மாணவிகள் வாய்விட்டு அரற்றி தங்களால் இயன்றவரை திமிறிப் பார்த்தனர். அவர்களது இரும்பு போன்ற கைப்பிடியிலிருந்து இப் பெண்களால் விடுபட முடியவில்லை. அவர்கள் குடி வெறியில் குதூகலித்து தங்களை மறந்து 'ஆஅ' வென்று வாய்க்கு வந்தவாறு பாடி இப் பெண்களைக் குலுக்கியபோது, இவர்கள் அந்தரத்தில் சுழல்வது போன்ற நிலையை அடைந்தார்கள். இரு புலிகளுக் கிடையில் சிக்கிக்கொண்ட பெண் மான்களைப் போல் மனமருண்டு அயர்ந்தனர்; அவர்களால் பிடி

யுண்ட இம் மகளிரது மெல்லிய கைகளோ வலி பொறுக்கமாட்டாது சிவந்து வீங்கின. அச் சோல்ஜர்கள் வாயைத் திறக்கும்போது காத தூரம் வீசிய சாராய நாற்றம் இப்பெண்கள் மூக்கைத் துளைத்தது உயர்ந்த வாசனைத் திரவியங்களைப் பூசி விட புருடர்களை மயக்கிய இவர்களுக்கு இவ் வாசனை சகிக்கக் கூடாததா யிருந்தது. ரோஸரி மயக்க மடைந்தாள். பத்மாவதி வாய் குமட்டினுள். இவர்கள் மெல்லிய பூங்கொடிகள் அசைவதைப் போல் தள்ளாடினர். சுலோசனுவும் ரமாமணியும் இவர்களிலும் சிறிது வன்மை பெற்றவர்க ளாதலால் கொஞ்சஞ் சமாளித்து நின்றனர். இவர்கள் கூக்குரலிடுவதும் பிடியிலிருந்து விடுபடத் திமிறுவதும் சோல்ஜர்களுக்கு வேடிக்கை யாக இருந்தது. பாவம் பெண்கள்! எவ்வளவு நேரந் தான் தொண்டை கிழிய கதற முடியும்? கத்திக் கத்தி நாவும் உலர்ந்தது. தப்ப வேறு வகையறியாது ஓய்ந்து நின்றனர்.

நாழிகை யேற யேற, சோல்ஜர்களுக்கு மூர்க்க குணமும், மிருகத்தன்மையும் மேலெழுந்து தாண்டவ மாடியது. இப் பாவையரை ஸ்பரிசிக்க ஸ்பரிசிக்க, அவர்களுள் ஒடுங்கி யிருந்த மிருகவுணர்ச்சி மலர்ந்தது; எனவே, அவர்கள் காமத் தீயால் தகிக்கப்பட்டு அப் பெண்களின் கைகளைப் பற்றி யிருந்த பிடியைத் தளர்த்தி, அவர்களைத் தங்கள் மார்போடு சேர்த்துக் கட்டித் தழுவ முயன்றனர். அவ்வாறு செய்ததில், ஏற்கனவே பயத்தாலும், மயக்கத்தாலும் மூர்ச்சையுற்றிருந்த ரோஸரி ஒருவனது கைப்பிடியினின்றும் நழுவிக் கீழே விழுந்தாள். மதியூகியாகிய பத்மாவதி இதுதான் சமயமென்று தன்னைப் பிடித்திருந்த சோல்

ஜரின் கையைத் தட்டிவிட்டு ஓட்டம் பிடித்தாள். சுலோசனுவும், ரமாமணியும் தப்பித்தோட முயன்ருர்களாலும், சோல்ஜர்கள் இதற்குள் விழிப்படைந்ததனுல் அது முடியாது போயிற்று. அவர்களிருவரும் சோல்ஜர்களிடத்தில் வசமாக மாட்டிக் கொண்டனர். தங்களுக்கு வேண்டியவர்கள் இருவரே யாதலால், அச் சோல்ஜர்கள் மூர்ச்சையுற்று கீழே விழுந்த ரோஸரியையோ, அவர்கள் பிடியிலிருந்து தப்பியோடும் பத்மாவதியையோ கவனிக்கவில்லை. இன்னும் மணி யெட்டாகவில்லை யாதலால், ரோட்டில் அடிக்கடி மோட்டார் ஓடிக்கொண் டிருப்பதும், இரண்டொரு மனிதர்கள் பிளாட்பாரத்தில் சென்றுகொண் டிருப்பதும் இச் சோல்ஜர்களுக்குத் தெரிந்தது. ஆகவே, அவர்கள் தாங்கள் செய்ய நினைக்கும் தீய செயலுக்குத் தகுதியான ஒரு தனியிடத்தை நாடினர். கடைசியாக, அவர்கள் நின்ற இடத்துக்கு எதிரே சிறிது தூரத்தில் இருந்த ஒரு பெரிய படகு பக்கமாக இவ்விரு பெண்களையும் இழுத்துச் சென்றனர். இவர்கள் குறிப்பையறிந்த சுலோசனுவும், ரமாமணியும் கேட்பார் உள்ளம் உருகுமாறு கண்ணீர் விட்டுக் கதறினர். அடுத்த கணத்தில் தாங்கள், அச் சோல்ஜர்களின் துராகிருதப் புணர்ச்சிக்கு ஆளாகப் போவது நிச்சயம் என்று எண்ணியபோது, அவர்கள் தேகம் முழுதும் நடுங்கியது. கோபாலன் முதலியவர்கள் எங்கு போனுர்களோ? அவர்கள் இச்சமயம் இங்கு வந்து தங்களைக் காப்பாற்ற மாட்டார்களா என்று எதிர் பார்த்தனர். அவர்கள் பொருமையால், சௌந்தரவல்லிக்கும் சந்திரசேகரனுக்கும் தீங்கிழைக்க, கோபாலன் முதலியவர்கள் செய்து வரும் அட்டூழியங்களுக்கு உடந்தையாக

இருந்து சதியாலோசனை செய்து வந்தார்களாயினும், அவர்கள் கொடிய செயல்களைத் துணிந்து இதுவரை செய்தவர்க ளல்லர், அவ்வித செயல்களில் ஈடுபட்ட வர்களு மல்லர். ஆதலால், அவர்கள் இச் சோல்ஜர்கள் இழைக்கப் போகும் கொடுமையைத் தாங்க முடியாத நிலையை யடைந்தனர். அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னர் மகிழ்ச்சியாக இருந்து, சௌந்தரவல்லிக்கும், சந்திரசேகரனுக்குந் தீங்கிழைக்க யோசித்த தென்ன? இப்போது இவர்களே கொடிய அரக்கர்கள் போன்ற சோல்ஜர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டு கதறுவ தென்ன?

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்"

என்னுந் திருவள்ளுவரின் அமுத வாக்கு பொய்யா தன்றோ! அடுத்த கணத்தில் தாங்கள் அடையப் போகும் இழி நிலையைக் கருதி உள்ளங் கொதித்து, தாங்கள் தப்பித்துச் செல்லவேண்டு மென்ற ஒரே நோக்கங்கொண்டு தங்கள் பலத்தை யெல்லாம் உப யோகித்து உடலை வளைத்துத் திமிறினர். மிருக பலத் தின் முன் மெல்லியலார் பலம் என்னாகும்? ஆகவே, அச் சோல்ஜர்கள், இப்பெண்களின் முரட்டுத் தன்மை யைக் கண்டு கோபித்து, நாய்களை இழுப்பதுபோல் இழுத்து, படகின் பின்புறங் கொண்டுபோய் அவர்கள் வாயில் தங்கள் கைக் குட்டைகளைத் திணித்து, இடுப் பில் கட்டியிருந்த துணிப்பட்டைகளால் கைகளைக் கட்டிக் கீழே உருட்டினர்.

* * * *

இவர்களை இந் நிலையிலேயே இங்குவிட்டு, சந்திர சேகரனையும் சௌந்தரவல்லியையுந் தேடிச் சென்ற

கோபாலன் முதலியவர்களைப் பின் தொடர்ந்து செல்வோம்.

கோபாலன் முதலிய வாலிபர்கள் முதலில் மேற்குப் பக்கமாய்ச் சிறிதுதூரஞ் சென்ற பின்னர், தெற்கு பக்கமாகத் திரும்பி நடந்து படகுகளையும், கட்டு மரங்களையும், பெரிய வலைக் குவியல்களையும் பார்த்துக் கொண்டே சென்றனர். யாராகிலும் ஆணும் பெண்ணுமாக இருவர் சேர்ந்து உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால், அவர்கள் சந்திரசேகரனும் சௌந்தரவல்லியுமாகத்தான் இருக்கவேண்டுமென்று கருதி அவ்விடத்தை தூரத் திருந்தே ஆவலோடு உற்று நோக்குவர். ஆனால், அவர்கள் அருகே சென்று பார்ப்பதற்குத் துணியவில்லை. ஏனென்றால், சந்திரசேகரன் தங்களைக் கண்டுகொள்ளக் கூடா தென்பதேயாகும். இவ்வாறு அவர்கள் பல இடங்களையும் ஆராய்ந்து அங்கு இருப்பவர்களைக் கண்டு முதலில் ஏமாந்து கடைசியில் அவர்கள் இல்லை என்று தெளிந்து செல்வாராயினர்.

இங்ஙனம் பொறாமைப் பேய் பிடித்து ஆட்ட அதன் வயப்பட்டு அறிவிழந்து அலையுங் கோபாலன் தன்னுடன் வருந் தோழர்களைப் பார்த்து, "ஏ ஆனந்தா! நாம் எதிர்பாரா திருக்கையிலேயே இக் குட்டிகள் நம்மிடத்தில் வந்து மாட்டிக்கொண்டன. இவர்கள் நம்மையே கண்கண்ட தெய்வங்களென்றும் சீமான்களென்றும் எண்ணி மிகவும் மதித் திருக்கிறார்கள் அல்லவா! இவர்களைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய், சுந்தரம்!" என்று கேட்டான்.

சுந்தரராஜன், "நினைப்பதென்ன இருக்கிறது? வலிய வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளு

வானேன்! இவர்களுக்குத் தானென்ன? நன்ருகத் தான் இருக்கிருர்கள். ரமாமணிதான் சிறிது தடித்து விகாரமா யிருக்கிருள். ரோஸரி அழகா யிருந்தாலும் பூங்கொம்புபோல் மெலிந்து காணப்படுகிருள். மற்ற இருவரும் நல்ல அழகிகளென்றே சொல்லவேண்டும்" என்று ஆலோசனையோடு சொன்ஞன்.

பரமானந்தன் முகத்தைச் சுளித்து, "என்ன இருந் தாலும் இவர்களெல்லாம் சௌந்தரவல்லியின் காலழ குக்கு ஈடாவார்களா? அவளுடைய புன் சிரிப்பே உலக முழுவதையுங் கவருமே!" என்று ஆர்வத்தோடு கூறிஞன்.

கோபாலன் மகிழ்ச்சி பொங்க, "நான் மதித் திருப்பதையே நீயுஞ் சொன்ஞய், ஆனந்தா! அவளை முதன் முதலாகப் பார்த்தபோதே என் உள் ளத்தை அவள் கொள்ளை கொண்டு விட்டாள். அவள் அழகில் மனம் ஈடுபட்ட பிறகு, இச்சனியன்களை யெல் லாம் பார்ப்பதற்கும் வெறுப்பா யிருக்கிறது" என்று மொழிந்தான்.

சுந்தரராஜன், "அந்தமட்டும் நம் சந்திரசேகரன் அதிர்ஷ்டசாலிதான். அப்பேர்ப்பட்ட அழகியைத் தன் வலையில் போட்டுக் கொண்டானே! அவன் சாமர்த்தி யமே சாமர்த்தியம்!" என்று அறைந்தான்.

கோபாலன் கோபங் கொண்டு, "அந்த அயோக்கி யனை என்னெதிரில் புகழாதே, சுந்தரம்! அவன் என்னை ஏமாற்றியதை நினைத்தால் இப்போதும் வயிறு பற்றி யெரிகிறது. ஆகட்டும்! அவனை எளிதில் விடுகிறேஞ பார்!" என்று கூறிக் குதித்தான்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டே அக்வேரீயம் வரை வந்து விட்டார்கள். தாங்கள் இவ்வளவு தூரம் தேடிப் பார்த்தும், சந்திரசேகரனும், சௌந்தரவல்லி யுங் கண்ணில் தென்படவில்லையாகையால், அவர்கள் இப் பக்கம் வந்திருக்க மாட்டார்கள் என்று தீர்மா னித்து, தாங்கள் அப் பெண்களைத் தனித்து விட்டு வந்திருப்பதை நினைந்து திரும்பி அவர்களை நோக்கி விரைந்து நடந்தனர்.

* * * *

சந்திரன் உலகத்தையே வெண்மை மயமாக்கி நடு வானத்தில் பிரகாசித்துக்கொண் டிருந்தான். தென் றற் காற்று முன்னையினும் ரமணீயமாக வீசிக்கொண் டிருந்தது. இரும்பு வாராவதி பக்கமாக இருந்து வரும் "காதலர் பாதை"யில் இரு உருவங்கள் மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தன. அவ்விடத்தில், பூவரச மரங் களும், மற்ற மரங்களும் அதிகமாக வளர்ந்து அடர்ந் திருந்தன. ஆதலால், பக்கத்துள்ள ரோட்டில் செல் வோர் உற்று நோக்கினு லன்றிக் காதலர் பாதையில் இவர்கள் செல்வது தெரியாது. மேலும் அந்நேரத்தில் அப் பக்கத்தில் ஜன நடமாட்டமே இல்லை. ஒன் றிரண்டு மோட்டார்களே ஓடிக்கொண் டிருந்தன. ஒழுங்காகக் கத்தரித்து விடப்பட்ட சவுக்கு மரத்தின் இரு மருங்குமுள்ள மரங்களும் செடி கொடிகளும் காற்றினுல் அசைவது, இவ் வுருவங்களை மகிழ்ச்சி யோடு வரவேற்பது போலிருந்தது.

சிறிது உயர்ந்து பருமனுக இருந்த உருவம், மற்ருென்றின் கையைப் பிடித்து மெல்ல வருடிய வண்ணம் நடந்துகொண்டே, "என் அன்பே! சௌந்

தரா! நான் உன்னை எவ்வளவு தூரங் காதலிக்கிறேன் என்பது உனக்குத் தெரிந்தால், நீ இவ்வாறு வன்மஞ் சாதிப்பாயா? உன்பொருட்டு என் உயிரையே தியாகஞ் செய்ய காத்திருக்கிறேனே! அவ்வாறிருக்க, நீ என்மீது இரங்காதிருப்பது நியாயமா! உன் அருங் குணத்துக்கு இது தகுமா!" என்று கூறியது.

இதைக் கேட்ட மற்ருெரு உருவம் இரக்கமான குரலில், "சந்தர்! நானும் உன்னை மிகவும் அதிமாகத் தான் நேசித்து வருகிறேன். ஆனால், உன் விருப்பத்துக் கேற்றவாறு நடக்க என்னால் முடியவில்லை. என் உள்ளிருக்கும் ஏதோ ஒன்று என்னை உன் இச்சைப்படி நடக்கவொட்டாது தடுத்து வருகிறது. உன் காதல் மொழிகளைக் கேட்கும்போது என் மனம் மிகவும் அஞ்சுகிறது. என் இருதயம் படபடக்கிறது. இது ஏனோ தெரியவில்லை" என்று மொழிந்தது.

சந்திர சேகரன் திடீரென நின்று அவள் கரத்தை விட்டு, "அப்படியானால் என்னிடம் உனக்கு நம்பிக்கையில்லையா? என் வார்த்தைகளில் உறுதி யேற்படவில்லையா? அதைச் சொல். உன் உள்ளத்தி விருப்பதைத் திறந்து கூறு. நான் இப்போதே உன் காலடியில் வீழ்ந்து இறக்கிறேன்" என்று தன் சாகஸத்தையெல்லாங் காட்டிப் படபடப்பாகக் கேட்டான்.

இவ் வார்த்தையைக் கேட்டு ஸௌந்தரவல்லி மிகவும் மனங் கலங்கி, "அவ்வாறொன்றுமில்லை; என் மனநிலையைச் சொன்னேனேயன்றி உன்னிடம் நம்பிக்கையில்லை யென்று கூறவில்லை. அங்ஙனம் நம்பிக்கையில்லாவிட்டால் நான் உன்னோடு இவ்வளவு தூரம்

தனியாக வருவேனு? இவ்வாறு நீ தவருக நினைத்த தற்கு நான் வருந்துகிறேன்" என்று கூறினுள்.

உடனே சந்திரசேகரன், "அவ்விதம் நீ என்னிடம் நம்பிக்கை வைத்து நேசிப்பது உண்மையானுல், உன் வாயால், "உன்னை என் மனப் பூர்வமாகக் காதலிக்கிறேன்" என்று கூறி, அதற்கு அடையாளமாக ஒரு முத்தங் கொடு; கண்ணே!" என்று பதற்றமாகக் கேட்டான்.

இவனது வஞ்சக மொழியைச் செவியுற்ற சௌந்தரவல்லி ஒன்றுந் தோன்ருது மனதொடு போராடிய வண்ணம் நின்ருள். அவளது மனநிலையை ஒருவாறு ஊகித்தறிந்த சந்திரசேகரன் இதுதான் தக்க தருணமென்று கருதிச் சோகந் தாங்கமாட்டாதவன் போல் நடித்து, சௌந்தரவல்லியின் இரண்டு கைகளையும் பற்றி அவளெதிரில் மண்டியிட்டு, "காதலி! ஏன் மௌனஞ் சாதிக்கிருய்? என்ன ஆலோசனை? என் உயிர் தள்ளாடுகிறது. எதோ! ஒரு முத்தம்..........." என்று காதல் பரவசத்தால் வாயெழாதவன் போல் நடித்து, மண்டியிட்ட வண்ணமே அவளைத் தன் இரு கைகளாலுஞ் சேர்த்து அணைத்தான்.

இச் சமயத்தில் யாரோ இரைக்க இரைக்க ஓடி வரும் சப்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டு, ஓசை வருந் திசையை உற்று நோக்கினர். கடற்கரை பக்கமாக இருந்து சிமெண்ட் பாதைமீது ஓடிவந்த உருவம், மூங்கில் கொம்புகளால் வளைக்கப்பட்டு கொடி படர விட்டிருந்த வளைவண்டை வந்து யாராகிலும் மனிதர்கள் இருக்கிருர்களா என்று பதை பதைப்போடு சுற்றும் முற்றும் திரும்பிப் பார்க்கையில், இவர்கள்

இருக்கும் நிலையைக் கண்டு ஏதோ சொல்ல வாயெடுத்து, கூற நாவெழாது தேகம் படபடக்கத் திகைத்து நின்றது.

மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடிவந்த உருவம் தங்கள் எதிரில் வந்து அப்படியே அசைவற்று நின்று விட்டதைக் கண்ட சந்திரசேகரன், சௌந்தரவல்லியை அணைத்திருந்த கைகளை யெடுத்துக் கொண்டு விரைந்து எழுந்து நின்றான். "சிவ பூசையில் கரடி புகுந்தாற்" போல், தன் வஞ்சக எண்ணம் இன்று பலித்துவிடும் என்று ஆவலோடு மனப்பால் குடித்துக் களித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் மூதேவிபோன்று அங்கு வந்த உருவத்தின் மீது சந்திரசேகரன் மிகவுங் கோபங் கொண்டு, யாரது என்று நெருங்கிப் பார்த்தான். இதற்குள் சௌந்திரவல்லியும் தன் நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வந்தது யார் என்று நோக்கினாள். உடனே ஆச்சரியத்தால் அவள் வாயைப் பிளந்து, "ஆ! பத்மாவதியா?" என்று கூவினாள், வந்த உருவம் ஒரு பெண்ணென்று அறிந்ததும் சந்திரசேகரன் பின் வாங்கி நின்று பலவாறு எண்ணலானான்.

பத்மாவதியோ அப்போதும் பயம் நீங்காதவளாய் வாய் குழற, "ஆ...ம்...ப...த்...மா...தா.....ன்." என்று மெதுவாகச் சொன்னாள். அவள் உடம்பு நடுங்கிக் கொண் டிருந்தது, அடர்ந்திருந்த மரக் கிளைகளினிடையே வீசும் சந்திரனொளியில் சௌந்தரவல்லிக்கு நன்றாகத் தெரிந்தது. எனவே, அவள் பத்மாவதியினருகில் மிகவும் நெருங்கி அவள் கையைப் பிடித்த வண்ணம், "என்ன பத்மா! ஏன் உன் உடம்பு படபடக்கிறது? என்ன நேர்ந்தது? இந்நேரத்தில் தனி

யாக இவ்விடத்தில் நீ ஏன் வந்தாய்? ஏன் பயப்படு கிருய்? விஷயத்தைக் கூறு" என்று பரிவோடு கேட்டாள்.

பத்மாவதி அவளது அருங் குணத்தையும், பரிவையுங் கண்டு பரதவித்து, "சுந்தரி, என்ன சொல்வேன்? நானும் சுலோசனு, ரோஸரி, ரமாமணி ஆகியவர்களும் பிளாட்பாரத்தில் நடந்து வந்துகொண் டிருந்தோம். அப்போது சுலோசனுவுக்குத் தெரிந்த நண்பர்கள் சிலர் எங்களைத் தங்கள் மோட்டாரி லேற்றிக் கொண்டு வந்தனர். நிலா வெளிச்சமா யிருக்கவே, இந்த கடற் கரையில் உலாவிக்கொண்டே அலைகளின் ஆர்ப்பைக் கவனித்துக்கொண் டிருந்தோம். சுலோசனுவின் நண்பர்கள் யாரையோ தேடி யழைத்து வருவதாகக் கூறி எங்களைத் தனியாக விட்டுச் சென்றனர். அவர்கள் சென்று சிறிது நேரத்திற் கெல்லாம் கோட்டை பக்க மிருந்து இரு சோல்ஜர்கள் வந்து எங்களைப் பிடித்துக் கொண்டனர். நாங்கள் மிகவும் பயந்து கதறிஞேம். யாரும் உதவி புரியவில்லை. பய மொருபுற மிருக்க, அவர்கள் வாயி லிருந்து வரும் சாராய நாற்றத்தைத் தாங்கமாட்டாது ரோஸரி மயக்க மடைந்து விழுந் தாள். நான் அவர்கள் அயர்ந்திருக்கப் பார்த்து ஓடி வந்து விட்டேன். சுலோசனுவும், ரமாமணியும் அம் முரடர்க ளிடத்தில் வசமாக மாட்டிக் கொண்டனர். அவர்கள் இந்நேரம் என்ன கதி யானுர்களோ!" என்று கூறிக் கண்ணீர் விடுத்தாள். தங்களை யழைத்து வந்தவர்கள் கோபாலன் முதலியவர்கள் என்று சொல்லாது சுலோசனுவின் நண்பர்கள் என மறைத்துக் கூறினுள்.

தங்கள் சிநேகிதைகள் கொடியவர்களான சோல்ஜர்களிடத்தில் அகப்பட்டு அவதிப்படுகிறார்கள் என்பதைக் கேட்டதும் சௌந்தரவல்லியின் தேகம் பதறியது. அவர்கள் தன்னை அடிக்கடி குறும்பாகப் பேசி எள்ளி நகையாடி வந்தார்கள் என்பதையும் பாராட்டாது, அவர்களுக்கு உதவி புரிய அவள் மனம் விரைந்தது. ஆகவே, அவள் சந்திரசேகரனை இரக்க குறிப்போடு நோக்கினாள். அவன் சிறிது தூரத்திலிருந்தானாயினும், பத்மாவதி கூறியதை யெல்லாங் கேட்டுவந்தானாதலால், சௌந்தரவல்லி தன்னை நோக்கியதும், அவளது குறிப்பு இன்னதென்பதை யறிந்து, தன் நிஜார் ஜேபியில் கையை விட்டுப் பார்த்துக்கொண்டு‘ “அப்படியானால், நாம் அங்கு போகலாமே! பத்மா, அந்த இடத்தை எனக்குக் காட்டு; விரைந்து நடவுங்கள்” என்று தான் முன்னே நடந்தான், பத்மாவதியும் சௌந்தரவல்லியும் அவனைத் தொடர்ந்து ஓடினர்.

* * * *

அக்வெரீயம் வரை போய் திரும்பிவந்த கோபாலன் முதலியவர்கள், தாங்கள் சுலோசனா முதலிய பெண்களை விட்டுச் சென்ற இடத்துக்கு வந்து பார்த்தனர். அங்கு அப் பெண்கள் இல்லாததைக் கண்டு திகைத்தனர். தாங்கள் போய்த் திரும்பிவர நாழிகையானதைப் பார்த்து, ஹாஸ்டலுக்குச் சென்று விட்டனரோ என்று அவர்கள் முதலில் சந்தேகித்தனர். அவ்வெண்ணத்தோடேயே அவர்கள் சுற்று முற்றும் பார்த்தன ராதலால், கீழே விழுந்து மூர்ச்சையுற்றிருக்கும் ரோஸரியைக் கவனிக்கவில்லை. அவ்வாறு பார்த்துக் கொண்டே அவ்விடத்தை விட்டுப் போக எத்தனிக்கை

யில் அருகில் மனிதர் பேசும் சப்தம் இவர்கள் காதில் விழுந்தது. அவ்வோசை வரும் திசையை நோக்கி அவர்கள் ஓடினர். கரையோரமாக இருந்து அரவம் வந்ததால், கரையோரத்தில் உல்லாசமாக உலவி வரலாம் என்று நினைத்துச் சென்ற பெண்கள் மோதி யெறியும் அலைக ளிடையே அகப்பட்டு விபத்துக் காளானுர்களோ என்ற அவர்கள் நினைத்தனர்.

அப் பெண்களைக் காக்கவேண்டுமென்று வேகமாக ஓடிய அவ் வாலிபர், தற்செயலாகப் படகு பக்கந் திரும்பிப் பார்த்ததும், உன்மத்தர்கள் போல் வாயைப் பிளந்து நின்றனர். அவர்கள் கண்ட காட்சி என்ன? சுலோசனுவும், ரமாமணியும் கைகள் கட்டப்பட்டு செயலற்றுக் கிடந்தனர். சோல்ஜர்கள் மிகவும் மூர்க்கமாகத் தங்கள் மிருகச் செயலை.....................(அதை விவரித் தெழுத கையெழவில்லை.)

இக்கோரக் காட்சியைக் கண்டதும் கோபாலன் முதலியவர்கள் மனங் கொதித்தது. அவ்வேழைப் பெண்களை அம்முரடர்களிடமிருந்து விடுவிக்கவேண்டுமென்று விரைந்து சென்றனர். யாரோ வாலிபர்கள் தங்களை நெருங்குவதை யறிந்ததும், மானைப் பிடித்துத் தின்றுகொண்டிருந்த வேங்கைப் புலி, ஏதாகிலும் கிடைக்குமா என்று அங்கு ஓடி வந்த நரியைப் பார்த்து உறுமித் தன் காலால் ஒரு அடி அடிப்பதுபோல், சோல்ஜர்கள் கோபங்கொண்டு தங்கள் அரைகுறை ஆங்கில வார்த்தைகளால் அவ்வாலிபர்களை வைத வண்ணம் எழுந்து பக்கத்தில் வைத்திருந்த பிரம்புகளை எடுத்து ஆளுக்கு இரண்டடி கொடுத்தனர்.

பிரம்படி சுரீலென்று விழுந்ததும் ஒவ்வொருவரும் சீற்றங்கொண்டு அச்சோல்ஜர்கள்மீது பாய்ந்து தாக்கி னர். ஆனுல், அம்முரடர்கள் இவ்வாலிபர்களை ஒரு துரும்பாக மதித்து மேலும் பிரம்புகளால் நன்ருக அடித்தனர். அதோடு நில்லாது, இரும்புபோன்ற தங்கள் கைகளால் ஓங்கிக் குத்தினர். பிரம்படிகளை ஒருவாறு தாங்கிக்கொண்டாலும், பலமான குத்துகளை அவ் வாலிபர்களால் தாங்க முடியவில்லை. எனவே, அவர்கள் தங்களால் அம்முரடர்களைத் தாக்க முடியா தென்று எண்ணி, 'அப்பெண்கள் எக்கதியானுலும் நமக்கென்ன? நம் உயிர் தப்பினுல் போதும்' என்று ஓடலாயினர். இதைக் கண்ட அச்சோல்ஜர்கள் அவர் களை மேலும் பின் தொடர்ந்து துரத்தியடிக்கலாயினர்.

இச்சமயம் எதிரே வந்த ஒரு உருவம் சோல்ஜர் களை நோக்கி, "கைகளைத் தூக்குங்கள்; அப்படியே அவ்விடத்திலேயே நில்லுங்கள்; ஒரு அடி யெடுத்து வைத்தீர்களோ, அத்தோடு செத்தீர்கள். இத் துப்பாக் கியால் நாயைச் சுடுவதுபோல் சுட்டு வீழ்த்தி விடு வேன்" என்று கர்ஜித்து, தன் கைத் துப்பாக்கியை அவர்கள் முகத்துக்கு நேரே நீட்டி நின்றது. எதிர் பாராத இவ்வெதிர்ப்பைக் கண்டதும் சோல்ஜர்கள் அப்படியே திகைத்து நின்றுவிட்டார்கள். அவர்களைச் செயலற்ற நிலையிலாக்கிய உருவம் யார்? நம் சந்திர சேகரனே! அவனே தன் கைத்துப்பாக்கியைக் காட் டிப் பயமுறுத்திச் சோல்ஜர்களைத் திகைத்து நிற்கச் செய்தவன்!

பத்மாவதி வழி காட்டிக்கொண்டு வர, சௌந்தர வல்லியோடு விரைந்து வந்த சந்திரசேகரன், தூரத்தில்

வரும்போதே படகருகில் யாரோ சிலர் சண்டையிடுவதைக் கண்டு, பெண்களை அங்கேயே நிறுத்திவிட்டு, சண்டை நடக்கு மிடத்துக்கு வேகமாக ஓடினுன். இதற்குள் சிலர் ஓடி வருவதையும் வேறிருவர் அவர்களைத் துரத்தியடிப்பதையுங் கண்டு ஆத்திரங் கொண்டு, நிஜார் ஜேபியிலிருந்த தன் கைத்துப்பாக்கியை எடுத்து நீட்டிய வண்ணம் ஓடினுன். முன்னே ஓடி வந்த வாலிபர்கள் சந்திரசேகரனைக் கண்டதும், திடீரென்று தெற்கு பக்கமாகத் திரும்பி முன்னிலும் வேகமாக ஓடலாயினர். எனவே, பின்னே துரத்திவந்த சோல்ஜர்களை சந்திரசேகரன் தடுத்து நிறுத்தினுன். அவ்வாறு அவர்களை அசைவற்று நிற்க வைத்துவிட்டு, அவர்கள் நேரே கைத்துப்பாக்கியைக் காட்டிய வண்ணம் படகு பக்கமாகப் போனுன், சோல்ஜர்களும் அவன் திரும்பும் பக்கமாகவே பொம்மைகள்போல் திரும்பினர். படகு பக்கமாகச் சென்ற சந்திரசேகரன், அங்கு அலங்கோலமாக வீழ்ந்து கிடந்த பெண்களின் பரிதாப நிலையைக் கண்டதும் பதறிப்போய் தன்னை மறந்து அவர்கள் இருக்கு மிடத்துக்கு ஓடினுன்.

இதுதான் சமயமென்று அறிந்த சோல்ஜர்கள் அவன் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அவன் கையிலிருந்த கைத்துப்பாக்கியைத் தட்டிவிட்டு அவனைக் குத்தலாயினர். இவர்களது தாக்குதலை யெதிர்பாராத சந்திரசேகரன் முதலில் மலைத்து நின்ருனுயினும், சிறிது நேரத்திற் கெல்லாம் தன்னைச் சமாளித்துக் கொண்டு வீராவேசங் கொண்டு தன் பலத்தை யெல்லாம் உபயோகித்து அவர்களைக் குத்தினுன். இவ்வாறு இவர்கள் நெடுநேரம் போராடினர். கடைசியில், ஏற்

கனவே சண்டையிட்டு அலுத்திருந்த சோல்ஜர்கள், குடிவெறி தெளியவும் சோர்வுற்றவர்களாய் சந்திரசேக ரனது தாக்குதலைத் தாங்கமாட்டாது பின்னடைந்து வடக்கு நோக்கி ஓடலாயினர்.

இவர்கள் ஓடுவதைச் சிறிது நேரம் பார்த்து நின்ற சந்திரசேகரன் தன்னை ஒழுங்குபடுத்திக்கொண்டு கீழே வீழ்ந்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து ஜேபியில் போட்டுக்கொண்டான். சோல்ஜர் ஓடிவிட்டதைத் தூரத்திருந்து பார்த்த பத்மாவதியும், சௌந்தரவல்லி யும் சந்திரசேகரன் இருக்குமிடத்துக்கு ஓடி வந்தனர். மூவருஞ் சேர்ந்து படகருகில் போயினர். அங்கு சுலோ சனுவும் ரமாமணியும் இருக்கும் நிலையைக் கண்டு சௌந்தரவல்லி சகிக்காது கண்களை மூடிக்கொண் டாள். அவர்கள் ஆடைகளெல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. கூந்தல் அவிழ்ந்து தாறுமாருக இருந்தன. தேகமெல்லாம் வியர்வை வழிந்திருந்தது. அவர்க ளுடைய கண்களி லிருந்து நீர் ஆருகப் பெருகிய வண்ண மிருந்தது.

உடனே பத்மாவதி அவர்களது ஆடைகளை யெல் லாஞ் சீர்திருத்தி, கைக்கட்டை அவிழ்த்தாள். பின்னர் வாயிலடைத்திருந்த துணிகளை யெடுத்தாள். தங்கள் கற்பையிழந்த கேவலமான நிலையில் பத்மாவதியையும், சௌந்தரவல்லியையும் பார்க்க அவர்கள் வெட்கங் கொண்டனர். சௌந்தரவல்லி அவர்களுக்குத் தேறு தல் கூறி அவ்விடத்தை விட்டுத் தங்களுடன் சீக்கிரம் வருமாறு வேண்டினுள்.

எல்லாருஞ் சேர்ந்து ரோஸரி வீழ்ந்து கிடக்கும் இடத்துக்குப் போய்ப் பார்த்தனர். அப்பொழுதும்

அவள் மூர்ச்சை தெளியாது பிணம்போலக் கிடந்தாள். ஆதலால், சந்திரசேகரன் அவளைக் குழந்தையை வாரி யெடுப்பதுபோல் எடுத்துக்கொண்டு மோட்டாரை நோக்கிச் சென்ருன். மற்றப் பெண்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

---

# நான்காவது அதிகாரம்

## கலாசாலை தினம்—கந்தருவ மணம்

பொன்அருங் கலனுந்தூசும் புறத்துள துறத்தல்வம்பே
நன்னுதல்ஒருத்தி தன்பால் அகத்துஉள நாணும்நீத்தாள்
உன்னருந் துறவுபூண்ட உணர்வுடை ஒருவனேபோல்
தன்னையுந் துறக்குந்தன்மை காமத்தே தங்கிற்றன்றே. —கம்பர்.

இந்திராணி மகளிர் கல்லூரியில் காலையிலிருந்தே வயது முதிர்ந்த சீமான்களும், சீமாட்டிகளும், அழகிய இளமங்கையரும், நவநாகரிக வாலிபர்களும், சிறுவர் சிறுமிகளும் வருவதும் போவதுமாக இருந்தனர். பொதுவாகக் கல்லூரி மாணவிகளும், ஆசிரியைகளும் நகை முகத்தோடு அனைவரையும் இனிது வரவேற்று உபசரிக்கலாயினர். மாணவிகளில் பெரும்பாலார், தங்கள் பெற்றோர்களையும், உற்றார் உறவினர்களையும், நண்பர்களையும் வரவேற்பதில் மிகவும் ஆர்வங் காட்டி நின்றனர். சில மாணவிகள் தங்கள் சிநேகிதர்களான ஆடவர்களையும், மங்கையர்களையும் குதூகலமாக அழைத்துச் சென்று கலாசாலையின் பல பாகங்களையுங் காண்பித்துக் களித்தனர்.

அன்று பிற்பகல் சென்னை கவர்னர் தம்பதிகள் அக்கலாசாலைக்கு விஜயஞ் செய்து, "கலாசாலை தின"க் கொண்டாட்டத்தைச் சிறப்பித்தனர். கவர்னர் தம்பதிகளுக்கும் மற்றவர்களுக்கும் "தேநீர் விருந்து" **(Tea party)** அளிக்கப்பட்டது. அதன் பின்னர், லேடி ஸ்டான்லி மாணவிகளுக்கு இதோபதேசஞ் செய்து,

பிரின்ஸிபாலின் வேண்டுகோளின்படி அவர்களுக்குப் பலவிதமான பரிசுகளை வழங்கினர். அதில் நமது சௌந்தரவல்லியும் பல பரிசுகள் பெற்றாள். சந்திர சேகரன் அவ்விழாவுக்கு வந்திருந்தான் என்று நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. சௌந்தரவல்லி அவனைக் கண்டதும் குதூகலங் கொண்டாள். அவனை மிகவும் அன்போடு உபசரித்தாள். அவனும் இவளது அன்பையும், அறிவின் மாட்சியையும், ஆசிரியைகள் பாராட்டும் வண்ணம் கல்வி முதலிய துறைகளில் சிறந்து விளங்கும் தகுதியையும் கண்டு, இத்தகைய பெண்ணைச் சுயநலங் காரணமாக ஏமாற்றப் பார்க்கிறோமே என்று உள்ளூற வருந்தினான். ஆயினும் அடுத்த கணத்தில் அவன் தன்னுள், "சே! என்ன புத்தி! ரோஜா மலர் அழகாகச் செடிகளில் மலர்ந்திருக்கிறது. அதைப் பார்க்கும் ஒருவன் அதைப் பறித்து முகர்ந்து அதன் சுகந்தத்தை அனுபவிக்காமல் இருக்க முடியுமா! முகர்ந்து பார்த்தால் அம்மலர் வாடி வதங்கிவிடுமே! என்று ஏங்குபவன் முட்டாளாக வன்றோ மதிக்கப் படுவான்? சௌந்தரவல்லி பேரழகி! சிறிது பணமும் அவள் கையில் நடமாடுகிறது. சமயம் வாய்க்கும் போது ஐம்புலன்களும் ஆர அவள் அழகை அனு பவிக்க வேண்டும். கூடுமான வரையில் பணத்தைச் சுரண்ட வேண்டும். இவற்றை விட்டு வேறு யோசனை ஏன்?" என்று எண்ணி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டனன்.

•

**மாலை** 5-மணி யாயிற்று. "கலாசாலை தின விழா" வை யொட்டி கலாசாலையின் பல பாகங்களிலும், மாணவிகளால் நாடகங்களும் நடனங்களும் ஆரம்ப

மாயின. எனவே, சௌந்தரவல்லி சந்திரசேகரனை முதலில் கோலாட்டக்கச்சேரி, நடனம், வீணை வாசிப்பு ஆகியவைகள் நடைபெறும் இடத்துக்கு அழைத்துக் கொண்டுபோனாள். கீழே இருந்து மேன்மாடிக்குப் போவதற்காக அவர்கள் படிகளின் வழியாக ஏறும் போது, சுலோசனா, ரமாமணி முதலிய மாணவிகள் முன்னே வர, கோபாலன், பரமானந்தன், சந்தான கிருஷ்ணன், சுந்தரராஜன் முதலிய வாலிபர்கள் பின்னே வந்துகொண் டிருந்தனர். எதிர்பாராதவித மாக, இவ்விரு கூட்டத்தினரும் நேருக்கு நேராக ஒரு வரை யொருவர் சந்தித்தனர். ஒவ்வொருவரும் தங்க ளைப்பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என மனக்கலக்கங் கொள்ளலாயினர். எல்லாரையும் விட கோபாலனும், சுலோசனாவும் பேரச்சங் கொண்டனர். தங்களை அரக்கர்கள்போன்று கொடிய சோல்ஜர்களிட மிருந்து காப்பாற்றிய சந்திரசேகரனுக்குத் தீங்கிழைக் கவே கங்கணங் கட்டிக்கொண்டு திரியும் கோபாலன் முதலியவர்களோடு தாங்கள் குலாவி வருவதைப்பற்றி அவன் என்ன நினைப்பான் என்று எண்ணி மாணவி கள் உள்ளங் குலைந்தனர். அத்துடன், சௌந்தரவல்லி எங்கு தாங்கள் அவ்வாலிபர்களோடு சேர்ந்து செய்து வரும் சூழ்ச்சியைத் தெரிந்துகொண்டாளோ என்று அஞ்சினர். ஆகவே, அவர்கள் எதிரே வந்த சந்திர சேகரனையும் சௌந்தரவல்லியையும் ஏறிட்டுப் பார்க் கத் துணியாதவர்களாய் தலைகுனிந்தவாறு படியின் ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றனர்.

கோபாலனோ, இதற்கு முன்னெல்லாம் சந்திர சேகரனைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தாலும்,

திடீரென்று அவன் கண்களில் படாது மறைந்தும், அவன் பின்னரிருந்தே விஷமஞ் செய்தும் வந்தவனாத லால், இப்போது அவன் கண்ணில் படாது ஒளிய முடியாதவகையில் நெருக்கடி யேற்பட்டு விடவே, ஒரு விநாடி இன்னது செய்வதென்று தோன்ருது நின்று பின்னர் சமாளித்துக்கொண்டு, சந்திரசேகரனை நோக்கி அசட்டு நகை செய்தான். ஆனல், தான் அவன்மீது கொண்ட பொருமை காரணமாக இதுவரை மறைந் திருந்து செய்து வந்த தீங்குகளைச் சந்திரசேகரன் தெரிந்து கொண்டானே என்ற சந்தேகத்தால் அவ னுக்கு உள்ளூற பயம்மட்டும் ஏற்பட்டிருந்தது. எனி னும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது, மௌனஞ் சாதிக்குஞ் சந்திரசேகரனைப் பார்த்து, "என்ன சந்தர்! நெடுநாளாய்க் காணுமே! உன்னைப் பார்க்க நான் பலமுறை வந்தும், ஹாஸ்டலில் அகப் படவில்லையே! நிரம்ப வேலையாக்கும். மேலும் புது சிநேகம் ஏற்பட்டுவிடவே, நம்மை யெல்லாம் மறந்து விட்டாய்போ லிருக்கிறது" என்று குசலப் பிரச்னம் விசாரிப்பவன்போல் புரளியாகக் கேட்டான்.

கோபாலன் முதலியவர்கள் தன்னைப் பின் தொடர்ந்து, ஓட்டலிலும், சினிமாவிலும் தொந்தரவு செய்து வருகிருர்களென்பது சந்திரசேகரனுக்குத் தெரி யாததலால், கோபாலனைப் பார்த்ததும் ஒன்றும் மாறு தலடையவில்லை. ஆனல், அவன் சௌந்தரவல்லியிடத் தில், தான் ஒரு ஜமீன்தார் புதல்வனென்றும் எம். ஏ. வகுப்பு மாணவனென்றும் கூறியிருப்பதற்கு மாருக, அதைப் பொய்ப்படுத்தும் வகையில் கோபாலன் ஏதா இலும் பேச்சைக் கொண்டுவந்துவிடப் போகிருனென்ற

அச்சம் மட்டும் அவனது மனத்தில் உண்டாயிற்று. எனவே, அவன் கோபாலன் கேள்விக்குப் பதிலாக அவனைப் பாராமலே, "அப்படியொன்றுமில்லை; கோபாலா! உங்களையெல்லாம் பார்த்தற்குச் சந்தர்ப்பமேற்படவில்லை; முன்னைக் காட்டிலும் இப்போது எனக்கு வேலை அதிகமாய் இருக்கிறது. அதனுல்தான் உங்களோடெல்லாம் முன்போல் அளவளாவி மகிழ்தற்கில்லை. நான் இன்னொரு சமயம் உன்னைப் பார்க்கிறேன்" என்று கூறிக்கொண்டே சௌந்தரவல்லியைக் குறிப்பாகப் பார்த்துவிட்டுப் படிகளின்மேலே நடந்தான். தான் சந்திரசேகரனேடு போவதுபற்றித் தன் தோழிகளும், அவ் வாலிபர்களும் தவருக ஏதேனும் நினைத்து விடுவார்களோ என்ற நாணத்தால் மௌனமுற்றிருந்த சௌந்தரவல்லி, சுலோசனு முதலியவர்களோடு பேசாது சந்திரசேகரனைப் பின்தொடர்ந்தாள். அவர்கள் மேலே போய் கண்ணுக்கு மறையும்வரை பார்த்து நின்ற கோபாலன், சுலோசனு முதலியவர்கள் பெருமூச்சு விட்டவர்களாய் தங்களுக்குள் குசுகுசுவென்று ஏதோ பேசிய வண்ணம் கீழே இறங்கினர்.

மேன் மாடியின் நடுவே உள்ள மண்டபத்தில் சீமான்களும், சீமாட்டிகளும் மற்றவர்களும் நிறைந்திருந்தனர். மண்டபத்தில் ஒருபறம் அழகாக அமைக்கப் பட்டிருந்த மேடையில், சில மகளிர் வீணையையும், பிடிலையும் மற்றும் பக்க வாத்தியங்களையும் வைத்துக்கொண்டு சுருதி கூட்டிக் கொண்டிருந்தனர். சௌந்தரவல்லி சந்திரசேகரனைக் கனவான்களிடையே உட்கார வைத்துவிட்டு, தான் மேடையின் மீதேறி வீணை யொன்றை யெடுத்து மீட்டினுள்.

சிறிது நேரத்திற் கெல்லாம் மேடையின் முன் தொங்க விடப்பட்டிருந்த திரை தூக்கப்பட்டது அதே காலத்தில், வீணை, பிடில் முதலிய வாத்தியங்களை மேடையின் இரு பக்கங்களிலும் வரிசையாக உட்கார்ந் திருந்த மாணவிகள் வாசிக்கவே, குயிலோசையினும் இனிமையாக இன்னிசை எழும்பியது. உடனே பத்து பனிரெண்டு பெண்கள் திரையின் இருபுறங்களிலு மிருந்து அழகாக நடனஞ் செய்துகொண்டே வந்து இனிமையாகப் பாடிக் கோலாட்டஞ் செய்தனர். மாணவிகள் பலவிதமாக வளைந்து நடனஞ் செய்து கோலாட்டஞ் செய்த காட்சி பார்க்க ரமணீயமா யிருந் தது. சௌந்தரவல்லி வீணையில் தனக்குள்ள திறமை யைக் காட்டி மிக அழகாகக் கேட்பார் உள்ளம் உருகு மாறு வாசித்தாள். மிக வஞ்சகனுன சந்திரசேகரன் கூட அவ்விசையில் ஈடுபட்டுத் தன்னை மறந்தான்.

பின்னர், சௌந்தரவல்லி தன் வேலை முடிந்ததும், சந்திரசேகரனைச் சாடை காட்டி ஆங்கில நாடகம் நடக்கு மிடத்துக்கு அழைத்துச் சென்றாள். அங்கு ஆங்கில மகளிரும் தமிழ்ப் பெண்களும் கலந்து நாட கத்துக் கேற்றாற்போல், "ஆர்ச்செஸ்ட்ரா" என்னும் ஆங்கில வாத்தியம் வாசித்தனர். அதன் முடிவில், இரு ஆங்கிலப் பெண்மணிகள் "ஸ்பானிஷ் டான்ஸ்" செய் தார்கள். அந்நடனம் பார்ப்பவர் உள்ளங்களை யெல் லாம் கொள்ளை கொண்டது.

மற்றோரிடத்தில் "துருவன்" நாடகம் சம்ஸ்கிருத மொழியில் நடந்தது. அதில் ஒரு சட்டைக்காரப் பெண் துருவனுக நடித்தது குறிப்பிடத் தக்கது. சினிமாப் படக் காட்சியில் காட்டப்படும் அசையும் படத்தைப்

போல் பாவனை காட்டி யாவரும் நடித்தது பாராட்டக் கூடியதா யிருந்தது. தெலுங்கிலும், மலையாளத்திலும் கூட நாடகங்களும், கச்சேரிகளும் நடத்தப்பட்டன. அங்கங்கு குறிப்பிடக்கூடிய பாகங்கள் நடைபெறும் நேரங்களில் சௌந்தரவல்லி சந்திரசேகரனை அழைத்துச் சென்று காண்பித்துக் குதூகலமாகப் பேசி மகிழ்வித்தாள். சந்திரசேகரனும், சந்தர்ப்பம் நோக்கிப் பேச்சினிடையே தன் உள்ளக் கருத்தைப் புலப்படுத்தி அவளை வயப்படுத்தும் வகையில், காதல் மொழிகளைக் கலந்து பேசி வரலானான்.

கடைசியாக யாவும் முடிய 8-மணி யாயிற்று. சந்திரசேகரன் சௌந்தரவல்லியினிடம் விடைபெற்று செல்கையில், அவளைத் தன்னோடு சிறிது தூரம் வந்து திரும்பும்படி மிகவும் நயமாகக் கேட்டுக்கொண்டான். சௌந்தரவல்லி மிகவுந் தயக்கத்தின் மீது அவனோடு செல்ல இசைந்தாள். இருவரும் மோட்டாரில் ஏறினர். மோட்டார் கடற்கரை யோரமாகவே, அடையாறை நோக்கி வேகமாகச் சென்றது. இவர்களைக் கலாசாலையிலேயே நிழல்போல் தொடர்ந்து கவனித்துவந்த கோபாலன் முதலிய வாலிபர்கள், தெற்கு பக்கமாக மோட்டார் செல்வதைக் கண்டதும், தாங்களும் மோட்டாரிலேறிப் பின் தொடர்ந்தனர்.

சந்திரசேகரன் மோட்டார் சாந்தோம் சர்ச்சையணுகிற்று. சந்திரசேகரன் தற்செயலாகப் பின்புறந் திரும்பிப் பார்த்தான். தன் மோட்டாருக்குப் பின்னால் ஒரு மோட்டார் பத்துகஜ தூரத்தில் வேகமாக வந்து கொண்டிருப்பதை அவன் அறிந்தான். உடனே அவன் மனத்தில், தங்களைப் பின்தொடர்ந்து யாரோ வருகிறார்

கள் என்று தோன்றியது. முன்னர்கூட சில வாலிபர்கள் தங்களைத் தொடர்ந்து வந்து தொந்தரவு விளைத்தது அவன் மனக்கண் முன் நின்றதால், இப்போதும் அவர்களே தொடர்ந்து வருகிறார்களென்ற எண்ணம் வலுத்தது. எனவே, அவன் தன்னைப் பின் தொடர்ந்து வருபவர்களை யேமாற்றிக் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுச் செல்ல ஒரு சூழ்ச்சி செய்தான். அதன்படியே அவன் தன் மோட்டாரைத் திடீரென்று தெற்கு பக்கம் போவதினின்றும் நிறுத்தி மேற்கு பக்கமாக கச்சேரி ரோட் வழியாகச் சிறிது செலுத்திப் பின்னர் எதிரே வரும் சில மோட்டார்களைத் தொடர்ந்து திருப்பி மறுபடியும் கிழக்கு பக்கமாக வந்து அடையாறுக்குச் செல்லும் ராபர்ட்ஸன் பேட்டை ரோட்டை நோக்கி வேகமாகக் செலுத்தினான்.

இவை யாவும் பொறி தட்டும் நேரத்துக்குள் நடந்ததால், பின்னே வந்த கோபாலன் முதலியவர்கள் திகைத்து நிற்கவேண்டிய தாயிற்று. அவர்கள் சந்திரசேகரன் மோட்டார் கச்சேரி ரோட் பக்கமாகத் திரும்பியதை நன்றாகப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் சர்ச்சுக்கு அருகே வருஞ் சமயத்தில், சந்திரசேகரன் மோட்டாரைப் போன்ற மோட்டார் ஒன்று மேற்கிலிருந்து வந்து தெற்கு நோக்கிச் செல்லவே, அவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

கோபாலன் மோட்டாரை நிறுத்திவிட்டுத் தன் தோழர்களை நோக்கி, 'என்னடா இது! சந்திரசேகரன் தன் மோட்டாரைக் கச்சேரி ரோட் பக்கமாகச் செலுத்தியதை நாம் பார்த்தோமே! இப்போது தெற்கு பக்கம் போகும் அந்த மோட்டார் அவனுடை

யதுபோ லிருக்கிறதே! மேற்கு நோக்கிச் சென்ற அவன் திடீரென திரும்பக் காரண மில்லையே! இது வேறு யாரோ ஒருவருடைய மோட்டாரா யிருக்க வேண்டும்? நாம் இங்கேயே நின்று பேசிக் காலதாமதஞ் செய்துகொண் டிருந்தால், அவன் மோட்டார் நம் கண்ணிற்குத் தெரியாமல் மறைந்துவிடப் போகிறது. அவன் சௌந்தரவல்லியை எங்கு அழைத்துச் செல்லுகிருன் என்பதைக் கண்டறியவேண்டும். ஆதலால் சீக்கிரம் செல்வோம்" என்று கூறினுன். உடனே அவர்களது மோட்டார் மிக வேகமாகக் கச்சேரி ரோட் வழியாகச் சென்றது. அவர்கள் கண்கள் அம் மோட்டாரைக் காட்டிலும் வேகமாக வெகுதூரம் வரை துருவிச் சென்று சந்திரசேகரன் மோட்டார் எங்கே செல்லுகிறதென்று பார்த்தன. ஆனுல், அவன் மோட்டாரின் அறிகுறி யொன்றும் காணப்படவேயில்லை. கோபாலன் முதலியவர்களுக்குத் திகைப்பும் கலக்கமும் ஏககாலத்தில் ஏற்பட்டன. இதற்குள் மோட்டாரும் 'லஸ் சர்ச் ரோட்'டை யடைந்தது. அங்கு நாலாபக்கமும் மோட்டார்கள் சென்ற வண்ணமா யிருந்தன. ஒரு பக்கம் டிராம் வண்டிகளும், மோட்டார் பஸ்களும் போய்க்கொண் டிருந்தன. ஜனங்களின் போக்குவரத்தோ அதிகமா யிருந்தது. கோபாலன் முதலிய வாலிபர்கள் நாலா பக்கமுஞ் செல்லும் மோட்டார்களை யெல்லாம் கூர்ந்து பார்த்தார்கள். சந்திரசேகரனின் மோட்டார் போன்ற மோட்டார் ஏதாகிலுஞ் சென்ருல் தங்கள் மோட்டாரை மிக வேகமாகச் செலுத்தி, அதனருகில் சென்று பார்த்து அதில் சந்திரசேகரனில்லாத தறிந்து ஏமாற்ற மடைந்து திரும்பினுர்கள். இவ்வாறு பல தடவை ஏமாந்து கடைசியாகச் சந்திர

சேகரனது மோட்டார் சென்ற திசையை அறியாது அவர்கள் திகைத்து நின்றனர்.

தேய் பிறைச் சந்திரன் மங்கலாக ஆகாயத்தில் பிரகாசித்துக்கொண் டிருந்தான். அடையாறு கடற் கரையில் அலைகள், அறியாமை மிக்க மக்கள் உலகின் நிலையாமை தெரியாது இதைச் சாசுவதமென எண்ணி மனம் போனவாறு களித்து மதி மயங்கிப் பின்னர், ஏதேனும் துன்பம் வந்தடையுங்கால் ஒப்பாரி வைத்து அழுவது போல், மெல்ல சப்தஞ் செய்துகொண்டு வருவதும் போவதுமா யிருந்தன. கரையோரத்தின் ஒரு பக்கத்தில் தென்னஞ்சோலை யிருந்ததால் உப்பங் காற்று அதனோடு கலந்து குளிர்ச்சியாய் வீசிக் கொண் டிருந்தது. கடலோடு கலக்கும் அடையாற்றின் பக்கத் தில் கரையோரத்தில் கருங்கடலின் அமைதியைப் பார்த்த வண்ணம் இருவர் மணலில் உட்கார்ந்து கொண் டிருந்தனர். அவர்கள் நமது கதாநாயகர்க ளான சந்திரசேகரனும் செளந்தரவல்லியும் என்று நேயர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது அநாவசியம்.

சந்திரசேகரன் செளந்தரவல்லியின் அருகில் உட் கார்ந்த வண்ணம் நாலாபக்கமும் பார்த்துக்கொண் டிருந்தான். தான் சூழ்ச்சி செய்து அவர்களை யேமாற்றி வந்தாலும் ஒருவேளை எங்கு தன்னைப் பின் தொடர்ந்த வர்கள் அங்கு வந்துவிடுகிறார்களோ என்ற அச்சமே அவனைச் சுற்று முற்றும் பார்க்கச் செய்தது. வஞ்சகக் கொடியோர் மனதில் அச்சத்தை யன்றி வேறென்ன நிலவி யிருக்க முடியும்? அடையாற்றையும் கருங் கடலையும் அரணாகக் கொண்டு வளர்ந்தோங்கிய சவுக்கு மரங்க ளிடையே மறைந்தும் மறையாதும்

காணப்படும் அறிவு நிலையமாகிய **அன்னிபெசன்ட் அம்மையார்** அமர்ந்துறையும் **தியாசிபிகல் சொசைடி** கட்டிடங்களைச் சந்திரசேகரன் பார்த்ததும் குதூகலங் கொண்டான். அங்கு பல கிளைகளால் தாங்கப்பெற்ற மிகப் பெரிய ஆலமரத்தின் கீழ் நடக்கும் விநோதங் களும், மேனாட்டு நாகரிகத்தின் எல்லையைக் கண்ட ஆண்களும் பெண்களும் சகோதரப் பான்மையோடு—பரப்பிரம்ம தன்மையோடு—கலந் துறவாடிக் களிக் கும் காட்சியும் அவன் மனக்கண்ணில் தாண்டவ மாடி யது. அவர்கள் இருந்த இடத்துக்கு வெகு தூரத்தில் வடக்கு பக்கமாக இருந்த செம்படவர்கள் குடிசையில் எரியும் விளக்கின் வெளிச்சம் மினுக்கு மினுக்கென்று தெரிந்தது. அக் குடிசைகளை மணலில் ஒரு மலை போன் றிருந்த மணல் மேடு மறைத்துக் கொண் டிருந்தது. மேற்கு பக்கத்தில் அடையாற்றின் பெரிய வாராவதி யும், அதன்மீது நடுவே அமைக்கப்பட்டிருந்த இரு பெரிய கம்பங்களும் மங்கலான வெளிச்சத்திலும் நன்கு தெரிந்தது.

இவற்றை யெல்லாங் கவனித்த சந்திரசேகரன் அச்சமயத்தில் கண்ணுக் கெட்டுந் தூரம் வரை மனித நடமாட்டமே யில்லை 'யென்பதைத் தெளிவாக அறிந் தான். ஆகவே, அவன் சௌந்தரவல்லியை மிகவும் நெருங்கி யுட்கார்ந்து அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

சௌந்தரவல்லி சந்திரசேகரனோடு தனித்திருப்ப தைப் பற்றி களித்தா ளானாலும், அவன் ஏன் தன்னை அந்நேரத்தில் கலாசாலையி லிருந்து வெகு தூரத்தி லுள்ள அடையாறு கடற்கரைக்கு அழைத்து வந்தான்

என்று ஆச்சரியங் கொண்டாள். அவன் நோக்கம் என்னவா யிருக்குமென்ற ஆலோசனையில் ஆழ்ந்திருந் தாள். அவளது மன நிகழ்ச்சியை ஒருவாறு ஊகித் தறிந்த வஞ்சகனுன சந்திரசேகரன் மெதுவாகச் சௌந்தரவல்லியின் தோள்மீது கையைப் போட்டு, "சுந்தரி! உன்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்த தற்காக மன்னிக்கவும். நான் உன்னைப் பார்த்துப் பேசுவது இதுதான் கடைசி நாளாகையால், உன் னிடம் விடைபெற்றுப் போக வந்தேன்" என்று சொன்னுன்.

சௌந்தரவல்லி வியப்போடு, "என்ன! என்னைப் பார்த்து பேசுவது இதுதான் கடைசி நாளா? ஏன்? உனது ஊருக்குப் போகிருயா?" என்று கேட்டாள்.

சந்திரசேகரன் முகத்தில் கிலேசத்தைத் தோற்று வித்து, "ஆம்; தெற்கே நீண்ட தூரத்திலுள்ள எல்லை காணமுடியாத எம பட்டணத்துக்குப் போகப் போகி றேன்" என்று சாவதானமாகக் கூறினுன்.

இச் சொற்களின் ஆழத்தை யறியாத சௌந்தர வல்லி படபடப்பாக, "என்ன சந்தர்! விளையாடுகிருயா என்ன? என்னைக் காண்பது கடைசி நாள் என்கிருய்? ஏன் ஊருக்குப் போகிருயா என்று கேட்டால், எம பட்டணம் போகிறேன் என்கிருய்? உன் மூளை ஏதாகி லும் குழம்பிப் போயிருக்கிறதா என்ன?" என்று கேட்டாள்.

சந்திரசேகரன், "விளையாடவில்லை சுந்தரி! உண் மையையே சொல்லுகிறேன். உன்னைக் காண்பது இது இறுதிநா ளென்பதும், தென்திசைக் கோமான் திரு நகருக்குப் போகப் போகிறே னென்பதும் முக்கா

லும் சத்தியம்.—என் மூளை கலங்கிப்போ யிருக்கிற தென்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆனால், அக் கோளாறின் காரணமாய் பிதற்றவில்லை என்று உறுதி கூறுகிறேன்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னான்.

சந்திரசேகரன் பேசும் ஒன்றுக்கொன்று பொருத்த மில்லாததும், விளக்க மில்லாததுமான வார்த்தைகளைக் கேட்டு சௌந்தரவல்லி அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

அக் குறிப்பறிந்த வஞ்சகனான சந்திரசேகரன் தன் முகத்தைத் துக்கக் குறிக ளுண்டாகும்படி மாற்றிக் கொண்டு, "சுந்தரி! நான் பேசுவது உனக்கு விபரீத மாகக் காணப்படலாம். நான் விஷயத்தை விளக்க மாகக் கூறினால், அப்போது உனக்கு நான் முன்னர் பேசியதனுடைய பொருள் நன்கு விளங்கும். நான் முன்னொரு நாள், கோமள விலாஸ் ஓட்டலில் எனது தந்தையார் என் விவாகம் சம்பந்தமாக அடிக்கடி கடிதம் எழுதி வருவதையும், என்னைக் கூடிய சீக்கிரம் ஊருக்கு வரும்படி வற்புறுத்தி வருவதையும் கூறியது உனக்கு ஞாபக மிருக்குமென்று நினைக்கிறேன். அவர் மறுபடியும் எழுதி யிருக்குங் கடித மொன்று இன்று காலை எனக்குக் கிடைத்திருக்கிறது. அதில் அவர் என்னுடைய விவாகம் அநேகமாக நிச்சயமாகி விட்ட தென்றும், எனக்குக் கொடுப்பதாக இதுவரை கூறப் பட்ட பெண்களில் ஒரு பெண் அவருக்குப் பிடித் திருப்பதாகவும், அவளை அவர் நேரே சென்று பார்த்த தில், அவள் சகல அம்சங்களிலும் சிறந்தவளாகக் காணப்படுவதாகவும்; அவள் ஒரு டிப்டி கலெக்டர்

மகளென்றும், அவருக்கு அவளைத் தவிர வேறு சந்ததி யில்லாததால், அவளை மிகவும் அருமையாக வளர்த்து திரிச்சி கலாசாலையில் பி. ஏ. வகுப்பு வரை படிக்க வைத்திருப்பதாகவும், அவள் மிகவும் அழகாகக் காணப்படுவதோடு, திரண்ட செல்வத்துக் குரியவ ளாகவு மிருப்பதாகவும், பெண்ணும் அவள் தந்தையும் எங்கள் சம்பந்தத்தில் மிகவும் விருப்ப முடையவர்க ளாக இருப்பதாகவும், என்னுடையப் படிப்பினுல் தான் விவாகத்துக்குத் தடையேற்பட் டிருப்பதாகவும், இல்லாவிடில் இம் மாதமே விவாகத்தை முடித்துவிடத் தயாராக இருப்பதாகவும், என் படிப்பை இடையே நிறுத்த அவருக்கு விருப்பமில்லை யாதலால், அவர் களுக்கு அவர் மூன்று நான்கு மாதங்கள் பொறுத் திருக்கும்படியாகச் சொல்லி யிருப்பதாகவும், ஆதலால் நான் இக் கடிதங் கண்டவுடனே எனது விருப் பத்தை அவருக்கு எழுதித் தெரிவிப்பதோடு, பரீக்ஷை முடிந்ததும் ஊருக்குப் புறப்பட்டு வரும்படியும் வற் புறுத்தி யெழுதி யிருக்கிருர். இக் கடிதத்தைக் கண்ட தும் நான் இடியுண்ட நாகம் போலானேன்......" என்று கூறி இருமுவது போல் பாசாங்கு செய்து தன் பேச்சை யிடையே நிறுத்தி, செளந்தரவல்லியின் முகத் தைத் தன் கடைக்கண்ணுல் ஆராய்ந்தான்.

சந்திரசேகரனது தந்தை அவனுக்குப் பெண்ணை நிச்சயித்து விட்டதாக அவன் கூறியதுமே, செளந்தர வல்லியின் முகம் மாறுத லடைந்தது. அவள் மனம் என்னென்ன வெல்லாமோ எண்ணிக் கவலை கொண் டது. அது சம்பந்தமாகச் சந்திரசேகரன் தன் கருத்தை என்ன சொல்லப் போகிருனே என்று

அறிய ஆவலோடு அவன் முகத்தையே பார்த்த வண்ணம் தலை குனிந்திருந்தாள்.

அவளது மன நிலையை நன்றாக உணர்ந்த சந்திரசேகரன் மீண்டும் பேசத்தொடங்கி, "நீ இதைப் பற்றி என்ன நினைக்கிறாய், சுந்தரீ ?" என்று கேட்டு விட்டு, அவள் அதற்கொன்றும் பதில்கூறாது வாளாவிருக்கவே, அவளைப் பார்த்தபடியே, 'உன்னை நான் காணாதிருந்தால்—உன் பேரழகையும், அருங் குணத்தையும் அறியாதிருந்தால்—என் தந்தை குறிக்கும் பெண்ணை அவசியம் நான் விவாகஞ் செய்துகொள்ள சந்தோஷத்தோடு சம்மதிப்பேன். இது உண்மை. ஆனால் இப்போதோ அவ்வாறு சம்மதித்தற்கில்லை. என் தந்தை குறித்த விவாக விஷயத்தை நான் விஷமாகவே மதிக்கிறேன். உன்னை என்று கண்டேனோ அன்றிருந்து என் மனம் உனக்கு அடிமைப்பட்டுவிட்டது. அதை நீக்க எவ்வளவோ முயன்றும் என்னால் முடியவில்லை. யானும் என் மனமும் உன் விஷயமாகப் போராடியதன் பயனாக என் மனமே கடைசியில் வெற்றி யடைந்தது. எனவே, உன்னையின்றி நான் உயிர் வாழக்கூடாத நிலையை அடைந்து விட்டேன். இப்பிறப்பில் நான் விவாகஞ் செய்து கொள்வதா யிருந்தால், உன்னை மணந்து கொள்வதென்றும், இல்லாவிடில் உயிர் துறப்பதென்றும் முடிவு செய்திருக்கிறேன். நான் உன்னை உண்மையாகக் காதலிப்பதாகப் பலமுறை கூறி உன் ஆழ்ந்த அன்பைப் பெற இருந்தேன். ஆனால் நீ என்னை அச்சமயங்களி லெல்லாம் புறக்கணித்து விட்டதோடு, உன் கருத்து இன்னதென்பதையும் தெரிவியாது போய்விட்டாய். இதனால் நீ என்னை

விரும்பவில்லை என்று எனக்குத் தெரிகிறது.—என் தந்தைக்கு நான் எப்படியும் பதில் தெரிவிக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர் என்னைத் தொளைத்து விடுவார். நான் அவர் குறிக்கும் பெண்ணை விவாகஞ் செய்து கொள்வதில்லையென்றோ அல்லது கலியாணமே வேண்டாமென்றோ கடிதம் எழுதினால், அதற்குக் காரண மென்னவென்று அவர் கேட்பார். இதற்கு நான் ஏதேனும் கூறினாலும் அவர் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. இத் தொந்தர வெல்லாம் எதற்காக? முன் ஏற்பாட்டின்படி நான் விஷமுண்டோ அல்லது இக் கடலில் விழுந்தோ தற்கொலை செய்து கொள்வது தான் சரியென்று தோன்றுகிறது. இத் தீர்மானத்தை உன்னிடம் தெரிவித்துவிட்டு விடை பெற்றுப் போகவே நான் உன்னை இவ்வளவு தூரம் தனியாக அழைத்து வந்தேன். நான் உன்னோடு பேசுவது இதுவே கடைசி நாள் என்று நான் முதலில் கூறியதன் பொருள், இப்போதாகிலும் விளங்குகிறதா?—என்ன யோசிக்கிறாய், சுந்தரீ! என் மீது உனக்குக் கருணை யில்லையா? என் உயிர் இவ்வாறு அநியாயமாகப் போவது உனக்கு விருப்பந்தானா? இப்போது கூட ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. நீ என்னைக் காதலிப்பதாகவும், என்னை விவாகஞ் செய்து கொள்ள சம்மதிப்பதாகவும் ஒரு வார்த்தை உன் கிஞ்சுக வாயால் கூறு. உடனே என் தந்தைக்கு விருப்பத்தை விவரித்தெழுதிச் சம்மதிக்கச்செய்து பரீக்ஷை முடிந்தவுடன், விவாகஞ் செய்து கொள்ளுகிறேன். உனது பெற்றோரின் அநுமதி பெறவேண்டுமே யென்று சிந்திக்கிறாயா? உன் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டால், அவர்கள் சம்மதத்தைப் பெறுவது அவ்வளவு அருமை

யல்ல. அதை என் தந்தையார் பார்த்துக் கொள்வார். என்ன சொல்கிருய், கண்ணே! உன் வார்த்தையில் என் உயிர் இருக்கிறது. இல்லையென்ருல், இதோ இக் கருங் கடலில் உன் கண் முன்பாகவே குதித்து உயிரை மாய்த்துக் கொள்கிறேன். காதலிக்கிறேன் அல்லது காதலிக்கவில்லை என்பதைக் கூறிவிடு. இவ்வாறு மௌனஞ் சாதித்து என் உயிரைச் சித்திரவதை செய் யாதே, சுந்தரி!" என்று கெஞ்சிக் கேட்ட வண்ணம் அவளது இரு கைகளையும் மெள்ளப் பற்றினுன்.

சந்திரசேகரனது இச் சாகஸ வார்த்தைகளைக் கேட்டு சௌந்தரவல்லி மயங்கி மனமுருகி விட்டாள். அவள் முதலில் 'இவன் ஏன் தான் சமீபத்தில் பார்த்த "கிராண்ட் ஒட்டல்" என்னும் சினிமாப் படக் காட்சி யில் நடிக்கும் கதாநாயகனைப்போல் வஞ்சகனுகவும், சூதாடியாகவும், கள்வனுகவு மிருக்கக் கூடாது ?" என்று சந்தேகங் கொண்டாள், ஆனுலும், அவன் இது வரை செய்து வந்த சாகஸங்களை யெல்லாம் மெய் யென நம்பி வந்தா ளாதலால், உலகானுபவ மில்லாத வெள்ளை மனத்தினளான சௌந்தரவல்லி தன்னை இவ்வளவு அன்பாக நேசித்து தனக்கு ஆவனவற்றை யெல்லாம் செய்துவரும் அவனை இவ்வாறு சந்தேகிப் பது தகுதியல்லவென்று அதற்குச் சமாதானங் கூறிக் கொண்டாள், இதுவரை அவன் தன்னேடு பழகி வந்த தையும், தனக்காவனவற்றைச் செய்து வந்ததையு மெல்லாம் நினைந்து பார்த்து அவை யாவும் அவன் தன் மீது கொண்ட அன்பின் அறிகுறிகளே என்று உறுதி யாக நம்பினுள். இவ்வாறு தன் மனதொடு போராடிக் கொண்டிருந்த அவள், சந்திரசேகரனது கடைசி

வார்த்தையைக் கேட்டதும் பதறிப் போய்விட்டாள். இந்நிலைமையில் அவன் கைகளைப் பற்றியதும், மின்சார வேகத்தால் தாக்குண்டவள்போல் அவள் மயங்கித் தன்னை மறந்தாள். அவள் வாய் அவளை யறியாது, "சந்தர்! நான் உன்னைக் காதலிக்கிறேன். என் முழு மனதுடன் காதலிக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்வாயாக" என்று பிதற்றியது.

இச் சொற்களை அவள் கூறி முடிக்குமுன், சந்திரசேகரன் தான் இத்துணை நாள் செய்து வந்த தந்திரம் இன்று பலித்துவிட்டதென்று குதூகலித்து, அவளைத் தன் இரு கரங்களாலும் அப்படியே வாரித் தழுவி முத்தமிட்டான். சௌந்தரவல்லி இம் மானிட தேகத்தோடு சுவர்க்கத்திற்குச் செல்வோர் எவ்வளவு இன்பமனுபவிப்பார்களோ, அதைக் காட்டிலும் இன்பத்தில் தோய்ந்து அவன் தழுவலில் ஒன்றுபட்டு நின்ருள். அவள் உடலும் உணர்வும் அவனுள் கலந்தன. அவன் உடல் அவளோடு ஒன்றியது. ஆனல் அவன் உணர்வு கலந்ததோ என்ருல், அது ஆண்டவனுக்குத் தான் தெரியும்.

# ஐந்தாவது அதிகாரம்

## மாயக் கடிதமும் மங்கை மருளும்

பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோ
நம்பெண்மை யுடைக்கும் படை. —திருக்குறள்.

சாந்தோம் சர்ச் பக்கமாக உள்ள கடற்கரையில் நவநாகரிகப் பெண்மணிகள் பலர், வட்ட மேஜை மகாநாட்டில், அம்மேஜையைச் சுற்றிப் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும், இந்தியப் பிரதிநிதிகளும் உட்கார்ந்து, இந்திய அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக வாதமாடிக்கொண் டிருப்பதுபோல், வட்டமாகச் சுற்றியுட்கார்ந்து உரையாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் வாசகர்களுக்கு அறிமுகமான சிலரும், அறிமுகமாகாதவர்கள் பலருமாக இருந்தனர் என்று இங்கு குறிப்பிட வேண்டுவது அவசியம்.

நமது நாட்டில் முக்கியமாகச் சிறு கிராமங்களில் வம்பர் மகாசபை நடைபெறுவதும், அதில் பெரும்பாலும் விதவைப் பெண்களும், வயது சென்ற கிழவிகளும், வாய்வீச்சில் பிரசித்திபெற்ற நாரீமணிகளும் கூடி ஊர் வம்பளந்து, ஒவ்வொருவரைப் பற்றியும் நையாண்டி செய்துவருவதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இப் பெண்மணிகள் கூட்டமும் ஒரு வகையில் வம்பர் மகாசபையை ஒத்ததேயாகும். ஆனால், அவ் வம்பர் மகாசபைக்கும், இக்கூட்டத்துக்கும் செயலளவில் பெரிதும் வேறுபாடுண்டு. அச்சபை வாய் வம்பளப்போடு நிற்கும். இக்கூட்டம் வம்பளப்போடன்றி

அதையொட்டி விஷமமும் செய்யும். அவ் வம்பர் மகாசபையைச் சேர்ந்தவர் பெரும்பாலும் படிக்காத நாட்டுப்புறப் பெண்களாவர். இக் கூட்டத்தினரோ, மேனாட்டுக் கல்வியில் மேதைகளா யிருப்பதோடு நவ நாகரிகத்தில் சிறந்தவர்களுமாவர். ஆதலால், அவரவர்கள் தகுதிக்கேற்ப பேச்சும், செயலும் வேறுபடுவது இயற்கையே யல்லவா? இத்துடன், இவர்கள் தன்மையை விவரித்துரைப்பதை நிறுத்தி, அவர்கள் பேச்சின் வாயிலாக அவர்களின் குணஞ் செயல்களை வாசகர்கள் நன்கறியச் செய்வதே நலமாகும்.

அக்கூட்டத்திற்குச் சான்ஸ்லராக (தலைவராக) இருந்த சுலோசனா மற்ற மகளிரைப் பார்த்து, "என்னடி! பார்த்தீர்களா? இந்த சௌந்தரவல்லி சிறுக்கிக்கு ஏற்பட்டிருக்கும் திமிரை! அதற்கு அளவேயில்லையே! நாளுக்கு நாள் அவளது செருக்கு அதிகப்பட்டு வருகிறது. அவள் நம்மையெல்லாம் கொஞ்சங்கூட இலட்சியமே செய்யமாட்டேனென்கிறாள். எப்போது பார்த்தாலும், அத்தடிப் பயலோடு திரிந்துகொண்டிருக்கிறாள். கலாசாலை தினத்தன்று கூட அவனோடு போனவள் அன்றிரவு முழுவதும் திரும்பி வரவேயில்லை. என்ன அக்கிரமம் இது.........!" என்றாள்.

ரமாமணி தன் உள்ளத்தில் எழுந்த பொறாமைத் தீயைத் தாங்கமாட்டாது, தன் தடித்த தேகம் குலுங்க குலுங்கப் பேசத் தொடங்கி, "அன்றிருந்துதான் அவள் மிகவும் மாறுபட் டிருக்கிறாள். மறுநாள் விடியற்காலை ஹாஸ்டலுக்கு வந்தவள் ஆர்ப்பாட்டத்தோடல்லவா வந்தாள்? அவள் ஆட்டமென்ன! பாட்டென்ன! மற்றவர்கள் என்ன நினைப்பார்களென்று கூட இல்லாது,

நாடகமேடையில் நடனஞ் செய்துவரும், நாடகக் கணிகையைப்போல, ஒய்யாரமாக நடனஞ் செய்துகொண்டும், உல்லாசமாகப் பாடிக்கொண்டும் வந்ததைக் கண்டு என் வயிறு பற்றி எரிந்ததை எவ்வாறு விவரிப்பேன்?" என்று கூறிப் பெருமூச் செறிந்தாள்.

காந்தாமணி, "இன்றென்று அல்லவா! இப்போதெல்லாம் அவ்வாலிபன் இங்கு வந்து இவளை அழைத்துச் செல்வதில்லையே! இவளே கலாசாலை மணி யடித்ததும், வேறு உடைகளை நன்ருக உடுத்திக்கொண்டு தனியாக எங்கோ செல்கிருள். இவள் அவனைச் சந்திக்கத்தான் செல்கிருளோ என்னவோ!" என்று சந்தேகத்தோடு தன்னுரையை முடித்தாள்.

ரோஸரி, "இவர்கள் இன்ன இடத்தில் ஒருவரையொருவர் சந்திப்பது என்று முன்னதாகவே குறித்துக்கொண்டிருக்க வேண்டும். அதன்படி தினந்தோறும் இருவரும் சந்தித்து அளவளாவி மகிழ்ந்து வந்துகொண்டிருக்கிருர்களென்று நினைக்கிறேன்" என்று கூறினுள்.

மீண்டும் சுலோசனு ஆத்திரமாக, "அது வல்லாமல், அவள் அடிக்கடி தனது உறவினர்கள் வீட்டுக்குச் செல்வதாகப் போக்கு காட்டிவிட்டு, இராக்காலங்களில் தங்கி வருகிருள். இவைகளையெல்லாம் பார்த்தால், இத்தடிச் சிறுக்கி அந்த எமகாதகனேடு சரச சல்லாபஞ் செய்து வருவதாகவும் தெரிகிறது. இருக்கட்டும். இவ்விருவரையும் நான் குழிதோண்டிப் புதைக்காமல் போவதில்லை" என்று கர்ஜித்தாள்.

கருணுநிதி, "உன் வீரப்பேச்சு ஒன்றும் அவர்களிடத்தில் செல்லாது. உன்னுல் என்ன செய்யமுடியும்?

நீ பிடித்திருக்கும் ஆட்களோ மிகவும் புலிகள்! அத் துடை நடுக்கி ஆட்கள் தான் அவனைக் கண்டாலே ஐந்து காத தூரம் போய்ப் பதுங்கி ஒளிகிறார்களே!" என்று கேலி செய்தாள்.

ரமாமணி அதை ஆமோதித்து, "ஆம்; ஆம். சுலோசனு! அன்று தெரிந்து போச்சே அவர்கள் பவிசு? ஸெனட் ஹவுஸ் கடற்கரையில் அவர்களோடு நாம் சென்று பட்ட பாடு இன்னும் மறந்து விடவில்லை. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாக அல்லவா ஆயிற்று? அச்சமயம் சந்திரசேகரன் வந்தில்லாவிட்டால் நாம் இன்னும் அந்த..............." என்று கூறிக்கொண்டே வருகையில், சுலோசனு கண்ணுல் சைகை செய்து மேலே பேசவொட்டாது தடுத்து, அவள் பேசத் தொடங்கி, "அதெல்லாம் இருக் கட்டும். பழைய கதை பேசிப் பயனென்ன! இவர்கள் கூட்டுறவை எவ்வாறு கலைப்பது? அதுவே இப்போது முதலாகக் கவனிக்கவேண்டிய வேலை. சௌந்தர வல் லியை ஹாஸ்டலை விட்டுப் போகாதவாறு தடுப்பதற்கு அவள்மீது இல்லாதது பொல்லாததெல்லாங் கூறிப் பிரின்ஸிபாலுக்கு மொட்டைக் கடிதங்கள் எழுதிப் போட்டோம். ஆசிரியைகளிடம் அவளைப் பற்றிக் கோள் மூட்டினேம். அதெல்லாம் பயனளிக்கவில்லை. பிரின்ஸிபாலுக்கும் ஆசிரியைகளுக்கும் இவள் மீதுள்ள நல்லபிப்பிராயத்தால் இதெல்லாம் பொய்யென்று கவனிக்காதிருக்கிறார்கள். இன்னும் என் செய்வது? உம். கோபாலன் முதலியவர்களுக்கு நம்மைக் காட்டி லும் இவர்களின்மீது ஆத்திர மேற்பட்டிருக்கிறது. அவர்கள் இவர்களுக்குப் பலவிதத்திலும் தீங்கிழைக்க

ஏதேதோ முயன்று வருகிறார்கள். ஆதலால் அவர்கள் சொத்தை ஆட்களாயிருந்தாலும் அவர்களைக்கொண்டு தான் எவ்வாறேனும் நம் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்" என்றாள். இவள் தீர்மானத்தை அக்கூட்டத்திலிருந்த பெரும்பாலோர் ஆமோதித்தனர்.

இதுவரை இவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாதிருந்த பத்மாவதி சாவதானமாக, "பேஷ்! நல்ல முடிவு தான்! உங்களை அக்கிராதகர்களிடமிருந்து மீட்ட செளந்தரவல்லிக்கும் சந்திரசேகரனுக்கும் பிரதியுபகாரஞ் செய்ய சரியான ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்—!" என்று கூறினாள்.

இவளது வார்த்தை சுலோசனாவின் உள்ளத்தில் அம்புபோல் பாய்ந்தது. அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. இவள் மேலும் பேசி நம் குட்டை வெளிப்படுத்திவிடப் போகிறாள் என்று நடு நடுங்கி, மற்ற மாணவிகளின் முகங்களை வரிசையாகப் பார்த்தவண்ணம், "நாம் போவோமே! ஹாஸ்டல் மணியும் அடித்துவிட்டது. எழுந்திருங்கள்" என்று கூறிக்கொண்டே எழுந்து நடந்தாள். மற்றப் பெண்களும் அவளைப் பின் தொடர்ந்தனர். பத்மாவதி சுலோசனாவின் மன நிலையைத் தெரிந்துகொண்டு, மேலே ஒன்றும் பேசவில்லை. அவளது நன்றியறிவின்மையைக் குறித்து விசனித்து, சமயம் வரும்போதெல்லாம் அவளுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று முடிவு செய்துகொண்டு மற்றவர்கள் பின்னே நடந்தாள்.

ஒருநாள் மணி எட்டு அடிக்கிற சமயமிருக்கும். செளந்தரவல்லி எங்கோ சென்றுவிட்டு வெகு வேகமாக ஹாஸ்டலை யடைந்து கொண்டிருந்தாள். அவள்

முகம் மகிழ்ச்சியே நிறைவாக இருந்தது. அவளது கம்பீர நடையும், உல்லாசப் போக்கும் மற்ற மங்கையரைப் பொருமை கொள்ளவே செய்யக் கூடியனவாயிருந்தன. அவள் நேரே தன்னறையை அடைந்து, மின்சார விளக்கைப் பொருத்திவிட்டு அவசர அவசரமாகத் தனது அலங்கார உடைகளை யொவ்வொன்ருகக் கழற்றி வைத்துக்கொண் டிருந்தாள். அவள் தங்க மூக்குக் கண்ணாடியைக் கழற்றி அங்கொரு மூலையில் போடப்பட்டிருந்த மேஜையின்மீது வைக்கப் போகையில், அவள் கண்கள் கூர்மையாக, அங்கிருந்த ஏதோ ஒரு பொருளின்மீது பாய்ந்தன. உடனே அவள் திடுக்கிட்டு அதைத் தன் கையில் எடுத்தாள். அதென்ன? மூடப்பட்ட ஒரு உறையே. அதை மேலே பார்த்தாள். தன் விலாசம் குறிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, சௌந்தரவல்லி வியப்புற்று, 'இக் கடிதம் யார் அனுப்பியது? எப்படி இம்மேஜையின் மீது வந்தது? இதை யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள்? அறை தாளிடப்பட்டு இருக்கும்பொழுது எவ்வாறு இதை உள்ளே வைக்க இயன்றது?" என்று தன்னையே கேட்டுக்கொண்டாள். எல்லாம் அவளுக்கு மர்மமாகவே தோன்றியது. கடைசியாக அவள், "அக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?" என்று அறிய ஆவல் கொண்டு உறையைக் கிழித்து, உள்ளிருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள். படித்து முடித்தாளோ இல்லையோ? அவள் தன்னை யறியாது "ஆ" வென்று அலறி விழுந்தாள்.

சௌந்தரவல்லி சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னுணர்வு வரப்பெற்று எழுந்து நின்ருள். அப்போதும்

அவள் மூளை கலங்கி யிருந்தது. முதலில் அவளுக்குத் தான் மேஜை மீது கடிதத்தைக் கண்டதும், அக் கடிதத் தைப் பிரித்து அதனுள் எழுதப்பட்டிருந்த விஷயத்தை யறிந்து மயங்கியதும் எல்லாம் கனவாகவே தோன்றி யது. பின்னர் தான் கீழே அலறி விழுந்து மூர்ச்சை யுற்றது மேற்படி கடிதத்திலுள்ள விஷயத்தைப் படித் ததனுலேயே என்று அவளுக்கு நினைவு வந்ததும், அவள் துடிதுடித்து அக் கடிதத்தைப் பார்த்தாள். அவள் மெய்ம்மறந்து கீழே விழுந்தபோது, அக்கடிதம் அவளது கையிலிருந்து நழுவி ஒரு புறமாய்ப் போய் விழுந்தது. எனவே, அவள் அது கீழே விழுந்ததை யறியாது, எங்கோ மாயமாய் போய்விட்டதோ என்ற பரபரப்புடன் மேஜையின் மீதும், கட்டிலின் மீதும், மற்றும் பல விடங்களிலும் ஓடியோடித் தேடலானுள். கடைசியாக, அவள் அலுத்துப்போகும் நிலையில், அக் கடிதம் அவள் கண்களுக்குத் தென்பட்டது. உடனே அதைப் போய் எடுத்து மீண்டும் படித்தாள். அவள் தலை கிறுகிறுத்தது. அவள் தன் கண்களையே நம்ப வில்லை. ஆகவே, அவள் கண்களைக் கையால் துடைத் துக்கொண்டு மறுபடியும் அக்கடிதத்தை வாசித்தாள். இவ்வாறு பலமுறை வாசிப்பதும், மயங்குவதும், அதைப்பற்றிச் சிந்திப்பதுமா யிருந்தாள். "இக் கடிதம் இங்கு மாயமாய் வந்ததுபோலலே, இதிலுள்ள விஷயம் யாவும் மர்மமா யிருக்கின்றனவே! இதில் குறிக்கப் பட்டுள்ளவை யாவும் உண்மையாக இருக்க முடியுமா? என் மனம் இதை நம்பமாட்டேனென்கிறதே!" என்று அவள் மனமாழ்கினுள். இங்ஙனம் அவள் மன மயங்கித் துயருறும்படி அதில் என்ன எழுதியிருந்தது? என்பதை யறிய வாசகர்கள் ஆவலாக இருப்பார்கள்.

ஆதலால், அக்கடிதத்தி லுள்ளதை அவ்வாறே இங்கு தருகிறோம்.

அன்புள்ள சௌந்தரவல்லிக்கு,

நீ இக்கடிதத்தைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைவாயென்று எனக்குத் தெரியும். இருந்தாலும், இச்சமயத்தில் நீ இப்போதுள்ள நிலைமையையும், அதனுல் பின் விளையப்போகும் தீங்குகளையும் நான் உனக்குத் தெரிவிக்கவேண்டுவது அவசியமென்று நினைக்கிறேன். நீ சில காலமாக உண்மைத் தோழனுக வும், அன்பனுகவும் நினைத்துப் பழகி வரும் சந்திரசேக ரன் உன் வாழ்வைப் பாழ்ப்படுத்த வந்த கூற்றுவன் என்று உன் மனத்தில் இன்றிருந்து பதிய வைப்பா யாக. அவன் தனது வஞ்சம் நிறைந்த நயமொழிக ளாலும், சாகஸச் செயல்களாலும் உன் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிருன். அவன் உன்னிடம் கூறியிருப்பது போல், மருங்காபுரி ஜமீன்தாரின் புதல்வனல்லன்; சாதாரண குடியானவனது மகனே யாவன். அவன் ஆங்கில மொழியிலுள்ள மோகத்தால் ஊக்கமாகப் படித்து உபகாரச் சம்பளம் பெற்று இப்போது கலா சாலையில் வாசித்து வருகிருன். அவன் தந்திரசாலி யாதலால், அவனேடு வாசிக்கும் பிரபுக்கள் குமாரர்க ளோடு நெருங்கிப் பழகி, அவர்களுடன் சினிமாக்களுக் கும் நாடகக் கொட்டகைகளுக்கும், ஒட்டல்களுக்கும் சென்று அவர்களுக்கு ஆவனவற்றை யெல்லாஞ் செய்து அவர்கள் உதவி பெற்று, பார்ப்பவர்கள் இவனும் ஒரு சீமான் புதல்வனென்று எண்ணி மயங்கு மாறு நடந்து வருகிருன். உன்னைச் சில சமயங்களில் ஏற்றிச் செல்லும் மோட்டாரும் அவனுடைய நண்பர்

களில் ஒருவனுடையதே. அவன் இதற்கு முன் பல பெண்களைச் சிநேகஞ் செய்து நாளடைவில், அவர்கள் கற்பைச் சூறையாடிய பின்னர் மெல்ல நழுவி அவர்களை நடுத்தெருவில் தியங்க வைத்திருக்கிருன். ஆதலால், இத்தகைய வஞ்சகர்களின் கூட்டுறவை விட்டு நீங்கி, உன்னுடைய நற்றகுதியையும், குடும்பப் பெயரையும் காப்பாற்றிக் கொள்வாயாக. இவை யனைத்தையும் கூறி உன்னிடம் எச்சரிக்கை செய்வது உன்னிடத்து எனக்குள்ள பேரன்பே காரணமாகும், இதைப் பொருட்படுத்தாவிடில், பின்னர் நீ தியங்கி யழ நேரிடும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இங்ஙனம்,
உனது நலத்தையே கோரும்
ஓர் உண்மை நண்பன்.

இக் கடிதத்தைப் பல முறை படித்து, செளந்தரவல்லி உண்மையிலேயே பைத்தியம் பிடித்தவள் போலானுள். அவள் உணவு உண்ணவேண்டுமென் பதையும் மறந்தாள். கடிதத்தைப் பார்ப்பாள், சிறிது நேரம் ஏதோ யோசிப்பாள். பின்னர் அறையைச் சுற்றிச் சுற்றி இங்கு மங்கும் உலவி வருவாள். சிறிது நேரம் நாற்காலியில் அமர்வாள். திடீரென்று எழுந்து சென்று படுக்கையில் விழுந்து புரளுவாள். தனக்குள்ளாகவே, “சந்திரசேகரன் இக் கடிதத்தில் குறித்துள்ளபடி அயோக்கியனு? அவன் உண்மையில் மருங்காபுரி ஜமீன்தாரின் புத்திரனல்லவா? அவன் மோட்டார் கூட இரவலாமே! இதற்குமுன் பல பெண்களோடு கூடி யாடிப் பிறகு கைவிட்டு அவர்களை

ஏமாற்றி விட்டானுமே! நான் இதுவரை அவனோடு பழகியதில் அவன் இவ்வித கொடுங்குணம் வாய்ந்தவனென்பதற்குக் கொஞ்சங்கூட அறிகுறி யெதுவும் காணப்படவில்லையே! அவன் என்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருக்கிருன்? குறித்த காலத்துக்குச் சிறிது தாழ்ந்து நான் செல்ல நேர்ந்தால், அவன் என் வரவுக்காக எவ்வளவு ஆவலோடு துடிதுடித்து வழிமேல் விழி வைத்துப் பார்த்து நிற்பதை நான் பலமுறை பார்த்திருக்கிறேனே! எனக்காக அவன் தன் உயிரையே கொடுக்கக்கூடிய நிலையி லிருக்கிருனே! அத்தகையவனைக் கொடுங் குணம் வாய்ந்தவனென்று எவ்வாறு நினைக்க முடியும்? எதற்கும் இக் கடிதத்தை அவனிடம் காட்டுவோம். இதற்கென்ன சமாதானம் சொல்லுகிருன் ; பார்ப்போம்" என்று பிதற்றுவாள். இவ்வாருக அவள் இரவை யெல்லாம் உறக்கமின்றிக் கழித்தாள்.

பொழுது புலர்ந்தது; சௌந்தரவல்லி காலைக் கடன்களை ஒருவாறு முடித்துக்கொண்டு நேராக டெலிபோன் இருக்கு மிடம் சென்று சந்திரசேகரனுக்குப் போன் செய்து, தன்னை யுடனே வந்து "Happy Villa" என்னும் மாளிகையில் வந்து பார்க்கும்படித் தெரிவித்தாள். பின்னர் அவள் அறைக்குச் சென்று கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு ரிக்ஷாவில் ஏறிச் சென்ருள்.

காலை 8-மணி யிருக்கும். "Happy Villa" வின் அறையொன்றில் சௌந்தரவல்லியும், சந்திரசேகரனும் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தனர்.

சந்திரசேகரன் புன்னகையோடு, "என்ன சுந்தரி! இவ்வளவு காலையில் என்னைக் கூப்பிட்ட காரணமென்ன? ஏதேனும் அவசரமான காரியம் என்னுல் ஆகவேண்டி யிருக்கிறதா?" என்று கேட்டான்,

சௌந்தரவல்லி முகத்தில் எவ்வித சலனத்தையுங் காட்டாது சிறிது அமர்த்தலாகவே இருந்து அவன் கேட்ட கேள்விக்குப் பதிலொன்றும் அளிக்காது தான் வைத்திருந்த கடிதத்தை அவன் எதிரில் நீட்டினுள்.

அதைப் பார்த்ததும், சந்திரசேகரன் என்னவோ ஏதோ வென்று ஆவலோடு அதை வாங்கிப் பிரித்து தனக்குள்ளாகவே வாசிக்கலானுன். அதிலுள்ள விஷயங்களைப் படித்தறிந்ததுதான் தாமதம். அவன் முகம் சவம் போல் வெளுத்தது. அவனை யறியாது கைகால்கள் நடுங்கின. தன் குட்டு வெளியாய் விட்டதே என்று மனத்துள் ஏங்கலானுன். 'இதை யார் எழுதியது? இக் கடிதம் எந் நோக்கத்தோடு எழுதப்பட்டது! என்னைப்பற்றி முழுதும் தெரிந்த யாரோ ஒருவர் தான் பகைமை காரணமாக எழுதி யிருக்கவேண்டும். இதில் எழுதப்பட்டிருப்பது அனைத்தும் உண்மை யென்று சௌந்தரவல்லி நம்பி விட்டாளோ? அவ்வாருயின், அவளுக்கு எவ்வாறு சமாதானஞ் சொல்லி என் நிலைமையைச் சமாளிப்பது' என்று தலை குனிந்த வண்ணம் அவன் தனக்குள் யோசிக்கலானுன். இதனுல் மனங் குழம்பியது.

இச் சமயத்தில் சௌந்தரவல்லி அவனை உற்று நோக்கி, "சந்தர்! இதற்கென்ன சமாதானஞ் சொல்லப் போகிருய்?" என்று கேட்டாள்,

சந்திரசேகரன் இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாது சிறிதுநேரந் தயங்கி யிருந்தான். தான்மௌனமா யிருந்தால் சௌந்தரவல்லி எங்கு தன் மீது சந்தேகங் கொள்வாளோ என்று அஞ்சியவனாய், தனது நெருக்கடியான நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவளைப் பார்த்து அசட்டு நகை செய்தவண்ணம், "சுந்தரி! நான் இதற்கென்ன சமாதானஞ் சொல்வது? உனது முகக் குறியையும், நீ பேசும் தோரணையையும் பார்த்தால், இக் கடிதத்தி லுள்ளது அவ்வளவும் உண்மையென்றே நீ எண்ணி யிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அப்படி யிருக்க, நான் உன்னை எப்படித் தெளிவிக்க முடியும்? என் இருதயத்தை இரண்டாகப் பிளந்து காட்டினாலும் நீ நம்ப மாட்டாய் என்று எனக்குத் தெரியும். எங்கும் நிறைந்து யாவர் உள்ளத்திலுங் குடிகொண்டிருக்கும் கடவுள் ஒருவருக்கே எது உண்மை; எது உண்மையல்ல என்பது தெரியுமே யன்றி, அறியாமையே மிகுந்த மக்களுக்கு உண்மையைப் பகுத்தறிய எவ்வாறு முடியும்? நான் என் மனசாட்சிக்கு மாறாக இதுவரை நடந்ததில்லை; தீய செயல்களைச் செய்ததில்லை; பொய் கூறியதுமில்லை. அவ்வித மிருக்க, இவ்வித வீண் பழி என்மீது வந்தால், அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று கையை விரித்துக் காட்டிப் பரிசுத்தன் போல சாதுரியமாகப் பேசினான், பலத்த சந்தேக முண்டாகியிருக்கும் சௌந்தரவல்லியின் மனத்தில் பழையபடி நம்பிக்கையை வருவிக்கவே, அவன் அவ்வாறு நடிப்போடு பேசினான். அவனது சாதுரிய மொழிகளைக் கேட்டு சௌந்தரவல்லியின் மனம் சபல மடைந்தது. தாமரை இலை தண்ணீர்

போல், அது நிலைகொள்ளாது ஊசலாடிக் கொண்டிருந் தது. கடிதத்தி லுள்ளதை நம்புவதா? சந்திரசேகரன் கூறுவதை நம்புவதா? எதை நம்புவது? என்று அவளுக்குத் தோன்றவில்லை. கடைசியாக, அவள் கழுத் தைச் சாய்த்துக்கொண்டு, "இக் கடிதத்தில் உன்மீது சாட்டப்பட்டிருக்குங் குற்ற மனைத்தும் வீண் பழியா? அப்படியானால், உன்மீது வீண் பழி சுமத்தி இக் கடிதத்தில் எழுதி யிருப்பதற்குக் காரணமென்ன? இக் கடிதம் எழுதியவரின் நோக்கம் எதுவா யிருக்கும்?" என்று மிகுந்த ஆலோசனையோடு கேட்டாள்.

தன் சாகஸ வார்த்தை ஒருவாறு வேலை செய்திருக் கிற தென்பதையும், மிடுக்கமா யிருந்த செளந்தர வல்லியை ஒரு படி யிறக்கித் தணித்து வரச் செய் திருக்கிற தென்பதையும் அறிந்து உள்ளூற மகிழ்ந்த வஞ்சகனான சந்திரசேகரன், முகத்தில் கவலையைத் தோற்றுவித்த வண்ணம், "இக் கடிதம் எழுதியவரின் நோக்கம் என்ன? பொறாமைதான் காரணம். எனது உன்னத நிலைமையைக் கண்டு என்னையறிந்த யாரோ சிலர் பலவிதமான சூழ்ச்சிகளைச் செய்து வருவதாகத் தெரிகிறது. என்னிடம் நெருங்கிய நட்புகொண்டுள்ள உன் மனத்தைப் பேதிக்கச் செய்து நம்மை வேறு பிரிக்கவே, அவர்கள் இக் கடிதத்தை எழுதி யிருக்கி றார்கள்" என்று மெதுவாகச் சொன்னான்.

செளந்தரவல்லி, "நானும் அதுதான் நினைத் தேன். இருந்தாலும், எனது சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டு மல்லவா? இதை மனத்தி லேயே வைத்துச் சங்கடப்பட்டுக் கொண் டிருந்தால் மேலும் மேலும் சந்தேக மேற்பட்டு நம் நட்புக்குப்

பங்கமு மேற்படக்கூடும் என்று எண்ணியே நான் உன்னை அவசரமாக அழைத்து இதுபற்றி வினவினேன். ஆதலால், நீ மனத்தி லொன்றும் தவருக நினைத்துக்கொள்ள மாட்டாயென்று நம்புகிறேன். ஆனுல், இக் கடிதம் எழுதியவர் யார் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். என்ன சொல்கிருய், சந்தர்!" என்று கூறினுள்.

சந்திரசேகரன், "ஆமாம்; முதலில் எனக்கு அது தான் வேலை. இக் கடிதத்தை நான் எடுத்துக்கொண்டு போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அதைத் தன் ஜேபிக்குள் வைத்துக் கொண்டான், பெருத்த பாரத்தை இறக்கி வைத்தவன் போல் பெருமூச்சு விட்டு, "நாம் இனி போகலாமல்லவா? கலாசாலைக்குப் போவதற்கு நேரமாய்விட்டது. எழுந்திரு" என்று கூறிய வண்ணம் அவளைக் கைலாகு கொடுத்துத் தூக்கினுன். செளந்தரவல்லி அவன் கையைக் கோத்த வண்ணம் சாய்ந்து சாய்ந்து அவனேடு சென்ருள். அச்சமயம் வீட்டினுள் ளிருந்து, "களுக் களுக்" என்று யாரோ சில மகளிர் நகைக்குஞ் சப்தம் கேட்டது. சந்திரசேகரன் திரும்பிக் கடைக்கண்ணுல் பார்த்தான். தாழ்வாரத்தில் அவ் வீட்டுத் தலைவி தன் குழந்தையோடு கொஞ்சிப் பேசிக்கொண் டிருந்தாள். எனவே, அவன் அங் நகை யொலியைப்பற்றி அவ்வளவாகச் சிந்திக்கா து போனுன்.

மவுண்ட் ரோட்டிலுள்ள பஸோட்டா ஓட்டலின் (Hotel Bosotto) வாயிலில் ஏராளமான மக்கள் கூடி விந்தையாகவும், கேலியாகவும் பேசிக்கொண்டிருந்த

னர். அப்போதே அவ்வழியாக வந்த ஒருவர் கூட்டங் கூடி யிருப்பதற்குக் காரண மென்ன என்று அறிய அக் கூட்டத்தினுள் நுழைந்து வினவினுர். அவரவர்கள் வாய்க்கு வந்தவாறு ஏதேதோ பேசிக்கொண் டிருந் தார்களே யொழிய, அவருக்குத் தகுந்த பதில் சொல்ல வில்லை. எனவே, அவர் ஓட்டல் வாயிற் காப்போனை யணுகி, "விசேஷ மென்ன?" என்று விசாரித்தார்.

கிழவனுகிய அவன் பரிகாசமாக அவரைப் பார்த்து, "என்ன போங்க, காலங் கெட்டுப் போச்சு! யாரோ ஒரு குட்டியும், மொட்டைப் பையனுஞ் சேந்துகிட்டு வந்து இஞ்செ நன்னு உஸ்கியைக் குடிச்சிட்டுக் கீழே விழுந்து பொறல்றுங்க. வெள்ளைக் குதிரை (White Horse Whisky) மேலே ஏறவே, அவங்க ஆகாசத்தே எட்டிப் பார்க்கப் பூட்டாப்லெ இக்குது! இப் பசங் கெல்லாம் இப்பிடி தலை கொழுத்துத் திரியறதனுலே தான், ஒலகத்திலேயே பஞ்சம் உண்டாயி ஜனங்கெல் லாம் கயிஷ்டம் படவேண்டிருக்கு. முன்னெல்லாம் பொம்மனுட்டிங்க வெளியே தலை காட்டுவாங்களா? எல்லா(ம்) இந்த வெள்ளைக்கார நாகரிகத்தாலெ வரது. இல்லாபுட்டா இந்த குட்டி சாண் பையனேடெ தனியா இஞ்செ வந்து குடிச்சிட்டு ஆடுவாளா? பாவம், அவளே பாத்தா நல்ல குடும்பத்திலே புறந்தவளெ போலேக்குது! உம், கலி மிஞ்சிப் போச் சல்லவா! இதுவும் நடக்கும். இதுக்கு மேலும் நடக்கும்" என்று நீள வேதாந்தம் பேச ஆரம்பித்தான்.

வந்தவர், அக் கிழவன் சொன்ன தகவலைக் கேட்டு அப்படியே வாயைப் பிளந்துகொண்டு நின்றுவிட் டார். இதற்குள் உள்ளிருந்து ஓட்டல் பணியாட்கள்

மேனுட்டு உடை யணிந்திருந்த ஒரு வாலிபனையும், ஓர் இளம் பெண்ணையும் மெல்ல நடத்திக்கொண்டு வந்து வெளியே இருந்த ஒரு ரிக்ஷாவில் ஏற்றினர். ஆ! என்ன ஆச்சரியம்! இவர்கள் நமது சந்திரசேகரனும், சௌந்தரவல்லியுமாக அல்லவா இருக்கிருர்கள்? "ஏது சௌந்தரவல்லி இவ்வுளவு தூரத்துக்கு வந்து விட்டாளா? நவநாகரிகத்தின் உச்ச நிலையை யல்லவோ அடைந்து விட்டாள்?" என்று வாசகர்கள்! ஆச்சரியப் படக்கூடும். அது அவளுடைய தப்பன்று, பாவம்! பேதைப் பெண். அவள் என்ன செய்வாள்? அந்தப் பொல்லாத பயல் சந்திரசேகரனுடைய விஷமச் செயலே இதற்கெல்லாம் காரணமாகும். அவன் முன்னெச்சரிக்கையாகவே அவளை இவ்விதமான கொடிய பழக்கங்களி லெல்லாம் பழக்கவைத்து வருகிருன். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியும்" என்பது நமது நாட்டுப் பழமொழி யன்ருே! முன் குறிப்பிட்டபடி சௌந்தரவல்லிக்கு வந்த கடிதத்தின் மூலமாக அவனது உண்மை நிலை வெளியாய் விட்டதல்லவா! அதைத் சமாளிப்பதற்கே பெருத்த பிரமப் பிரயத்தனமாய் விட்டதே! அதுபோல் இனியும் அடிக்கடி தன்னைப்பற்றி விரோதியா யிருப்போர் புகார் கிளப்பிக் கொண்டே இருப்பர்! அவைகளையெல்லாம் சமாளிப்பதென்ருல் ஆகாத காரியம். அறிவை மயக்கச் செய்யும் இவ்வித லாகிரிப் பழக்கத்தைச் செய்து வைத்துவிட்டால், அவ்வித சமயங்களில் இவற்றின் மூலமாக அதை மறக்கச் செய்துவிடலாம் என்பது சந்திரசேகரனது சூழ்ச்சி நிறைந்த மூளையின் யோசனை. சுயநல மிக்க ஆடவர்களின் சாகஸ வலையில் சிக்காத பெண்களுமுண்டோ! அது நிற்க,

ஓட்டல் பணியாட்கள் உள்ளேயே, சந்திரசேகரன் சட்டைப் பைகளையெல்லாம் ஆராய்ந்து கொள்ளை கொள்ள வேண்டிய மட்டும் சூறையாடிக் கொண்டனர். அவர்கள் அன்று நரி முகத்திலேயே விழித்திருக்க வேண்டும். சந்திரசேகரன் வைத்திருந்த டைரியின் மூலமாக, அவன் இருப்பிடத்தை யறிந்து அவர்கள் ரிக்ஷாக்காரனுக்கு அவர்களைக் கொண்டு போய் விடுமிடத்தைத் தெரிவித்தனர்.

ரிக்ஷா நகர்ந்தது. ஜனக் கூட்டமும் அதன் பின்னேயே சென்றது. சந்திரசேகரன் அப்போதும் தன் உணர்ச்சியைப் பெறவில்லை, அவன் தலை தொங்கலாடிக்கொண் டிருந்தது. அவன் வாய் ஏதேதோ தாறுமாருய்ப் பிதற்றிக்கொண் டிருந்தது. அன்று அவன் உல்லாசத்தில் மிதமிஞ்சிக் குடித்துவிட்டான் போலிருக்கிறது. சௌந்தரவல்லியோ காம் பொடிந்த பூங்கொடிபோல் துவண்டு ரிக்ஷாவின் ஒரு புறம் சாயந்திருந்தாள். செத்த சவம் போலவே அவள் காணப்பட்டாள், இந் நிலைமையில் சந்திரசேகரன் ஆடிக்கொண்டே தன் சட்டைப் பையி லிருந்த 'கோல்ட் பிளேக்' சிகரெட் பெட்டியை எடுத்துத் திறந்து ஒரு சிகரெட்டைத் தன் வாயிலும் மற்றொன்றைச் சௌந்தரவல்லியின் வாயிலும் . வைத்துவிட்டுத் தீப்பெட்டிய்ய எடுத்து அவற்றைக் கொளுத்த முயன்ருன். ஒரு நிலையி லில்லாததால், சிகரெட் பற்றவில்லை. அதனுல் பல குச்சிகள் பாழாயின, குடி வெறியில் சௌந்தரவல்லியின் வாயில் வைத்த சிகரெட் கீழே விழுந்ததையும் அவன் கவனியாது அதைப் பற்ற வைக்க ஒரு தீக் குச்சியைக் கொளுத்திக் கொண்டு போனுன்.

எனவே, தீச்சுடர் செளந்தரவல்லியின் வாயில் பட்டு விட்டது. உணர்ச்சியற்ற அங்கிலேயிலும் அவள் சூட்டைத் தாங்க மாட்டாது ஒரு துள்ளு துள்ளி மீண்டும் சாய்ந்தாள்.

இதை யெல்லாம் பார்த்து வந்த ஜனங்கள் அடிக்கடி கைகொட்டி சிரித்து ஆரவாரஞ் செய்தனர். கூட்டத்தில் ஒருவன் செளந்தரவல்லியை உற்றுப் பார்த்து விட்டு, "குட்டி செக்க செவேலுன்னு நல்லாருக்காடா! பையன் சரியானதைத்தான் பிடிச்சான். கெட்டிக்காரன்" என்ருன்.

மற்ருெருவன், "என்ன இருந்தாலும், இப்படியா திரிவார்கள்? முன்னெல்லாம் சட்டைக்காரிங்க தான் இப்படி யெல்லாம் அலேவார்கள். இப்போது நம்ப பெண்க கூடத் துணிந்து வந்துட்டாங்களே!" என்று அங்கலாய்த்துச் சொன்னுன்.

வேருெருவர் கம்பீரத் தொனியில், "பெரியவர்களெல்லாம் தெரியாமலா சொன்னுர்கள்; நம் பெண்களே யெல்லாம் எக்காரணத்தை முன்னிட்டும் வெளியே அனுப்பக் கூடாதென்று. இப்போதைய மேதாவிகள், அவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்று சொல்லுகிருர்களே! எது முட்டாள்தனம் என்பது அவர்கள் இவ் வாபாசக் காட்சியைப் பார்த்தால் தெரியும். இப் பெண்ணே வெளியே அனுப்பிக் கற்க வைக்காவிட்டால் இக்கதி யாவாளா! நீங்கள் தான் சொல்லுங்கள்" என்று பக்கத்தி லிருந்தவரைப் பார்த்துக் கேட்டார்.

அவர், "அதெல்லாம் இல்லே, சார்! இப்போது உலகம் போகும் வேகத்தில் நம்முடைய கர்நாடகப்

பேச்செல்லாம் சபையில் ஏருது! கடவுள் என்று ஒரு வர் இருப்பாரானல், இப்போதே யுகப் பிரளயத்தை யுண்டாக்கிக் கடலைப் பொங்கச்செய்து, உலகத்தையே அடியோடு அடித்துக் கொண்டு போகச் செய்தால் நன்ரு யிருக்கும்" என்று விரக்தியாகப் பேசினர்.

கூட்டத்தி லிருந்த காலிகளும், சிறுவர்களும், "இரண்டு பேரும் கட்டிகினு உருள்ருங்க டோய்! இந்த வேடிக்கையை முன்னெ வந்து பாருங்க" என்று மற்ற வர்களை ஆரவாரத்துடன் அழைத்தனர்.

இச்சமயத்தில் நான்கு ரோட்டுகளுஞ் சந்திக்கு மிடத்தில், 'பீட்' இருந்த கான்ஸ்டேபிள் ரிக்ஷாவைச் சூழ்ந்துவந்த ஜனக்கூட்டத்தைத் துரத்தி யடித்தான். எனவே, ஜனங்கள் மூலைக் கொருவராக ஓடிச் சிறிது சிறிதாகக் கலைந்தனர்.

---

## ஆருவது அதிகாரம்

---

### கோபாலனது கோரக் கூத்து

இந்திராணி மகளிர் கலா சாலையில் வகுப்புகள் நடந்துகொண் டிருந்தன. பியூன் பி. ஏ. ஜூனியர் வகுப்புக்கு வந்து சௌந்தரவல்லியை யாரோ பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தான். உடனே சௌந்தரவல்லி, 'தன்னை இந்நேரத்தில் தேடிக் கொண்டு வருபவர்கள் யாரு மில்லையே! ஒருவேளை சந்திரசேகரன் தான் அவசரமாகப் பார்க்க வந்திருக்கிருனே' என்ற சிந்தனையோடு தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து வெளியே வந்து பார்த்தாள். அங்கு 15-வயதுள்ள ஒரு சிறுவன் கையில் கடிதமொன்றை வைத்துக்கொண்டு நின்றிருந்தான். அவன் இவளைப் பார்த்ததும், "அம்மா! நீங்கதானே சௌந்தரவல்லியம்மா?" என்று தூரத்தில் நின்றிருக்கும் பியூனைக் கவனித்த வண்ணம் கேட்டான்.

சௌந்தரவல்லி வியப்போடு, "ஆம், என்ன சமாசாரம்? உன்னை யார் அனுப்பியது?" என்று கேட்டாள்.

சிறுவன் அவளிடம் நெருங்கி மெதுவாக, "சந்திரசேகர முதலியார் இந்தக் கடுதாசியை உங்களிடம் பத்திரமாச் சேத்துட்டு வரச் சொன்ஞரு. நன்ஞ கேட்டு நீங்க தான்னு தெரிஞ்ச பிற்பாடு இதைக் கொடுக்கச் சொன்ஞரு, அதஞதான் உங்களைக் கேட்

டேன். அதுக்காவ கோவிச்சுக்காதிங்க" என்று கூறி விட்டுத் தான் வைத்திருந்த கடிதத்தை அவளிடங் கொடுத்தான்.

சௌந்தரவல்லி அதை வாங்கி அங்கேயே பிரித்துப் பார்த்து விட்டு, "சரி, நீ போகலாம்" என்று அந்த சிறுவனை நோக்கிச் சொன்னுள்.

பையன் சிறிது தயங்கி, "நான் போவுட்டுமா அம்மா! ஐயா ஏதோ ஜோலியா சாயங்காலம் எங்கோ போவணுமாம். அங்கெ போயிட்டு அந்த இடத்துக்கு வந்துடுவாராம். உங்களை அங்கே கட்டாயம் வந்துடச் சொன்னுரு. மறந்துட மாட்டீங்களே" என்று கேட்டான்.

சிறுவனுயினுங் தன் கடமையைச் செய்வதில் எவ்வளவு ஒழுங்காக நடந்து கொள்கிருன் என்று எண்ணிய சௌந்தரவல்லி புன்னகை செய்து கொண்டே, "மறந்துவிட மாட்டேன். அவசியம் வருவேன் என்று ஐயாவிடஞ் சொல்லு" என்று கூறி அவனை யனுப்பிவிட்டு மீண்டும் அக் கடிதத்தைப் பிரித்துக் கவனத்தோடு பார்த்தாள். அதில்,

சௌந்தரா!

இன்று மாலை ஓரிடத்துக்கு அவசர காரியமாகப் போகவேண்டி யிருக்கிறது. ஆதலால், குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் வழக்கம் போல் சந்திக்க முடியாதென் றெண்ணுகிறேன். தயவுசெய்து நீ மாலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு நேராக, 'பீபிள்ஸ் பார்க்'கில் (People's Park) 'மை லேடிஸ் கார்டன்' (My Lady's Garden) பக்கத்தில் வந்திருக்க

வும். சிறிதுநேர மாயினும், நான் வரும் வரை அங்கேயே காத்திருக்க வேண்டுகிறேன்.

உனது அன்பன்,

சந்திரசேகரன்.

'சந்திரசேகரன் இம்மாதிரி தோரணையில் எழுத மாட்டானே ?—ஆம்; கையெழுத்து அவனுடையதே! அதில் சந்தேகமில்லை. அவசரத்தில் அன்னியருக்கு எழுதுவதுபோல் எழுதி யிருக்கலாம். அதிலென்ன!' என்று தன்னையே சமாதானப் படுத்திக் கொண்டு அக் கடிதத்தை மடித்துத் தன் ஜாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டு வகுப்புக்குச் சென்றாள்.

சௌந்தரவல்லியை யாரோ அழைக்கிறார்கள் என்று பியூன் வந்து தெரிவித்தபோதே, வந்தவர் யார் என்றறிய ஆவல் கொண்டு துடி துடித்த ரமாமணி, ரோஸரி முதலியவர்கள் இடையே காரணமின்றி வகுப்பை விட்டுப் போக முடியாமையால் அமைதியற்ற நெஞ்சத்தோடு பாடங் கேட்பதுபோல் அமர்ந்திருந்தனர். சௌந்தரவல்லி சுமார் கால்மணி நேரங் கழித்து வகுப்புக்குத் திரும்பி வந்ததும், அவர்கள் அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கியதோடு, சந்திரசேகரன்தான் வந்திருக்க வேண்டுமென்றுங் கருதினர். எனவே, அவர்கள் சௌந்தரவல்லியைக் குறும்புப் பார்வையாகப் பார்ப்பதும், ஒருவருக் கொருவர் ஏதோ குசு குசு வென்று பேசுவதுமாக இருந்தனர். அன்று சுலோசனா தனக்கு உடம்பு சரியா யில்லை என்று கூறி வகுப்புக்கு வராததால், இவ்வித விஷமச் செயலை வேடிக்கையாகக் காணும்படி அதிகமாக வளர்த்துவதற்கு ஏதுவில்லாமல் போயிற்று.

பொழுது சாய்ந்தது. இருள் என்னும் அரக்கன் நக்ஷத்திரங்கள் அமைந்த கரிய சட்டையை அணிந்து கொண்டு கம்பீரமாகத் தன் ஆட்சியை நடத்த ஆரம்பித்தான். இவனது கொடுங்கோ லாட்சியைக் கண்டு அஞ்சியோ என்னவோ, சந்திரன் தலை காட்டவேயில்லை. ஆனல், இருள் அரக்கனது வலிமையைத் தொலைக்க, மின்சார விளக்குகளாகிய எதிரிகள் பலர் ஆங்காங்கு தோன்றிவிட்டனர். எனவே, அவ் விளக்குக ளில்லாத மரஞ் செடி கொடிக ளடர்ந்த இடங்களை மட்டுமே அவன் ஆட்சி கொள்ள வேண்டியதாயிற்று. 'பீபிள்ஸ் பார்க்'கில் மாலைப் பொழுதை மகிழ்ச்சியுடன் கழித்துக்கொண் டிருந்த மக்கள் இருள் அரக்கனைக் கண்டதும், மெதுவாக அவ்விடத்தை விட்டு நழுவலாயினர். மூர் மார்க்கெட்டிலும் எஸ். ஐ. ஏ. ஏ. சங்கத்திலும், ரிப்பன் பில்டிங்கிலும் சுகுண விலாச சபையிலும் மக்கள் நடமாடிக் கொண் டிருந்தனர். பீபில்ஸ் பார்க்கில் அங்கொருவரும் இங்கொருவருமே உட்கார்ந்துகொண்டும் நின்றுகொண்டும், உலாவிக்கொண்டு மிருந்தனர். பார்க்கின் தெற்கு பக்கத்தின் முன்னிருந்த தடாகம் அமைதியாக இருந்தது. ரேடியோ பாட்டு முடிகிற சமயமா யிருந்ததால், அவ்விடத்திலும் அவ்வளவாக மக்கள் இல்லை. பார்க்கே அன்று அழகற்றுக் காணப்பட்டது. சந்திரப் பிரகாசமில்லாமையோ வேறென்னவோ, அதற்குக் காரணம் தெரியவில்லை.

'மை லேடீஸ் கார்டன்' பக்கமாக நமது கதாநாயகியான சௌந்தரவல்லி நாலா பக்கமும் பார்த்த வண்ணம் ஓரிடமும் நிலைகொள்ளாது உலாவிக்கொண்

டிருந்தாள். அவள் மனம் நிம்மதியற்றிருந்தது. அவள் சந்திரசேகரன் வரவைப் பேராவலோடு எதிர் பார்த்து நின்றிருந்தாள். இரண்டு மணி நேரத்துக்குமேல் ஓரிடத்திலேயே நின்று பார்த்துக் கொண்டிருப்ப தென்றல், அதற்கும் பொறுமை வேண்டு மல்லவா! எதற்கும் ஓர் அளவுண்டு. எனவே, கால்கள் கடுக்க வெகுநேரம் நின்று பார்த்தும் சந்திரசேகரன் வராமல் போகவே, அவள் சகிக்க முடியாத நிலையை யடைந்தாள். அப் பக்கம் வருபவர்களும், போகிறவர்களுமாகிய ஆடவர்கள் அவளையே கவனித்துப் போவதும், வாலிபர்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு கண் சிமிட்டுதல், சீழ்க்கை யடித்தல் முதலிய சேஷ்டைகள் செய்வதுமா யிருந்ததால் அவள் லஜ்ஜை யடைந்தாள். இப்பேர்ப்பட்ட இடத்துக்குத் தன்னை வந்து காக்க வைத்த சந்திரசேகரன் மீது மட்டிலடங்காத கோபங் கொண்டாள். இனிமேல் சந்திரசேகரன் வருவதாயினும், தான் இனி இங்கு இருப்பது தகுதியல்ல வென்று எண்ணி அவள் தானிருந்த இடத்தை விட்டு நடக்கலானுள்.

நான் கைந்தடி தூரமே நடந்திருப்பாள். பின்னே இருந்து யாரோ ஒருவர், "சௌந்தரா! சௌந்தரா!" என்று அழைக்குஞ் சப்தங் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சந்திரசேகரன் தான் வந்து விட்டான் என்று அவள் முதலில் எண்ணினுள். ஆனுல் அவள் எதிர்பார்த்ததற்கு மாருக கோபாலன் அசட்டு நகை செய்த வண்ணம், "என்ன சௌந்தரா! இவ்வளவு அவசரம்! நான் வருவதற்குள் புறப்பட்டு விட்டாயே! நான் புரசப்பாக்கம் சென்று வருவதற்கு

நாழிகையாய் விட்டது. உன்னை நெடுநேரங் காக்க வைத்ததற்காக மன்னிக்கவும்" என்று கூறிக் கொண்டே அவளை நெருங்கினுன். அவன் பின்னே வந்த நாலைந்து வாலிபர்கள் நாலா பக்கமுமாகப் பிரிந்து மறைந்துவிட்டனர். தனக்கு அறிமுக மில்லாத கோபாலன்—சந்திரசேகரன் நண்பன்—தன்னை அதற்கு முன் நன்கறிந்தவன் போல் நடித்துப் பேசியதைக் கேட்டு சௌந்தரவல்லி அப்படியே மலைத்து நின்று விட்டாள்.

சௌந்தரவல்லிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. 'சந்திரசேகரனன்ருே என்னை இங்கு வந்திருக்கும்படி கடித மெழுதி யிருந்தான்? தான் ஏதோ என்னை யழைத்துக் காக்கவைத்த மாதிரியாக வன்ருே இவன் மன்னிப்பு கேட்கிருன்? ஒருவேளை இவன்தான் கடித மெழுதி யனுப்பினுனே? சந்திரசேகரன் எழுதி யிருந் தால்—இம்மாதிரி பொறுப்பில்லாது அவன் எழுத மாட்டான். இந்நேரம் வராதிருக்கமாட்டானே! உம், இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் இவன் தான் ஏதோ சூழ்ச்சி நினைந்து சந்திரசேகரன் எழுதுவது போல் எனக்குக் கடித மெழுதித் தந்திரமாக வரவழைத் திருக்கிருன் என்று தெரிகிறது. இவன் என்னை இங்கு அழைத்ததன் நோக்கம் எதுவாயிருக்கும்?—ஒன்றும் புலப்படவில்லையே! அதிருக்கட்டும்; இவன் யார்? இவனை இதற்குமுன் எங்கோ பார்த்ததுபோல் ஞாபக மிருக்கிறது.—ஆமாம். முதன் முதல் சந்திரசேகரனேடு கடலில் நீந்திக்கொண்டிருந்தவன் தான் இவன். கலா சாலை தினத்தன்றுகூட இவன் சந்திரசேகரனைக் கண்டு பேசி யிருக்கிருன். சந்திரசேகரனுக்கு நெருங்கிய நண்பன்.—நண்பனு யிருந்தால் நமக்கு ஆவதென்ன!

என்னை வஞ்சகமாக அழைத்ததன் காரணம்...........
......' என்று மனத்தில் சந்தேக வினுக்களை ஒன்றன் பின் ஞென்ருக எழுப்பிக் குழம்பிக் கொண்டிருக்கை யில், கோபாலன் அவளை மிகவுஞ் சமீபித்துச் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, "சௌந்தரா! கண்ணே! ஏன் அப்படியே நிற்கிருய்? கால் நோகப் போகிறது? ஏற்கனவே நீண்ட நேரம் நின்றிருக்கிருயென்று தெரி கிறது. ஆதலால், வா! இப் பசும் புற்றரையில் உட்காருவோம்" என்று கூறிக்கொண்டே மெல்ல அவள் கையைப் பற்றினுன்.

மனக் கலக்கத்தால் தன்னை மறந்து நின்றிருந்த சௌந்தரவல்லி கோபாலன் தீண்டியதும் திடுக்கிட்டுப் பற்றிய கைகளை உதறித் தள்ளிவிட்டுப் பின்னே போய் நின்ருள். பொறி தட்டியது போன்ற ஒருவித உணர்ச் சியை யடைந்தாள். அவள் தேகம் படபடத்தது. கோபத்தால் கண்கள் சிவந்தன. பெண்புலி போல அவள் நிமிர்ந்து நின்ருள்.

காமத்தால் கண்ணிழந்த கோபாலன் அவளது படபடப்பையும்' கோபத்தையும் உணரவேயில்லை. அவள் நாணத்தாலேயே தான் தீண்டியவுடன் தூரச் சென்ருள் என்றும், பெண்களே பெரும்பாலும் பெரு நாண முடையவர்களாதலால், தங்கள் மனதில் விருப்ப மிருந்தாலும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது கூச்சமுடையவர்கள் போல் நடிப்பார்கள் என்றும் அவன் எண்ணினு ஞதலால், தன்னை வளர்ப்பவன் பின் வாலை யாட்டிக்கொண்டு செல்லும் நாயைப்போல், சௌந்தரவல்லியைப் பின் தொடர்ந்து சென்ருன், அவன் மீண்டும் தன்னைப் பின்பற்றி வருவதை யறிந்த

சௌந்தரவல்லி மிகவுங் கோபங் கொண்டு கம்பீரமாக நிமிர்ந்து நின்று கண்களை உருட்டி அவனை உற்று நோக்கினுள். கோபாலன் கோழையாதலால் அவளது பார்வைக் காற்ருது தலைகுனிந்து கடைக் கண்ணுல் பார்த்து, பல்லைக் காட்டி நின்ருன்.

சௌந்தரவல்லி ஆத்திரம் பொங்கி யெழ, கோபாலனைப் பார்த்து, "என்ன சமாசாரம்? என்னை ஏன் பின்தொடர்ந்து வருகிருய்? என் கையைப் பற்ற உனக்கு எங்கிருந்து தைரியம் வந்தது? நீ யார்?" என்று கேட்டாள். கோபாலன் தன் முப்பத்திரண்டு பற்களும் வெளிக்குத் தெரியும் வண்ணம் இளித்து, "நான் யாரா? உனக்குத் தெரியாதா? நான்........." என்று மேலே ஏதோ சொல்லப் போகையில், சௌந்தரவல்லி இடை மறித்து, "நீ யாரா யிருந்தாலும் எனக்கு அக்கரை யில்லை. என்னை இனி பின் தொடர்ந்து வந்தாயானுல்......தெரியுமா? அவ்வளவு தான்;—உம்" என்று முழக்கஞ் செய்துவிட்டு அவன் கூறும் பதி லொன்றையும் எதிர் பாராது மேலே நடக்கலானுள்.

இயற்கையிலேயே பேரழகு வாய்ந்த சௌந்தரவல்லிக்குக் கோபத்தால் முகஞ் சிவக்க, கன்னங்கள் விம்ம, வாயிதழ் துடிக்க, ஆத்திரமாகப் பேசுவதும் ஒரு அழகாகவே இருந்தது. அவள் அழகு முன்னையினும் பன்மடங்கு அதிகமாகவே விகசித்துத் தோன்றியது. இத் தோற்றத்தைக் கண்டு கோபாலன் முன்னைக் காட்டிலும் காமவெறி கொண்டான். அவன் சௌந்தரவல்லியைக் கண்டது முதல் கொண்டிருந்த காமத்தீ இப்போது கொழுந்து விட்டு எரியலாயிற்று. இன்று

கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாது, எப்படியாகிலும் அவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கலிதீர வேண்டு மென்ற எண்ணம் அவன் மனத்தில் உரங்கொண்ட தால் அவனது கோழைத்தனம் இருந்த இடம் தெரியா மல் போய்விட்டது. எனவே, அவன் அவளை விடாது பின் தொடர்ந்தோடி அவளுக்கு முன்னே போய் எதிரே நின்று கைகளை நீட்டி வழி மறித்துக்கொண்டு, "காதற் கிளியே! உனக்கு ஏன் என்மீது இவ்வளவு கோபம்? நான் உன் நன்மையையே எப்போதும் விரும்புபவன் என்பது உனக்குத் தெரிந்தால், நீ இவ் வாறு கோபிப்பாயா! உன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தி னின்றும் விடுவித்து எச்சரிக்கை செய்யவே நான் உன்னை இங்கு வரவழைத்தேன். நீ அதை அறிந்து கொள்ளாது என்னைப் புறக்கணித்துவிட்டுப் போகப் பார்க்கிறுயே!......." என்று சொல்லிக்கொண்டே வரு கையில் சௌந்தரவல்லி அடங்காச் சீற்றங் கொண்டு, "மடையா! வழிவிடப் போகிருயா! என்ன? எனக்கு ஆபத்து வந்தால் அதை யான் ப்ர்த்துக் கொள்ளத் தெரியும்! உனக்கென்ன அதைப்பற்றி அக்கரை? மரியாதையாக இப்போது வழிவிலகி நிற்கப் போகி ருயா? இல்லாவிட்டால் நான் பெருங் கூச்சலிட்டு இப் பார்க்கி லுள்ளவர்களை யெல்லாம் இங்கு ஓடிவரச் செய்து உன்னுடைய அயோக்கியத் தனத்தை வெளிப் படுத்தி ஊர் சிரிக்கச் செய்யட்டுமா?" என்று உரக்கப் பேசினுள்.

கோபாலன் கலகலவென்று சிரித்து, "நீ வைவ தனைத்தும் எனக்குப் புகழ்மாலையே யாகும். உன் குமுத வாயால் வசை பாடப் பெரும் பாக்கியத்தைப்

பெற்றதொன்றே எனக்குப் பெரு மகிழ்ச்சியை யளிக் கிறது. உனக்கு ஆபத்து வந்தால் பார்த்துக் கொள் ளத் தெரியும் என்று அலட்சியமாகக் கூறுகிருயே! அது பெருந் தவறு. "பெண்புத்தி பின்புத்தி" என்பதையே அது காட்டுகிறது. சந்திரசேகரனை நீ மலையாக நினைத்திருக்கிருய். அவன் மிகவும் வஞ்சகன். அவன் உனது அழகையும், கற்பையும், பொருளையும் ஒருங்கே கொள்ளை கொண்டுவிட்டுப் பின்னர் ஓட்டாண்டி யாய்த் தெருவில் நிற்க வைக்கப் போகிருன். அவன் மருங்காபுரி ஜமீன்தார் குமாரனு மல்லன்; எம். ஏ. வகுப்பு மாணவனு மல்லன். அவனது சூழ்ச்சி நிறைந்த இங்கித வார்த்தைகளில் மயங்கிக் கெட்டுப் போகிருயே என்ற எண்ணத்தாலேயே, நான இவ்வளவு தூரம் உன் கோபத்தையும் பொருட்படுத்தாது சொல் கிறேன். உன்னைக் கண்டது முதல் என் மனம் உன் வசப்பட்டுவிட்டது. உனக்கு நன்மை செய்வதையே என் வாணுளின் முக்கிய நோக்கமாகக் கொண்டுவிட் டேன். சமயம் நேர்ந்தால் உனக்காக என் உயிரையுந் தியாகஞ் செய்யக் காத்திருக்கிறேன். நீ மாத்திரம் ஒரு......" என்று மேலே பேச நாவெழாது, காமவெறி தலைக்கேற ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தன் இரு கைகளாலும் அவளைத் தழுவப் போனுன்.

கோபாலனேடு வந்து மூலைக் கொருவராகப் பிரிந்து சென்று அவன் கட்டளைப்படி யாராகிலும் அவ்விடத்தில் வருகிருர்களா என்று பார்த்த வண்ணம் காவல் காத்து நின்றிருந்த சுந்தரராஜன், பரமானந்தன் முதலியவர்கள், தங்கள் கவனத்தையெல்லாம் கோபா லன், செளந்தரவல்லி ஆகியவர்க ளிடையே நிகழும்

நிகழ்ச்சிகளிலேயே பதித்திருந்தனர். ஆனல், அவர்கள் ஒவ்வொருவருக்கும் செளந்தரவல்லியின் மீது மோக மிருந்து வந்தது. அவர்கள் அவளது அழகுக்கு அடிமைப்பட் டிருந்தனர். கோபாலன் அவளிடம் கெஞ்சிக் கொஞ்சிக் கூத்தாடுவதையும், தழுவ முயல்வதையும் அவர்களுக்கு ஏககாலத்தில் பொருமைத் தீயும் காமத் தீயும் மூண்டெரிந்து அவர்களைத் தகிக்கலாயின. 'இத்துணை பேரழகியைக் கோபாலன் மட்டும் அடைய விடுவதா? அவன் அவளோடு இன்ப மனுபவிப்பதற்குத் தாங்கள் காவல் காப்பது இழிவல்லவா? நாமேன் அவள் அன்பைப் பெற முயற்சிக்க லாகாது?' என்ற எண்ணம் ஒவ்வொருவர் உள்ளத்தும் உண்டாயிற்று. ஆகவே, அவர்கள் தங்கள் கருத்தை யொருவர்க் கொருவர் தெரிவித்துக்கொண்டு கோபாலன் செளந்தரவல்லியைக் கட்டித் தழுவ முயலுஞ் சமயத்தில், கோபாலனேடு போட்டி போட்டு அவ்வழகியின் காதலைப் பெற வேண்டி, தாங்கள் நின்ற இடத்தை விட்டு ஏககாலத்தில் செளந்தரவல்லியும், கோபாலனும் இருக்கும் இடத்தை நோக்கி ஓடினர்.

இதற்குள் கோபாலன் மூர்க்கங் கொண்டு செளந்தரவல்லி மீது விழுந்து அவளைக் கட்டிப் பிடிக்க முயன்ருன். செளந்தரவல்லி தன்னைத் தப்பித்துக் கொள்ள முயன்று இப்படியும் அப்படியும் ஓடலானுள். எனினும், கோபாலன் அவளைத் தாவிப் பிடித்து விட்டான். செளந்தரவல்லி வாய்விட் டலறிக் கதறிப் பதறி அவன் பிடியினின்றும் விடுபடத் தன் உடம்பை யெல்லாம் வளைத்துத் திமிறினுள், கோபாலனே அவளை இறுகப் பிடித்துக் கட்டி அவள் முகத்தோடு முகத்தைப் பொருத்தி முத்தங் கொடுக்க முயன்ருன்.

இச்சமயத்தில் சிறிது தூரத்திலிருந்து, "பார்த்தாயா சந்தர்! நான் சொன்னபடியே கோபாலனும், செளந்தரவல்லியும் இந்நேரத்தில் இப் பார்க்கில் கட்டிப் புரளுகிருர்கள். இப்போதாகிலும் நம்புகிருயா என் வார்த்தையை" என்று ஒரு பெண் குரல் கணீர் கணீரென்று கேட்டது.

"அப்படியா! ஆ! பாதகா! உன்னை விட்டேனு பார்?" என்று சந்திரசேகரன் ஆத்திரத்தோடு கோபாலன் மீது பாய்ந்தான். அவனைத் தொடர்ந்து சுலோசனு நகைத்துக்கொண்டே ஓடிவந்தாள்.

சந்திரசேகரனும் சுலோசனுவும் இங்கு எப்படி இந்நேரத்தில் வந்து சேர்ந்தார்கள் என்று வாசகர்கள் ஆச்சரியப்படலாம். கோபாலன் கபடமாக எழுதி விடுத்த கடிதத்தைப் பார்த்துவிட்டு, சந்திரசேகரனே எழுதியிருக்கிருனென்று நம்பிப் "பீபிள்ஸ் பார்க்"கை நோக்கிச் செளந்தரவல்லி சென்றதும், மாலை 5-மணிக்கு வழக்கம் போல் சந்திரசேகரன் "விதவைகள் விடுதி" (Widow's Hostel) க்கு எதிரே மோட்டாரை நிறுத்திவிட்டுச் செளந்தரவல்லியின் வரவை பிளாட்பாரத்தின் மீது எதிர்பார்த்து உலாவிக்கொண்டிருந்தான். அரைமணி நேரத்திற்கு மேலாகியும், செளந்தரவல்லி வரவில்லை. நேரமாக ஆக, சந்திரசேகரன் பல பல எண்ணினுன். செளந்தரவல்லி தினமும் ஐந்து மணிக்குள்ளாகவே வந்துவிடுவாளே! எனக்கு முன்னல்லவோ வந்து இருந்து என் வரவை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பாள். அப்படியிருக்க, இன்று இவ்வளவு தாமதமேன்? இன்று ஏதேனும் பாட சம்பந்தமான உபந்நியாச மிருக்குமோ? அவ்வித மிருந்

தால், நேற்றே என்னிடஞ் சொல்லி யிருப்பாளே! ஒரு வேளை அவளுக்கு உடம்பு அசௌகரியம் ஏற்பட்டிருக்கலாம்; இல்லாவிடில் அவள் வராதிருக்கமாட்டாள். எதற்கும் இன்னுஞ் சிறிதுநேரம் பார்த்துவிட்டுப் பின்னர் ஹாஸ்டலுக்கே நேரே போவோம்" என்று தனக்குள்ளாகச் சந்திரசேகரன் தீர்மானித்துக் கொண்டு இப்படியும் அப்படியுமாக நிலை கொள்ளாது உலாவிய வண்ண மிருந்தான்.

இச் சமயத்தில், சில பெண்களோடு கலாசாலை ஹாஸ்டலி லிருந்து பிளாட்பாரத்தின் மீதே வடக்கு நோக்கி வந்து கொண் டிருந்த சுலோசனா, சந்திரசேகரன் தனியாக உலாவிக் கொண்டிருப்பதைத் தற்செயலாகப் பார்த்துவிட்டாள். உடனே அவளுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "சௌந்தரவல்லி எங்கே? அவள் 4-30 மணிக்கெல்லாம் ஹாஸ்டலை விட்டு வெளியேறி விட்டாளே! இன்று பகல் கூட சந்திரசேகரனிடமிருந்து அவளுக்குக் கடிதம் வந்ததாக ரமாமணி சொன்னாளே! அப்படி யிருக்க, சந்திரசேகரன் மட்டும் தனியாக இருக்கக் காரணமென்ன? அவன் அவளைத் தான் எதிர் பார்த்துக் கொண் டிருக்கிறனென்று தெரிகிறது.—(ஆழ்ந்து சிறிதுநேரம் யோசித்து) உம். இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. இன்று பகல் அவளுக்கு வந்த கடிதத்தில் ஏதோ சூழ்ச்சி யடங்கி யிருக்கிறது. கோபாலன் நமக்குத் தெரியாது ஏதோ விஷமஞ் செய்திருக்கிறன். சில நாட்களுக்குமுன், சந்திரசேகரன்மீது புகார் கூறிக் கடிதமெழுதி நம்மைக்கொண்டு சௌந்தரவல்லி அறையில் வைக்கச் செய்ததுபோல், இப்போது அவளையே நேரே சந்தித்துப் பேச எண்ணிச்

சந்திரசேகரன் எழுதியதுபோல் கடித மெழுதி அவ ளுக்கு அனுப்பி யிருக்க வேண்டும். ஆம்;—அப்படித் தான் இருக்கவேண்டும், கோபாலனுக்கு எப்போதுமே சௌந்தரவல்லி மீதே கருத்திருந்து வருவதை நான் பல முறை கவனித்திருக்கிறேன். அவனுக்கு அவள் மீதுள்ள அடங்காக் காதலைப் பேச்சினிடையே தன்னை யறியாது சில சமயங்களில் வெளியிட்டு மிருக்கிறான். ஆதலால், அவன் இப்போது நமக்குத் தெரியாது ஏதோ சூழ்ச்சி செய்து சௌந்தரவல்லியைத் தந்திரமாக ஓரிடத்துக்கு வரச் செய்து அவளோடு பேசி அவளைத் தன் வசப்படுத்த முயல்கிறான் எனத் தெரிகிறது. இருக்கட்டும்; அவன் முயற்சி எவ்வளவு தூரம் பலிக் கிறதென்று பார்க்கிறேன். ஆமாம்; இச் சமயத்தில் சந்திரசேகரன் தனியாக இருக்கிறான். இந் நல்ல சந் தர்ப்பத்தைக் கைவிடாது நாமேன் இவனை நம் வசப் படுத்த முயலக் கூடாது? போய்ப் பார்ப்போம்" என்று அவள் தனக்குள்ளாகவே முடிவுக்கு வந்து தன் னோடு வந்த தோழிகளை ஏதோ சாக்குச் சொல்லித் திரும்பிப் போகச் செய்துவிட்டு, தான் மட்டும் சந்திர சேகரன் இருக்கு மிடத்தை நோக்கி நடந்தாள்.

சௌந்தரவல்லி வரவில்லையே என்ற கவலையோடு ஏதோ யோசித்த வண்ணம் தலையைக் குனிந்து உலவிக் கொண்டிருந்த சந்திரசேகரன் தன் அருகில் கை வளை யல்கள் ஒன்றோடொன்று மோதுஞ் சப்தமும், சேலை யின் சலசலப்பு ஓசையும், முகப் பவுடர் வாசனையும், கமகமவென வீசும் பரிமள கந்தங்களின் நறுமணமும் ஏக காலத்தில் ஏற்பட்டதை யறிந்து ஆவலோடு, "சுந்தரி! வந்து விட்டாயா!" என்று கேட்டுக்

கொண்டே தலை நிமிர்ந்து பார்த்தான். எதிரில் சுலோசனு குறும்பாகச் சிரித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு அவன் முகம் மாறிவிட்டது. இதை யுணர்ந்த வஞ்சகி யான சுலோசனு மேலும் பரிகாசமாக, "ஏது! எப்போது பார்த்தாலும் சுந்தரி மனனமே பண்ணிக் கொண் டிருக்கிருப் போலிருக்கிறது! எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் சௌந்தரவல்லியாகவே உமக்குத் தோற்றுகிறதைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். அவள் அவ்வளவு தூரம் மயக்கிவிட்டாள் என்று தெரிகிறது. பேஷ்! வசிய மருந்து நன்ருக வேலை செய்கிறது. "சிவ பூசையில் கரடி புகுந்தாற் போல்" உமது சுந்தரி தியானத்தை நான் கலைத்துவிட்டேனே என்று அஞ்சுகிறேன். அவ்வாறில்லையே!" என்று கண்ணைச் சிமிட்டிக் கேட்டாள். இவளது குறும்பு வார்த்தைகள் அம்பு பாய்வதுபோல் சந்திரசேகரனின் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன. அவன் அவ் வேதனையை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் அசட்டு நகை செய்து, "அவ்வாறொன்றுமில்லை. சுந்தரி என்னைச் சந்திப்பதாகச் சொன்னுள். அவள் தான் வந்துவிட்டாளோ என்று பார்த்தேன்..." என்று வார்த்தைகளை உள்ளே இழுத்துக்கொண்டே சொன்னுன்.

சுலோசனு ஒன்றுந் தெரியாதவள் போல் பாவனை செய்து, "சுந்தரி உம்மை இதுவரை சந்திக்க வில்லையா? அவள் 4-30 மணிக்கே வெளிக் கிளம்பி விட்டாளே! பகல் கூட அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. அதை நீர்தான் அனுப்பியதாக நாங்கள் எண்ணினேம். நீர் ஒன்றும் இன்று கடிதம் அனுப்பவில்லையா? அவ்வாருயின், வேறு யாரிடமாயினு மிருந்து வந்திருக்க வேண்

டும். அவள் உம்மைப் பார்க்காதிருந்தால் ஒருவேளை அக் கடிதம் அனுப்பியவரைப் பார்க்கச் சென்றிருக்கலாம்” என்று சந்திரசேகரன் முகத்தைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டே சொன்னுள்.

சௌந்தரவல்லிக்குக் கடிதம் வந்தது என்று கூறிய வுடனேயே சந்திரசேகரன் ஏதேதோ எண்ணலானுன். மேலும், 4-30 மணிக்குப் புறப்பட்டவள் தன்னை இதுவரை பார்க்காது போகவே, அவன் மனத்தில் பலவிதமான ஊகங்களும், சந்தேகமும் ஏற்படலாயின.

அவன் மனநிலையை யறிந்த கபடியான சுலோசனு மேலும் பேசத் தொடங்கி, “சுந்தரிக்கு எத்தனை பேர் நண்பர்களாக ஏற்பட்டிருக்கின்றனர்? பாவம்! அவள் சிறிது நேரமேயுள்ள மாலைப் பொழுதில் எத்தனை பேரைச் சந்திக்க முடியும்? எல்லோரையும் ஏககாலத்தில் சந்தித்து திருப்தி செய்கிறதென்ருல் ஆகிற காரியமா?.....................” என்று கூறிக்கொண்டே வருகையில், சந்திரசேகரன் இடை மறித்து, “சுந்தரிக்கு யார் யார் நண்பர்களாக ஏற்பட்டிருக்கின்றனர் என்பதைத் தயவு செய்து கூற முடியுமா? பகல் வந்த கடிதம் யாரிட மிருந்து வந்ததென்று யூகித்துச் சொல்ல வியலுமா?” என்று படபடப்பாகக் கேட்டான்.

சுலோசனு தான் கொடுத்த மாத்திரை சரியாக வேலை செய்கிறதென்று உள்ளுக்குள் மகிழ்ந்து வெளிக்கு வியப்பைத் தோற்றுவித்து, “நீர் பேசுவதைப் பார்த்தால், சௌந்தரவல்லி உம்மைத் தவிர வேறு யாரையும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை; நேசிப்பதில்லை என்று நினைத்திருக்கிறீர் என்று தெரிகிறது.



"நான் உன்னைக் காதலிக்கிறேன். என்னை ஏற்றுக் கொள்வாயா?"

எத்தனை பேர் அவளுக்குத் தோழர்களென்று அள விட்டுச் சொல்வது? யானறிந்த மட்டில் முக்கியமாகச் சொல்லவேண்டுமானால், கோபாலன் அவளுக்கு நெருங் கிய நண்பனாக இருக்கிறான். அவனோடு பெரும்பாலும் அவள் திரிந்து வருகிறாள். கடிதங் கூட அவனிட மிருந்துதான் வந்திருக்க வேண்டுமென்றும், இப்போது கூட அவனோடுதான் எங்காகிலும் அலைந்துகொண் டிருப்பாளென்றும் நான் நினைக்கிறேன்" என்று கூறி முடித்தாள்.

சந்திரசேகரன் ஆத்திரத்தால் தன் அறிவிழந்து, "அப்படியா? இது உண்மையா?" என்று கூறிப் பெருமூச் செறிந்தான்.

சுலோசனா அவனது மனநிலையை ஆராய்ந்த வண் ணம், "இன்னமுஞ் சந்தேகமா? நேரில் பார்த்தால் தான் நம்புவீர் போலும். இருக்கட்டும். ஒரு நாளைக்கு அதையும் உமக்குக் காட்டுகிறேன்;—உம். சுந்தரியைப் போன்ற தளுக்கு மினுக்குகாரிகளுக்குத் தான் இப் போது காலமாய் இருக்கிறது. பாம்புக்குப் பாம்புத் தலையும், மீனுக்கு மீன் தலையும் காட்டும் விலாங்கு மீனைப்போல், அவரவர்களுக்கு ஏற்றவாறு நடிக்கும் மோசக்காரிகளைத் தான் உம் போன்ற விடபுருடர்கள் நம்பி அவர்கள் பின்னே எப்போதுந் திரிகிறார்கள். என் போன்ற அசடுகளுக்கு இவ்வித சாகஸச் செயல் தலை கீழாக நின்றால் கூட வரமாட்டேனென்கிறது. பாருமேன்? உம்மைக் கண்டது முதல் என் மனம் என் வசத்தில் இல்லவே இல்லை. நனவிலுங் கனவிலும் உம் அழகிய உருவம்-கம்பீரத் தோற்றம்—தோன்றித் தோன்றி என்னைத் துன்புறுத்துகிறது. உம்மிடத்தில்

என் மனதைப் பறிகொடுத்த பின்னர், வேறு எதிலும் என் அறிவு செல்வதேயில்லை. நடைப்பிணமாகவே நான் உலவி வருகிறேன். யான் உம்மீது கொண்ட உண்மைக் காதலை உமக்குத் தெரிவித்து உம் அன்பைப் பெறப் பலமுறை முயன்றேன். ஆனால், என் மனம் துணியவில்லை. அதுவுமன்றி, அவ் வஞ்சகி சுந்தரி உம்மோடு சதா இருந்ததால், என்னுடைய காதலை உம்மிடஞ் சொல்ல சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. நான் உம்மை என் இன்னுயிரினும் மேலாக மதித்துக் காதலித்து வருகிறேன். நீரோ என்னை இதுவரை ஏறெடுத்தும் பார்க்காதிருந்து வந்தீர்! இப்போதாகிலும் என் நிலையைக் கண்கொண்டு பாரும். என்னை 'நேசிக்கிறேன்; நேசிக்கவில்லை' என்று இரண்டிலொன்று கூறும். பின்னர் என் முடிவுப்படி நடந்துகொள்ளுகிறேன். என்ன, வாய் திறவாது பதுமைபோல் நிற்கிறீர்? ஜன நடமாட்டமுள்ள பிளாட்பாரத்தில் ஏன் நிற்கவேண்டும்? இப்படி மணலில் வாருமே! சாவதானமாக நாம் பேசலாம்........." என்று உண்மைக் காதலிபோல் சாகஸமாகப் பேசி மணற்பாங்கான இடத்துக்கு வரும்படி அழைத்தாள்.

சௌந்தரவல்லியின் நடத்தையில் சந்தேகங்கொண்டு மனங் கலங்கி யிருந்த சந்திரசேகரன், சுலோசனு சௌந்தரவல்லியின் மீது புகார் கூறியதோடு நில்லாது, காதல் மொழிகளையுங் கலந்துரைக்கத் தொடங்கியதைக் கேட்டு ஆத்திரங்கொண்டு, "சுலோசனு வாயில் வந்தவாறு ஒன்றும் பிதற்றுதே! உன் காதல் வார்த்தைகளைக் கேட்டுக் களிக்க இது சமயமல்ல. நான் அவசரமாக ஓரிடத்திற்குப் போகவேண்

டும்............" என்று கூறி அவ்விடத்தை விட்டுச் செல்ல முயல்கையில், சிறிது தூரத்திலிருந்து யாரோ "சந்தர்! சந்தர்!" என்று கூப்பிட்டுக்கொண்டு வருவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவனது கலாசாலை நண்பர்களில் ஒருவனுன கல்யாணசுந்தரம் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"என்ன சந்தர்! உன் முகம் ஏதோ ஒருமாதிரி வேறுபட்டிருக்கிறதே! (சிறிது தூரத்தில் சந்திரசேகரனையே பார்த்துக்கொண்டு நிற்கும் சுலோசனுவைக் கடைக்கணித்துவிட்டுப் புன்சிரிப்போடு) சந்தர்ப்பம் தெரியாது உன்னைக் கூப்பிட்ட வண்ணம் இங்கு வந்து விட்டேனென்ற கோபமோ! அப்படி என்ருல் ஏதேனுங் காரியம் கெடுவதா யிருந்தால், நான் இதோ போய் விடுகிறேன்............" என்று அவ்விடத்தை விட்டுத் திரும்பிப் போவதுபோல் பாவனை செய்தான்.

சந்திரசேகரன் அசட்டு நகை செய்து, "போடா கல்யாணம்! உனக்கு எப்போதும் விளையாட்டுதான். இவ்வித குறும்புப் பேச்சு பேச எங்கு கற்றுக் கொண்டாயோ? அதிருக்கட்டும்; எங்கே நீ மட்டுந் தனியாகப் புறப்பட்டு விட்டாய்? உன் சகாக்களெல்லாம் எங்கே?" என்று சிநேக தோரணையில் கேட்டான்.

கல்யாணசுந்தரம், "எப்போது பார்த்தாலும் தோழர்களோடு சுற்றித் திரிபவனுகிய நீயே, பெண் மான் வேட்டை யாடுவதற்காகத் தனியாகப் புறப்பட்டு விட்டாயென்ருல், நான் தனியாக வந்ததுதானு உனக்கு ஆச்சரியமாக இருக்கிறது? போகட்டும். உயிர்த்தோழன் போல் இணைபிரியாதிருந்த கோபாலன் கூட உன்னேடு இப்போது வருவதைக் காணேமே!

நான் வரும் வழியில் கோபாலன் யாரோ சில புதிய நண்பர்களோடு தடபுடலாகப் போவதைப் பார்த் தேன். நீ எங்கே என்று அவனைக் கேட்டதற்கு அவன் சரியாகக் கூடப் பதில் சொல்லாது, பீபிள்ஸ் பார்க்கில் 6-மணிக்கு ஒருவரைச் சந்திப்பதாக வாக்களித் திருப்ப தால் அவசரமாகப் போகவேண்டுமென்று கூறிவிட்டு விரைந்து சென்றான். உங்க ளிருவருக்கும் ஏதேனும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறதா, என்ன ?" என்று கேட்டான்.

கோபாலன் பீபிள்ஸ் பார்க்கில் யாரையோ சந்திக் கச் சென்றான் என்றதைக் கேட்டதும் சந்திரசேகரன் முகம் மாறிவிட்டது. அவ்விடத்துக்கு உடனே சென்று உண்மை யறிய வேண்டுமென்று மனத்தில் தீர்மானித் துக்கொண்டு கல்யாணசுந்தரத்தை சீக்கிரம் வழி யனுப்பவேண்டி, "அதெல்லாம் ஒன்றுமில்லை, கல்யா ணம்! அவனைச் சந்தித்தற்கு எனக்கு அவகாசமில்லை; அவனுக்கு என்னவோ! என்னைப் பொறுத்த வளவில் ஒருவித வேற்றுமையு மில்லை. நான் வரட்டுமா! மற் ெருரு முறை உன்னைச் சந்திக்கிறேன்" என்று கூறிக் கொண்டே தன் மோட்டாரை யணுகினன்,

கல்யாணம், "சரி; நான் போய் வருகிறேன். உன் வேலைக்கு முட்டுக்கட்டை போட எனக்கு விருப்ப மில்லை. சந்தர்ப்ப மேற்பட்டால் நாம் மறுமுறை சந்திக்கலாம்" என்று கூறிவிட்டுத் தெற்கு நோக்கி நடந்தான்.

இதற்குள் சந்திரசேகரன் மோட்டாரை ஓட்ட ஸ்டீரிங்கின் மீது கையை வைத்தான். கல்யாணம் இரண்டடி வைத்து நடந்தானே இல்லையோ, சுலோ

சனு ஓடிவந்து, "நானும் வருகிறேன்" என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்து, சந்திரசேகரன் பக்கத்தில் அமர்ந்தாள். சந்திரசேகரனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அவளைத் தன்னுடன் வர வேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்வதற்கும் மனம் வரவில்லை. அவன் மயக்கத்தை யறிந்த சுலோசனு கொஞ்சலாக, "நீர் இப்போது எங்கே போகிறீர் என்பது எனக்குத் தெரியும். சௌந்தரவல்லியைப் பற்றி நான் கூறிய வார்த்தைகள் பொய்யா யிருக்குமோ என்று நீர் சந்தேகிக்கலாம். ஆதலால், உம்முடன் வந்து உண்மையைக் கண் முன்பாக நிரூபிக்க வேண்டியது என்னுடைய கடமை. எனவே, நான் உம்முடன் வருவதில் உமக்கு ஆட்சேப மிருக்க நியாயமில்லை. நான் வரலா மல்லவா?" என்று கேட்டாள்.

சந்திரசேகரன் தலையை யசைத்துவிட்டு மோட்டாரை வேகமாக ஓட்டினுன். சுலோசனு அவன் அருகில் நெருங்கித் தோளோடு தோள் உராய மெல்ல நகர்ந்து உட்கார்ந்தாள். சந்திரசேகரன் இதைக் கவனிக்கவேயில்லை. சௌந்தரவல்லியின் விஷயந்தான் அவன் மனக் கண்முன் நின்று தாண்டவமாடியது. மோட்டார் பீபிள்ஸ் பார்க்கில் நுழையும்போது அநேகமாக ஜனங்கள் வெளி வந்துகொண் டிருந்தனர். கோபாலன் எவ்விடத்தில் சௌந்தரவல்லியைச் சந்திப்பான் என்பது திட்டமாகத் தெரியாததலால் சந்திரசேகரன் இப்பக்கமும் அப்பக்கமுமாக மோட்டாரை ஓட்டிக்கொண்டே கவனித்து வந்தான். கூவம் நதியோரமாகச் செல்லும் பாதை வழியாக மோட்டாரைச் செலுத்தியவன், ரேடியோ பாடு மிடத்துக்குச் சமீபத்

தில் யாரோ உரக்கப் பேசுவதுபோல் கேட்டதால், 'மைலேடீஸ் கார்ட'னைத் தாண்டிச் சென்ற மோட்டாரைத் திருப்பிக்கொண்டு வந்து ஒரு பக்கமாக அதை நிறுத்திவிட்டு சப்தம் வந்த இடத்தை ஆராயலானான்.

அதே சமயத்தில் தான் கோபாலன் சௌந்தரவல்லியைப் பலாத்காரமாகக் கட்டித் தழுவி முத்தமிட முயன்று கொண்டிருந்தான். இக் காட்சியை எப்படியோ பார்த்துவிட்ட சுலோசனா, ஒரு புறத்தில் பொறாமையால் வயிறெரிந்தாலும், தான் கூறிய பொய்யுரைக்கு இது ஆதாரமாக இருக்கிறதென்று சந்தோஷித்து சந்திரசேகரனை யணுகி, "பார்த்தாயா, சந்தர்! நான் சொன்னபடியே கோபாலனும், சௌந்தரவல்லியும் இந்நேரத்தில் இப் பார்க்கில் கட்டிப் புரளுகிறார்கள். இப்போதாகிலும் நம்புகிறாயா என் வார்த்தையை?" என்று கூறி அவ்விடத்தைச் சுட்டிக் காட்டினாள்.

இவர்கள் நின்றிருக்கும் இடத்துக்கும் சம்பவம் நடக்கும் இடத்துக்கும் 20 அடி தூரம் இருக்குமாதலாலும், அவ்விடம் மின்சார விளக்கு வெளிச்சம் பரவாத இடமாக இருந்ததாலும், இருவர் தழுவி நின்றதுபோல் தெரிந்ததேயொழிய உண்மைநிலை யறிய முடியவில்லை. ஆதலால், ஏற்கனவே ஆத்திரமும் சந்தேகமும் கொண்டிருந்த சந்திரசேகரன் பெருங் கோபங்கொண்டு, "அப்படியா! ஆ பாதகா! உன்னை விட்டேனா பார்?" என்று கூறியவண்ணம் கோபாலனை நோக்கிப் பாய்ந்தான்.

எதிர்பாராதவாறு திடீரென்று ஏற்பட்ட சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு, கோபாலன் திரும்பிப்

பார்த்தான். சந்திரசேகரன் கைகளை முறுக்கிக் கொண்டு ஓடி வருவதைப் பார்த்தானே இல்லையோ, கோபாலன் மிகவும் பீதி கொண்டு ஓட்டம் பிடித்தான். எதிர்பாராது ஏற்பட்ட பீதியாலும் கோபாலனோடு நீண்டநேரம் மல்லாடியதாலும் சோர்வுற் றிருந்த சௌந்தரவல்லி கோபாலன் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தியதும், தயங்கிக் கீழே விழுந்து விட்டாள்.

கோபாலனோடு காதல் போட்டி போட விரைந்து வந்து கொண் டிருந்த பரமானந்தன், சுந்தரராஜன் முதலிய வாலிபர்கள், கோபாலன் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடி வருவதைப் பார்த்து ஆச்சரியங் கொண்டு, "என்ன கோபாலா! சமாசாரம் என்ன?" என்று ஏககாலத்தில் கேட்டனர். கோபாலன் வாய் திறந்து ஒன்றுஞ் சொல்லாது, பின்னே திரும்பிச் சந்திரசேகர னைச் சுட்டிக் காட்டிவிட்டு ஓடினன். சந்திரசேகரன் அங்கு வந்துவிட்டான் என்பதை யறிந்ததும், சிங்கத் தைக் கண்டு ஓடும் ஓநாய்களைப் போல, இவ்வாலிபர் களும் கோபாலனைத் தொடர்ந்து ஓட்டப் பந்தயத்தில் ஓடுபவர்கள் போன்று நான் முந்தி, நீ முந்தி என்று பின்னங்கால்கள் புட்டத்தில் பட ஓடினர்.

சந்திரசேகரனே ஆத்திரத்தோடு கோபாலனைத் துரத்திக் கொண்டு சென்றவன், சௌந்தரவல்லி மயங்கி விழுந்து விட்டதை யறிந்து திகைத்து நின்று விட்டான். கோபாலனே மற்றவர்களோ ஓடுவதை அவன் இலட்சியஞ் செய்யவில்லை. சௌந்தரவல்லி யையே முதலில் கவனிக்கலானன். அவள் விழுந்த இடத்துக்குத் திரும்பி வந்து கீழே குனிந்து அவளைப் பார்த்தான். அவள் மூர்ச்சையுற் றிருப்பதையும்,

அவள் உடைகள் எல்லாம் அலங்கோலமாக இருப்பதையும் கண்டு இவள் பலவிதமாக அலக்கழிக்கப்பட் டிருக்கிருள் என்றறிந்து சந்திரசேகரன் மனம் பதறினுன். அவளது களங்கமற்ற முகத்தைக் கண்டு அவன் சந்தேகமெல்லாம் பறந்தோடி விட்டது. உடனே அவளை அவன் அப்படியே குழந்தைபோல் வாரியெடுத்து மோட்டாருக்குக் கொண்டு போனுன்.

இதையெல்லாங் கவனித்த சுலோசனு, "இனி நாம் இங்கு இருப்பதில் பயனில்லை; ஒருவேளை நம் 'குட்டு வெளியாய் விட்டாலும் விடலாம்; ஆதலால், உடனே மெதுவாக நழுவி விடுதலே நல்லது" என்று நினைத்து வேறு வழியாகச் சந்தடியின்றிச் சென்று விட்டாள்.

சௌந்தரவல்லியை மோட்டாரி லேற்றிவிட்டு, சந்திரசேகரனும் உள்ளே ஏறினுன். இச்சமயத்தில், சௌந்தரவல்லியின் இடுப்பிலிருந்து ஏதோ ஒரு காகிதம் விழுந்தது அவனுக்குத் தெரியவே, அதை யெடுத்துப் பிரித்துப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. விஷயம் முழுதும் அவனுக்கு விளங்கிவிட்டது. ஆனந்த மேலீட்டால் அவன் உணர்வற்றிருந்த சௌந்தரவல்லியை வாரித் தழுவி முத்தமிட்டு அவளைத் தன்மீது சார்த்தியவண்ணமே மோட்டாரை ஓட்டினுன்.

# ஏழாவது அதிகாரம்

---

## இளைய ஜமீன்தார் சரச லீலை

தையலாள் நயனவேலும் மன்மதன் சரமும்பாய
உய்யலாம் உறுதிநாடி யுழல்பவன் ஒருநாள் உற்ற
மையலால் அறிவுநீங்கி..........................
.........................கொண்டு புக்கான். —கம்பர்.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வேகமாய் ஓடிக் கொண் டிருக்கிறது. இரண்டாவது வகுப்பு கம்பார்ட்மெண்டில் கம்பீரத் தோற்றம் உடைய ஒரு வாலிபனும் அழகிய பெண்மணி யொருத்தியும் பிர யாணம் செய்து கொண் டிருந்தனர். அக் கம்பார்ட் மெண்டில் அவ் விருவரைத் தவிர வேறு யாரும் இல்லை யாதலால், அவர்கள் ஒருவருக் கொருவர் மனங் கலந்து பேசுவதற்கும், தங்கள் விருப்பம்போல் அளவளாவி மகிழ்வதற்கும் சௌகரியமா யிருந்தது.

வாலிபன் தன் அருகே அமர்ந்திருந்த மங்கையை ஆவலோடு இழுத்து தன் மடிமீ திருத்திக்கொண்டு, வெளிப் புறத்தைச் சுட்டிக் காட்டி, "சுந்தரி! பார்த் தாயா இக் கண்கொள்ளாக் காட்சிகளை; இயற்கை யன்னையின் அழகிய தோற்றந்தான் என்னே! பூர்ண சந்திரன் தன் வெள்ளிய சந்திரிகைகளைக் கக்கிக் கொண்டு பச்சை பசேரென்று இருக்கும் செடி கொடி மரங்களின் மீதும், ஆறு, குளம், தடாகங்களின் மீதும் பிரகாசித்து அவைகளுக்கு இயற்கையாக உள்ள அழகை அதிகப்படுத்திக் காண்போர் கண்களுக்கு விருந்

தளித்துக் களிப்பை யுண்டு பண்ணுகிருன், இந் நடு நிசியில் இந்த ரயில் ஓடும் ஓசையைத் தவிர எங்கும் அமைதி நிலவி யிருப்பது, உலகமே குளிர்ந்த சந்திரனின் வெண்மையான கிரணங்களில் தோய்ந்து பரவசப் பட்டு மோன நிலையி லிருப்பதுபோல் இருக்கிறது. இவ் வழகிய காட்சியை எத்தனைபேர் கண்களால் பருகி அனுபவிக்கின்றனர்? ஆ! மிக மிகச் சொற்பம். கண்ணிருந்தும் பலர் குருடராய் இருக்கின்றனர். இயற்கைக் காட்சியில் அவர்களுக்குப் பார்வையே செல்லுவதில்லை. இந்த ரயிலில் கூட எத்தனைபேர் நம்மைப் போல் இயற்கை யழகில் ஈடுபட் டிருப்பார்களென்று நினைக்கிருய் சுந்தரி! ஒருவரும் இருக்க மாட்டார்கள். எல்லாரும் மூதேவியை இறுகத் தழுவி அவளோடு சரசலீலை செய்து மெய்மறந் திருப்பார்கள். அவர்கள் அறியாமை யிருளிலேயே ஆழ்ந்து போகட்டும்.— இராக் காலங்களில் ரயில் பிரயாணஞ் செய்வதைவிட மன உற்சாகந் தருவது வேறென்றில்லை. அதிலும், வளர் பிறைக் காலங்களில் மனதுக் கொத்த காதலியோடு பிரயாணஞ் செய்வது பூதவுடலோடு சுவர்க்கத்துக்குப் போவது போலவே இருக்கும். இந்திர போகங்கள் கூட இவ் வின்பத்துக்கு ஈடாகாதென்றே சொல்வேன். உன்னுடைய அபிப்பிராய மென்ன, கண்ணே?" என்று தனது இயற்கையான சாகஸத்தோடு நீண்ட பிரசங்கஞ் செய்து அவளது அழகிய முகத்தை நிமிர்த்தி சிவந்த அதரங்களில் அழுந்த முத்தந் தந்தான்,

சௌந்தரவல்லி அளவிலா மகிழ்ச்சி கொண்டவளாய் அவ் வாலிபனது பரந்த மார்பின் மீது ஒய்யார

மாகச் சாய்ந்த வண்ணம் கொஞ்சலாக, "என்ன சந்தர்! நீ ஒரு பெரிய கவிஞனென்று இதுவரை தெரியாதே! இயற்கை தேவியின் அற்புதக் காட்சிகளை நீ வருணித்தது போல், இயற்கை நல்லிசைப் புலவர்களான ஷெல்லி, ஓர்ட்ஸ்வொர்த், ஷேக்ஸ்பியர், ரவீந்திரநாதர் ஆகியவர்கள்கூட வருணித்திருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். இத்தகைய பேரறிஞனை உன்னை என் உயிர்த் தோழனுக—காதலனுகப்—பெற்றது என்னுடைய பாக்கிய மென்றே கருதிப் பெருமகிழ் வெய்துகிறேன்..........." என்று மேலுந் தொடர்ந்து ஏதோ கூறப் போகையில், சந்திரசேகரன் இடை மறித்து, "சுந்தரிக் கண்ணே! என்னைப் பரிகாசஞ் செய்கிருயா என்ன? ஷெல்லி எங்கே? ஷேக்ஸ்பியர் எங்கே? என் அறிவெங்கே? அவர்களது பேரறிவுக்கு என் சிற்றறிவை உரை போட முடியுமா என்ன? நான் இயற்கை யழகில் தோய்ந்து மகிழ்ச்சிப் பெருக்கால் ஏதோ பிதற்றினேனே யொழிய, கவிஞத் தன்மை எனக்கு எங்கிருந்து சொட்டப் போகிறது? அதிருக்கட்டும், கிளியே! நான் சொன்னபடி உன் பெற்ருேர்களுக்குக் கடித மெழுதி யனுப்பி விட்டாயா? அவர்கள் ஒன்றும் நீ வராததற்காகக் கவலைப்பட மாட்டார்களே?" என்று கேட்டான்.

சௌந்தரவல்லி, "கவலைப்படாம லிருப்பார்களா? வழக்கமாக ஒவ்வொரு வருஷமும், கலாசாலை விடுமுறை விட்டதும் ஊருக்கு வரும் யான், இவ் வருஷம் வரவில்லை யென்ருல் மனக் கலக்கந்தானே! வருகிற வருஷம் பி. ஏ. வுக்குக் கடைசி வருஷ மாதலால், விஞ்ஞான சாஸ்திரம் போன்ற பாடங்கள் சிலவற்

றைத் தனியாகப் படிக்கவேண்டி யிருக்கிற தென்றும், சில ஆசிரியைகள் உதவியால், இந்த இரண்டு மாதத் துக்குள் அவ் விஷயங்களில் நன்ருகக் கவனஞ் செலுத் திப் படிப்பதற்கு வசதி யேற்பட்டிருக்கிற தென்றும், ஆதலால்தான் ஊருக்கு வர முடியவில்லே யென்றும் ஏதேதோ சாக்கு போக்கு சொல்லி யெழுதி யிருக்கி றேன்" என்று கவலேயோடு சொன்னுள்.

சந்திரசேகரன், "காதற் கரும்பே! உனக்கு இவ் வளவு தூரந் தொந்தரவு கொடுத்து, எனது ஜமீனுக் கும், அதைச் சேர்ந்த மற்ற இடங்களுக்கும் அழைத் துச் செல்வதன் முக்கிய நோக்க மென்ன வென்ருல், உனக்கு என்மீது ஏற்பட்டிருக்கும் அவநம்பிக்கை யைப் போக்குவதற் காகத்தான். கோபாலனது கடித மும், பேச்சும் உன்னேக் கலக்கி யிருக்கிறதல்லவா!" என்று சாதுரியமாகக் கேட்டான்.

சௌந்தரவல்லி, "கோபாலன் என்னே வஞ்சித் தழைத்துப் பலாத்காரம் செய்த பின்னர் அவனது கடிதமும் பேச்சும் முழுதும் பொய்யென்று அறிந்து கொண்டேன், அவன் சுயநலங் காரணமாகவே, உன் மீது புகார் கூறினுன். ஆதலால், எனக்கு இப்போது உன் விஷயத்தில் சிறிதுஞ் சந்தேகமே கிடையாது. அதைப்பற்றி, என் அன்பே! நீ கவலேப்படாதே!— எனக்கு முதலி லிருந்தே அந்தப் பாவி கோபாலனேப் பார்த்தால் பிடிப்பதேயில்லே. துரோகி, மிகக் கொடிய வஞ்சகன்; அவன் பஞ்சமா பாதகமும் அஞ்சாது செய் வான் என்றே தோன்றுகிறது. பொருமைக் காரியான அந்த சுலோசனுதான், அவனது விஷமச் செயலுக் கெல்லாங் காரணம். இரண்டு மாதத்துக்கு அந்தச்

சனியன்களைப் பார்க்காமல் சுகமாய் இருக்கலாம்" என்று வெறுப்புத் தோன்றக் கூறினாள்.

சந்திரசேகரன் பேச்சை வேறு வழியில் திருப்ப எண்ணி, "அது தொலையட்டும்; சுந்தரி! நாம் இந்த வெப்ப மிகுந்த கோடைக் காலத்தைக் குளிர்ச்சி பொருந்திய குற்றாலத்தில் சுகமாகக் கழிக்கலாம். என் தந்தை கூட ஜமீன் வேலை யெதுவு மில்லா திருந்தால்—அநேகமாக அங்கு வந்திருப்பார் என்று நம்புகிறேன். அவரிடம் நமது விவாக விஷயத்தைத் தெரிவித்து, வருகிற ஆவணி மாதத்துக்குள் நடைபெறும்படிச் செய்ய முயல்கிறேன். உனக்கு அதில் ஒன்றுந் தடையில்லையே!" என்று இனிமையாக வினவினான்.

இதைக் கேட்டதும் சௌந்தரவல்லி வெட்கத்தால் முகத்தை மூடிக்கொண்டு மௌனஞ் சாதித்தாள். சந்திரசேகரன் இனி அவள் தன்னிடஞ் சந்தேகங் கொள்ள மாட்டாள் என்று உள்ளுக்குள் மகிழ்ந்து வெளிப்படையாக, "இன்னமும் வெட்கமா; உன் வாயால் ஒரு வார்த்தை சொல்லேன்; மாட்டாயா? அப்படியானால் அவ் வாய்க்கு—இதோ முத்திரை வைக்கிறேன், பார்" என்று அவளைத் தூக்கி இறுகத் தழுவி முத்தமிட்டான்.

திருக்குற்றாலம் இயற்கை தேவிக்கு ஒப்பற்ற உறைவிடம் என்று கூறினால் மிகையாகாது என்பது அந்நாட்டை நேரில் பார்த்த நண்பர்கள் அறிவார்கள். அக் குற்றாலத்தைச் சார்ந்த மலையே தமிழ் மொழியை வளம் பெறச் செய்த அகத்திய முனிவர் வாழ்ந்த பொதிகைமலை என்றும், அம் மலையி லிருந்தே தென்றற் காற்று உண்டாகிறதென்றும், இதுபோன்ற பல விஷ

யங்களை மூதாதையர் கூறி வந்திருக்கின்றனர். சமீப காலத்தில் இருந்த திரிகூட ராசப்ப கவிராயர் என்பவர் தாம் எழுதிய "குற்றால ஸ்தல புராணம்", "குற்றாலக் குறவஞ்சி" முதலிய நூற்களில் இக்குற்றாலத்தைப் பலபட சிறப்பித்துக் கூறி யிருக்கிறார். எது எவ்வா றிருப்பினும், இக் குற்றாலம், கொடிய வெப்பத்தைத் தரும் கோடைக் காலத்தில் உல்லாசமாகக் காலங் கழித்தற் குரிய இடமாகும். உதகமண்டலம், கோடைக் கானல், குன்றூர் முதலிய இடங்களைக் காட்டிலும், இக் குற்றாலம் சமமான சீதோஷ்ண நிலை யுடையதாய் மிகவும் ரமணீயமாய் இருக்கும். இங்கு மற்றொரு விசேஷ மென்னவென்றால், மலைமீதிருந்து "நீர் வீழ்ச்சி" சதா வீழ்ந்து கொண்டிருப்பதே யாகும். இந்நீர் வீழ்ச் சியே குற்றாலத்தைக் குளிர்ச்சி பொருந்திய பூமியாகச் செய்திருக்கிறது. குற்றால நீர்வீழ்ச்சி தமிழ் நாட்டி லேயே யன்றி மற்ற நாடுகளிலும் பிரசித்தி பெற்ற தாகும். எங்கு பார்த்தாலும் புல் பூண்டு செடி கொடி மரங்கள் வளர்ந்து பச்சை பசேலென்று காட்சி யளிக் கும் அழகும், வெண்ணுரைகளைத் தள்ளிக்கொண்டு "ஓம்" என்று ஓசை செய்து வீழும் நீர் வீழ்ச்சியின் அழகும் எத்தகையோர் மனத்தையும் பரவசப் படுத்து மென்பது திண்ணம்.

இத்தகைய இயற்கை வளப்பங்கள் நிறைந்த குற்றாலத்தில் சிவாலயத்துக்குத் தெற்கே சிறிது தூரத் தில் ஒரு அழகிய மாளிகை அவ்வூரையே அழகு செய்து கொண் டிருந்தது. அம் மாளிகையைச் சுற்றி 20-அடி உயரமுள்ள மதில் அரணாக அமைந்திருந்தது. அம் மாளிகையில் வாயிலில் "மன்மத பவனம்" என்று

பொன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு மின்னிக் கொண் டிருந்த பலகை யொன்று தொங்கிக் கொண் டிருந்தது. நாலாபக்கமும் நறுமணம் வீசிக் கொத்து கொத்தாகப் பூத்துள்ள முல்லை, மல்லிகை கொடிகளும், அழகிய ரோஜா முதலிய செடிகளும், மற்றும் பலவித மான செடி கொடிகளும் மாளிகையைச் சூழ்ந்து அழகு செய்து கொண் டிருந்தன. இவற்றினிடையே, சிறு சிறு வாவிகள் இருந்தன. அவ் வாவிகளில், அல்லி, ஆம்பல், தாமரை முதலியன படர்ந்து மலர்களைப் பூத் திருந்தன. இதை யடுத்து மாளிகைக்கும் மதிலுக்கும் மத்தியில் அகழி சூழ்ந்திருந்தது. அவ் வகழியில் எப் போதும் நீர் நிறைந்திருந்ததால் நீரோடை போலவும், ஒரு சிற்ருறு போலவுங் காணப்பட்டது. மதிலோரத் தில் பலவிதமான பழந் தரும் மரங்களும், ஆலமரம், அரசமரம், வேப்பமரம் முதலிய பெரிய மரங்களும் அடர்ந்து தழைத்து அகழிக்கு நிழல் கொடுத்துக் கவிந் திருந்தன. ஒரு பெரிய தேசத்துக்கு வேற்றரசர் அதை எளிதில் அணுகா வண்ணம் அகழியும், கோட்டை யும், மலையும், காடும் அரணுக அமைந் திருப்பது போல், இம் மாளிகைக்கு அகழியும், பெரிய உயரமான மதிலும் அரணுக அமைந்திருந்தன. முன் வாயிலி லிருந்து மாளிகையினுள் நுழைவதற்கு விசைப் பலகை அமைக்கப்பட் டிருந்தது. மதிலின் உட்புறத்தைச் சேர்ந்த ஒரு சிறு அறையில் வேலைக்கார ஞெருவன் இருந்துகொண் டிருந்தான். வெளியி லிருந்து யாரே னும் மாளிகைக்கு வருவதா யிருந்தாலும், மாளிகையி லிருப்பவர்கள் வெளிச் செல்வதா யிருந்தாலும் அவ் வேலைக்காரன் மதிலில் அமைந்திருக்கும் விசையை அழுத்துவான். உடனே பலகை அகழியை மூடிக்கொள்

ளும். மதில் மிகவும் உயரமாக இருந்ததால், அப் பங்களா இவ்வளவு சிறப்பாக அமைந்திருப்பது, அவ் வூராருக்குத் தெரியாது. இது ஜமீன்தாருடைய பங்களா என்ற அளவில் தான் அறிந்துவைத் திருந்தார்கள்.

மாளிகையோ, மூன்று மாடிகளை யுடையதாய் மிக அழகாகக் கட்டப்பட்டிருந்தது. அறைகளிலும், கூடங் களிலும் ரவிவர்மா படங்களும், மற்றும் அழகிய படங் களும் ஆங்காங்கு மாட்டப்பட் டிருந்தன. எங்கு பார்த்தாலும் நிலைக்கண்ணாடிகள் நிறைந்து சுவர்களை அழகு செய்தன. அம் மாளிகையில் அழகிய மங்கை யர் பலர் தேவ மாதர்போல் உலாவிக் கொண் டிருந்த னர். வேலையாட்கள் எப்போது பார்த்தாலும் அங்கும் இங்கும் ஓடிக் கொண் டிருந்தனர்.

இத்தகைய ஆடம்பரங்களோடும் சிறப்புகளோடும் கூடிய மாளிகை மருங்காபுரி ஜமீன்தாருக்கு உரிய தாகும். கோடைக் காலத்தில் அந்த ஜமீன்தார் குடும் பம் அம் மாளிகையிலேயே உல்லாசமாகக் கழிப்பது வழக்கம்.

மாலை 5-மணி யிருக்கும். தினகரன் தன் கிரணங் களை யொடுக்கிக் கொண்டு மேற்கே விரைந்து சென்று கொண் டிருந்தான். மேல் வான மெல்லாம் பொன் மயமாக விளங்கியது. அவ் வொளி செடி கொடி மரங் களின் மீதும், ஆறு குளம் ஓடைகளின் மீதும் பட்டு, அவைகளைப் பொன் வண்ண மாக்கியது. தென்றற் காற்றே மிக ரமணீயமாக வீசிக் கொண் டிருந்தது. குயில் முதலிய பறவைகள் அங்கு மிங்கும் பறந்து தங்கள் இனிய குரல்களால் கீச் கீச் சென்று கூவிக் கொண் டிருந்தன. மலர்களில் மொய்க்கும் தேனீக்

களின் ரீங்காரம் கேட்பதற் கினிமையாக இருந்தது. வளர்பிறைக் கால மாதலால் சூரியன் மறைவதற்கு முன்னமே சந்திரன் கிழக்கே தோன்றி விட்டான். ஆனால், அவன் மேனி பிரகாச மற்றிருந்தது.

இவ்வித மாலை நேரத்தில் "மன்மத பவனத்"தில் என்ன நடக்கிற தென்பதைச் சிறிது பார்ப்போம். அம் மாளிகையி லிருந்த அழகிய மகளிரெல்லாம் தங்களை மிகவும் அலங்காரமாகச் சிங்காரித்துக் கொள்ளலாயினர். ஒவ்வொருவரும் தங்களை ரதிதேவியின் பிரதி பிம்ப மென்றே நினைத்துத் தருக்கி யிருந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகத் தங்களை ஒப்பனை செய்து கொண் டிருந்தனர்; ஒவ்வொரு விதமான நிறத்தையுடைய ஆடைகளை யுடுத்தி யிருந்தனர் பன்னிறமான மலர்களை அணிந்திருந்தனர். பலவித மான நவீன நகைகளைப் பூண்டிருந்தனர்.

"மான் இனம் வருவ போன்றும்
மயில் இனம் திரிவ போன்றும்
மீன் இனம் மிளிர்வ போன்றும்
மின் இனம் மிடைவ போன்றும்
தேன் இனஞ் சிலம்பி ஆர்ப்பச்
சிலம்பு இனம் புலம்ப எங்கும்
பூ நனை கூந்தல் மாதர்
பொம் மெனப் புகுந்து மொய்த்தார்."

எனக் கம்பர் பெருமான் இராமன் உலாப் போந்த போது மகளிரெல்லாம் அவனுடைய அழகைக் காண மொய்த்துக் கொண்டனர் என்று வருணிப்பது போல, அம் மாளிகையி லுள்ள மகளிர் தங்களை அலங்கரித்துக் கொண்டதும், நாலைந்து பேர், நாலைந்து பேராகக்

கூடி தனித் தனியே மாளிகையைச் சூழ்ந்துள்ள சோலை யைச் சுற்றித் திரிந்து பலவிதமான விளையாட்டுகளில் கருத்தைச் செலுத்துவ ராயினர்.

அகழியில் செம்மரத்தால் அழகாகச் செய்யப் பட்ட தோணி யொன்று விடப்பட் டிருந்தது. தோணி அன்னத்தின் உருவத்தைப்போல் சித்திரிக்கப் பட் டிருந்தது. அதன் பின் பாகத்தில் இரத்தின கம்பளம் போடப்பட் டிருந்தது. அதன் ஓரத்தில் நீலநிற வெல் வெட்டாலாகிய திண்டு ஒன்று போடப்பட் டிருந்தது. அத் திண்டின் மீது ஒரு வாலிபன் உட்கார்ந்து ஒய்யார மாகச் சாய்ந்து கொண் டிருந்தான். அவனுக்கு வயது இருபத் திரண்டிருக்கும். எனினும், அவன் முகத்தில் கிழத்தோற்றம் காணப் பட்டது. மாநிறமாகவும், மெலிந்தும் இருந்தாலும், செல்வச் சீமானின் புதல்வன் என்ற தோரணையில் மிடுக்குட னிருந்தான். அவன் பொற் சரிகையால் சித்திரிக்கப் பட்டிருந்த வெண் பட் டாடையும், உயர்ந்த சில்க் சர்ட்டும், மயில்கண் வைத்த சரிகை மேல் வேஷ்டியும் அணிந்திருந்தான். அவனது கையில் பொன் கடியாரமும், பத்து விரல்களிலும் நீலம், சிவப்பு, பச்சை, வைரங்கள் பதிந்த மோதிரங் களும் மிளிர்ந்தன. காதுகளில் போட்டிருந்த விலை யுயர்ந்த வைரக் கடுக்கன்கள் டால் வீசின. நெற்றியில் பெரிய சவ்வாது பொட்டு இலங்கியது. முகத்தில் அணிந்திருந்த தங்க மூக்குக் கண்ணாடி அவனது செயற்கை யழகை அதிகப்படுத்திக் காட்டியது. தலை மயிரை அழகாக வகிடு எடுத்து வாரிப் பின்புறத்தில் சுருட்டி விட்டிருந்தான். இவ்வலங்காரங்கள் அனைத் தும் அவன் முதல்தரமான மைனர் கோஷ்டியில் தலை

சிறந்தவன் என்று காட்டின. இத்தகைய அலங்கார புருஷனின் காலடியில் ஒரு அழகிய மங்கை உட்கார்ந்து அவன் மடிமீது தலையை வைத்துச் சிருங்காரமாகச் சாய்ந்திருந்தாள். அவள் பேரழகி யல்லவாயினும், நல்ல சிவந்த மேனியை யுடையவளா யிருந்தாள். அவள் நீல நிறப் பட்டாடை யணிந்திருந்ததால், நீலமா மயிலே துவண்டு விழுந்திருக்கிறதோ என்று எண்ணும்படியாக இருந்தது. அவள் செய்திருந்த செயற்கை யழகு இயற்கை யழகை மிகைப்படுத்திக் காட்டியது. அவள் அவ் வாலிபன் முகத்தை நளினமாகப் பார்த்த வண் ணம் கொஞ்சலாக ஏதோ பேசிக் கொண் டிருந்தாள். அவளது கைகள் வாலிபனது இடுப்பைத் தழுவிக் கொண் டிருந்தன. வாலிபன் புன்சிரிப்போடும் அம் மங்கை யிடத்தில் காதல் வார்த்தைகள் பேசிக் கொண் டிருந்தான். அவனுடைய கரங்கள் அம் மங்கையின் கன்னங்களை வருடிக் கொண் டிருந்தன. இவர்கள் உட்கார்ந்திருந்த இடத்துக் கெதிரே தோணியின் முன் புறத்தில் இவர்கள் கட்டளையை எதிர் பார்ப்பது போல் இரு மகளிர் அடக்கமாக அமர்ந்திருந்தனர். முன்னும் பின்னுமாக நாலைந்து பெண்கள் அகழியில் நடந்த வண்ணம் இத்தோணியைத் தள்ளி மெள்ள செலுத் திக் கொண்டிருந்தனர். இவர்கள் எல்லாரும் அழகிய இளம் பெண்களே யாவர். இத்தோணி அசையுந் தோறும், அதிலிருந்த வெண்ணிறமான வாத்துகளும் மற்றும் பறவைகளும் கூச்சலிட்டு ஓடிக்கொண்டிருந் தன. இத்தோணியில் அரசிளங்குமரன் போல் மங்கை யரோடு வீற்றிருந்த வாலிபனும், அவன் மடிமீதிருந்த மங்கையும் இவ்வுலகத்தையே மறந்து களியாட்டத் தில் ஆழ்ந்திருந்தனர்.

இச்சமயத்தில், மதிற்புறக் கதவை யாரோ தட்டவே, அங்கிருந்த வேலையாள் அதைச் சிறிது திறந்து யாரெனப் பார்த்தான். வந்தவர்கள் இன்னாரென அறிந்ததும், அவன் பயபக்தியோடு கதவை நன்றாகத் திறந்து அவர்களுக்கு வழிவிட்டான். அவர்கள் உள்ளே வந்ததும், மறுபடியும் கதவு சாத்தப்பட்டது. அங்கு வந்தவர்கள் யாரென்று எண்ணுகிறீர்கள்? சந்திர சேகரனும், சௌந்தரவல்லியுமே யாவர். சந்திரசேகரன் சௌந்தரவல்லியைக் கையைப்பற்றி யழைத்து வந்தான். அகழியில் தோணியில் நடக்கும் லீலா விநோதங்களைக் கண்டதும், சௌந்தரவல்லி பிரமிப்படைந்து நின்று விட்டாள். அவள் கால்கள் பின்னுக்குச் சென்றன. அவள் கண்கள் நாணத்தால் மூடிக் கொண்டன.

இவர்கள் வருகையை யறிந்த வாலிபன் தன்மீது சாய்ந்திருந்த மங்கையின் பிணைப்பிலிருந்து விடுபட்டு எழுந்து, தோணி செலுத்தும் பெண்களை நோக்கி, அதைப் பின்புறமாகக் கொண்டு செல்லும்படி சைகை காட்டிவிட்டு, அதிலிருந்து குதித்து, ஒரு புறமாகக் கட்டியிருந்த மரப்படிகளின் வழியாக ஏறிச் சந்திர சேகரனை யணுகிய வண்ணம், “சந்தர்! இவ்வளவு தாமத மென்ன? நேற்றே வருவதாக எழுதி யிருந்தாயே! எங்கு சுற்றியடித்துவிட்டு இந்நேரத்தில் வந்தாய்? ஸ்டேஷனுக்கு வண்டிகூட அனுப்பி யிருந்தேன்.........” என்று கூறி மேலே ஏதோ தொடர்ந்து பேச வாயெடுத்தான்.

அகழியில் நடந்த காட்சியைக் கண்டு நாணிப் பின்னடைந்து தயங்கி நின்ற சௌந்தரவல்லியின்

கையை ஆதரவோடு பற்றி யழைத்து வந்த சந்திர சேகரன், "சந்தர்" என்று கூப்பிட்டதுமே, வலது கைவிரலால் தன் வாயைப் பொத்திச் சமிக்கை செய்து, அவளைப் பின்தங்க விட்டுத் தான் முன்னே வேகமாக நடந்து, தன்னை எதிர் நோக்கி வரும் அவ்வாலிபனை வழி மறிப்பதுபோல், அவனருகே போய், மிகவும் மெல்லிய குரலில் இரக்கமாக, "என்ன சேகர்! நான் உனக் கெழுதிய கடிதத்தில் எல்லா விஷயங்களையும் விவரித்து, எனது நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க ஆத்ம நேயனுய நீ உதவி புரிய வேண்டுமென்று கேட்டிருந்ததை நீ ஏற்றுக்கொண்டு, என் வேண்டுகோளின்படியே நடப்பதாய் பதி லெழுதியதை இவ்வளவு சீக்கிரமாக மறந்தா போய் விட்டாய்? உனது இளைய ஜமீன்தார் பட்டத்தைச் சிலநாட்கள் எனக்கு இரவல் தரக்கூடாதா? உனது மருங்காபுரி ஜமீனுக்கு உன்னோடு யான் பங்குக்கு வந்துவிடுவேன் என்ற பயமா!......அந்தப் பெண் எதிரில் உனது பரிவாரங்களே யன்றி, நீயும், என்னை இளைய ஜமீன்தார் பதவியில் வைத்து மரியாதை செய்யவேண்டு மென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நாடகம் நடிப்பதில் உனக் கொன்றும் நஷ்ட மேற்பட்டுவிடாது. நீ சென்னையில் பெண்மான் வேட்டை ஆடி வந்த போது ஏற்பட்ட தொல்லைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் யான் உடனிருந்து எவ் வெவ்விதமாக வெல்லாம் உதவி புரிந்திருக்கிறேன் என்பதை உனக்கு நினைவூட்ட வேண்டியதில்லை. அவ்வித மார்க்க சகாயனுகிய எனக்கு நீ இச் சிறு உதவியேனுஞ் செய்யலாகாதா? இனிமேல் சந்தர் என்று கூப்பிடமாட்டாயே? சின்ன ராஜாசாகேப் என்று தானே பயபக்தியோடு கூப்பிடு

வாய்? என்ன சொல்லுகிருய்?.........." என்று கெஞ்சிக் கேட்டான்.

உடனே பதில் வரவில்லே. ஏறிட்டு அவ் வாலிபனேப் பார்த்தான். ராஜசேகரன் என்னும் அவ்வாலிபனின் கண்கள் சிறிது தூரத்தில் அச்சமும், நாணமும் சேர தலே குனிந்து நின்றிருக்கும் சௌந்தரவல்லியின் மீது பதிந்திருந்ததை யறிந்து சந்திரசேகரன் உள்ளூற சினங் கொண்டான். எனினும், தன் காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடேயே இருந்த அவன், ராஜசேகரனே உற்று நோக்கினுன்.

ராஜசேகரன் தூங்கி விழித்தவன்போல் தன்னறிவு வரப்பெற்று, "என்ன! அதற்கென்ன, சந்...... இல்லே. மன்னிக்கணும். சின்ன ராஜா சாகேப்! தங்கள் உத்தரவுப்படியே நடக்க இந்த அடிமை காத்திருக்கிறது" என்று குறும்பாகக் கூறிச் சிரித்து; பின்னர் அவன் வேண்டுகோளே யேற்றுக்கொண்டு நடக்க சித்தமா யிருப்பதைக் குறிப்பதுபோல் உண்மையாகவே அவனே வணக்கத்தோடு மாளிகைக்கு வருமாறு வழிகாட்டி யழைத்தான்.

சந்திரசேகரன் மகிழ்ச்சி யடைந்து, தானிருந்த இடத்தி லிருந்து திரும்பிப் பார்த்தான். தான் பிறந்த வீட்டையும், கல்வி பயிலும் கலாசாலேகளேயும், அது சம்பந்தமாகத் தோழிகளோடு செல்லும் இடங்களே யுமேயன்றி, வேறு இடங்களுக்குப் பிரயாணஞ் செய்து பலவிதமான மக்களோடு பழகியறியாத நம் சௌந்தரவல்லி, இம்மாளிகையில் நுழையும் போதே அகழி விளேயாட்டைக் கண்டு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு குணங்களேயும் ஏககாலத்தில்

அடைந்து தத்தளித்திருந்தா ளாதலால், சந்திரசேகரன் தன்னை விட்டு நீங்கி ராஜசேகரனோடு பேசவும், அவள் ஒரு புறத்தில் ஒதுங்கி நின்று ஏதோ ஆழ்ந்த யோசனையி லிருந்தாள். எனவே, இவர்களது சம்பாஷணையையும் அவள் கவனிக்கவில்லை. அவளது மன நிலையை யறிந்த சந்திரசேகரன் அவளை யணுகி அவள் கையைப் பற்றி மாளிகைக்குள் அழைத்துச் சென்றான்.

ஏற்கனவே, வேலையாட்களுக்கும் மங்கையர்களுக்கும் விஷயத்தை ராஜசேகரன் தெரிவித்திருந்தா னாதலால், அவர்கள் தங்கள் எஜமானிடத்தில் பயபக்தி விசுவாசத்தோடு நடந்துகொள்வதுபோல், சந்திரசேகர னிடத்திலும் நடந்துகொண்டனர்.

மங்கையர் சௌந்தரவல்லிக்கு வேண்டிய சௌகரி யங்களைச் செய்து தந்தனர். அவளுக் கென ஒரு தனி யறை யளிக்கப்பட் டிருந்ததோடு அவளுக் குரிய குற்றேவல்களைச் செய்யப் பணிப் பெண்கள் இருவர் எப்போதும் உடனிருந்தனர்.

அம் மாளிகையிலுள்ள அனைவரும் சந்திரசேகர னிடத்தில் காட்டும் மரியாதையையும், அடக்க வொடுக்கத்தையும், ராஜசேகரன் உட்பட எல்லோரும் "அவனை ராஜாசாகேப்! ராஜாசாகேப்!" என்று கௌரவமாக அழைப்பதையும் கண்டு சௌந்தரவல்லி வியந்தாள். சந்திரசேகரன் மறுநாட் காலை சிற்றுண்டி முடிந்ததும், சௌந்தரவல்லியை அழைத்துக்கொண்டு அம் மாளிகை முழுவதையுஞ் சுற்றிக் காட்டினான். அவள் அம் மாளிகையின் அமைப்பையும், அலங்காரங்களையுங் கண்டு, "இது இந்திரன் அரண்மனையோ" என்று ஆச்சரியங் கொண்டாள். பின்னர் அம்மாளிகையைச்

சூழ்ந்துள்ள சோலையையும், அகழி முதலியவற்றையும் செளந்தரவல்லி கண்டு மனமகிழ்ந்தாள். இவர்களுடனே ராஜசேகரனும் இருந்து அவ்வூர் விசேஷத்தைக் குறித்து ஏதேதோ சொல்லுவான். அவன் செளந்தரவல்லியோடு பேசப் பல தடவை முயன்றான். ஆனால், அவள் அவனை ஏறெடுத்துங் கவனிப்பதில்லை. அவனைக் கண்டாலே, அவள் அடங்கி யொடுங்கிப் போய் விடுவாள். எனினும், ராஜசேகரன் மனம் அவள் அழகில் ஈடுபட்டுவிட்ட தாகையால், எவ்வாறேனும் அவளோடு பேசி நட்புகொள்ள வேண்டுமென்று விடா முயற்சியோடு இருந்து வந்தான். எச்சமயத்திலும் அவள் மீதே அவனுக்குக் கண்ணிருந்து வந்தது. எக்காலமும் அவளோடு சந்திரசேகரன் இருந்துவந்ததால், அவன் அவளைத் தன் சூழ்ச்சி வலையில் சிக்க வைக்க முடியாதிருந்து வந்தது இவனைப்பற்றிச் சந்திரசேகரன், அவன் தன் சிற்றப்பன் மகன் என்றும், உறவு முறையைக் கொண்டாடி தங்கள் பங்களாவில் சில காலமாக இருந்து வருவதாகவும், அப் பெண்கள் கூட தங்கள் உறவுமுறையைச் சேர்ந்தவர்களே யென்றும் செளந்தரவல்லியிடங் கூறினான். அவள் அதையெல்லாம் செவியில் ஏற்றுக்கொள்ளவில்லை.

இரண்டு வார மாயிற்று. செளந்தரவல்லிக்கு ஊரைச் சுற்றிக் காட்டி வரவேண்டுமென்று சந்திரசேகரன் எண்ணி ஒருநாள் மாலை அழைத்துச் சென்றான். எல்லா இடங்களையும் பார்த்துவிட்டு, குற்றால நீர் வீழ்ச்சியைக் கண்டபோது, செளந்தரவல்லி தன்னை மறந்து மகிழ்ச்சி கொண்டாள். இயற்கை யன்னை யளிக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு அவள் மனம் வெண்ணெய்போல உருகிவிட்டது.

இவ்வாறு குற்ருலம் காதலர் இருவரையும் அளவி லடங்காத குதூகலத்தில் ஆழ்த்தியது. இவர்களுடைய காதல் விளையாட்டும் பலவிதமாக வளர்ந்துகொண்டே வந்தது.

சந்திரசேகரன் குற்ருலத்துக்கு வந்த சிறிது நாட்க ளுக்கெல்லாம் உஸ்கி, பிராந்தி முதலிய மதுபான வகை களை அருந்தும் வழக்கத்தை மீண்டும் கைக்கொள்ள லாஞன். ராஜசேகரனே இவ் வழக்கத்தைக் கைக் கொள்வதற்குத் தூண்டுகோலா யிருந்தான்.

சௌந்தரவல்லி தனியா யிருக்கும் காலத்தி லெல் லாம் அம் மாளிகையி லிருந்த மங்கையர் அவளிடம் வந்து பேச்சுக் கொடுத்து, பெரும்பாலும் ராஜசேகர ளைப் பற்றியே வருணிப்பதும், அவனது தகுதிகளையே எடுத்துரைப்பதுமா யிருந்துவந்தனர். அவர்கள் பேச் சைக் கேட்க, சௌந்தரவல்லிக்கு வெறுப்பா யிருந் தாலும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், சாவதானமாகக் கேட்டு வந்தாள்.

ஒருநாள் இரவு பத்துமணி யிருக்கும். வேலைக் காரர்களும் மற்றும் மங்கையர்களும் படுக்கைக்குச் சென்றுவிட்டனர். மாளிகை எங்கும் அமைதி நிலவி யிருந்தது. மேன் மாடியில் ஓர் அறையில் ராஜசேகர னும், சந்திரசேகரனும் பலவகையான மது வகைகளைக் குடித்துக் களித்து ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். ராஜசேகரன் சந்திரசேகரனேடு பேசியவாறே உஸ் கியை ஊற்றிக் கொடுத்துக் கொண்டே யிருந் தான். சிறிது நேரத்திற் கெல்லாம் சந்திரசேகரன் அளவுகடந்து குடித்துவிட்டமையால், பலவாறு பிதற்

றிய வண்ணம், தான் அமர்ந்திருந்த சோபாவிலேயே சாய்ந்து விட்டான்.

"அப்படியே சுகமாகக் காலை வரை தூங்கு" என்று கேலியாகக் கூறிவிட்டு, ராஜசேகரன் சௌந்தரவல்லி படுத்திருந்த அறையை நோக்கி நடந்தான். அவன் அவள் தன் அறையில் உட்புறத்தைத் தாளிட்டுவிட்டு உறங்கிக் கொண் டிருந்தாள். இவன் அவ்வறையில் ரகசியமாக அமைத்திருந்த ஒரு சிறு கதவை ஏதோ விசையை அழுத்தித் திறந்துகொண்டு உள் நுழைந் தான்,

ராஜசேகரன் சௌந்தரவல்லி படுத்து உறங்கிக் கொண்டிருந்த அறைக்குள் நுழைந்ததும், விசையை அழுத்தி அங்கு மாட்டப்பட்டிருந்த அலங்கார விளக்கு களை யெல்லாம் ஏற்றிப் பிரகாச முண்டாகச் செய்தான். பின்னர், நான்கு பக்க சுவர்களையும் மறைத்திருந்த திரை களை யெல்லாம் நீக்கி விட்டான். அதன் பின்னர், தன் கட்டளைப்படி பணிப்பெண்கள் யாவற்றையும் ஒழுங்கு படுத்தி யிருக்கிறார்களா என்று அறை முழுவதையும் சுற்றிப் பார்வை யிட்டுத் தலை யசைத்தான்.

பிறகு, ராஜசேகரன் அங்கு மாட்டப்பட் டிருந்த நிலைக்கண்ணாடி யொன்றில், தன் உருவத்தைப் பார்த்து, ஆடைகளைச் சீர்திருத்திக்கொண்டு, சௌந் தரவல்லி படுத்துறங்கும் கட்டிலை நோக்கி நடந்தான். கட்டிலை யணுகியதும், அவன் அவளது முகத்தை உற்றுப் பார்த்தான். ஆழ்ந்து நித்திரை செய்யும் அவளது முகம் களங்கமற்று விளங்கியது. சுடர்விட் டெரியும் விளக்குகளின் ஒளியில் அவளது உருவம் பேரழகுடன் காணப்பட்டது. ஏற்கனவே அவளது

அழகில் ஈடுபட்டு மயங்கி யிருந்த ராஜசேகரன், இச் சமயம் தன் அறிவை யறவே இழந்து காமவெறி கொண்டான். பாம்பினுல் தீண்டப்பட்ட ஒருவன், விஷந் தலைக் கேறியவுடன், என்ன நிலையை யடை வானே, அவ்வித நிலையையே இவனும் அடைந்தான். கண்கொள்ளாக் காட்சியாய் அழகே ஒருருவாய்த் திக ழும் அவ் வனிதையை அப்படியே வாரியெடுத்து அணைத்துக் கொள்ளலாமா என்று நினைத்ததும், அவன் தேகம் பதறியது. ஆனுல், அவளது கருங் கண்களும், புருவமும், நெற்றியின் ஒளியும் அவனது உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன, எனவே, அவளருகு நெருங்க அவன் மனந் துணியவில்லை, ஒரு பக்கம் காமமும் மற்றொரு பக்கம் அச்சமும் அவனை அலைக்கவே சிறிது நேரந் தயங்கி நின்றுன். அவன் மனம் எண்ணுத தெல் லாம் எண்ணியது. 'சே! என்ன நான் இவ்வாறு பேடி போல் அஞ்சுகிறேனே! நல்ல சந்தர்ப்பம் வாய்த்தும்— தனியாகப் படுத்துறங்கும் இவ் வழகியை நெருங்கி அவளை என் வசப்படுத்திச் சேரத் தயங்குவானேன்? எத்தனையோ மகளிரை என் வலையில் சிக்க வைத்த எனக்கு இவளிடம் மட்டும் இவ்வளவு நடுக்க முண் டாவதேன்? அது எனது ஆண்மைக்கு அழகல்ல. என் இச்சையைப் பூர்த்தி செய்துகொண்டே தீரவேண் டும்" என்று தனக்குள்ளாகக் கூறியவாறு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு மெல்லப் பஞ்சணையை அணு கிச் சௌந்தரவல்லியின் கரத்தைப் பற்றினுன்.

கவலையற்று ஆழ்ந்து தூங்கிக் கொண் டிருந்த சௌந்தரவல்லி, ராஜசேகரன் தீண்டிய மாத்திரத் திலே—ஸ்பரிச உணர்ச்சியால் தாக்குண்டதும், திடுக்

கிட்டுத் துடித்து எழுந்தாள். உடனே ராஜசேகரனும் அவளைப் பற்றிய கையைத் திகிலால் திடீரென எடுத்துக் கொண்டு பின்வாங்கி நின்றான். தன் எதிரே ராஜசேகரன் தன்னையே பார்த்துக் கொண்டு நிற்பதைப் பார்த்ததும் சௌந்தரவல்லி மிகவும் பயந்தாள். "இவன் ஏன் இந்நேரத்தில் நான் படுத்திருக்கும் அறைக்கு வந்தான்? எதற்காக வந்தான்? எப்படி வந்தான்? இவ்வறைக் கதவை நான் தாளிட்டுக் கொண்டன்றோ படுத்தேன்?" என்று எண்ணிய வண்ணம் கதவிருக்கும் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினாள். அது தாளிடப்பட்டே யிருந்ததைக் கண்டு ஆச்சரிய முற்று தன் நோக்கை வேறு பக்கந் திருப்புஞ் சமயத்தில், அறையின் மாறுதலைக் கண்டு மேலுந் திகைத்து பதுமைபோல் அசையாது நின்று விட்டாள்.

சுவரைச் சுற்றிலும், அழகிய மாதர்களின் நிர்வாணப் படங்களும், சிற்றின்ப லீலா விநோதப் படங்களும் பதிக்கப்பட் டிருப்பதையும், உயர்ந்த வாசனைத் திரவியங்கள் கமகம வென அறையில் கமழ்ந்திருப்பதையும், பலவிதமான நறுமலர்கள் எங்குந் தூவப்பட் டிருப்பதையும், ஒருபுறமாக வட்ட மேஜைகளின் மீது பலகார வகைகளும், பழ வகைகளும் தட்டுகளில் வைக்கப்பட் டிருப்பதையும் கண்டால், இது மன்மதனது சோபன கிருகமோ, இந்திரனது சயன அறையோ என்று நினைக்கும்படியாக இருந்தது. 'என்ன இது? நான் எங்கிருக்கிறேன்? இதென்ன கனவா? நனவா? நான் இதுவரை இருந்த அறையாகக் காணப்படவில்லையே? நான் என்னறையி லிருந்து இங்கு எவ்வாறு கொண்டுவரப் பட்டேன்? இந்த வைபவங்க

ளெல்லாம் எதற்காக?-ஏதோ சூது நடந்திருக்கிறது. இந்த மனிதன்தான் ஏதோ தீய கருத்து கொண்டு இவ் வித ஏற்பாடுகளை யெல்லாம் செய்திருக்கிருனெனத் தெரிகிறது. இச் சூழ்ச்சி யெல்லாம் சந்திரசேகரனுக் குத் தெரியுமோ?—இம் மனிதன் என்ன செய்வானே தெரியவில்லையே?—கூச்சலிட்டுச் சந்திரசேகரனையோ மற்றவர்களையோ நான் உதவிக் கழைத்தா லென்ன?" என்று இவ்வாறு எண்ணிக்கொண் டிருக்கையில், ராஜ சேகரன் பயந் தெளிந்து காமவெறி தலையைக் கிறுக்க செளந்தரவல்லியை அணுகினன்.

இதைக் கண்டதும் செளந்தரவல்லி பின் னடைந்து "ஓ" வெனக் கூவ வாயெடுத்தாள். பயத் தால் ஓசை வெளிவரவில்லை. இரு கைகளாலும் தன் முகத்தை மறைக்க முயன்ருள். இவளது நிலையை நோக்கி ராஜசேகரன் கேலியாக நகைத்து, 'செளந்தரி! ஏன் என்னைக் கண்டு இவ்வாறு அஞ்சுகிருய்? நானென்ன பேயா? பூதமா? புலியா? சிங்கமா? நான் உன் கண்ணுள னல்லவா? உனக்கு இன்பத்தை யளிக்கும் ஆனந்தனல்லவா? எங்கே! என் அருகே வா? எனக் கொரு முத்தந் தா! கண்ணே!" என்று கூறிக் கொண்டு மேலும் அவளைச் சமீபித்தான்.

அவனது துடுக்கான வார்த்தையைக் கேட்டு செளந்தரவல்லி நடுநடுங்கி விட்டாள். அவன் தன்னை நெருங்குவதைக் கண்டதும் படபடப் படைந்து தானிருந்த இடத்தை விட்டுக் கதவை நோக்கி யோடி ளுள். ராஜசேகரனும் அவளைப் பின் தொடர்ந்து பாய்ந்து சென்ருன். பெண் மானைத் துரத்தி வரும் ஆண் புலியைப் போல அவன் தன்னைத் துரத்தி

வருவதை யறிந்ததும், அவள் அலறிக் கூச்சலிட்ட வண்ணம் கதவைத் தடதட வென பலத்த ஓசையோடு தட்டினாள்.

ராஜசேகரன் மிகவும் மூர்க்கமாக அவள் கைகளை வலுவாகப் பற்றிய வண்ணம், "சௌந்தரி! நீ வீணாக உடம்பை அலட்டிக்கொண்டு கூச்சலிடுவதால் பய னொன்றும் விளையாது, உனக்கு உதவி செய்ய இங்கு யாரும் வரமாட்டார்கள். என்னுடைய கட்டளையை மீறி இங்கு யாரும் ஒன்றுஞ் செய்ய முடியாது. நானே சர்வாதிகாரி! நானே இப் பெரிய மாளிகைக்குச் சொந் தக்காரன். நானே பெரிய ஜமீனாகிய மருங்காபுரிக்கு உரியவனாவேன். இந்தப் பயல் சந்திரசேகரன் மருங்கா புரிக்குத் தானே இளைய ஜமீன்தார் என்று சொல்லி யிருப்ப தெல்லாம் உன்னை ஏமாற்றவே யொழிய வேறில்லை. அவன் என்னோடு கலாசாலையில் பயின்றவ னாகையால், அச் சிநேக முறையில் இங்கு வந்தான். உனக்கு அவன்மீது நம்பிக்கை ஏற்படும் பொருட்டு, இங்குள்ளவர்களைத் தன்னோடு கபடநாடகஞ் செய்யும் படி கேட்டுக் கொண்டான். அவனை நீ சதமென நம்பி னால் மண் குதிரையை நம்பி ஆற்றி லிறங்குவது போல் தான் ஆகும். ஆகையால், உன்னைப் பார்த்தது முதல் உண்மையாகவே காதல் கொண்டு வாடும் என்னை நேசித்து, என் விருப்பத்துக்கு இணங்குவாயின், நீ என் உயிர்த்தலைவி யாவதோடு இப் பெரிய மருங்காபுரிக்கும் ஜமீன்தாரிணி யாகவும் இருந்து யாதொரு குறைவு மின்றி இன்பமாக வாழ்வாய். இங்குள்ள அழகிய பெண்கள் அனைவரும் உனக்குக் குற்றேவல் செய்து கொண்டிருப்பார்கள், என்ன சொல்லுகிறாய்? கண்ணே!

உன் வாயால் என்னைக் காதலிக்கிறேன் என்று ஒரு மொழி கூறு. எங்கே?..." என்று கேட்டு அவள் பதிலை எதிர்பார்த்து நின்றான்.

சௌந்தரவல்லிக்கு அவனது ஒவ்வொரு வார்த்தையும் அம்பு பாய்வது போலிருந்தது. அவள் மூளை குழம்பியது. "ஐயோ! எங்கு சென்றாலும் இவ்வித வேதனையா? ஆண்களென்ன! எல்லாருமா கண்ட பெண்க ளிடத்தி லெல்லாம் காமவெறி கொண் டலை வார்கள்? தெய்வமே உனக்குக் கண்ணில்லையா? அவ் வித கொடியவர்களிட மிருந்து என்னைக் காக்க மாட் டாயா?" என்று அவள் வாய் அவளை யறியாமலே முறை யிட்டது.

இவள் சொற்களைக் கேட்டதும் ராஜசேகரன் கோபங் கொண்டான். "மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமா? உன்னை நியாயமாகத் தொந்திரவு செய்யாமல் கேட்டால் நீ இசைவாயா? பலாத்காரம்தான் உன் போன்றவர்களுக்கு மருந்து. மனமொத்துக் கூடுவதுதான் மகிழ்ச்சி தரும் என்ற தத்துவத்தை உன் போன்றவர்களிடம் கடைப்பிடித் தல் தவறு. நீ உறங்கிக்கொண் டிருக்கும்போதே கை கால்களைக் கட்டிப்போட்டு வாயில் துணியைப் போட்டு திணித்துச் செயலறக் கிடத்திப் பலாத்காரமாக......" என்று வார்த்தையை முடிக்கு முன்னமே ஆத்திர மேலிட்டதால், அவள் கைகளை மேலும் அழுத்தமாகப் பற்றி யிழுத்து அவளை இறுகக் கட்டிப் பிடிக்க முயன் றான். சௌந்தரவல்லி அவனது பிடியினின்றும் திமி றியவாறே கதறி யழுதாள்.

இச்சமயத்தில் ராஜசேகரன் வந்த இரகசியக் கதவு தடாலென்று திறந்து கொண்டது. சந்திரசேகரன் வீரபத்திரனைப் போன்று கடுங்கோபம் முகத்தில் வீச உள்ளே நுழைந்தான். அவனுக்குப் பின்னே இரு பத்துஐந்து வயதுள்ள ஒரு அழகிய பெண் வந்தாள். பொருமையும், கோபமும் ஒருங்கே கூடி யிருந்ததால் அவள் முகம் சிவந்து விகார மடைந்திருந்தது. அவள் ராஜசேகரனுக்குச் செளந்தரவல்லி வரும் வரை அழகிய அரம்பையாகவும், அருங் காதலியாகவு மிருந்து வந்த நளினசுந்தரி என்னும் பெண்ணுவள். அவளே தோணியில் அவன் மடிமீது இருந்து கொஞ்சிக் கொண்டிருந்தவள்.

ஆகவே, இவ்விருவரும் அங்கே திடீரென தோன்றியதைக் கண்டதும், ராஜசேகரன் உண்மையிலேயே பயந்து விட்டான். அவன் உடம்பெல்லாம் வியர்வை வெள்ளம் வழிந்தது. அவர்கள் வரவைச் சிறிதும் எதிர்பார்த்தவனே யல்ல வாகையால், அவன் என்ன செய்வதென்று தோன்ருமல் திக்பிரமைகொண்டு விலகி செளந்தரவல்லியின் கையை விட்டு, நடுக்கத் தோடு நின்ருன். சந்திரசேகரனைக் காட்டினும், நளின சுந்தரிக்கே அவன் மிகவும் அஞ்சினுன்.

சந்திரசேகரனுக்கோ இவனது செயல் அளவு கடந்த ஆத்திரத்தை யுண்டுபண்ணி விட்டது. தன்னை வஞ்சித்து, குடியில் மயங்க வைத்து, தன் காதலியைக் கெடுக்கத் துணிந்த அவனை அப்படியே கொன்று விடலாமா என்றும் எண்ணினுன். அவன் தேகம் பதற, தன்னை மறந்து ஆவேசங் கொண்டு, ராஜசேகரனை நோக்கி இரண்டு குத்துகள் விட்டான். எதிர்

பாராத அவனது பலமான குத்துகளைத் தாங்க மாட்டாது ராஜசேகரன் கீழே விழுந்தான். பின்னர் அவன் சமாளித்துக் கொண்டு எழுந்து கொள்வதற்குள், சந்திரசேகரன் தன் கிஜார் ஜேபியில் வைத்திருந்த ரிவால்வரினால் அவனைச் சுடப் போனான். உடனே நளினசுந்தரி ஓடிவந்து அவன் கையைப் பற்றிக் கொண்டு இருவருக்கும் இடையே நின்று, "அவசரப் படாதீர்! ஆத்திரம் வேண்டாம். என்ன இருந்தாலும் இவ்விதச் செயலை மனதிலும் நினைக்கலாமா? இப்போது, சௌந்தரவல்லியை அழைத்துக் கொண்டு உமது அறைக்குச் செல்லும். நான் இவருக்குப் புத்தி மதி கூறிச் சரிப்படுத்துகிறேன். இவ்விஷயம் வேலையாட்களுக்குத் தெரிந்தால் வெட்கக் கேடு." என்று சமாதானமாகக் கூறி அவன் தோளில் கையை வைத்து மெல்ல சௌந்தரவல்லி யிருககு மிடம் அழைத்துச் சென்று விடுத்து அறைக் கதவைத் திறந்தாள்.

சந்திரசேகரன் உடல் நடுங்கி நிற்கும் சௌந்தரவல்லியை அழைத்துக் கொண்டு தன்னறை நோக்கி நடந்தான்.

சௌந்தரவல்லி வந்த பின்னர் ராஜசேகரன் தன்னை அவ்வளவாகக் கவனிப்பதில்லை என்பதை யறிந்த நளினசுந்தரி, அவன் நடவடிக்கையைக் கூர்மையாகக் கவனித்து வந்தாள். அன்றிரவு அவன் மற்ற பெண்களின் மூலமாகச் செய்து வைத்திருந்த ஏற்பாடுகளை யெல்லாம் எவ்வாறோ அறிந்து கொண்டாள். எல்லோரும் தூங்கிய பின்னர் எழுந்து, சௌந்தரவல்லி படுத்துறங்கும் அறையை அடைந்து உள்ளே நடக்கும் செயலைக்கூர்ந்து கவனித்தாள். பின்னர், சந்திரசேகர

னிருக்கு மிடஞ் சென்று அவன் மயக்கத்தைத் தெளி வித்து, இரகசியக்கதவின் மூலமாக அழைத்துப் போய், வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டாள். இதன் மூலமாக ராஜசேகரனுக்குப் புத்தி வருமென்று எண்ணி அவள் உள்ளூற மகிழ்ந்தாள். சந்திரசேகரனும், சௌந்தர வல்லியும் சென்ற பின்னர், நளினசுந்தரி, ராஜசேகர னிருக்குமிடம் போய், அவன் கையைப் பற்றித் தூக்கி, அவனுக்குத் தேறுதல் கூறி யழைத்துச் சென்றாள்.

---

# எட்டாவது அதிகாரம்

## சௌந்தரவல்லியின் பரிதாப முடிவு

அளித்து அஞ்சல் என்றவர் நீப்பில் தெளிந்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு. —திருக்குறள்.

சென்னைத் திருவல்லிக்கேணி "மெரீனு" ("Marina Beach") பீச்சில் பெருங்கூட்டம் நிறைந்திருந்தது. ஞாயிற்றுக்கிழமையான அன்று சங்கீதத்தின் தனிப்பெருங் கிழவியான வீணை தனம்மாள் ரேடியோவில் பாடுகிருரென்ருல் மக்கள் திரண்டு வருவதற்குச் சொல்லவேண்டுமோ! ரேடியோ சங்கீதத்தை வெறுத்தோடுபவர்கள் கூட அன்று, வீணை தனம்மாள் பாடும் இன்னிசைப் பாடல்களில் ஈடுபட்டு, ரேடியோ நிலயத்தை நாடிச் செல்வா ராயினர். ஆனல், பாட்டிமாரின் வம்புப்பேச்சும், காதலர்கள் களியாட்டமும், சிறுவர் சிறுமியரின் விளையாட்டும், பத்திரிகை ஞானங் கொண்டவர்களின் ராஜீயப் பேச்சும், முதியோர்களின் தருக்க வாதமும், விட புருடர்களின் விஷமப் பேச்சும், உப்புக்கடலை, ஆரஞ்சி பழம், பீடி சிகரெட் முதலியன விற்போரின் கூச்சலும், குஸ்தி போடும் கூட்டத்தாரின் ஆரவாரமும், மோட்டார்களின் ஹார்ன் சப்தமும் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்துகொண்டு இனிய சங்கீதத்தின் அமைதியைக் கெடுத்தன. 'மெரீனு அக்வெரீயம்' எனப்படும் மீன் கண்காட்சியில் வேடிக்கை பார்க்க, ஆண்களும் பெண்களும் வருவதும் போவதுமா யிருந்தனர். அதை யடுத்துள்ள அக்வெரீயம் ரெஸ்டாரண்டில், சீமான்களும், சீமாட்டிகளும், பணக்கார மைனர்

களும், நவநாகரிக வாலிபர்களும், நாரீமணிகளும் வெளிப்புறத்திலும், உள்ளேயும் கடற்காற்றையும் ரேடியோ சங்கீதத்தையும் ஏக காலத்தே அனுபவித்த வண்ணம் அணியணியாக உட்கார்ந்து பலவிதமான ருசி மிகுந்த சிற்றுண்டிகளை அருந்திக்கொண் டிருந்தனர். செனட் ஹவுஸிலிருந்து. ஐ. ஜி. ஆபீஸ் வரை பிளாட்பாரத்தின் ஓரமாகவே, பலவிதமான மோட்டார் கார்கள் வரிசையாக நிறுத்தப்பட் டிருந்தது பார்ப்பதற்கு அழகாக இருந்தது. அவைகளில் வந்த செல்வந்தர்களில் சிலர் அவற்றிலேயே அமர்ந்த வண்ணம் தங்கள் மனைவி மக்களோடு உரையாடிக் களித்துக் கொண் டிருந்தனர்.

இவர்க ளிடையே, ஒரு வாலிபனும், மங்கையொருத்தியும் தெற்கே யிருந்து மெரீனவை நோக்கி மெல்ல வந்து கொண் டிருந்தனர். வாலிபன் கம்பீரத் தோற்றத்திலும், உடுத்தியிருந்த விதத்திலும், இவன் இப்போது தான் நேரே லண்டன்மா நகரிலிருந்து வந்த ஐரோப்பிய துரை மகனே என்று பார்ப்பவர் ஐயுறும் படியாகக் காணப்பட்டான். மங்கையோ பாரஸீக மாதரைப்போல உடை யுடுத்திக்கொண்டு மிக சௌந்தரியமாகக் காணப்பட்டாள். ஆனல், அவள் முகம் வெளிறு ஓடி யிருந்தது.

அவ்விள நங்கை தன்னேடு வரும் வாலிபனை நோக்கி, "சந்தர்! நாம் ஊரிலிருந்து வந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் சரியாகப் பார்த்துப் பேசி மகிழ்தற்கில்லாது போயிற்று. உனக்கு ஏதோ கலாசாலை நாடக சங்க சம்பந்தமான அலுவல்கள் மிகுதியாக

இருந்து வருவதாகச் சொல்லி வந்தாயே! அவையெல்லாம் முடிந்து விட்டனவா ?" என்று கேட்டாள்.

சந்திரசேகரன் அசட்டு நகை செய்து, "ஒருவாறு அவை யெல்லாம் ஒழிந்தன. அவைகளி னிடையே உன் நினைவே எனக்குப் பெரிதாக இருந்தது.—அப்பா!—இன்றுதான் உன்னோடு அளவளாவி மகிழ அவகாசங் கிடைத்தது" என்று கடைக்கண்ணால் அவளை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டே கூறினான்.

சௌந்தரவல்லி, "அதிருக்கட்டும் சந்தர்! ஒரு வாரத்துக்கு முன் என் தந்தையிட மிருந்து கடிதமொன்று எனக்கு வந்தது. அதைப்பற்றி உன்னிடங் கூறுவதற்குச் சந்தர்ப்ப மேற்படவில்லை. நீதான் வந்ததும் ஒரு நிமிஷங்கூடத் தங்காது அவசரப்பட்டு ஓடுகிறாயே............!" என்றாள்.

சந்திரசேகரன் அவள் கூறுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாது பேச்சை வேறுவிதமாக மாற்ற எண்ணி, "சுந்தரிக் கண்ணே! என்னால் நீ மிகவுந் துன்பமுற்றாய்! நாம் விடுமுறை நாட்களை உல்லாசமாகக் கழிக்கலாமென்று நினைத்துக் குற்றாலத்துக்குப் போக, அந்த தடிப்பயல் ராஜசேகரனால் மிகவும் சங்கடம் ஏற்பட்டு விட்டது. அவன் காம வெறி கொண்டு எனக்குத் துரோகஞ் செய்ததோடு, உனக்கு மிகவுந் தொந்தரவு கொடுத்துவிட்டான். அந்த சம்பவத்தால் எங்கு மன அதிர்ச்சி யேற்பட்டு ஏதேனும் உனக்கு நேர்ந்து விடுமோ என்று நான் மிகவும் பயந்தேன். அவனை அப்போதே சுட்டு வீழ்த்தி யிருப்பேன். அந்தப் பெண் நளினசுந்தரியின் முகத்தைப் பார்த்து அவனுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன். இருந்தாலும் அவனைச்

சும்மா விடவில்லை. எனது தந்தைக்கு நடந்த விஷயத்தைவிவரித்து அவனைத் தகுந்தபடி தண்டித்து உடனே அவ்விடத்தை விட்டு துரத்தும்படி எழுதியிருக்கிறேன்" என்று ஏதேதோ அளந்து கொண்டே போனான்.

ஸௌந்தரவல்லி இதைக் கேட்டதும் முகம் செக்கச் செவே லென்று சிவக்க, உதடுகள் துடிக்க கோபத்தோடு, "அச் சம்பவத்தை நினைத்தாலுமே என் உடம்பில் ஓடும் இரத்தம் கொதிக்கிறது. கோபாலனும் அப் படுபாவியும் இவ்விஷயத்தில் கூட்டாளிகள் போலும்! இவர்கள் எவ்விதக் கொடுமையையுஞ் செய்யப் பின் வாங்க மாட்டார்கள் என் றெண்ணுகிறேன். இக் கொலை பாதகர்கள்-சண்டாளர்கள்-நாசமாய்ப் போகட்டும். இவர்கள் தலைமீது இடி விழட்டும். சந்தர்! ஏன் இப்போது அந்தப் பாழாய்ப் போன சம்பவத்தை ஞாபகப் படுத்தினாய். அது ஒழிக!—இப்போது என் முன் நிற்பது என் தந்தையின் கடிதமே! அதற்கு என்ன பதில் எழுதுவதென்று எனக்குத் தோன்றவில்லை. கடந்த ஒரு வாரமாக அதைப்பற்றியே கவலைப்பட்டு வருகிறேன்" என்று கவலை தோன்றக் கூறி முடித்தாள்.

சந்திரசேகரன் முகம் வேறுபட்டு, "உன் தந்தை என்ன எழுதி யிருக்கிறார்?" என்று மெதுவாகக் கேட்டான்.

ஸௌந்தரவல்லி படபடப்பாகத் தன் இடுப்பைத் தடவிக்கொண்டே, "அந்தக் கடிதத்தை இப்போது எடுத்து வரவில்லை. அதை உனக்குக் காட்டலா மென்றிருந்தேன். என் தந்தை அதி லெழுதி யிருக்கும்

விஷயம் இதுதான்; எங்கள் உறவினர்கள் யாரோ சிலர், சில மாதங்களாக என்னை மகட் பேசி வருகிருர்க ளாம். அவர்களில் சமீபத்தில் வந்த ஒரு சீமான் தம் பிள்ளைக்கு என்னைக் கொடுக்கும்படி கேட்டாராம். அவர் எங்களோடு சம்பந்தஞ் செய்து கொள்ளக்கூடிய எல்லா தகுதிகளும் உடையவராக இருக்கிருராம். அவ ரது பிள்ளை சீமைக்குச் சென்று சென்ற வருடந்தான் ஐ. ஸி. எஸ். பரீக்ஷையில் தேறி யிருக்கிருராம். அவர் நல்ல அழகும் திடகாத்திர தேகமுடையவரா யிருப்ப தைக் கண்டு என் பெற்ருேர்கள் மிகவும் திருப்தி யடைந்து, அவருக்கே என்னைக் கொடுக்க வாக்குறுதி யளித்துவிட்டார்களாம். ஆதலால், வருகிற ஆவணி மாதமே முகூர்த்தத்தை வைத்துக்கொள்ள எண்ணி யிருப்பதால், நான் கலாசாலையில் லீவு பெற்றுக் கொண்டு உடனே ஊருக்கு வந்து சேரவேண்டு மென்று என் தந்தை பலமுறை வற்புறுத்தி யெழுதி யிருக்கிருர். இதைப் படித்ததும் இடியோசை கேட்ட நாகம்போல் நான் ஆய்விட்டேன்......" என்று வார்த் தையை முடிக்காமலே திடீரென்று நிறுத்திஞள்.

சௌந்தரவல்லி கூறி வந்தவைகளைக் கேட்டதும், சந்திரசேகரன் திடுக்கிட்டுப் போய்விட்டான். அவன் முகத்தில் ஈயாடவில்லை.

இவர்கள் மெல்ல நடந்த வண்ணம் பேசிக் கொண்டே மெரீஞவுக்கு வந்துவிட்டார்கள். ரேடியோ நிலயத்துக்குச் செல்லும் வழியில் இறங்குஞ் சமயத் தில் சௌந்தரவல்லி திடீரென்று மயக்கங்கொண்டு விழுந்து விட்டாள். இதைச் சிறிதும் எதிர் பாராத சந்திரசேகரன் மிகவும் கலங்கிப் போய் 'ஆ' வென்று

அலறிக்கொண்டு அவளை விழவொட்டாது தாவிப் பிடிக்கப் போனான். எனினும், அவள் கீழே விழுந்து மூர்ச்சையானாள். இக் காட்சியைக் கண்ட ஜனங்கள் நாலா பக்கங்களிலு மிருந்து ஓடிவந்து குழுமி விட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்விடத்தில் பெருங் கூட்டங் கூடிவிட்டது. எதிரில் பீட்டிருந்த சார்ஜெண்டு கான்ஸ்டேபிள்கள் எல்லோரும் ஆங்கே ஓடி வந்தார்கள். அப்பக்கமாகப் போய்க் கொண் டிருந்த மோட்டார்க ளெல்வாம் அப்படி யப்படியே நின்று விட்டன. அதி லிருந்தவர்கள் என்ன நடந்ததென் றறிய விரைந்து வந்தனர்.

“இந்தப் பெண்ணுக்கு என்ன நேர்ந்தது?” என்று படபடப்பாகக் கேட்டனர் சிலர்.

“சிறிது நேரத்திற்குமுன் நன்றாக இருந்து நடந்து வந்த இவள் திடீரென மூர்ச்சையாகக் காரணம் என்ன?” என்று ஆவலோடு வினவினர் வேறு சிலர்.

மற்றுஞ் சிலர், “ஒருவேளை காக்கை வலியோ? என்னவோ?” என்று ஆழ்ந்த ஆலோசனையோடு கூறினர்.

“காயம் ஏதேனும் பட்டிருக்கிறதா? பாருங்கள்” என்றனர் சிலர்.

கூட்டத்தி லிருந்த சீமாட்டிகளில் சிலர், “பாவம்! இப்பெண்ணுக்கு இப்படியும் நேருமா?” என்று அநுதாபத்தோடு ஒருவரோ டொருவர் பேசிக் கொண்டனர்.

“மனித காயமே இப்படித்தான். அடுத்த கணத்தில் என்ன நேருமென்று நமக்குத் தெரிவதில்லை. இப் பேர்ப்பட்ட நிலையில், மக்கள் ஒருவர்மீ தொருவர்

பொருமை கொண்டு சண்டை போடுவதோடு, "உன்னை என்ன செய்கிறேன், பார்?" என்றும், "பத்து வருஷ மானுலுஞ் சரி; உன்னை ஒரு கை பார்க்காமல் போவ தில்லை" என்றும் வைராக்கியம் கூறுகின்றனர். என்னே! இவர்கள் அறியாமை!" என்று ஒரு சிலர் வேதாந்தம் பேசினர். நவநாகரீக மைனர்கள் சிலர், மூர்ச்சையுற்றிருக்கும் சௌந்தரவல்லியின் அழகிய உருவத்தைப் பார்த்துப் பெருமூச்செறிவதும், பக்கத் தில் பதுமைபோல் ஒன்றுந் தோன்ருது அசைவற் றிருக்கும் சந்திரசேகரனை நோக்கிக் குறும்பு வார்த்தை கள் பேசுவதுமா யிருந்தனர்.

ஆனுல், கூட்டத்தி லிருந்த ஒருவராகிலும் சௌந் தரவல்லியின் மூர்ச்சையைத் தெளிவிக்க முன் வர வில்லை. சந்திரசேகரனே, சௌந்தரவல்லி மயங்கி விழு கையில் உடல் பதறித் தாவி அவளைப் பிடிக்க முயன்ரு ஞயினும், அவள் கீழே விழுந்துவிட்ட பின்னர், ஜனக் கூட்டஞ் சேர்ந்த பின்னர், அவன் அவளைத் தீண்டவும் அஞ்சி, மண்டியிட்டு உட்கார்ந்து அவள் முகத்தையே பார்த்த வண்ணம் செய்வது இன்னதென தோன்ருது திகைத்திருந்தான்.

இச்சமயத்தில் சுமார் 40-வயதுள்ள ஒரு மாது ஜனக்கூட்டத்தை விலக்கிக் கொண்டு, சௌந்தர வல்லியி னருகே வந்து, அவள் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டு, மகிழ்ச்சியை முகத்தில் தோற்றுவித்த வண்ணம், சந்திரசேகரனைப் பார்த்து, "இவளுக்கு ஒன்றுமில்லை. உடல் சோர்வால் மிகவுங் களைத் திருக்கி ருள். மூர்ச்சையைத் தெளிவித்தால் எல்லாம் சரியாய்ப் போய் விடும். எனினும், ஜனக் கும்பல் சேரும் இவ்

விடத்திலேயே இவளை இன்னுங் கிடத்தி வைத்தல் தகுதியன்று; ஆதலால், நீர் இவளைத் தூக்கிக்கொண்டு வாரும். அதோ மோட்டார் இருக்கிறது. பங்களாவுக்குச் சென்ற பிறகு இவளுக்கு ஆவன செய்யலாம்” என்றுத் கூறி துரிதப்படுத்தினுள்.

அம்மாதின் தோற்றம் அவள் தகுதி வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளென்பதையும், படித்தவள் என்பதையுங் காட்டியது. இவள் உதவிசெய்ய முன் வந்ததைக் கண்ட அக் கூட்டத்தி லிருந்த இளம் பெண்கள் இருவர் அவளுக்குத் துணையாக வருவதுபோல் அவள் பக்கத்தே வந்தனர். அம் மாது மேற் கண்டவாறு கூறிய பின்னரும், சந்திரசேகரன் தயங்கியே நின்ருன். அவன் ஆழ்ந்த சிந்தனையி லிருப்பதை முகந் தெரிவித்தது. எனவே, அம்மாது தன் பக்கத்தே வந்த மகளிரைக் குறிப்பாக நோக்கினுர். உடனே அவர்கள் அவளது குறிப்பை யறிந்து செளந்தரவல்லியைத் தூக்கித் தாங்கிய வண்ணம், அம்மாது காட்டிய மோட்டாருக்குக் கொண்டு சென்றனர். சந்திரசேகரனை ஜனங்கள் கூர்ந்து பார்த்தனர். அவன் முகத்தில் அசடு வழிந்தது. தனது கோழைத்தனத்துக்காக அவன் தேகங் குன்றிய வண்ணம், அம்மாதின் பின்னரே நடந்தான். ஜனக்கூட்டமும் இவர்களைப் பின் தொடர்ந்தது.

மங்கையர் செளந்தரவல்லியை மோட்டாரில் கிடத்தினர். அவர்களுக்கு அம்மாது நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டு, சந்திரசேகரனை நோக்கி மோட்டாரைக் கைகாட்டினுள். அவன் மோட்டாரி லேறி டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான். அம்மாது

காரில் ஏறியவுடன் டிரைவர் மோட்டாரை மேற்கு நோக்கி வேகமாக ஓட்டினுன். அம் மோட்டார் செல் லும் வரை வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்த ஜனங்கள் அது போனதும், கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்து செல்ல லாயினர். போலீசாரும் தங்களுக்கு வேலை யொன்று மில்லாமையால் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

* * * *

தேனும்பேட்டையில் டாக்டர் ஸ்ரீமதி காந்தா மணி யம்மாள் பங்களாவில் மோட்டார் நின்றது. அது வந்த வேகத்தில் உண்டான குளிர்ந்த காற்று சௌந்தரவல்லியின் உடம்பில் பட்ட மாத்திரத்தில் அவள் சிறிது சிறிதாக உணர்வை யடைந்தாள்; ஏற் கனவே, பலவீனமாக இருந்த அவள் திடீரென்று மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்ததனுல், ஏற்பட்ட அதிர்ச்சி அவளுக்கு மிகுந்த சோர்வை யுண்டுபண்ணி விட்டது. அவள் தேகத்தில் சில இடங்களில் தரையில் உராய்ந்த தனுல் சில காயங்கள் ஏற்பட்டிருந்தன. எனவே, அவள் மூர்ச்சை தெளிந்தும் தளர்ச்சி யடைந்தே காணப்பட்டாள். ஆகையால், அவளை அம்மாது தாங் கிப் பிடித்த வண்ணம் மெதுவாக நடத்திப் பங்களா வுக்குள் அழைத்துச் சென்ருள். எதிர்பாராத இச் சம்பவத்தால் பலவிதமாக எண்ணி மனக் கலக்கமுற் றிருந்த சந்திரசேகரன் இதுதான் சமயமென்று வெளியே தயங்கி நின்று மெல்ல நழுவிவிட நினைத் தான். தான் அவ்வாறு செய்தால் எங்கு விபரீதமான சந்தேகங்கள் தன்மீது ஏற்படுமோ என்று அஞ்சி, மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு அவர்களைத் தொடர்ந்து சென்ருன்.

இவர்கள் வருகையை யறிந்த மாளிகையி லுள்ள வர்கள் எல்லாரும், என்னமோ ஏதோ என்று எண்ணி எதிர் நோக்கி ஓடிவந்தனர். அவர்களில் சிலருக்கு அம் மாது ஏதோ குறிப்பாகத் தெரிவித்தாள். உடனே, சிலர் அம் மாளிகையிலுள்ள ஒரு பெரிய அறையைத் திறந்து வழி காட்டினர். அம்மாது அங்குள்ள ஒரு சோபாவில் சௌந்தரவல்லியை அமர்த்திச் சாய்ந்து கொள்ளச் செய்தாள். ஒரு வாலிபன், சந்திரசேகரனை யழைத்து மற்ருெரு பக்கத்தில் இருந்த அறையில் நாற்காலி யொன்றில் உட்கார வைத்து மரியாதை செய்தான்.

மாளிகையி லிருந்தவர்கள் அம் மாதைக் கண்ட தும் நடந்துகொள்ளும் மாதிரியைப் பார்த்து, இவள் தான் அப்பங்களாவுக்குத் தலைவியான டாக்டர் காந்தா மணி யம்மாளா யிருக்கலா மென்று அவன் உணர்ந் தான். வாலிபன் கேட்டுக்கொண்டதற்காக அவன் நாற் காலியில் உட்கார்ந்தானேயாயினும், அவனுக்கு இரு க்கை கொள்ளவில்லை. அவ்வாலிபன் சென்றதும், சந்திர சேகரன் எழுந்து அவ்வறையைச் சுற்றி வருவதும், அவ்வறைக்கு எதிரே சிறிது உட்புறம் தள்ளியுள்ள அறையில் போவார் வருவாரைக் கவனிப்பதுமா யிருந்தான்,

வேலையாட்களும், மற்றவர்களும் காட்டும் தீவிர உணர்ச்சியைக் கண்டு அவன் மனம் எண்ணுததெல் லாம் எண்ணிக் கலங்கியது. எனவே, அவன் சௌந் தரவல்லி என்ன நிலைமையி லிருக்கிருளென்பதை யறிய பேராவல் கொண்டான். சௌந்தரவல்லி யிருந்த அறைக்கு வெளிப்பக்கத்திலும், உட்புறத்தி

லும் கதவுகள் இருந்தன. முதலில் சௌந்தரவல்லியை அழைத்துச் செல்லும்போது, வெளிக்கதவு வழியாகவே சென்றனர். பின்னர் அக் கதவு உட்புறந் தாளிடப் பட்டது. இப்போது உட்கதவு வழியாகவே பணியாட்கள் முதலியவர்கள் போய் வந்து கொண் டிருந்தனர்.

சந்திரசேகரன் தானிருந்த அறையை விட்டு மெல்ல வெளியே வந்து, சுற்றுமுற்றும் சௌந்தர வல்லி யிருக்கும் அறைப்பக்கமாக உலாவுவதுபோல் பாசாங்கு செய்து, உள் நடக்கும் விஷயங்களை உற்றுக் கவனிக்கலானுன்.

அச்சமயம் உள்ளே, "நாலைந்து மாதங்களாகவே, என் உடல் நல்ல நிலைமையி லில்லை. அடிக்கடி தளர்ச்சி யேற்படுகிறது. உணவு உட்கொள்வதில் விருப்பமே யிருப்பதில்லை. சில சமயங்களில் சாப்பிட்ட உணவு வாந்தியாகி விடுகிறது. வலது பக்கத்து இடுப்பில் எப்போதேனும் சிறிது வலியுண்டாகிறது. நான் இவற்றை யெல்லாம் பொருட்படுத்தாது இதுவரை யிருந்து வந்தேன். ஆனல் இன்று கடற் காற்றுக்காக உலவிவந்த யான், திடீரென்று மயக்கம் போட்டு விழுந்துவிட்டேன். இதற்குக் காரண மென்ன என எனக்குப் புலனுகவில்லை..........." என்று சௌந்தர வல்லி பேசுங் குரல் அவன் காதில் விழுந்தது.

அதற்கு அடுத்தபடியாக, "அம்மா, அதற்கொன் றும் பயப்படாதே! நான் உடற் கூற்றை ஆராய்ந்து பார்த்ததில் ஒன்றுந் தவறு இருப்பதாகத் தோன்ற வில்லை. நோய்க்கூறு ஒன்றும் உன்னிடத்தில் காணப் படவில்லை. — உம். — மூன்று நான்கு மாதங்களாக ரஜஸ்வலை யாவதில்லை யல்லவா!......"

இது டாக்டர் காந்தாமணியம்மாள் குரல் என்று அவன் நன்கு அறிந்துகொண்டான்.

"ஆமாம், என் தேகநிலை சரியா யில்லாமையி ஞல்தான் அது தடைப்பட்டிருப்பதாக நினைத்தேன்..."

"அதிருக்கட்டும்; குழந்தாய்! இந்த ஓவல்டீனைக் கொஞ்சம் அருந்திவிட்டுச் சிறிது நேரங் களைப்பாறு. உன் அயர்வு தீரும். நீ விழுந்ததனுல் உன் தேகத்தில் சில இடங்களில் தோல் உராய்ந்திருக்கிறது. அவற் றிற்கு மருந்து தடவி யிருக்கிறேன். இப்போது சிறிது எரிந்தாலும் நாளைக்குள் அவையெல்லாம் ஆறிவிடும். நீ மனத்தில் ஒன்றும் பயம் வைக்காதே!"

இவற்றைச் செவியுற்ற சந்திரசேகரனுக்குத் தலை இறுக்கியது. அங்கேயே மயங்கி விழுந்து விடுவான் போல் தோன்றியது. எனவே, அவன் தன் நிலையைச் சமாளிக்க முயன்று அவ்விடத்தைவிட்டு நடந்தான்.

அவன் முன்னிருந்த அறையை அடைவதற்குள், பின்னே யாரோ தன்னைக் கூப்பிடுங் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன் எதிரே டாக்டர் காந்தா மணியம்மாள் புன்சிரிப்புடன் நிற்பதைக் கண்டு திடுக் கிட்டுக் கலங்கினுன். எனினும், தன் மெய்ப்பாட்டை அவள் அறியாதவாறு மறைக்க முயன்ருன்.

டாக்டர் காந்தாமணியம்மாள் அவ்வறையினுள் நுழைந்து, அவனை யுட்காரச் சொல்லித் தானும் ஒரு நாற்காலியில் அமர்ந்து, "உமது......க்கு இப்போது ஒன்றுமில்லை. பழைய நிலைமையை அடைந்துவிட்டாள். சிறிது சோர்வு மாத்திர மிருக்கிறது. அதற்கு ஓய்வு எடுத்துக்கொண்டால் சரியாய்ப் போய்விடும். நீங்கள்

இன்றிருந்து நாளை போகலாமல்லவா! உமது.........
அக்குழந்தை உமது தங்கைதானே ?........." என்று
சிறிது தயக்கத்தோடு கேட்டாள்.

இக்கேள்வி சந்திரசேகரனை மேலுந் திகைக்கச் செய்தது. அவன், "இ...ல்...லை...உம்;...ஆ...மா...ம்" என்று வாய் குழறினுன்.

"விவாக மாகிவிட்ட தல்லவா ?"

"இல்லை."

"என்ன ! அவளுக்கு விவாக மாகவில்லையா......?" என்று கேட்டுக்கொண்டே அசைவற்று உட்கார்ந்து விட்டாள் காந்தாமணியம்மாள்.

டாக்டர் அம்மாள் படபடப்பாகவும், ஆச்சரிய மாகவுங் கேட்ட மாதிரி சந்திரசேகரனை ஆகாயத்தில் தூக்கி எறிவது போலிருந்தது. இக் கேள்வியினுல் அவனுக்குக் கொஞ்ச நஞ்ச மிருந்த சந்தேகமும் இருந்த இடந் தெரியாமல் போய் விட்டது. தானறிந்த விஷயத்தைப் பற்றி எண்ணியதுமே அவன் உடம்பெல்லாம் வேர்வை வெள்ளமாகப் பெருக்கெடுத்து வழிந்தது. குளிரால் நடுங்கும் நோயாளியைப் போல், அவன் நடுநடுங்கினுன். தான் இவ்வாறு பெரும் பீதியினுல் மௌனமுற்றிருந்தால் காந்தாமணி தன்னைப் பற்றி ஏதேனுந் தவருக நினைத்துவிடப் போகிருள் என்ற பயம் ஒரு பக்கம் வரவும், அவன் வெகு சிரமப்பட்டுத் தன் நிலையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, முகத்தில் புன்சிரிப்பை வலுக்கட்டாயமாக வருவித்த வண்ணம், "என்ன! அவ்வளவு ஆச்சரியமாகக் கேட்கிறீர்கள் ?—எங்களது பெற்ருேர் அவளுக்குத் தகுந்த மாப்பிள்ளையைத் தேடி வருகிருர்கள். இவள் இவ்வருஷம்

பி. ஏ. பரீக்ஷையில் தேறியதும், அநேகமாக விவாகஞ் செய்விக்கப்படுவாள்" என்று சாதுரியமாகப் பதி லளித்தான்.

தான் முதலில் சந்திரசேகரனைச் சௌந்தரவல்லி யின் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கையில் பார்த்தபோ திருந்த நிலையையும், அதன் பின் அவன் நடந்துகொண்ட மாதிரியையும், இப்போது தான் கேள்விகளைக் கேட்டபோது அவன் அடைந்த பெரு மாறுதலையும் கூர்ந்து கவனித்து வந்த காந்தாமணியம் மாள், இவர்கள் தொடர்பில் ஏதோ சூதிருக்கிறதென்று உணர்ந்தாள். சந்திரசேகரன் பிரசவ வேதனைப்படும் மங்கையைப்போல், மனவேதனையுடன் தன் நிலையைச் சமாளிக்க முயன்று சிரமப்படுவதை உற்று நோக்கி அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவள் அதை ஒரு வாறு மறைக்கத் தன் உதட்டைக் கடித்துக்கொண்டே, "ஒன்றுமில்லை, சும்மா கேட்டேன். நீர் இன்றிரவு இங்கு தங்குவதில் தடையொன்று மில்லையே!" என்று இழுத்தாற்போல் கேட்டாள்.

சந்திரசேகரன் தான் அவ்விடத்தைவிட்டு எப்படி யாயினுந் தப்பித்துச் சென்றால் போதும் என்று எண் ணித் துடிதுடித்துக் கொண் டிருந்தானாதலால், "மன் னிக்கணும். எனக்குக் கொஞ்சம் அவசர வேலை யிருக் கிறது. அதை உடனே போய் அவசியங் கவனிக்க வேண்டும். என் தங்கை இன்றிரவு இங்கேயே இருந்து ஓய்வு பெறட்டும். காலையில் வந்து நான் அவளை அழைத்துச் செல்கிறேன். தாங்கள் என் தங்கை விஷயத்தில் மிகவும் சிரமமும், அக்கரையும் எடுத்துக் கொண்டதற்குக் கைம்மாறாக நான் தங்க



அவனுடைய கரங்கள் அம்மங்கையின் கன்னங்களை வருடிக் கொண்டிருந்தன.

ளுக்கு என்ன செய்யப் போகிறேன்?......" என்று மிகவும் நயமாக நன்றியறிதலைத் தெரிவிப்பது போல் பாவனை செய்து பேசினுன்.

காந்தாமணி சந்திரசேகரன் கபட வார்த்தைகளைக் கொட்டுகிருன் என்று அறிந்தா ளாதலால், அவளும் அவன் தோரணையைப் பின் பற்றி, "தம்பி! என்னை நீர் அதிகமாக உயர்த்திப் பேசிவிட்டீர். நான் என்ன மற்றவர்கள் செய்யாத பிரமாதமான காரியத்தைச் செய்துவிட்டேன். என் போன்றவர்கள் உம்மை யொத்த சீமான் பிள்ளைகளுக்கு ஆவனவற்றைச் செய்ய வன்றோ காத்துக்கொண்டிருக்கிறோம்.—அது கிடக்கட்டும்; நீர் இன்று இச் சிறு குடிசையில் இருக்க மனங் கொள்ளவில்லை? அதுதான் முடியாவிட்டா லும் சிறிது காப்பியாகிலும் குடித்து விட்டுச் செல்லலா மல்லவா?" என்று உபசாரமாகக் கேட்டாள்.

சந்திரசேகரன், "தங்கள் அன்புக்கு மிக்க வந்தனம். எனக்குத் தற்போது ஒன்றும் வேண்டாம். நான் போய் காலை வருகிறேன். விடைபெற்றுக் கொள்ளட்டுமா?" என்று கூறிக்கொண்டே எழுந்து வெளியே நடந்தான்.

"அப்படியானுல் சரி; போய் வாரும்" என்று மெல்லச் சொல்லிய வண்ணம், காந்தாமணி, சௌந்தரவல்லி இருக்கும் அறையை நோக்கி நடந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது. சௌந்தரவல்லி காலைக்கடனை யெல்லாம் முடித்துக்கொண்டு சந்திரசேகரன் வரவை எதிர் பார்த்துக்கொண் டிருந்தாள். உடல் சோர்வு ஒருவாறு நீங்கி யிருந்ததாயினும், மன

தில் ஏதோ வருத்தம் இருந்து வாட்டிக்கொண் டிருப்ப தாக அவளது முகம் காட்டியது. அதற்குக் காரண மென்ன! சந்திரசேகரன்பால் சந்தேகங் கொண்ட டாக்டர் காந்தாமணி யம்மாள், அது சம்பந்தமாக ஏதோ கேட்டிருக்கவேண்டும்? அவளது கேள்விகளும் வார்த்தைகளுமே நம் சௌந்தரவல்லியை வேதனைக் குள்ளாக்கி யிருப்பதாகத் தெரிகிறது. மேலும், மணி எட்டரைக்கு மேலாகியும், இன்னுஞ் சந்திரசேகரன் வராதது அவளுக்கு அதிக கவலையை யுண்டுபண்ணி யது. அவன் வந்தால், அவனுடன் அன்று தங்க ளுடைய காதல் விஷயத்தைப் பற்றித் தீவிரமாகப் பேசி ஒருவித முடிவுக்கு வந்துவிடவேண்டும் என்று அவள் தீர்மானித்திருந்தாள்.

ஒன்பது மணியும் அடித்தாய்விட்டது. சந்திர சேகரனே வரவில்லை. எனவே, தான் இனி அவ்விடத் தில் தங்கியிருப்பது உசிதமானதன்று என்று நம் சௌந்தரவல்லி எண்ணினாள். மேலும், நேற்று மாலை வெளியே உலவிவிட்டு வருவதாக வந்த தான் இரவெல் லாம் வராததோடு, மறுநாட் காலையும் வரவில்லையே என்று கலாசாலைத் தலைவியும், மற்றவர்களுந் தேடுவார் களே? அது மட்டு மன்றி, தன்னைப் பற்றி விபரீத மாகவும் நினைத்துவிட்டால் என்ன செய்வது என்றும் மற்றும் பலவிதமாகவும் அவள் கருதி மனம் நைந்து துடிதுடித்தாள். ஆகவே, அவள் தன்னைக் காந்தாமணி காலைச் சிற்றுண்டி யருந்த வருந்தி யழைத்தும், தனக்கு வேண்டாமென்று மறுத்துவிட்டு, அவளிடம் பலவந்த மாக விடை பெற்றுக் கொண்டு வெளியேறினாள். அவள் கலாசாலை போவதைவிட முன்னதாகச் சந்திர

சேகரனைப் பார்ப்பதே அவசிய மென்று எண்ணினுள். ஆயினும், அவன் தான் போவதற்குள் கலாசாலைக்குப் போய்விடக் கூடுமென்றும், மாலையே அவனைப் பார்க்க முடியுமென்றும் அறிந்து, இப்போது நேராகக் கலா சாலைக்குப் போய் மாலைவரை பொறுத்திருப்பதே நல்ல தென்ற தீர்மானத்துக்கு வந்தாள். ஆனுல், அவள் இத ற்குமுன், தான் வாசிக்கும் கலாசாலையையும், மாலையில் பொழுது போக்காக உலவி வரும் கடற்கரையையும், தனக்கு அவசியமான உடை முதலிய சாமான்களை வாங்குவதற்குச் செல்லும் ஜார்ஜடவுன்போன்ற குறிப் பிட்ட இடங்களையுந் தவிர, வேறெங்கும்—அதிலும் தனியாகச் சென்றறியாதவ ளாதலால், தேனும் பேட் டையி லிருந்து கலாசாலைக்கு எவ்வாறு போவதென்று தெரியாது சிறிதுநேரம் ரோட்டில் தயங்கி நின்றுள். ‘டாக்டர் அம்மாள் தம்முடைய காரில் போகும்படி கேட்டுக்கொண்டார்களே! அவர்கள் சொல்லைக் கேட் டிருந்தால் கஷ்டமில்லாமல் இந்நேரம் கலாசாலையை யடைந்திருக்கலாமே! நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்த அந்த அம்மாளின் வேண்டுதலைத் தாக்ஷண்ய மின்றி மறுத்ததன் பலன் இது’ என்று அவள் நினைத்து வருந்தி நின்றுள்.

இச்சமயத்தில் சைதாப்பேட்டை பக்கமா யிருந்து மோட்டார் பஸ் ஒன்று வெகு வேகமாக வந்துகொண் டிருந்தது. அதில் இருந்த கண்டக்டர், “மவுண்ட்ரோட், பிராட்வே” என்று கத்திக்கொண்டு வந்தான். இதைக் கண்டு சௌந்தரவல்லி ஒருவாறு தைரியமடைந்து தன் கைகளால் சைகை காட்டி அப் பஸ்ஸை நிறுத்தி அதில் ஏறிக் கொண்டாள்.

மணி பதினென் றடிக்குஞ் சமயம். நம் சௌந்தரவல்லி வெய்யிலில் வேர்த்து விருவிருத்த வண்ணம் படபடப்பாகக் கலாசாலையினுள் நுழைந்தாள். இத்தனை நாள் அவளைக் கண்டால் மரியாதையாக நடந்துகொள்ளும் பியூன் வேலப்பன் அவளை அலட்சியப் பார்வையாகப் பார்த்துவிட்டுச் சிறிது தூரத்திலிருந்த ரிக்ஷாக்காரர்களை நோக்கி ஏதோ குறும்பாகப் பேசிக்கொண்டிருந்தான். இவளுக்கு எதிர்ப்பட்ட சில மாணவிகளும், ஆசிரியைகளும், கலாசாலை சிப்பந்திகளும், இவளைக் கண்டதும் ஒருவரோ டொருவர் ஏதோ மெல்லப் பேசிக்கொள்வதும், கண்ணைச் சிமிட்டிக் குறும்பாகச் சிரிப்பதுமா யிருந்தனர். இவர்களில் முக்கியமாக விஷமஞ் செய்தவர்கள் சுலோசனா, ரமாமணி, ரோஸரி முதலியவர்களாவர் என்று எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. சௌந்தரவல்லி இவ் விஷமச் செயல்களைக் கவனித்தா ளாயினும், அச்சமயம் அவைகளை அவள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தான் உடனே போய்க் கலாசாலைக்கு லீவு எழுதி யனுப்பி விட்டுச் சிறிது சிரம பரிகாரம் செய்துகொண்டு பகல் மேல் வகுப்புக்குச் செல்லலாம் என்று நினைத்த வண்ணம், ஹாஸ்டலை நோக்கி விரைவாக நடந்தாள். இவள் வரவை யறிந்து, கலாசாலை, ஹாஸ்டல் முழுவதும் ஒருவித பரபரப்பு ஏற்பட்ட தென்றே சொல்ல வேண்டும்.

நம் சௌந்தரவல்லி தன் அறையை அடைந்து, தான் அணிந்திருந்த உடைகளை யெல்லாம் கழற்றி விட்டு, வேறு ஆடைகளை மாற்றிக்கொள்ளப் போகுஞ் சமயம், "அம்மா!" என்று தன்னை யாரோ கூப்பிடு

வது கேட்டு விரைவாக உடைகளை உடுத்திக்கொண்டு வெளியே வந்து பார்த்தாள்.

இவளைக் கண்டதும் வெளியே நின்றிருந்த அட்டண்டர் ஒரு நீண்ட கவரை அவளிடம் நீட்டிய வண்ணம், "அம்மா! இதைப் பிரின்ஜ்பால் துரைசானி யம்மா உங்களிடம் கொடுக்கச் சொன்னுங்க" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்ருன். சௌந் தரவல்லி அதை வாங்கும்போது அவளது கை நடுங்கி யது. மனம் 'படக்; படக்' என்று அடித்துக் கொண் டது. எனவே, அவள் அவ்வுறையை அவசர அவசர மாகக் கிழித்து, உள்ளிருந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். அதில் பின் வருமாறு ஆங்கிலத்தில் டைப் அடிக்கப்பட்டிருந்தது —

சௌந்தரவல்லிக்கு,

உன்னைப் பற்றி என்னிடம் அடிக்கடி புகார்கள் வந்துகொண் டிருக்கின்றன. அதற் கேற்பவே சில நாட்களாக, உன் செயலில் மாறுதல் ஏற்பட்டிருப் பதை நானும் ஆசிரியைகளும் கவனித்து வருகிருேம். நீ அடிக்கடி உறவினர் வீட்டுக்குச் செல்வதாகத் தகவல் தெரிவித்துவிட்டும், சில சமயங்களில் அத் தக வல் கூட தெரிவிக்காமலும் வெளியே சென்று இராக் காலங்களைக் கழித்து வருகிருய். நேற்று வழக்கம் போல் கடற்கரைக்கு உலவச் சென்றவள் இர வாகியும் வரவில்லை. இம்மாறுதல் ஏற்பட்டதிலிருந்து, நீ முன்போல் கல்வியில் ஊக்கங் கொண்டிருப்பதாக வுந் தெரியவில்லை. ஆதலால், உன் நடத்தையில் சந்தேகங் கொண்டு நீ இதுவரை தெரிவித்திருந்த உன்னுடைய உறவினர் வீட்டிலெல்லாம் நேற்று ஆட் களை விட்டு விசாரித்துப் பார்த்தோம். அவ்வாறு

விசாரணை செய்ததில், உனக்கு இந்நகரில் உறவினரே இல்லையென்று தெரிந்ததோடு, நீ இதுவரை வெளியே செல்வதற்குக் கூறி வந்தவைகளெல்லாம் பொய்த் தகவல்களென்றும் அறிந்து திடுக்கிட்டோம். எனக்கு உன் நடத்தையில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. எனவே, நீ தவறான ஒழுக்கத்தை மேற்கொண்டிருக்கிறாய் என்று நான் நம்புகிறேன். ஆதலால், அவ்வித தகுதியுடைய நீ இங்கிருந்தால், இக்கலாசாலையில் வாசிக்கும் மற்றப் பெண்களும் உன்னால் கெட்டுவிடக்கூடும் என்று கருதுவதால், உன்னை இக்கலாசாலையிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று கட்டளையிடுகிறேன். இத்தகவல் உனது பெற்றோர்களுக்கும் கடித மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீ இக்கடிதம் கண்டதும் எவ்வளவு சீக்கிரம் இக்கலாசாலையை விட்டு நீங்க முடியுமோ அவ்வளவும் நல்லதென்று நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

........................

கலாசாலைத் தலைவி.

இக்கடிதத்தை நம் சௌந்தரவல்லி படித்து முடித்தாளோ இல்லையோ! உடனே அவள், "ஆ! ஐயோ தெய்வமே!" என்று அலறிக்கொண்டே மூர்ச்சையாகி விழுந்தாள்.

இவ்வாறு மூர்ச்சையுற்ற நிலையில் சௌந்தரவல்லி எவ்வளவு நேர மிருந்தாளோ! தெரியவில்லை. ஆனால், அப்பக்கமாக வந்து கொண்டும், போய்க் கொண்டுமிருந்த பெண்களும், மற்றவர்களும் இவளது நிலையைக் கண்டும் அவளுக்கு உதவி செய்ய முன் வரவில்லை.

வெகு நேரத்துக்குப் பின் சௌந்தரவல்லி தானாகவே, மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். ஒளி மழுங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். அவள் மூர்ச்சையுற்று விழுந்தபோது கையிலிருந்து நழுவிய கடிதம் கீழே இருப்பதைக் கண்டு அதை யெடுத்தாள். உடனே கலங்கிய நிலையிலுள்ள அவளுக்குப் பழைய நினைவுகள் உண்டாயின. அவள் தேகம் கிடுகிடென நடுங்கியது. துடி துடித்தாள்; பதை பதைத்தாள்; அழுதாள்; விழுந்தாள்; எழுந்தாள்; அலறினாள்; கதறினாள்; பதறினாள். என் செய்வாள்! பேதைப் பெண். பாவம்! பின்னர், கடிதத்தை அடிக்கடி பார்ப்பதும், பலமுறை திருப்பித் திருப்பிப் படிப்பதும், பெருமூச்சு விடுவதும், கண்ணீர் கரை புரண்டோடக் கதறி யழுவதுமாய்ச் சிறிதுநேரம் இருந்தாள். இந்நிலையில் அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. விஷயமோ வெகுதூரத்துக்கு மிஞ்சி விட்டது. தன் பெற்றோர்க்குக் கலாசாலை அதிகாரிகள் தன்னை நீக்கி விட்டது பற்றிய தகவலுந் தெரிவித்து விட்டார்கள். ஆகவே, தான் கலாசாலைத் தலைவியிடமோ மற்ற ஆசிரியைகளிடமோ சென்று, தனது உண்மை நிலையை விளக்கிக் கூறித் தன் மானத்தையும், குடும்ப கௌரவத்தையும் காப்பாற்றும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்வதென்றாலோ இனி ஆகாத காரியம் என்று சௌந்தரவல்லி எண்ணி ஏங்கினாள். கடைசியாக, அவள் தான் இங்கிருந்து பலவாறு வருந்துவதில் பயனொன்று மில்லை; தன்னை யொத்த மகளிர் தன்னைப் பலவிதமாகப் பகடி செய்து பரிகசித்தற்கே ஏதுவாகும். ஆதலால், தான் உடனே இவ்விடத்தை விட்டு நீங்கி நேராக சந்திரசேகரனை எங்கிருந்தாலும் கண்டு

பிடித்து அவனிடம் எல்லாத் தகவல்களையும் விவரித்துக் கூறித் தன்னை உடனே விவாகஞ் செய்துகொள்வதற்குரிய ஏற்பாடுகளை யெல்லாஞ் செய்து தன் மானத்தைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்வதே தக்கது என்று தீர்மானித்தாள். ஆகவே, அவள் படபடப்பாகத் தன் கைப்பெட்டியில் முக்கியமாகத் தோன்றிய சில பொருள்களை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு, விலை யுயர்ந்த மற்றப் பொருள்களை யெல்லாங்கூட அப்படி யப்படியே விட்டுவிட்டுக் கலாசாலையின் பின்புற வாயிலாகத் தளர்நடை நடந்து தலை குனிந்த வண்ணம் வெளியேறினாள். அச்சமயம், அவளது பரிதாப நிலைமையைக் கண்ட சில மாணவிகளும், ஆசிரியைகளும் அவள் மீது பச்சாதாபங் கொண்டனர். சுலோசனா, ரமாமணி முதலியவர்களோ தாங்கள் சௌந்தரவல்லி மீது கொண்ட வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டதாக எண்ணிச் சந்தோஷங் கொண்டாடினர்.

* * * *

இரவு 9-மணி; எழும்பூர் ஸ்டேஷனில் ஏராளமான கூட்டம். அந்த ஜனக்கூட்டத்தினிடையே, ஒரு பெண்மணி தனியாகத் தள்ளாடி நடந்த வண்ணம் பிளாட்பாரத்தின் இப்பக்கமும் அப்பக்கமும் பைத்தியக்காரிபோல் திரிந்து கொண்டிருந்தாள். அவள் இவ்வுலகத்தையே மறந்தவள் போல் காணப்பட்டாள். பிளாட்பாரத்தின் மீது இருந்த ஆண் பெண் அனைவருடைய கண்களும் இவள் மீதே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கடைசியாக, அம்மங்கை இரண்டாவது வகுப்பு கம்பார்ட்மெண்ட் ஒன்றில் ஏறி யுட்கார்ந்தாள். அவள் நமது கதாநாயகியான சௌந்தரவல்லி

என்பதை இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. அதில் வேறு யாருமில்லை.

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் எழும்பூர் ஸ்டேஷனை விட்டு வேகமாகப் புறப்பட்டது. சௌந்தரவல்லியின் மனமும் அதைவிட அதிவேகமாய்ப் பிரயாணஞ் செய்யலாயிற்று. வண்டி நகர்ந்ததே, அவள் இதுவரை மிகவும் சிரமப்பட்டு அடக்கி வைத்திருந்த துக்கம் பீறிட்டுக்கொண்டு வெளிப்பட்டது. அவள் கண்களிலிருந்து நீர் ஆருகப் பெருகி வழிந்தோடிய வண்ணமிருந்தது. அவள் துயரத்தைத் தாங்க மாட்டாது வாய்விட்டு ஓவெனக் கதறலானுள் ;—

"ஆ! தெய்வமே! என்னை இக்கதிக்கு ஆளாக்குவா யென்று நான் எண்ணினே னில்லையே! நான் பெண்ணுய்ப் பிறந்து இதுவரை யாருக்கும் என் மனதாலுந் தீங்கு நினைக்கவும் இல்லையே! அப்படி யிருக்க, தமியளாகிய என்னை இவ்வளவு பெரிய சோதனைக்குள்ளாக்கி அல்லல்பட வைத்து வேடிக்கை பார்ப்பது கருணை நிலயமாகிய உனக்கு அழகா! முறையா!! தருமந் தானு!!—ஆ! என்ன! அருளுருவான ஆண்டவன் என் செய்வார்? இத் துன்பத்துக்கெல்லாம் நானன்ருே காரணம்? என் தகாச் செயல்களன்ருே என்னை இவ்வித மீளாத் துயரத்துக் காளாக்கியது! எனது பெற்ருேரால் உயர்தரக் கல்வி பயில விடப்பட்ட நான் ஒழுங்காக அக் கல்வியில் கவனஞ் செலுத்திப் படித்து வந்திருக்கலாம். என் குணஞ் செயலோடு சிறிதும் பொருந்தாத மகளிரோடு எல்லாங் கூடி நவ நாகரிக மயக்கத்தில் ஆழ்ந்து அறிவை யிழந்து வந்தேன். இதனிடையே, என் தீவினைப் பயனே என்னவோ!

இப்பாவிப் புயல்—மகா வஞ்சகன்—நம்பிக்கைத் துரோகி — சண்டாளன் — சந்திரசேகரன் என்னை வலிய சிநேகஞ் செய்து, எனக்கு ஏதோ உதவி செய்பவன்போ லெல்லாம் பாசாங்கு செய்து என்னை முற்றும் மயக்கித் தன் வசப்படுத்திக்கொண்டு அவன் பின்னுலேயே என்னைப் பைத்தியம் பிடித்துத் திரிய வைத்து விட்டான். நான் அவனது சாகஸச் செயல் களை யெல்லாம் உண்மையென எண்ணி என் அறிவை யும் மனத்தையும் அவன்பால் பறிகொடுத்து விட் டேன். அவனது வஞ்சக நிலைமையைக் கோபாலன், ராஜசேகரன் முதலியோர் எடுத்துச் சொல்லியும், அவர்கள் அவன் மீதுள்ள பொருமையால் அவ னைப்பற்றிப் பலவாறு பிதற்றுகிருர்களென்று கருதி யிருந்தேன். ஆம்;—ஆனுல் முதலில் மட்டும் அதாவது முதன் முதலாக அவனேடு ராக்ஸி தியேட்டருக்குக் “கிராண்ட ஓட்டல்” என்னும் படக் காட்சியைப் பார்க்கையில், அதில் வரும் கதாநாயகன் சூதாடியாக வும், திருடனுகவும் இருந்தும் அவ் வுண்மையை யறி யாத சிறந்த நடன மாதான கதாநாயகியால் காதலிக் கப்படுவதும், ஆனுல், அடுத்த சில மணி நேரங்களுக் கெல்லாம் ஒரு டாக்டர் வீட்டில் அவன் திருடுகையில் அவரால் சுடப்பட்டு அவன் இறப்பதும் போல், சந்திரசேகரனும் ஏன் அயோக்கியனுக—மோசக்கார னுக—இருக்கக்கூடாது என்று என் மனம் மட்டுஞ் சந்தேகித்தது. ஆனுல், அவ்வையம் அவன் மீதுள்ள அடங்காப் பிரேமையால் அழிபட்டது.—ஆ! அவன் என் மீது தணியாக் காதல் கொண்டவன் போல் எவ்வளவு சாதுரியமாக நடித்தான்! எத்தனைமுறை அவன் என்மீதுள்ள ஏக்கத்தாலேயே உயிரைவிட்டு

விடுபவன் போல் பாசாங்கு செய்தான். இவ்வாறெல்லாம் கபட நாடகம் நடித்தன்றோ அவன் கடைசியாக என் கற்பை—என் உயிரினுஞ் சிறந்த கற்பை—க் கொள்ளை கொண்டான். எனது உடல், பொருள, ஆவி மூன்றுக்கும் உரிய பெருங் கணவன் என்றன்றோ அவனிடம் என் உடம்பை ஒப்படைத்தேன். ஆ! கடைசியில் இவ்வாறு என்னைப் படுகுழியில் தள்ளிவிட்டுச் செல்வானென்று தெரிந்திருந்தால், நான் அவனது சிநேகத்தை ஏற்பேனு?—எல்லாம் நடந்த பின்னர், பிரலாபிப்பதில் என்ன பயன்? இதற்கு முன்னர் சந்தர்ப்ப மேற்பட்ட போதெல்லாம் என்னை விரைவில் விவாகஞ் செய்து கொள்வதாகப் பலமுறை கூறி வந்தவன், நான் மயங்கி விழுந்த பிறகு—டாக்டர் காந்தாமணி வீட்டுக்கு வந்த பிறகு—அவன் என்னை விட்டுவிட்டு ஓடியதற்கும் என் கண்களில் படாது தலைமறைந்து திரிவதற்கும் காரணம் இப்போதன்றோ எனக்குத் தெரிகிறது? இந்த மூன்று நாட்களாகக் கலாசாலையிலும் ஹாஸ்டலிலும், மற்றும் அவன் எங்கெங்கு இருப்பானென்று நான் நினைத்தேனே அங்கெல்லாம் சென்று விசாரித்த பிறகன்றோ அவனைப்பற்றிய எல்லாத் தகவலும் எனக்குத் தெரியலாயிற்று? அவன் கலாசாலையில் வாசிப்பதே யில்லையாமே? ஹாஸ்டலில் இருப்பதில்லையாம். முன் அவன் அக் கலாசாலையில் இண்டர்மீடியட் வகுப்பில் வாசித்துக் கொண் டிருந்தானும். அவ் வகுப்பில் தேராது போய்விடவே, மிகவும் வறுமையால் பீடிக்கப்பட்ட அவன் தந்தை அவனுக்குப் பண மனுப்புவதை நிறுத்திவிட்டானும். கலாசாலைப் படிப்பை விட்டாலும் சென்னைக் களியாட்டங்களில் மிகப் பழகிய இவன் தன்னோடு படித்த சில

செல்வச் சீமான்களின் புதல்வர்களோடு கூடி அவர்களைப் பலவித தீய வழிகளில் பழக்கி, அவற்றின் மூலமாகத் தன் வாழ்க்கையை நடத்தி வருகிருனும். அவன் இதுவரை செய்துவந்த ஆர்ப்பாட்டங்களெல்லாங் கூட மேற்படி சிநேகிதர்களுடையவைகள் தானும். இவ்வித மோசமான வழியில் பிழைப்பவன், என்னிடம் என்னென்ன பொய்களையெல்லாம் புகன்ருன்? தான் மருங்காபுரி ஜமீன்தாரின் ஏகபுதல்வனென்றும், பி. ஏ. வகுப்பில் வாசித்து வருபவனென்று மல்லவோ, அவன் அளந்தான்? இப்போது இவனைப்பற்றித் தெரியுந் தகவல்களெல்லாம், அவன் என் உடம்பை மாசுபடுத்துவதற்கு முன் தெரிந்திருந்தால் நான் இவ்விதப் பெருந் தீங்கிலிருந்து விடுபட்டிருந் திருப்பேன்? ஐயோ! விதி யாரை விட்டது? என்னை இத் துஷ்டனது வஞ்சக வலையில் சிக்க வைத்து மீளாத் துயரத்துக்கு ஆளாக்கி மடியச் செய்யவேண்டு மென்பது அறக் கடவுளின் கருத்துப் போலும்? யான் எனது அருமைக் காதலனென்று எண்ணிய சந்திரசேகரன் எனக்குப் பெருங் காதகனுய்க் கைவிட்டுச் சென்ருன். அவன் உண்மையாகக் **காதலனு? அல்லது காதகனு?** என்று ஆராய்ந்து பார்ப்பதற்குக்கூட எனக்கு அவகாசங் கொடுக்காதன்ருே, என் உள்ளத்தை அவன் வஞ்சித்து விட்டான்?—அது கிடக்கட்டும். அவனது வஞ்சகமோ அல்லது எனது மனச் சபலமோ அல்லது நவநாகரிகத்தின் நல்விளைவோ நான் கெட்டுவிட்டேன், அவன் சேர்க்கையின் பயனுக, நான் இப்போது கர்ப்பமுற்றிருப்ப தாகவும்—காந்தாமணியம்மாள் சொல்லியது உண்மையா யிருந்தால்—அவர் ஏன் பொய் சொல்லப் போகிருர்?—தெரிகிறது. இந்தத் தகவல் தெரிந்தே

சந்திரசேகரன் என்னை நட்டாற்றில் விடுவதுபோல் நடுத்தெருவில் விட்டுவிட்டு ஓடிப் போய்விட்டான். இக் கூடாவொழுக்கத்தால் கலாசாலையி லிருந்தும் நான் நீக்கப்பட்டேன். இந்நேரம் இச்செய்தி எனது பெற்ருேர்களுக்குந் தெரிந்திருக்கும். எனக்கு விரைவில் விவாகஞ் செய்வதென ஆவல் கொண்டிருக்கும் அவர்கள் இதைக் கேட்டு என்ன நிலைமை யடைந்திருப்பார்கள் என்பது யாருக்குத் தெரியும்? இந்நிலையில் நான் அவர்களிடஞ் சென்ருல் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? அல்லது புறக்கணிப்பார்களா? என்னதான் நான் அவர்களுக்கு ஏக புதல்வியா யிருந்தாலும், அவர்கள் என்பால் தங்கள் உயிரை வைத்திருந்தாலும், கூடா வொழுக்கத்தால் கெட்ட என்னை எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? அவர்கள் அன்பிஞல் என்னை ஏற்றுக்கொண்டாலும், சமூகம் அவர்களைச் சும்மா விடுமா? ஒருமுறை அறியாமையால் தங்கள் நன்னடக்கையிலிருந்து தவறிவிட்டவர்களுக்கு மறுபடியும் அவர்கள் தங்கள் தவறை யுணர்ந்து ஒழுங்காக நடக்க முயன்ருலும் அவர்களுக்கு இந்து சமூகத்தில் உய்தியேது? இடமேது? படுகுழியில் விழுந்தவர் அப்படியே பாதாளத்தில் அழுந்த வேண்டியதுதான்? அன்ஞர் அப் படுகுழியினின்று கரையேறக் கைகொடுப்பார் யார்? தப்பித் தவறி விழுந்தோர் எப்படியோ கரையேற முயன்ருலும், அவர்களைக் கரையேற வொட்டாமல் தடுத்து அக்குழியிலேயே மீண்டும் தள்ளிப் புதைக்க எத்தனையோ பேர் காத்துக்கொண்டன்ருே இருக்கின்றனர்? ஆ! இதுதான் பரந்த நோக்கமும், சிறந்த கொள்கையும், அருளுங் கொண்ட இந்து சமூகமாம்! இச் சமூகத்தில் பிறந்தவர்களை மிகவும் தீவினை

யுடையவர்களென்றே சொல்லவேண்டும்! ஆம். என் பெற்றோரால் நான் தள்ளிவிடப்படுவதென்றால் நான் ஏன் அங்குபோகவேண்டும்? நான் எங்கு செல்வதென்ற முடிவுக்கு வராதன்றோ ரயிலில் ஏறிவிட்டேன்? பின்னர் நான் எங்கு செல்வது? தாய் தந்தையரே வேண்டாதபோது என்னை யார் ஏற்றுக்கொள்வார்கள்? நான் தனியளாய் இவ்வுலகில் எவ்வாறு வாழமுடியும்? அதிலும் மானமாய் வாழ்வதென்றால்?—என்ன மானமா? என் விஷயத்திலா? என் மானந்தான் அப்போதே போய் விட்டதே! அச் சண்டாளன் என் கற்பைக் கொள்ளைகொண்டு விட்டபோதே தொலைந்து போய் விட்டதே? இத் தகாத செயலால் பாவமூட்டை கட்டிக் கொண்டதல்லாது, வயிற்றிலும் மூட்டை கட்டிக் கொண்டஎனக்கு மானங்கூட இருக்கிறதா? நான் இப்போது விபசாரியினுங் கேடுகெட்டவளாக வன்றோ போய்விட்டேன்? நான் இப்போது கொண் டிருக்குங் கர்ப்பத்தைத் தொலைப்ப தென்றாலும் ஆகிற காரியமாகத் தோன்றவில்லை. அது ஏற்பட்டு நான்கு மாதத்துக்கு மேலாய்விட்டது. அதைத் தொலைப்ப தென்றால் டாக்டர் காந்தாமணி போன்றவர்கள் உதவியைத்தான் நாடவேண்டும்? அப்படி அவர்களிடஞ் சென்றால் என் மானங் கெட்ட நிலையைச் சொல்லித்தானே தீரவேண்டும்? என் தகாத செயலைக் கேட்டு அவர்கள் என்னை எள்ளி நகையாடார்களா?—உம். அதெல்லாம் ஆகாத காரியம். இனி இவ் வுலகில் உயிர் வாழ்வதென்பது சிறிதும் முடியாது. அவ் விருப்பத்தை அறவே தொலைக்கவேண்டும். மானம் போன பின் உயிர் வாழ விரும்புவது எவ்வளவு கேவலம்?—சே! தகுதி வாய்ந்த குடும்பத்தில் பிறந்த நீயா அவ்வாறு நினைப்பது?

—சௌந்தரவல்லி! உன் மதி கெட்டவாறு என்னே! போ; உடனே செல்! உடனே உயிரை மாய்த்துக் கொள்! அதுதான் இப்போது செய்யத் தக்கது" என்று ஆவேசத்தோடு கூறிக்கொண்டே வந்தவள் திடீரென்று அசைவற்ற வண்ண மிருந்து ஏதோ முடிவுக்கு வந்தவள் போல், தன் பக்கத்தில் வைத் திருந்த கைப் பெட்டியைத் திறந்து ஒரு காகிதத் துண்டையும் பேனுவையும் எடுத்து, அதில் ஏதோ எழுதிச் செவ்வையாக மடித்து, அதை மீண்டும் வைத்து மூடினுள்.

இச்சமயம் எக்ஸ்பிரஸ் காவிரியாற்றுப் பாலத் தின் மீது 'கடகட' வென்று ஓடிக் கொண் டிருந்தது. சௌந்தரவல்லி ஜன்னல் வழியாக வெளியே பார்த் தாள். சந்திரன் மேகங்களிடையே மறைந்து மறைந்து பிரகாசித்துக் கொண் டிருந்தான். நள்ளிர வாதலால், ரயில் ஓடும் ஓசையைத் தவிர எல்லாம் மௌன யோகத் தில் ஆழ்ந்திருந்தன. காவிரியாறு சந்திரனின் மங்க லான ஒளியில் தளதள வெனப் பரந்து காணப்பட்டது சௌந்தரவல்லி திடீரெனப் பேய் கொண்டவள் போல் தானிருந்த இடத்தைவிட்டு எழுந்து, "காவி ரியே! உன்னைப் பெண் தெய்வமென்று எல்லோரும் போற்றுகிறுர்கள். ஆதலால் பெண்களின் மான உணர்ச்சியை நீ நன்கு அறிந்திருப்பாய் என்று சொல்ல வேண்டியதே யில்லை. கற்பிழந்த என்னை நீ தான் தஞ்ச மாக ஏற்றுக்கொள்ளக் கூடியவள் என்று நான் எண்ணி இதோ உன்னிடம் வருகிறேன். என்னை ஏற்றுக்கொள்" என்று கூறிக்கொண்டே வண்டியி லிருந்து ஆற்றில் பாய்ந்தாள்.

அதற்குப் பின் செளந்தரவல்லியின் நிலையை எழுத என் கை யெழவில்லை. பேனாவுஞ் சத்தியாக் கிரகஞ் செய்கிறது. ஆகவே, இவ்விடத்தில் இவளைப் பற்றி இவ்வளவோடு நிறுத்திக்கொண்டு, சந்திரசேகரனைக் கவனிப்போம்.

* * * *

டாக்டர் காந்தாமணியம்மாள் பங்களாவை விட்டு வெளிப்பட்ட சந்திரசேகரன், 'செத்தேன்; பிழைத்தேன்' என்று ஒரே ஓட்டமாக ஓடினான். அவன் மனம் ஒரு நிலையிலில்லை. ஏதோ பெரும் பாதகத்தைச் செய்து விட்டதுபோல் அவன் கருதி நடுங்கினான். செளந்தரவல்லியை மீண்டுங் காண அவன் மனங் கூசியது. அவன் திருடன்போல் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டே சென்றான். இவனது தன்மையை உணர்ந்த இவன் சினேகிதர்கள் இந்நிலையில் இவனைக் காண்பார்களானால், உண்மையிலேயே ஆச்சரிய முறுவார்கள்; அதிலும் அவன் எதற்காக இவ்வளவு தூரம் பயப்படுகிறான் என்பதை யறிந்தால் மேலும் அவர்கள் பெரு வியப் படைவார்க ளென்றே சொல்லவேண்டும். 'எத்துணையோ பெரிய குற்றங்களையும், கொடிய செயல்களையும் அஞ்சாது செய்துவிட்டுச் சர்வ சாதாரணமாகத் திரியும் சந்திரசேகரனா மிகச் சாமான்யமான இவ் விஷயத்துக்குப் பெரிதும் பயந்து கோழையாய்விட்டான்?' என்று அவர்கள் சந்தேகிக்காமலிருக்க முடியாது. தூக்கு மேடையை நோக்கிச் செல்லுங் குற்றவாளியைப் போல் சந்திரசேகரன் ஆழ்ந்த சிந்தனையில் தலை குனிந்த வண்ணம் மெல்ல நடக்கலானான். செளந்தரவல்லி கர்ப்பமுற் றிருக்கிறாள் என்

னும் உண்மையை டாக்டர் காந்தாமணியம்மாள் வாயி லாக அறிந்த அவன் இது தன் சேர்க்கையின் பயனுக விளைந்தது என்பதைத் தெள்ளத் தெளிந்ததனுலேயே. அவன் இவ்விதப் பெரு மாறுதலை யடைந்தான் என் பதை வாசகர்களுக்கு விவரித்துக் கூறவேண்டியதில்லை. ஆகவே, அவன் இது சம்பந்தமாகப் பலவாறு எண்ணி, முடிவில் சௌந்தரவல்லியை அன்ருேடு மறந்து கை விட்டுச் செல்வதே நல்லது என்றும், தன் மனம் நிம்மதி யடைதற்கும் சௌந்தரவல்லியின் கண்ணிற் படாது மறைந் திருத்தற்கும் சில நாட்கள் சென்னை யை விட்டுப் போய் வரவேண்டுமென்றும் தீர்மானித் தான்.

* * * *

"எரின்பூரா" கப்பல் இரங்கூனை நோக்கிச் சென்று கொண் டிருக்கிறது. அதில் மிகப் பிரகாசமாக எரிந்து கொண் டிருந்த மின்சார விளக்குகள் தூர இருந்து பார்ப்போருக்குத் தேவலோகம் போல் விளங்கியது. அக் கப்பலில் பிரயாணஞ் செய்யும் அனைவரும் தத்தம் மனைவி மக்களோடும், சிநேகிதர்களோடும் உரையாடிக் கொண்டும் பலவிதமான களியாட்டங்களில் கலந்து கொண்டு மிருந்தனர். ஆனுல், ஒரு வாலிபன் மட்டும் கவலையே உருவெடுத்து வந்தவன் போல், கப்பலின் மேல் தளத்தில் நின்று கருங்கடலை நோக்கிய வண்ணம் ஏதோ சிந்தனையி லாழ்ந்திருந்தான். அச் சமயம் அப் பக்கமாக ஒரு அழகிய மங்கையோடு வந்துகொண் டிருந்த மற்ருெருவன் இவனைத் தற்செயலாகக் கண்டு ஆச்சரியமும் திகைப்பு மடைந்தான். உடனே அவன் தன்னுடன் வந்த பெண்ணைத் திரும்பிப் போகும்படி

சைகை காட்டிவிட்டு, மேற்குறித்த வாலிபனை நெருங்கி அவன் முதுகை மெல்லத் தட்டினுன். எதிர்பாராத வாறு தன்னை யாரோ முதுகில் தட்டியதை யறிந்து அவ் வாலிபன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அடுத்த கணம் அவன் முகம் சவம் போல் வெளுத்தது. அவன், "என்ன ராஜா! எங்கே?......" என்று வார்த்தையை முடிக்காமலே வியப்போடு கேட்டான்.

ராஜசேகரன் அதற்குப் பதில் சொல்லாமல் முகத்தில் வெறுப்புத் தோன்ற, "தாங்கள் எங்கேயோ தனியாகப் புறப்பட்டு விட்டீர்கள் போலிருக்கிறதே! தேவியாரைக் காணுமே? கப்பல் பிரயாணத்துக்கு இப்போது என்ன அவசியமோ?" என்று குறும்பாக வினவினுன்.

"ஒன்றுமில்லை........."

"அது போகட்டும்; சந்தர்! நீ எந்த அறையில் தங்கியிருக்கிருய்? வா போகலாம். நாம் இரகசியமாக ஒரு விஷயம் பேசவேண்டி யிருக்கிறது." என்று சொல்லிக்கொண்டே அழைத்துச் சென்ருன். இருவரும் வழியில் ஒன்றும் பேசவில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குள் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தனர் என்பதை அவர்கள் முகங் காட்டியது.

அறையை அடைந்ததும், ராஜசேகரன் கதவை உள் தாளிட்டு விட்டு, அதிகார தோரணையில் சந்திரசேகரனை உட்காரும்படி சமிக்கை செய்து தான் ஒரு நாற்காலியை அவன் அருகில் இழுத்துப் போட்டு உட்கார்ந்தான். சந்திரசேகரனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. ராஜசேகரனது உள்ளக்குறிப்பை யறிய அவன் முயன்றும் இயலவில்லை. ஆகவே, அவன் ராஜசேகரன்

முகத்தைக் கடைக்கண்ணுல் கூர்ந்து கவனித்த வண்ணம் மௌனமுற் றிருந்தான்.

முதலில் ராஜசேகரனே பேச்சை யாரம்பித்தான். இரங்கூனில் என்ன வேலே? சௌந்தரவல்லி எங்கே? என்றெல்லாம் மெல்ல விசாரிக்கலானுன். அதற்கெல்லாம் சந்திரசேகரன் பிடி கொடுக்காமலே பதில் சொல்லி வந்தான். கள்ளனுக்குள்ளே குள்ளன் பாய்வதுபோல் ஒருவரை யொருவர் ஏமாற்றப் பார்த்தனர்.

இவ்வாறே சில விநாடிகள் சென்றதும், ராஜசேகரன் பொறுமை யிழந்து, "நான் எதற்காக உன்னேடு வந்தேனே, அதைக் கேட்பதை விட்டு, வீண் வார்த்தை யாடிக் கொண் டிருப்பது என்னுடைய முட்டாள் தனமே யாகும். சந்தர்! இப்போது உன்னேடு சிநேக முறையில் பேசவில்லே, அன்று குற்ருலத்தில் எனது மாளிகையில் நீ என்னேடு நடந்துகொண்ட விதத்தை என்னுல் மன்னிக்க முடியாது. என்னிடத்தில் நீ பல விதத்திலும் உதவி பெற்றிருக்கிருய். அன்றும் எனது தயவினுலேயே மாளிகையில் யாரோ வழியில் செல்லும் சிறுக்கியோடு தங்கிய நீ, என்னேயே எதிர்ப்பதென்ருல்?—இதற்கு என்ன சமாதானங் கூறுகிருய்?" என்று ஆத்திரத்தோடு கேட்டான்.

சந்திரசேகரனுக்குங் கோபம் பொங்கியது. எனினும், தற்போதைய நிலேயை யுத்தேசித்து அதை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "நீ எனக்குப் பேருதவி செய்திருப்பதை மறுக்கவில்லே. அதற்காக, என் காதலியிடம் நீ தகாத முறையில் நடந்துகொண்டதைப் பொறுக்க முடியுமா?......" என்று நயமாகக் கூறிக் கொண்டே வருகையில், ராஜசேகரன் இடைமறித்து

"ஓ! தங்கள் காதலியா? சுவாமி! அடியேனுக்குத் தெரியாது. க்ஷமிக்கவேண்டும்" என்று ஏளனமாகக் கூறிக் கோப நகை நகைத்து, பின்னர் மீண்டும், "சீ! நன்றிகெட்ட நாயே! நீ என்ன அவளைத் தொட்டுத் தாலி கட்டினுயா? நீ அவளை எவ்விதமாக வஞ்சித்து உன் வலையில் சிக்க வைத்திருக்கிருய் என்பது எனக்குத் தெரியாதா? 'பாப்' ராகிய உன்னைக் காட்டிலும் உண்மையிலேயே செல்வச் சீமானுகிய நான் அவளை யடைவது நியாயமில்லையா? நீ ஏதோ அவளை ரிஜிஸ்டர் மேரேஜ் (Register Marriage) செய்து கொண்டவன் போல் அன்றைக்குத் துள்ளிக் குதித்து உன் கைவரிசை யெல்லாங் காட்டினுயே! துப்பாக்கியைக் காட்டினுல் பயந்து நடுங்கிவிடுவே னென்றல்லவா நீ நினைத்தாய்? இதோ பார் இந்த அழகிய சிறு துப்பாக்கியை! என் கைவரிசை எப்படி யிருக்கிறது என்று இதோ பார்?" என்று கூறிக்கொண்டே தன் நிஜார்ப் பையிலிருந்து சிறு துப்பாக்கியை எடுத்து அவனை நோக்கிச் சுட்டான். குண்டு வெகு வேகமாகச் சந்திரசேகரன் மார்பில் பாய்ந்தது. உடனே அவன், "ஆ!" என்று அலறி விழுந்தான். இரத்தம் ஆருகப் பெருகி அவன் உடம்பு முழுவதையும் நனைத்தது. ராஜசேகரன் அப்போதும் சீற்றம் அடங்காதவனுய், "காதகா! தொலைந்தாயா!" என்று கூறிவிட்டு வெறி பிடித்தவன் போலானுன். பின்னர் அவன் தன் கையில் பிடித்திருந்த துப்பாக்கியை ஒருபுற மெறிந்துவிட்டு, கீழே விழுந்த சந்திரசேகரனை நோக்கினுன். அவன் இரத்தக் கடலில் மூழ்கி யிருந்தான். அவன் வாயிலிருந்து பின் வரும் வார்த்தைகள் வெளி வந்துகொண்டிருந்தன. "சுந்தரி! உலக மறியா உன்னை—களங்க

மற்ற உன்னை—வஞ்சித்துக் கெடுத்து நடுத்தெருவில் தியங்கி நிற்க வைத்த என்னைக் கடவுள் தகுந்தபடி தண்டித்துவிட்டார். இப்போதாகிலும் நீ என்னை மன்னிக்க மாட்டாயா!" இதைச் செவியுற்ற ராஜசேகரன் அப்போதே தான் செய்த காரியத்தின் தன்மையை உணர்ந்து நடு நடுங்கினான். உடனே குனிந்து சந்திரசேகரனைப் பார்த்தான். அவனது உயிர் அப்போதுதான் நீங்கிக் கொண்டிருந்தது. ராஜசேகரன் உடம்பு முழுதும் வியர்வை யரும்பி உதற லெடுத்தது. இவ் விஷயம் மற்றவர்களுக்குத் தெரியுமுன் அவ் வறையை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்று அவன் கருதி விரைவாக எழுந்து நடந்து கதவைத் திறந்தான். அறையின் வெளியே கப்பலில் இருந்தவர்க ளனைவரும் குழுமியிருந்ததைக் கண்டு அவன் மிகவும் பயந்துபோனான். கூட்டத்தி லிருந்தோர் சிலர் அவனைக் கண்டதும், "பிடி! அடி! கொல்லு!" என்று கததலாயினர். கப்பல் அதிகாரிகள் அவனைச் சிறைப்படுத்தினர். அதற்கு அப்புறம் என்ன நடந்திருக்கும் என்பதை வாசகர்களுக்கு விவரித்துச் சொல்லவேண்டியதில்லை.

* * * *

வாசகர்களே! நாம் இப்போது மகாபலிபுரத்துக்குச் செல்லவேண்டும். மகாபலிபுரம், சித்திரக்கலைக்குப் பேர்போன இடம் என்பதை யாவரும் அறிவர். அங்கு சித்திரக்கலை கோயில் கொண்டிருக்கிறதென்று கூறின் மிகையாகாது. நம் தமிழ்நாட்டுச் சிற்பிகளின் கைத்திறன் சித்திரக்கலை யழகை நன்கு வெளிப்படுத்திக் காட்டி யிருக்கிறது. இச் சித்திரக் கலைத் திறத்தை யறிந்து களிப்போர் நம் நாட்டில் மிகச் சிலராகவே இருக்கின்றனர். ஆனால், அமெரிக்கர்களும் பிரிட்டி

ஷாரும், பிரஞ்சுக்காரர்களும் மற்றும் பல வெளி நாட்டினரும் கூட்டங் கூட்டமாக வந்து இச் சித்திரக் கலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து செல்கின்றனர். இவ்வாறு செல்லும் பிரயாணிகள் தங்குவதற்காக அங்கு பங்களா வொன்று இருக்கிறது. இதை அங்கு சென்றவர்கள் அறிவார்கள். அப் பங்களாவில் தான் இப்போது இக்கதையில் நமக்கு அறிமுகமான சிலர் தங்கி யிருக்கிறார்கள். அவர்கள் செயலைக் கவனிக்க வேண்டுவது இக்கதை முடிவை யறிய ஆவலோடிருக் கும் வாசகர்களுக்கு அவசியமாகும்.

இரவு ஒன்பது மணியிருக்கும். வளர்பிறையா யிருந்தாலும், பின் நில வாதலால், எங்கும் இருள் சூழ்ந்து பார்ப்பதற்குப் பயங்கரமா யிருந்தது. சாதா ரணமாக, ஆறு ஏழு மணிக்கே ஊரடங்கிவிட்டதால் எங்கும் அமைதி நிலவி யிருந்தது. அந்நேரத்தில் மேலே குறிப்பிட்ட பங்களாவில் ஒரு அறையில் மட்டும் யாரோ இருவர் குசுகுசு வென்று இரகசியமாகப் பேசிக் கொண் டிருந்தனர். அவர்களில் ஒருவர் ஆணும் மற்றொருவர் பெண்ணுமாவர். அவர்களுக்குச் சிறிது தூரத்தே அறையின் ஓர் மூலையில் தடித்த தேக முடைய ஒரு மங்கை படுத்துக் கொண் டிருந்தாள். இரகசியம் பேசுவோர் அவளுக்குத் தாங்கள் பேசும் விஷயங் தெரியக்கூடா தென்ற எண்ணத்தோடேயே அவளை உறங்கவிட்டு மெல்லப் பேசிக் கொண் டிருந்த தாகத் தெரிகிறது, அவர்களில் அப் பெண்மணி வாலி பனை நோக்கி, "மிஸ்டர் பால்! இதென்ன பெருந் தொல்லையா யிருக்கிறதே! நாம் ஏதோ நமக் கேற் பட்ட வெற்றியைக் குறித்து மகிழ்ச்சி கொண்டாட

மகாபலிபுரத்துக்கு வந்தால் இச்சனியனும் நம்மைத் தொடர்ந்து வந்து நாம் இஷ்டம் போலிருந்து இன்ப மனுபவிப்பதற்கு இடையூருக இருந்து வருகிறதே! இதற் கென்ன செய்வது?" என்று கேட்டாள்.

அதற்கு வாலிபன், "நானும் அதைப்பற்றித் தான் யோசிக்கிறேன், சுலோசனு! என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை—உம். ரமாமணி நம்மோடு வருகிறேனென்று கூறும்போதே நாம் தடுத்திருக்க வேண்டும். இவ்வளவு தூரம் அழைத்து வந்துவிட்டு இதைப்பற்றிக் கவலைப்படுவதில் பிரயோசனமில்லை" என்று பதில் கூறினுன்.

இப்போது நாம் இங்கு சந்தித்தவர்கள் கோபாலன், சுலோசனு, ரமாமணி ஆகியவர்களே என்பதை வாசகர்கள் தெரிந்து கொண் டிருப்பார்கள். இவர்கள் தனித் தனியாகச் சௌந்தரவல்லி மீதும், சந்திரசேகரன் மீதும் வைத்திருந்த வஞ்சகத்தை ஒருவாறு தீர்த்துக்கொண்டதாக (அதாவது சௌந்தரவல்லியைக் கலாசாலையை விட்டு ஓட்டியும், சந்திரசேகரனை நகரத்திலேயே இல்லாதபடி செய்தும் விட்டதாக) அவர்கள் கருதி மகிழ்ந்து, அம் மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்காக மறுநாளே மகாபலிபுரம் புறப்பட்டனர். கோபாலனுக்குச் சௌந்தரவல்லி கிடைக்காமையாலும், சுலோசனுவுக்குச் சந்திரசேகரன் தொடர்பு ஏற்படாமையாலும் வேறு வழியின்றி இவ்விருவரும் இதுவரை ஏதோ தங்கள் காரியத்தை முடித்துக் கொள்வதற்காக வெளிக்கு ஒருவரிட மொருவர் அன்புடையவர்கள் போன்று நடித்து வந்ததுபோ லில்லாமல், இப்போது பரஸ்பரம் தங்களுக்குள் அன்பு

கொண்டு காதலுறவு கொண்டாட லாயினர். எனவே, இதுவரை கலந்திருந்து வந்ததுபோல் இவர்களிடையே ரமாமணி இருந்து வந்தது இவர்களுக்குப் பெருந் துன்பமா யிருந்தது. கோபாலன் சமயம் நேர்ந்தால் இவளையுந் தன் காதல் லீலைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்தோடு, தங்களுடன் ரமாமணி யிருந்து வருவதை அவ்வளவாகப் பாராட்டா திருந்தான். சுலோசனாவுக்குத்தான் ரமாமணி யிருப்பது பெருந் தலை நோவா யிருந்தது. எங்கு ரமாமணியும், தன் காதல் வியாபாரத்தில் பங்குக்கு வந்துவிடப் போகிறாளோ என்ற பயமே அவளைப் பெரிதும் வாட்டி வந்தது. ரமாமணி, சுலோசனா பத்மாவதி முதலிய பெண்களைப் போல் அவ்வளவு நுண்ணிய மதியுடையவ ளல்லள். ஆதலால் இவர்களுடைய மனோ பாவத்தை உணராது பழைமைபோல இவர்களோடு பிரயாணப்பட்டு வந்தாள். இவளைத் தங்களோடு வரவேண்டாமென்று சுலோசனா சொல்லி யிருப்பாள். அவ்வாறு சொன்னால், ஒருவேளை ரமாமணி கோபங் கொண்டு தாங்கள் இதுவரை சௌந்தரவல்லி, சந்திர சேகரன் ஆகியோர் விஷயத்தில் செய்த சூழ்ச்சிகளையும், தீங்குகளையும் எடுத்து யாவருக்கும் பறைசாற்றி விட்டால் என் செய்வது என்ற அச்சமே அவளை அங்ஙனம் கூறவொட்டாது தடுத்தது. பிரயாணம் புறப்பட்டதற்குப் பின்னர், சுலோசனா தன்னோடு முகத்தைச் சுளித்துக்கொண்டு சிடுசிடு வென்று பேசி வருவதையும், அடிக்கடி கோபாலனைத் தனியாக அழைத்துப் போய்த் தன்னைச் சுட்டிக்காட்டிப் பேசுவதையும் கண்ட ரமாமணி எவ்வளவு மௌட்டீக மாயினும், ஏதோ விஷமம் நடக்கிறதென்று அறிந்து

கொண்டாள். சுலோசனுவின் மனப்பான்மையை உடனிருந்து பழகி யறிந்தவ ளாகையால், தனக்குத் தீங்கு செய்யவே யோசித்து வருகிருளென்று ஒருவாறு ஊகித்து, ரமாமணி மிகவும் விழிப்பாக இருந்துவரலானுள். எனவே, இப்போது இவள் இவர்கள் இரகசியமாகப் பேசுவ தனைத்தையும் உறங்குவதுபோல் பாவனை செய்த வண்ணமே கேட்டுக் கொண் டிருந்தாள். இவ்விஷயம் இவர்களுக்குச் சிறிதுந் தெரியாதாகையால், சுலோசனு, "யோசிப்பதில் பயனில்லையா! நான் சொல்வதன் அர்த்தம் உனக்கு விளங்க வில்லையென்று எண்ணுகிறேன். இவள் இருந்தால்—இங்கிருந்தால் மாத்திரமல்ல;—எங்குமே நமக்கு எப்போதும் ஆபத்துதான். ஆகையால், இவளை எப்படியாகிலும் இங்கேயே தொலைத்துவிட வேண்டும்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினுள்.

இதைக் கேட்டதும், "என்ன உண்மையாகவா? அவள் உன் அருமைச் சிநேகிதை யல்லவா!" என்று ஆச்சரியத்தோடு கோபாலன் கேட்டான்.

"உண்மை யில்லாமலென்ன! நம் உயிருக்கு உலை வைப்பவள் சிநேகிதையா யிருந்தாலென்ன! யாரா யிருந்தால்தான் என்ன?"

"எவ்விதத்தில் இவளைத் தொலைப்பது? அதிலும் இங்கு? கடைசியில் நமக்கே ஆபத்தாய் முடிந்தால் என் செய்வது!"

"தொலைப்பதென்று மனம் வைத்துவிட்டால் இதுதானு பிரமாதம்? நீ இவ்வளவு கோழையா யிருப்பா யென்று நான் இதுவரை எண்ணவேயில்லை. நாளைக் காலை சிற்ப வேலைப்பா டமைந்த மலையையும்,

கடலேயும், கலங்கரை விளக்க (Light House) த்தையும் போய்ப் பார்க்கப் போகிறோமல்லவா! அப்போது சந்தர்ப்பப்பட்ட இடத்தில் காரியத்தை முடித்து விட்டால் போகிறது! காரியமும் மிக எளிதாக முடிவதோடு, யாரும் இதைக் கண்டுகொள்ளவும் முடியாது" என்று சுலோசன கொஞ்சலோடு கூறினாள்.

இவளது யோசனையைக் கேட்டுக் கோபாலன் பிரமிப் படைந்தான். எனினும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், அவளது புத்தி நுட்பத்தைப் புகழ்ந்து பாராட்டுவதுபோல் பேசினான். சுலோசனவின் முடிவைக் கேட்டதும் ரமாமணி உடல் நடுங்கினாள். தன் உயிருக்கே உலே வைத்துவிட்டாளே என்று எண்ணியபோது அவள் மூளே மயங்கியது. நீண்ட நேரம் அவள் தனது தலே விதியை நொந்து, கடைசியாகத் தனக்குள் ஏதோ ஒருவித தீர்மானத்துக்கு வந்து தைரியங் கொண்டாள்.

மறுநாள் காலே 8-மணி யிருக்கும். முன்னாள் ஏற்பாட்டின்படி கோபாலன, சுலோசன, ரமாமணி ஆகிய மூவரும் மகாபலிபுர மலேயை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு குன்றின் மீதிருந்த 'லேட் ஹவுஸ்'ண்டை வந்தனர். அவர்கள் அதைப் பார்த்துவிட்டுப் பின்புறம் போயினர். அங்கிருந்து பார்த்தால் நாலா பக்கங்களிலுமுள்ள ஊர் முதலியன தெரியுமென்று சுலோசனே கூறிக் கோபாலனுக்குக் கண்காட்டி விட்டு முன்னே வழி காட்டி நடந்தாள். அக் குன்றின் ஓரத்தை யடையும் போது, சுலோசனவின் காலில் முள் தைக்கவே, அவள் அதை யெடுக்க ஒரு காலில் நின்று மற்ருெரு காலேத் தூக்கி வைத்துக்கொண்டு

முள்ளை யெடுக்க முயன்ருள். இச்சமயத்தில் கோபாலன் பின்னே வந்து கொண்டிருந்த ரமாமணி குபீரெனப் பாய்ந்து சுலோசனுவை ஒரு உந்து உந்தித் தள்ளினுள். அடுத்த கணம் சுலோசனு "ஓ" வென அலறி உச்சியிலிருந்து உருண்டு விழுந்தாள். இரத்தங் குடித்த பெண் புலி போன்று காணப்பட்ட ரமாமணி கோபாலனைத் திரும்பிப் பார்த்தவண்ணம் அவனை அணுகினுள். தாங்கள் நினைத்த தொன்ருய் இருக்க, எதிர் பாராதவாறு ரமாமணி இவ்வாறு செய்ததைக் கண்டு கோபாலன் திக்பிரமை யடைந்து மரம் போல் நின்ருன். இதற்குள் விழுகையில் சுலோசனு போட்ட பெருங் கூச்சலைக் கேட்டு 'லைட் ஹவுஸ்'ண்டை இருந்த ஜனங்கள் ஓட்டமாக ஓடிவந்தனர். அனைவருமாக, சுலோசனு விழுந்த இடத்தைக் கீழே குனிந்து பார்க்கையில் அவள் தேகம் சிதறுண்டு கிடந்தது. இக் கோரக் காட்சியைக் கண்டு மக்கள் தங்கள் கண்களைப் பொத்திக் கொண்டனர்.

* * * *

திருநெல்வேலியைச் சேர்ந்த பாளையங் கோட்டையில் ஒரு மாளிகையில் சுமார் 60-வயதுள்ள முதியவரொருவர் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். அவ்வாறு பார்த்துக் கொண்டிருந்த அப் பெரியவர், பெரிய கொட்டை யெழுத்துக்களில் பிரசுரிக்கப் பட்டிருந்த செய்தி யொன்றைக் கண்டு திடுக்கிட்டுத் துள்ளிக் குதித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் தம்மைச் சமாளித்துக் கொண்டு கண்களை நன்ருகக் கசக்கியவாறு மீண்டும் அச் செய்தியைக் கூர்ந்து நோக்கினுர். அது பின் வருமாறு வெளியிடப்பட்டிருந்தது.

# கலாசாலைப் பெண் தற்கொலை

## ரயிலிலிருந்து காவிரியில் வீழ்ந்தாள்

### காதலில் ஏமாற்றமடைந்ததே காரணமாம்

சென்னை—ஆக. 13.

நேற்று இரவு 4½-மணிக்கு மேல், திருவனந்த புரம் எக்ஸ்பிரஸில் இரண்டாவது வகுப்பில் பிர யாணஞ் செய்துகொண் டிருந்த சௌந்தரவல்லி என்னும் பெயருடைய பெண்ணொருத்தி திடீரென்று ரயிலி லிருந்து காவிரி யாற்றில் குதித்து மாண்டாள். அவள் திருநெல்வேலி காந்திமதி நாதம் பிள்ளையின் ஏக புதல்வியென்றும், இந்திராணி மகளிர் கல்லூரியில் பி. ஏ. வாசித்துக் கொண் டிருந்தாள் என்றும் தெரி கிறது. அவள் காதலித்த ஒரு வாலிபன் அவளை ஏமாற் றிக் கைநழுவ விட்டுச் சென்றதாலேயே, அவள் உல கில் விரக்தி கொண்டு தற்கொலை செய்து கொள்ள முற்பட்டதாக அவள் கைப் பெட்டியிலிருந்து கண்டு எடுக்கப்பட்ட கடிதத்தால் தெரிகிறது. ஆனால் இவளை வஞ்சித்த வாலிபன் யாரெனத் தெரிய வில்லை. போலீ ஸார் இதுபற்றிப் புலன் விசாரித்து வருகிறார்கள்.

இச் செய்திக்குப் பின்னேயே அப்பெண் எழுதிய கடிதமும் பிரசுரிக்கப் பட்டிருந்தது. அது வருமாறு:—

“என்னைப்போல மிகவும் துர்ப்பாக்கியம் வாய்ந்த பெண் இவ்வுலகிலேயே இல்லை என்று கூறின் அது மிகையாகாது. நான் என் வரலாற்றைக் கூறுவதற்காக இக் கடிதத்தை யெழுதவில்லை; என்னை யொத்த மகளிர்க்கு—முக்கியமாகக் கலாசாலைப் பெண்களுக்கு— எச்சரிக்கை செய்யவே இதை யெழுதலானேன். என்

பெற்ருேருக்கு ஏக புதல்வியாகிய யான் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்டு, உயர்தரக் கல்வி பயில்வதற்காக, கலாசாலையில் விடப்பட்டேன். அங்கு தீய குணம் வாய்ந்தவர்கள் சிலரின் சகவாசத்தால் என் வாழ்க்கை பாழாயிற்று. வஞ்சகமே ஓருருவெடுத்தாற் போன்ற ஒரு வாலிபனுல் - அவனை இன்னுனென்று காட்டிக் கொடுக்க விரும்பவில்லை.—நான் முழுதும் ஏமாற்றப்பட்டு அவனைக் காதலித்தேன். அவனது தொடர்பால் நான் தீய பழக்கங்களையெல்லாம் மேற்கொண்டேன். என்னிடத்தில் உயிரையே வைத்திருப்பதாகச் சாகஸஞ் செய்துவந்த அக்காதக வாலிபன் நான் அவனது சேர்க்கையின் பயனுக, கர்ப்ப முற்றிருப்பதை யறிந்ததும் என் கண்ணில் படாது ஓடி யொளிந்து விட்டான். இச்சமயத்தில் யான் கல்லூரியி னின்றும் விலக்கப்பட்டேன். இந்நிலைமையில் என் கதியென்ன? பெற்ருேர் முகத்தில் விழிக்க முடியுமா? யாரேனும் என்னை ஏற்றுக்கொள்ள முன் வருவார்களா? இனி, மானத்தோடு இவ்வுலகில் உயிர் வாழ முடியுமோ? பிச்சை யெடுத்தோ அல்லது விலைமகளிரைப் போல் விபசாரஞ் செய்தோதான் உயிர் வாழ முடியும்? ஆகவே, நான் காவிரியாற்றுக்கு இரையாவதன்றி வேருென்றுஞ் செய்யக் கூடியதில்லையென்று கடைசியாகத் தீர்மானித்தேன். என் பரிதாபமான முடிவை யறிந்தேனும், என் சகோதரிகள் ஆடவர்களைக் காதல் கொள்ளும் விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையா யிருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் வாழ்க்கையைப் பாழ்படுத்தி அல்லலுறச் செய்வது மேல் நாட்டுப் போலி நவநாகரிகமேயாகும். கலா

சாலைகளில் வாசிக்கும் தமிழ் மகளிர் பலர் தங்களோடு வாசிக்கும் ஆங்கிலோ—இந்தியப் பெண்கள், கிறிஸ்தவப் பெண்களின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றிப் பெரும்பாலும் கெட்டுப் போகிறார்கள். சுயநலமே வடிவாயுடைய விடபுருஷர்கள் இவர்களது மனப்போக்கைத் தங்கள் வஞ்சகச் செயலுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வித எமகாதக வாலிபர்களால் என்போன்ற பேதைப்பெண்கள் எத்தனை பேர் கெட்டொழிந்தனரோ! ஆண்டவனே அறிவான். இனியேனும் நம் மகளிர் விழிப்பாக இருப்பார்களாக.”

* * * *

இவைகளைப் படித்த காந்திமதிநாதம் பிள்ளை ஓவென்று அலறி நாற்காலியி லிருந்து கீழே விழுந்தார். இக் கூக்குரலைக் கேட்டு இவரது மனைவி மரகதவல்லி சமைய லறையி லிருந்து, ‘ஐயோ! என்ன நேர்ந்தது!’ என்று கேட்ட வண்ணம் ஓடிவந்து தன் கணவரது நிலையைக் கண்டு மயங்கி விழுந்தாள். இதற்கு மேல் இவர்களது நிலைமையை விவரிக்க மனம் வரவில்லை.

ராஜசேகரன் சந்திரசேகரனை கொன்றதற்காகத் தூக்கி லிடப்பட்டான். சுலோசனு குன்றிலிருந்து விழுந்திறந்ததற்குக் காரணமாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கோபாலனுக்குப் பத்து வருடங் கடுங் காவலும், ரமாமணிக்கு இரண்டு வருடம் வெறுங் காவலும் தண்டனை விதிக்கப் பட்டது. இவர்கள் யாவரும் இவ்வித நிலையை யடைந்ததை நினைந்து இன்னமும் பத்மாவதி, ரோஸரி, கிரேஸ் முதலிய பெண்கள் அநுதாபப் பட்டு வருகின்றனராம்.

முற்றிற்று.

# இந்நூலாசிரியர் இயற்றிய நவீனங்களைப் பற்றிப் பத்திரிகைகள் பாராட்டு

## உயிரோவியம்

கல்கி:—* * * 'உயிரோவியம்' சாதாரணமான காதல் கதை அல்ல. சரளமான இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

சக்தி:—* * * எளிய தூய தமிழ் நடை.

தமிழன்:—* * * 'ஜீவா' தந்துள்ள உயிரோவியம் என்ற நவீனம் ஒரு லட்சியக் கனவை நிரூபிக்கிறது. அனுபவமும், கற்பனையும் கை கோத்துக்கொண்டு உலாவும் இந்தக் கதை தமிழ் நாட்டின் மறு மலர்ச்சி இலக்கியத்தில் ஓர் ஒப்பற்ற சிருஷ்டி.

திருச்சி ரேடியோ:—* * * இதில் ஆசிரியர் நமக்கு ஓர் உன்னத காதல் சித்திரத்தை அளித்துள்ளார். கதையின் நடை, விஷயத்திற்கேற்ப உணர்ச்சி ததும்பும் தூய நடை. 'வ. ரா' தம் முகவுரையில் சொல்வதுபோல், தூய காதலைக் கலையழகு வாய்ந்த எழுத்துத் திறனுடன் சித்திரித்திருக்கிறார்.

## நான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் ?

கல்கி:—* * * விதவைகளுக்குச் சமூகம் இழைத்துவிட்ட அநீதியைக் கதாநாயகி சொல்லிக் கொண்டே போகும்போது நாமும் அவளுடன் சேர்ந்து கண்ணீர் விடுகிறோம்.

சக்தி:—* * * நடை தெளிந்து செந்தமிழ் மணம் கமழ்கிறது.

குமரன்:—* * * இதைப் படிப்பவர் மனத்தில் விதவா விவாகத்தின் அவசியமும் நியாயமும் படும் என்பதற்கு ஐயமில்லை. ஆசிரியர் தமக்கு இயற்கையான தூய, தெள்ளிய, இனிய தமிழ் நடையில், மனத்தை உருக்கும் வண்ணம் சித்திரித்திருக்கிறார்...... இந்நூல் ஒவ்வொரு தமிழரும் படிக்கவேண்டிய தவசியம்.

தமிழன்:—* * * இக்கதையில் பெண்மையின் உணர்ச்சிமயமான கண்ணீர் துளிகள் உயிர்பெற்று பேசுகின்றன. இதை 'ஜீவா' சரளமான நடையில் விறுவிறுப்பு குன்றாமல் எழுதியிருக்கிறார். வாழ்க்கையுடன் இலக்கியம் உறவு கொண்டாட வேண்டுமென்பவர்களுக்கு இப்புத்தகம் அமிர்தத்தைப் போன்றது.

# புருடோத்தமன்

உலக மகாகவியான வில்லியம் ஷேக்ஸ்பியரின்

**'RAPE OF LUCRECE'**

என்ற காவியம்

இந்நூலாசிரியரால் தமிழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

★

எஸ். சோமசுந்தர பாரதியாரின் முன்னுரையும்,
திரு. வி. கலியாணசுந்தர முதலியார்,
வித்வான் டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
M. O. L., M. A. B. L., ராவ்சாகிப் வையாபுரி பிள்ளை
ஈ. த. ராஜேஸ்வரி அம்மையார் M. A., L. T.,
டாக்டர். சிதம்பரநாதம் செட்டியார் ஆகிய
அறிஞர்களின் சிறப்புரை
களும் கொண்டது.

★

சுதேசமித்திரன், தமிழ் நாடு முதலிய
பல பத்திரிகைகள் பாராட்டி
யிருக்கின்றன.

**இந்நூலின் இரண்டாம் பதிப்பு**

கூடிய சீக்கிரம் வெளிவரும்.